அருள் நந்தி சிவனார் அருளிய

சிவஞான சித்தியார்

சுபக்கம்

தெளிவுரை :

சி.சு.மணி

அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம்
78, செல்வி நகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி 1.

[illegible]

[illegible]

[illegible]

சிவஞான சித்தியார்

சுபக்கம்

உ

அருள் நந்தி சிவனார் அருளியது

T.N. Ulaganathan.

தெளிவுரை

சி. சு. மணி

அருள் நந்தி சிவம் அருட்பணி மன்றம்
78, செல்விநகர், சிந்துபூந்துறை,
திருநெல்வேலி - 627 001.

விலை Rs. 40 - 00

வெளியீடு எண் : 26

உரிமை : மெய்கண்டான் மணி

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Sivagnana Siddhiyar Supakkam
Author	:	Si. Su. MANI
Publisher	:	S. Chithambaranathakalyani Arulnandhi Sivam Arutpani Manram Tirunelveli - 627 001.
Language	:	Tamil
Date of Publication	:	17-10-1998
Size of the Book	:	21 x 14 c.m.
Printing/ Types/ Used	:	10 Point
Number of Copies	:	800
Number of Pages	:	177 + 4
Price	:	Rs. 40
Binding	:	Pulp Board
Subject	:	Commentary on a Saiva Siddhantha Philosophical work.

பதிப்புரை

நீண்ட நாள்களாக சிவஞான சித்தியார் பரபக்கமும் சுபபக்கமும் இணைந்த பதிப்புகள் வெளிவராது இருந்தன. இக்குறையைப் போக்கும் நோக்கத்துடன் 1995 செப்டம்பர் மாதம் எங்கள் மன்றம் இரண்டையும் இணைத்து ஒரு தெளிவுரை வெளியிட்டது. அந்த நூலுக்கு நல்லவரவேற்பு இருந்தது.

ஆயினும் பல சைவ மெய்யன்பர்கள் சுபக்கம் மட்டிலும் தனி நூலாகக்கிடைப்பின் வசதியாக இருக்கும் என்ற கருத்தினைத் தெரிவித்து வந்தார்கள். அதிலும் குறிப்பாக அந்தப் பதிப்பில் உள்ள சுபக்கத்தையே விரும்பிக் கேட்டார்கள். அவர்கள் ஆவலை நிறைவேற்றும் வண்ணம் சிவ ஞான சித்தியார் சுபக்கத்தின் இப்பதிப்பினை இறைவன் திருவருளால் இப்போது வெளியிடுகின்றோம்.

எங்கள் மன்றத்துக்கு உறுதுணையாய் இருந்து இத்தெளிவுரையை எழுதித்தந்த திரு. சி.சு. மணி அவர்களுக்கும், மதுரை காமராசர் பல்கலைக் கழக சைவ சித்தாந்தத் துறைப் பேராசிரியர் முனைவர் திரு. ஆ. ஆனந்த ராசன் அவர்களுக்கும் எங்கள் மன்றத்தின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சைவப் பெருமக்கள் இப்பதிப்பையும் ஏற்றுப்போற்றி எங்களுக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

கயிலைமணி **S. சிதம்பரநாதகல்யாணி**
தலைவர்
அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம்
78, செல்விநகர், சிந்துபூந்துறை,
திருநெல்வேலி - 627 001.

திருநெல்வேலி
15 - 10 - 98
✆ 335617

என் துணைவி
செல்விக்கு

அன்புடன்

சி.சு. மணி

தி.ந. உலகநாதன்

உ

சிவஞான சித்தியார்

காப்பு

கணபதி வணக்கம்

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஓட்டும் அயன்திருமால் செல்வமும் ஒன்
றோஎன்னச் செய்யும் தேவே. 1

திருமுடியிலே கங்கை யாற்றினையும் வளைந்த அழகிய பிறையினையும் கொன்றை மாலையினையும் அணிந்த சிவபெருமான் அருளிய மூத்தபிள்ளையார், ஒற்றைக் கொம்பும் இரண்டு அகன்ற செவிகளும் மூன்று மதங்களும் தொங்குகின்ற திருவாயும் ஐந்து கரங்களையும் உடைய ஒப்பற்ற யானைமுகப் பெருமான் ஆவார். உருகிய உள்ளத்தோடு அன்பால் இடைவிடாது இரவும் பகலும் அப் பிள்ளையாரது திருவடிகளை வணங்குவோரது சிந்தைத் திருக்கை ஓட்டுவார். பிரமன் திருமால் ஆகியோரது பதங்களும் ஒரு பொருட்டா காத வண்ணம் யாவற்றுக்கும் மேலான வீட்டின்பத்தையும் தன் அடியார்களுக்கு வழங்குவார். சிந்தைத்திருகு - சிந்தையிலே எழுகின்ற கோட்டம். அதனை ஓட்டுதலாவது கோட்டமில்லாத நேரான பாதையில் செலுத்துதல்.

சிவபெருமான்

ஆதிநடு அந்தம் இலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற
மாதினையும் ஒருபாகத்து அடக்கி வானோர்
மகுட சூளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி அணிபவளச் சடைகள் தாழப்
படர்ஒளி அம்பலத்துஆடும் பரனார் பாதத்
தாறுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம். 2

முதலும் நடுவும் இறுதியும் இன்றி அளவற்ற பேரொளிப் பிழம்பாகவும் அருளாகிய ஞானத்தையே தன்னுடைய திருமேனி ஆகவும் கொண்டு தன் பெருங்கருணையினாலே உலகமனைத்தையும் ஈன்ற உமையம்மையைத் தம் இடப்பாகத்திலே அடக்கி வானோர்களுக்கு மகுடம் போன்று

விளங்கி உலகம் எல்லாம் போற்றப் பிறைமதியை அணிந்த சடைகள் தாழுமாறு ஒளிமிக்க திரு அம்பலத்திலே திருநடனம் புரிகின்ற சிவபெருமானது திருவடிக் கமலங்களை நமது தலையிலே தாங்கி அவ்விடத்துத் தளராத பேரன்பு விளையும்படி வழிபடுவோம்.

சக்தி வணக்கம்

ஈசன்அருள் இச்சைஅறிவு இயற்றல் இன்பம்
இலயமொடு போகம் அதிகாரம் ஆகித்
தேசுஅருவம் அருவுருவம் உருவமாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வமாகிப்
பேசரிய உயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போகம் அவைஅளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்டு
ஆசு அகலும் அடியர் உளத்து அப்பனுடன் இருக்கும்
அன்னை அருட் பாதமலர் சென்னி வைப்பாம். 3

இறைவனுடைய அருள் அவனது சத்தியாகும். அது அவனை விட்டு ஒருபோதும் நீங்காது. பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி என்று இவ்வாறு பெயர் பெற்று வழங்கும். இலயம், போகம், அதிகாரம் என்று மூன்று கூறுகளாகி ஒளிமிக்க இறைவனுக்கு அருவம், அருவுருவம், உருவம் என்ற வடிவங்களும் ஆகும். அவனது துணைவியுமாகும். உலகெலாம் ஆகி உலகத்துப் பொருள்கள் எல்லாமாகி விளங்கும். எண்ணுதற்கரிய உயிரை எல்லாம் பிறப்புட்படுத்துக் காத்து அவற்றின் வினைக்கு ஈடாக இன்பத் துன்பங்களையும் கூட்டுவித்து உரிய பக்குவம் எய்திய உயிர்களின் பிறப்பினையும் அறுக்கும். வீட்டு இன்பத்தையும் தரும். குற்றமற்ற அடியவர் உள்ளத்தில் அப்பனோடும் எழுந்தருளியிருக்கும் அம்மையின் அருட்பாதமலர்களைத் தலைமீது கொண்டு வணங்குவாம்.

விநாயகர் வணக்கம்

இயம்புநூல் இருந்தமிழின் செய்யுள் ஆற்றால்
இடையூறு தீர்ந்து இனிதுமுடிய வேண்டித்
தயங்குபேர் ஒளியாகி எங்கும் நின்ற
தலைவனார் மலைமாது தன்னோடு ஆடிப்
பயந்த ஐங்கரம் நாற்றோள் முக்கண் இருபாதப்
பரியது ஒரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயம்தன் அடிக் கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்திலுற இருத்திமிகக் காதல் செய்வாம். 4

இப்போது இயம்பப் புகும் இப்பெருந்தமிழ் நூல் ஐந்து இலக்கணங்களும் பொருந்தி இடையூறு இன்றி இனிது நிறைவேறுவதை விரும்பி நிலை பெற்ற பேரொளியாய் எவ்விடத்தும் நிறைந்த இறைவன்

பார்வதி அன்னையோடு கூடிப்பயந்த ஐந்து கரங்களும் நான்கு தோள்களும் மூன்று கண்களும் இரண்டு திருவடிகளும் பருத்து நீண்ட ஒற்றைக் கொம்பும் பெருத்த வயிறும் உடைய யானை முகத்து விநாயகப் பெருமானின் திருவடித்தாமரைகளை விரும்பி வணங்கிச் சிந்தையில் அகலாது இருத்தி அன்பு பாராட்டுவோம்.

முருகப்பெருமான் வணக்கம்

அருமறை ஆகமம் அங்கம் அருங்கலைநூல் தெரிந்த
அகத்தியனுக்கு ஒத்துஉரைக்கும் அருட்குருவாம் குருளை
திருமறை மாமுனிவர்முனி தேவர்கள்தம் தேவன்
சிவன் அருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொரும்அறையார் கழல்வீரர் வீரன்கையில்
பூநீர் கொண்டு ஓவாது போற்றும் அடியார்கள்
கருமறையா வகைஅருளிக் கதிவழங்கும் கந்தன்
கழல்இணைகள் எம்சிரத்தில் கருத்தில் வைப்பாம், 5

அரிய மறைகளும் ஆகமங்களும் வேத அங்கங்களும் அரியகலை நூல்களும் கற்றுத்தேர்ந்த அகத்திய முனிவர்க்கு ஞானசிரியனாக விளங்குபவன் என்றும் இளைய முருகப் பெருமான். திருமறைகள் வல்லபெரு முனிவர்களுக்கு முனிவன். தேவர்களுக்குத் தேவன், சிவபெருமான் திருவருளால் உதித்த திருமகன். தவத்தில் நிலைபெற்ற வர்களுக்கு வழிபடு கடவுள். ஒலிக்கின்ற கழல் அணிந்த வீரர்களின் வீரன். பூவும் நீரும் கொண்டு இடைவிடாது வழிபடுகின்ற தனது அடியார்கள் கருப்பையினுள் புகுந்து மீண்டும் பிறவா வண்ணம் அவர்களுக்கு வீடுபேற்றினை அருளுகின்ற கந்தப் பெருமான். அவனுடைய திருவடிமலர்கள் இரண்டினையும் எமது தலை மீதும் கருத்தினிலும் வைத்துப் போற்றுவோம்.

கருமறையா வகை - கருப்பையில் புகாத வண்ணம்,கதி - வீடுபேறு

மெய்கண்ட தேவநாயனார்

பண்டை மறைவண்டு அரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்துஒழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர் இருதய கமலமுகைகள் எல்லாம்
கண்திறப்பக் காசினி மேல்வந்த அருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழில் புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவநாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம். 6

தொன்மையான மறைகளாகிய வண்டுகள் ஒலிக்கவும், சிவஞானமாகிய சுவைமிக்க தேன் அருளோடு பிலிற்றவும், சிவமணம்

எங்கும் பரந்து மணக்கவும் பக்குவமிக்க அடியார்களது இதய கமலங்கள் மலரவும் இந்த உலகத்தில் தோன்றி அருளியவர் மெய்கண்டதேவ நாயனார். விரிந்த மலர்ப் பொழில்கள் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் திருவெண்ணெய் நல்லூரில் மேவிய அப்பெருமான் சைவசித்தாந்தத்துக்குத் தலைமை பூண்ட ஞானாசிரியன். அத்தகைய ஞானக் கதிரவனின் திருவடிகள் தாமரை மலர்களை வென்றவை. அத்திருவடிகளை எப்பொழுதும் எமது தலைமேல் கொண்டு போற்றி வணங்குவோம்.

சிவகந்தம் - சிவமணம்; நாற - மணக்க
காசினி - உலகம். புண்டரிகம் - தாமரை.

அவையடக்கம்

மால்அயன் மாமறை அறியா ஆதி மார்க்கம்
வையகத்து ஆகமம் வேதம் மற்றும் உள்ள
நூலையெலாம் உணர்ந்து இறைவன் கழலே நோக்கும்
நோன்மை அருந்தவர் முன்யான் நுவலுமாறு
வேலையுலாவும் திரைகள் வீசி யேறி
வேறுஏழும் ஒன்றாகி நின்றபோது
சாலவும்ஆன் குளம்படியில் தங்கி நின்ற
சலமதுதான் நேர் என்னும் தன்மைத்தாலோ. 7

திருமாலும் நான்முகனும் நான்மறைகளும் அறிவதற்கு அரிய தொன்மையான சைவநெறியினை நான் சொல்லப் புகுகிறேன். உலகத்தில் ஆகமம் வேதம் மற்றும் உள்ள கலைத்துறைகள் யாவற்றையும் உணர்ந்து இறைவன் திருவடிகளிலே சிந்தையைச் செலுத்தித் தவம் முதிர்ந்த பெரியவர் முன் நான் சொல்லத் தொடங்குவது எத்தகையது எனின் அலைமோதும் ஏழு கடல்களும் ஒன்று சேர்ந்து நின்ற இடத்திலே பசுவின் குளம்படி பதித்த பள்ளத்தில் நீர் தேங்கி நின்றது போல் ஆகும்.

அருந்தவர் ஏழு கடல்களும் ஒருங்கே திரண்டது போன்றவர்கள் நானோ பசுவின் காற்குளம்பு பதிந்த இடத்தில் தேங்கிய நீர் போன்றவன் என்று அவையடக்கம் கூறினார்.

குளப்படி - குளம்பு + அடி. சலம் - நீர்.

நீடுபுகழ் உலகுதனில் மைந்தர் மாதர்
நேயமொடு தாம்பயந்த புதல்வர் வாயில்
கூடுமொழி மழலையொடு குழறி ஒன்றும்
குறிப்பு அரிது ஆயிடினும் மிகக் குலவிப் போற்றி

மாடு நமக்கு இது என்று கொண்டு வாழ்வார்
அதுபோல மன்னுதமிழ்ப் புலமையோர் என்
பாடுகவிக்குற்றங்கள் பாரார் இந்நூல்
பாராட்டா நிற்பர் அருட் பரிசினாலே. 8

புகழ் மிக்க இந்த உலகத்தில் ஆடவரும் மகளிரும் அன்போடு பெற்றெடுத்த தம்முடைய மக்களின் மழலை மொழியை அது குழறல் ஆயினும் பொருளற்றதாயினும் தமக்குக் கிடைத்த செல்வம் எனப் போற்றிப் பாராட்டி மகிழ்வர். அதுபோலவே நிலைபெற்ற தமிழ்ப் புலவர்களும் என் பாடலில் காணப்படும் கவிக்குற்றங்களைப் பாராமல் அருள் தன்மையினால் இந்நூலைப் பாராட்டுவார்கள்.

மாடு - செல்வம்

நூற் சிறப்பு

கத்தவடிவு இயல்பாக உடையசோதி
சொல்லிய ஆகமங்கள் எலாம் சூழப்போயும்
ஒத்துமுடியும் கூட ஓரிடத்தே
ஒருபதிக்குப் பலநெறிகள் உளவானாற் போல்
பித்தர்குணம் அதுபோல ஒருகால் உண்டாய்ப்
பின்னொருகால் அறிவின்றிப் பேதையோராய்க்
கத்திடும் ஆன்மாக்கள் உரைக்கட்டில் பட்டோர்
கனகவரை குறித்துப் போய்க் கடற்கேவீழ்வார். 9

ஞானமே தனக்கு இயல்பான வடிவாகக் கொண்ட இறைவன் உலகவர்க்குப் பயன்படுத்துவதற்காகப் பலவகைப்பட்ட ஆகமங்களை அருளிச் செய்தான். அவை பல்வேறு வகைப்பட்ட சமயங்களுக்கு உரியனவாயினும் எல்லா ஆகமங்களிலும் கூறப்பட்ட ஞானபாதப் பொருள்கள் சுற்றிப்போயினும் ஓர் இடத்திலேயே சென்று முடிவடைவனவாம். ஒரே ஊருக்குப் பலவழிகள் இருப்பினும் அவை யாவும் அவ்வூரையே நோக்கிச் செலுத்துவது போன்றது இது. ஞானத்தால் தெளிவடைந்த பெரியோர்கள் உண்மையை அறிவார். அவர்களைப் போல் அன்றி ஒருகால் அறிந்தும் ஒருகால் அறியாது பித்தரைப்போல் உழல்கின்ற பேதையர் மதநூற்களுக்குக் கட்டுப்பட்டு பொன்மலையை நோக்கிச் செல்ல விரும்பியவன் வேறு திசையிலே சென்று கடலில் வீழ்ந்தது போலத் தம் கொள்கையே சிறந்தது என்று உரத்துக் கூறித்திரிவர்.

நூற்கு அதிகாரியும் - நூல் வழியும் - நூற் பெயரும்

போதமிகுத் தோர், தொகுத்த பேதை மைக்கே
பொருந்தினோர் இவர்க்கு அன்றி, கதிப்பால் செல்ல
ஏதுநெறி எனும் அவர்கட்கு அறிய முன்னாள்
இறைவன் அருள் நந்திதனக்கு இயம்ப நந்தி

கோதில் அருட் சனற்குமா ரர்க்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன் கொண்டு
தீது அகல எமக்கு அளித்த ஞான நூலைத்
தேர்ந்து உரைப்பன் சிவஞான சித்தி என்றே. 10

பண்டைத் தவத்தினால் கருவிலே திரு உடையராய்த் தோன்றிய ஞானம் உடையார்க்கு நூலின் துணை தேவையில்லை. இது போலத் தமது பேதைமையினால் உலக வாழ்க்கையில் பொருந்தினோர்க்கும் நூல் தேவையில்லை. இவர்கள் இருவருக்குமின்றி வீட்டு நெறியைத் தலைப்பட உரிய வழி எது என்று தேடும் சத்திநிபாதம் வாய்க்கப் பெற்றவர்களுக்காகவே சிவபெருமான் இந்த ஞான நூலினை நந்தி பெருமானுக்கு உரைத்தருளினார். அவர் குற்றமற்ற அருளுடைய சனற்குமார முனிவருக்கு அருளிச் செய்தார். அவ்வாறு வழிவழியாக ஆசிரியப் பரம்பரையிலே வந்த இந்த நூலை எமது ஞானகுரவராகிய மெய்கண்டநாதர் கொண்டருளினார். எங்களது குற்றம் யாவும் நீங்குமாறு அவர் அருளிச் செய்த நூலை நன்கு தேர்ந்து சிவஞான சித்தி என்ற பெயருடன் யான் உரைக்கலுற்றேன்.

நூற் கருத்து

இறைவனையும் இறைவனால் இயம்பும் நூலும்
ஈண்டு அளவும் பொருள் இயம்பும் வேண்டும் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லாம்
மூதுலகில் எமக்கு இயன்ற முயற்சி யாலே
சிறையுலவும் புனல்நிலவித் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோல் உண்டாய பொய்கொள் மார்க்கத்
துறைபலவும் கடாவிடையால் சொல்லிப் போக்கித்
துகள்தீர இந்நூலில் சொல்ல கிற்பாம். 11

இறைவனைப் பற்றியும் இறைவன் அருளிச் செய்த முதல் நூல்களைப் பற்றியும் அளவைகளைப் பற்றியும் அந்நூல்களால் அறியப்படும் பொருள்களின் இயல்பு பற்றியும், மெய்ப் பொருளை நாடுவோர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் முறைமைகள் பற்றியும், கட்டுநிலை பற்றியும், வீட்டுநிலை பற்றியும் இந்நூலில் எடுத்துரைக்கலுற்றேன். தொலைவிலிருந்து பார்க்கும் போது கரை மோதும் குளத்து நீர் போல் தோன்றி அணுகிப் பார்க்கும் போது கானல் நீராக மறைகின்ற பொய்ம்மை நிறைந்த பிற சமயக் கொள்கைகளை வினா விடைகளால் கூறி அவற்றின் பொய்ம்மையை மாற்றி, மனமாசு அகல ஞானபாதத்தின் மெய்ந் நெறியை இந்நூலில் சொல்லத் தொடங்கினேன்.

இது வரை உள்ள பகுதி சிவஞான சித்தியார் பரபக்கத்தோடு சேர்ந்தது.

சிவஞான சித்தியார்

சுபக்கம்

காப்பு

ஒரு கோட்டன், இருசெவியன், மும்மதத்தன்
நால்வாய், ஐங்கரத்தன், ஆறு
தருகோட்டுஅம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகு ஒட்டு அன்பொடும் வணங்கி, ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஒட்டும்; அயன்திருமால் செல்வமும் ஒன்றே
என்னச் செய்யும், தேவே. 1

பாயிரம்

மங்கல வாழ்த்து

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருள் ஆய், வேறு ஆம்
குறியது உடைத்தாய், வேதஆகமங்களின் குறி இறந்து, அங்கு
அறிவினில் அருளால் மன்னி, அம்மையோடு அப்பன் ஆகி,
செறிவு ஒழியாது நின்ற சிவன்அடி சென்னி வைப்பாம். 2

ஆறு வகைப்பட்ட ஒவ்வொரு சமயமும் சிந்தித்துத் தெளிந்த பொருளாகவும், அவற்றின் வேறாகவும், வேதங்களிலும் ஆகமங்களிலும் விரித்துரைக்கின்ற பொருளுக்கு அப்பாற்பட்டதாகவும், நம்முடைய அறிவில் தனது பேரருளால் நிறைந்து உயிர்த் தொகுதிகளுக்குத் தாயாகவும் தந்தையாகவும் விளங்கி எங்கும் நிறைந்திருக்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளை நம் தலை மீது சூடி வணங்குவோமாக.

சமயங்கள் பற்பல. அவற்றைப் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்று நான்கு வகையாக வகுத்துக் கூறுவர். ஒவ்வொரு வகையிலும் ஆறு சமயங்கள் உள்ளன என்றும் கொள்ளுவர். இவருள் ஒவ்வொருவரும் முதற்கடவுள் என்று கொள்கின்ற பரம் பொருள். அதன் இயல்பு, வீடு பேறு பற்றிய கோட்பாடுகள் தம்முள் மாறுபட்டனவாக இருக்கும். ஆயினும் சைவசித்தாந்தப்படி எடுத்துரைக்கப்படுகின்ற சிவபெருமானே முதற்பெரும் கடவுளாவான். எந்தச் சமயத்தின் நெறி நின்று எந்தப் பெயரைக் கூறி எவர் வழிபட்டாலும்

அந்த வழிபாடு சிவபெருமானுக்கே உரியது என்பதை "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" என்ற சொற்றொடரால் விளக்கினார். எல்லாச் சமயத்தினரும் தத்தம் கடவுளின் சிறப்பைக் கூற இக்கருத்தையே பயன்படுத்துவர். எனவே வேற்றுச் சமயத்தவரும் மறுக்காத வண்ணம் மாதவச் சிவஞான முனிவர் இச்சொற்றொடருக்குத் தமது பொழிப்புரையால் உரை கண்டிருக்கிறார். "அறுவகைச் சமயத்து அவ்வவர் ஓர்க்கும் பொருளாய்" என்று அமைத்து அவர் உரை வரைகிறார். ஓர்க்கும் என்பது ஆராய்ந்து அறிகின்ற என்ற பொருளைத் தரும். "ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையாப், பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" (குறள் 3 5 7) என்பதைக் காண்க.

'அறிவினால் மிக்க அறுவகைச் சமயத்து அவ்வவர்க்கு அங்கே ஆரருள் புரிந்து' (7 - 55 - 9) என்ற சுந்தரர் தேவாரம் இங்கே நினையத்தக்கது.

என்னைஇப் பவத்தில் சேராவகை எடுத்து, என் சித்தத்தே
தன்னைவைத்து, அருளினாலே தாள்இணை தலைமேல் சூட்டும் –
மின் அமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் – மெய்கண்டான் நூல்
சென்னியில் கொண்டு, சைவத் திறத்தினைத் தெரிக்கல் உற்றாம். 3

எண்ணற்ற பிறப்புகளாகிய, எல்லையும் ஆழமும் காண முடியாத பிறவிக்கடலிலே விழுந்து தடுமாறும் என்னை அதிலிருந்து தன்னுடைய அருட்கையால் எடுத்து என் அறிவில் தனது திருவருள் விளங்குமாறு திருவுளம் கொண்டு தன் அருளால் தனது திருவடிகளை என் தலைமேல் சூட்டியவரும், மின்னலொடு கூடிய மேகங்கள் சூழ்ந்த சோலைகளுடைய திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளி விளங்குபவரும் ஆகிய மெய்கண்டார் அருளிய திருநூலைத் தலைமையாகக் கொண்டு சைவசித்தாந்தத்தின் மெய்ப்பொருள் உண்மையை யாம் விளக்கத் தொடங்குவோம்.

பவம்-பிறவி. பிறவியைப் பெருங்கடலாகக் கூறுவது பெரியோர் மரபு (குறள் 10). எடுத்து என்ற சொல்லாலே பிறவிக் கடலில் இருந்து தமது அருட்கையினால் எடுத்து என்ற பொருளை ஆசிரியர் குறிப்பால் பெற வைத்தார்.

மெய்கண்டதேவ நாயனாரால் அருளப்பட்ட நூல் சிவஞான போதம் என்ற பெயருடன் விளங்குகிறது. ஆசிரியர் அப்பெயரை இங்குக் குறிக்கவில்லை என்பதும் மெய்கண்டான் நூல் என்று மட்டிலுமே குறித்தார் என்பதும் நினையத்தக்கன.

சென்னியில் கொண்டு என்பதற்கு சிவஞான முனிவர் சிரத்தானமாகக் கொண்டு என்று உரை வகுத்தார். அதாவது தலை மேல் தாங்கி என்று கொள்ளாமல் அந்த நூலையே தலைமை நூலாகக் கொண்டு என்று பொருள் காணவேண்டும் என்பது முனிவர் கருத்து.

பண்டை நல் தவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன் – மார்க்கர்
கண்டநூல் ஓதி வீடு காதலிப் பவர்கட்கு ஈசன் –
புண்ட ரிகத்தாள் சேரும் பரிசினைப் புகலல் உற்றாம். 4

முன்னைப் பிறவிகளில் ஈட்டிய தவத்தினால் இந்தப் பிறவியில் பக்குவம் பெற்ற மெய்ஞ்ஞானிகளாகத் தோன்றிய அருளாளர்களுக்கு இறைவன் தானாகவே எழுந்தருளி வந்து வீடுபேற்றை அருளுவான். ஆகையினால் அவர்கள் நூல்களைப் பயின்றும் ஆராய்ந்தும் அறிய வேண்டிய தேவை இல்லை. எனவே இந்த நூல் அவர்களுக்காக எழுதப்படவில்லை. நன்னெறியிலே ஒழுகியவர்கள் உயிர்கள் உய்வடைவதன் பொருட்டு எழுதியருளிய நூல்களைப் பயின்று வீடு பேறு அடைதல் வேண்டும் என வேட்கை உடையவர்களுக்காக இந்நூலைக் கூறல் உற்றாம்.

மூன்று வகைப்பட்டது ஆருயிர்த் தொகுதி என்று சைவசித் தாந்தம் கொள்ளுகிறது. அவர்கள் முறையே விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் எனப்படுவர், இவர்களுக்கு இறைவன் குருவுமாகத் தோன்றி அருள்பாலிக்கும் போது தன்மை, முன்னிலை, படர்க்கை என்று மூவிடங்களிலும் நின்று ஞானத்தை வழங்குவான்.

இந்தப் பாடலிலும் மாந்தர்கள் மூன்று வகையாகக் குறிக்கப் பட்டனர். ஆயினும் மேலே கூறப்பட்ட வகையிலிருந்து இந்தப் பகுப்பு சற்றே வேறுபட்டது. பாடலில் இரண்டு வகையினரைப் பற்றி ஆசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். மூன்றாவது வகையைக் குறிப்பால் பெற வைத்தார். இப்பகுப்பின்படி உயிர்கள் சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் என மூவகைப்படும்.

சாமுசித்தர் என்பவர் முந்திய பிறவிகளிலே ஈட்டிய நற்றவத் தினால் மீண்டும் உலகில் தோன்றி இந்தப் பிறவியில்வீடுபேறுஅடையும் மேலான தகுதி வாய்ந்தவர்கள். அவர்களை இறைவனே முன் வந்து ஆட்கொள்ளுவான். எனவே அவர்கட்கு நூலின் துணை தேவை இல்லை.

வைநயிகர் என்பவர் விநயம் உடையவர்கள் எனப்படுவர். அவர்களே அருளாளர்களின் நூலைத் துணைக்கொண்டு நிலைத்தன இவை, நிலையாதன இவை என்று உணர்ந்து பொய்தீர் ஒழுக்க நெறி நின்று வீடு அடைவதற்கு உரியவர்கள். இறைவன் திருவடிகளைச் சார்வதற்கு உரிய நெறி இது என்று காட்டும் இந்நூல் அவர்கள் பொருட்டே ஆசிரியரால் உரைக்கப்பட்டது.

மூன்றாவது வகையினராகிய பிராகிருதர் பற்றி ஆசிரியர் கூறாது விடுத்தார். அவர்கள் உலக இன்பங்களை விரும்பி உழல்பவர் ஆவர். எனவே அவர்களுக்கு ஞான நூல்களால் பயன் ஏதும் இல்லை.

அவையடக்கம்

மறையினால், அயனால், மாலால், மனத்தினால், வாக்கால், மற்றும்
குறைவுஇலா அளவி னாலும் கூறஒணாது ஆகி நின்ற
இறைவனார் கமல பாதம் இன்று யான் இயம்பும் ஆசை
நிறையினார் குணத்தோர்க்கு எல்லாம் நகையினை நிறுத்தும் அன்றே. 5

மறைகளாலும், அயனாலும், திருமாலாலும், மனத்தினாலும், வாக்கினாலும் குறைவுபாடில்லா அளவைகளினாலும் இத்தகையது என்று அறிவதற்கு அரியதாக விளங்குகின்ற இறைவனது தாமரை மலர் போன்ற பாதங்களை இந்நூலினிடத்து எடுத்துரைக்கப் புகுந்த எனது ஆவல் சான்றாண்மை நிறைந்த பெரியோர்க்கு எல்லாம் நகைப்பினை விளைவிக்கும் அன்றே.

நான்மறைகளும் சிவபெருமானுடைய இயல்பினை எடுத்துரைக்க வல்லன அல்ல. எனவே அவை 'இதுவன்று இதுவன்று' என்றே கூறுவனவாகும் என்பர். இங்கு மறையினால் என்றது பாச அறிவால் அறியப்படாமையைக் குறித்தது. அயனும் திருமாலும் தேடி அறியாத இயல்பினை உடையவன் இறைவன் என்பது அவன் பசு ஞானத்தால் அறியப்படாதவன் என்பதைக் குறித்தது. சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாதவன் என்பதும் பாசஞானத்துக்கும் பசுஞானத்துக்கும் எட்டாதவன் என்பதைக் குறிக்கும்.

குறைவற்ற அளவைகள் என்பது இறைவன் சிற்றறிவாகிய உயிர்களால் அளவை இலக்கணத்தின் துணை கொண்டு அறியப்படாதவன் என்பதைக் குறித்தது.

சிவஞான முனிவர் இங்கே கூறப்பட்டவற்றுள் புராணங்களையும் இதிகாசங்களையும் மிருதிகளையும், மீமாம்சை, தருக்கம் முதலியவற்றையும் அடக்கிக் காட்டுவார். இவ்வாறு நூலாசிரியர் அவை அடக்கம் கூறினார்.

ஆசங்கை நீக்கல்

அருளினால் ஆக மத்தே அறியலாம் – அளவி னாலும்
தெருளலாம் – சிவனை, ஞானச் செய்தியால், சிந்தை யுள்ளே
மருள் எலாம் நீங்கக் கண்டு, வாழலாம்; பிறவி மாயா
இருள் எலாம் இரிக்கல் ஆகும்; அடியரோடு இருக்க லாமே. 6

இத்தனை அரியவனாகிய இறைவனது இயல்பு அறிவதற்கு அருமையானதே. ஆயினும் ஒப்பற்ற சிவபரம் பொருளைப் பற்றிய அறிவினை அப்பெருமான் அருளிச் செய்த ஆகமங்களைக் கற்றுத் தேர்ந்த சிவஞானிகளின் அருள் உபதேசத்தால் கேட்டு அறியலாம். அவ்வாறு கேட்டதை அளவைகளின் துணைகொண்டு சிந்தித்தும் அறியலாம். சிந்தித்தவற்றை சிவஞானத்தின் துணை கொண்டு மாசறத்

தெளியலாம். இவ்வாறு ஒழுகுவதனால் மாயாத பிறவிக்குக் காரணமாகிய பாசத்தளையை நீக்கலாம். சிவனடியாரோடு கூடி நிட்டை மேற்கொண்டு சிவானந்தம் கைவரப் பெற்று இருக்கலாம்.

அவையடக்கச் செய்யுளில் சிவபெருமான் அறிதற்கு அரியவன் என்பதனை ஆசிரியர் எடுத்துரைத்தார். அதனைக் கற்பவர்களுக்கு இறைவன் ஒரு வகையாலும் அறியப்படாத தன்மை உடையவனோ என்ற ஐயம் தோன்றும். சைவசித்தாந்தத்தின் கருத்துப்படி சிவபெருமான் பாசஞான, பசுஞானங்களால் அறியப்படாதவன். ஆயினும் பதிஞானத்தில் அறியப்படுபவன் என்பதை இப்பாடலில் கூறி ஐயத்தைத் தெளிவிக்கிறார் ஆசிரியர் அருள் நந்திசிவம். இக்கருத்தின் விரிவு இந்நூலின் ஆறாம் நூற்பாவில் ஆசிரியரால் கூறப்படும்.

இறைவனை அறிவதற்கு நான்கு படிநிலைகள் கூறப்படும். அவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பன. இவை நான்கும் ஆராய்ச்சி அநுபூதி என்ற இரண்டுள் அடங்கும். கேட்டலும் சிந்தித்தலும் ஆராய்ச்சி எனவும், தெளிதலும், நிட்டை கூடலும் அனுபூதி எனவும் பெருமக்களால் உணர்த்தப்படுகின்றன.

அளவை இலக்கணம்

அளவை காண்டல், கருதல், உரை, அபாவம், பொருள், ஒப்பு ஆறு என்பர்;
அளவை மேலும் ஒழிபு, உண்மை, ஐதி கத்தோடு, இயல்பு எனநான்கு
அளவை காண்பர்; அவையிற்றின் மேலும் அறைவர்; அவை எல்லாம்
அளவை காண்டல், கருதல், உரை என்ற இம்மூன்றில் அடங்கிடுமே. 7

அளவை என்பது காண்டல் அளவை, கருதல் அளவை, உரை அளவை, இன்மை அளவை, பொருள் அளவை, உவமை அளவை, என்று ஆறு வகைப்படும் என்பர். சிலர் இவற்றுக்கு மேலும் ஒழிபு அளவை, உண்மை அளவை, ஐதிக அளவை, இயல்பு அளவை, என்ற நான்கனையும் கூட்டி அளவைகள் பத்து வகைப்படும் என்று கூறுவர். வேறுசிலர் இப்பத்துக்கு மேலும் அளவைகள் உண்டு எனக் கொள்வர். இவ்வாறு அளவைகளைப் பலவகைப்படுத்திக் கூறினாலும் அவை யாவும் காண்டல் அளவை, கருதல் அளவை, உரை அளவை எனும் மூன்றனுள் அடங்கும்.

அளவை என்பது வடமொழியில் பிரமாணம் என்ற சொல்லால் குறிப்பிடப்படும். பிரமா என்ற சொல் அறிவு என்ற பொருளைத் தரும். எதன் வழியாக அறிவு பெறப்படுகிறதோ அது பிரமாணம் ஆகும். அளவையை அறிவு அளவை என்றும் வழங்குவர், ஆங்கிலத்தில் இது Epistemology எனப்படும்.

உலகத்துப் பொருள்களை எண்ணல் அளவை, நீட்டல் அளவை, நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை போன்றவற்றால் அளந்து காண்பது போல மெய்ப்பொருள் இயலில் கூறப்படும் கருத்துக்களை அளந்து அறிவதற்கு அளவை இயல் பயன்படுகிறது. அளவையில் குறை இருந்தால் அளக்கப்படும் பொருளினைப் பற்றிய அறிவும் குறையுடையதாய் முடியும். அதனால் தான் அளவை இயல் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. இது முதல் பதினான்கு பாடல்கள் அளவை இலக்கணம் பற்றிக் கூறுகின்றன.

காண்டல் அளவை என்பது காட்சி என்றும், பிரத்தியட்சப் பிரமாணம் என்றும் வழங்கும். ஒரு பொருளைக் கண் முதலிய ஐம் பொறிகளாலும் நேர் முகமாக அறிதல் காண்டல் அளவை ஆகும்.

கருதல் அளவை என்பது அனுமானப் பிரமாணம் எனவும் கூறப் படும். ஒரு பொருளை நேர்முகமாகக் காண முடியாத போதும், அதனை ஒருபோதும் விட்டு நீங்காத தன்மை உடைய மற்றொரு பொருளைக் கண்டு முதலில் கூறப்பட்ட பொருள் உள்ளது என்று கருதி அறிதல் கருதல் அளவை ஆகும். எடுத்துக்காட்டாக தீயோடு விட்டு நீங்காத தன்மையை உடையது புகை. விட்டு நீங்காத் தன்மையை அவிநா பாவம் என்ற சொல்லால் குறிப்பர். தொலைவில் ஓரிடத்தில் புகை எழுவதைக் கண்டு நெருப்பு கண்ணுக்குப் புலனாகாத போதும் அங்கே நெருப்பு உள்ளது என்று அறிந்து கொள்வது கருதல் அளவையின் பாற்படும்.

உரைஅளவை ஆகமப் பிரமாணம் என்றும், சத்தப் பிரமாணம் என்றும், ஆப்தவாக்கியம் என்றும் வழங்கப்படும். கண்டும் கருதியும் அறிய முடியாத பொருள்களைப் பற்றி நூல்களின் வாயிலாக அறிதல் உரை அளவை ஆகும். இங்கு நூல்கள் எனப்பட்டன இறைவனால் அருளப்பட்டனவும், இறைவனின் மெய்யடியார்களால் அருளப் பட்டனவுமாகிய மெய்ந்நூல்களையே குறிக்கும்.

இன்மை என்பது உண்டு என்னும் அறிவுக்கு எதிராக உணரப் படுவதாகும். இதனை அபாவம் என்றும் வழங்குவர். எடுத்துக் காட்டாக முயலுக்குக் கொம்பு இல்லை என்பது இன்மை அளவையால் அறியப்படுவதாகும்.

பொருள் என்று ஆசிரியர் குறிப்பிட்ட அளவை வடமொழியில் அருத்தாபத்தி என்று வழங்கும். 'இங்ஙனம் அன்று எனில் இது கூடாது' என்று உய்த்து அறிவது இந்த அளவையால் பெறப்படும். எடுத்துக் காட்டாக ஒருவர் உண்ணா நோன்பு இருப்பதாகச் சொல்லுகிறார். என்று வைத்துக் கொள்வோம். பகற்பொழுது முழுவதும் அவரைச் சுற்றி மக்கள் கூட்டம் மொய்க்கிறது. அவர்கள் முன்னிலையில் அவர் எதையுமே உண்ணவில்லை பத்துப் பதினைந்து நாள் கழிந்த பிறகு அவர் மேனி வாடாமல் இருப்பாரானால் யாருமே அறியாமல் இரவில்

அவர் உண்கிறார் என்பதனை உய்த்து அறியலாம். இதனைப் பகல் உண்ணான் பருத்திருப்பான் என்ற சொற்களால் கூறுவர். இதுவே அருத்தாபத்தி அளவையாகும்.

செய்யுளில் ஒப்பு என்ற சொல்லால் குறிக்கப்படுவது உவமை அளவை என்றும் கூறப்படும். காட்டுப் பசுவை அறியாத ஒருவன் அது எவ்வாறு இருக்கும் என்று கேட்டால் வீட்டுப் பசுவை ஒத்து இருக்கும் என்று விளக்குவது இந்த அளவைக்கு எடுத்துக் காட்டு.

சிறப்பித்துச் சொல்லப்படுகிற மேற்கூறிய ஆறு அளவைகளையும் தவிர மேலும் நான்கு அளவைகள் கொள்ளப்படும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இவற்றுள் முதலாவது ஒழிபு அளவை. இதற்கு பாரிசேட அளவை என்றும் பெயர் வழங்கும். இதற்கு எடுத்துக்காட்டாக மகாபாரதக் கதையிலிருந்து ஒரு நிகழ்ச்சியைக் கூறுவர். அக்காலத்தில் ஆயிரம் யானை வலிமை உடையோர்கள் நால்வர் இருந்தனர். அவர்கள் சல்லியன், சராசந்தன், கீசகன், பீமசேனன் என்பவர்கள். விராட நாட்டில் கீசகன் இனந்தெரியாத ஒருவனால் மற்போரில் கொல்லப்பட்டான். அந்நாட்டில் சல்லியனும்,சராசந்தனும் இல்லை. எனவே கீசகனைக் கொன்றவன் அஞ்ஞாதவாசத்தில் இருந்தவனாகிய பீமனாகத்தான் இருத்தல் வேண்டும் என்று உய்ந்து அறியப்படும்.

உண்மை என்பது சம்பவ அளவை என்று வடமொழியில் கூறப் படும். என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் உள்ளன என்று நான் கூறும் போது என்னிடம் நூறு பொற்காசுகள் உண்டு என்பது சொல்லாமலே பெறப்படும். ஏனெனில் நூறு, ஆயிரத்துள் அடங்கும் என்பது உலகறிந்த உண்மை.

ஐதிகம் என்பது வழிவழியாக வழங்கி வரும் வழக்காகும். இம் மரத்தில் பேய் ஒன்று குடி இருக்கிறது எனும்போது தலைமுறை தலை முறையாக நம்பப்பட்டு வந்த ஒரு செய்தியை அது உணர்த்துகிறது.

இயல்பு என்பது சுபாவ அளவை என்று கூறப்படும். சொற்களுக்கு நேரடியாகப் பொருள் கொள்ளுவது இந்த அளவையினுள் அடங்கும். மரம் என்ற தமிழ்ச் சொல் இயல்பாக நின்று மரம் என்ற பொருளை உணர்த்தும் என்று அறிவது இந்த அளவையுள் அடங்கும்.

'மா மரத்தைக் காட்டல்' என்ற பாடம் பிழையானது என்றும், 'மரம் மரத்தைக் காட்டல்' என்பது சரியான பாடம் என்றும் பெரும் புலவர் க. வச்சிரவேல் முதலியார் அவர்களும் மகா வித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார் அவர்களும் கொள்ளுகின்றனர்.

இவ்வாறு பத்து அளவைகள் கூறப்படினும் அவை யாவும் காட்சி, கருதல், உரை எனும் மூன்றனுள் அடங்கும். இன்மையும், இயல்பும்

காட்சி அளவையில் அடங்குவன. பொருள், ஒப்பு, ஒழிபு, உண்மை என்ற நான்கு அளவைகளும் கருதல் அளவையில் அடங்குவன. ஐதிகம் என்பது உரை அளவையில் அடங்கும்.

மாசுஅறு காட்சி, ஐயம் திரிவு இன்றி, விகற்பம் முன்னா
ஆசுஅற அறிவது ஆகும் ; அனுமானம் அவினாபாவம்
பேசுறும் ஏதுக் கொண்டு, மறைபொருள் பெறுவது ஆகும் ;
காசு அறும் உரை இம்மானத்து அடங்கிடாப் பொருளைக் காட்டும். 8

குற்றமற்ற காண்டல் அளவை என்பது முதலில் நிருவிகற்பமாய் அறியப்பட்டு, அதன் பின்னர் ஐயம், திரிபு ஆகியன இல்லாமல் எதனையும் தெளிவுறக் கண்டு அறிவதாகும். அனுமான அளவையாவது கண்ணுக்கு நேரே புலப்படாமல் மறைந்திருக்கும் ஒரு பொருளை அதனை விட்டு நீங்கா இயல்பினைக் காரணமாகக் கொண்டு உய்த்து அறிவதாகும். இவ்விரண்டு அளவைகளிலும் அடங்காத பிற பொருள்களைத் தெளிவுற உணர்த்துவது உரை அளவை ஆகும்.

காட்சி அளவை கண்ணுக்கு நேரே புலப்படும் பொருள்களை அறிகின்ற ஆற்றல். இது முதலில் பொதுவாக ஒரு பொருள் எதிரே தோன்றுகிறது என்ற அளவிலேயே நிகழும். இவ்வாறு நிகழ்வதை நிரு விகற்பக் காட்சி என்பர். அதாவது வேறுபாடுகள் ஏதுமற்ற பொதுக் காட்சி இதுவாகும். விகற்பம் - வேறுபாடு. இப்பாடலில் ஆசிரியர் விகற்பம்முன்னா என்று கூறியதனை நிருவிகற்பக் காட்சியை முன்னதாகக் கொண்டு என்று பொருள் காண வேண்டும். நிருவிகற்பம் என்றது தலைக்குறையாக விகற்பம் என்று இங்குக் குறிக்கப்பட்டது. அதனை அடுத்து நிகழ்வது சவிகற்பக் காட்சி எனப்படும். வேற்றுமையோடு பொருந்திய காட்சியறிவு சவிகற்பம் எனப்படும். ஒரு பொருளை இது இன்னது என்று தெளிவுற அறிவதாகும். இவ்வாறு அறியும் போது இது யாதோ என்ற ஐயமும், ஒன்றை மற்றொன்றாக அறிகின்ற திரிபும் இல்லாது இருத்தலே ஆசிரியரால் மாசு அறு காட்சி எனப்பட்டது.

கருதல் அளவை என்பது மறைந்திருக்கும் ஒரு பொருளின் விட்டு நீங்காத இயல்பினைக் கொண்டு அதன் இருப்பை அறிவதாகும். ஓர் அறைக்குள் நுழைந்தவுடன் மல்லிகைப்பூவின் மணத்தை நுகர்கிறோம். மலர் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் அங்கே மல்லிகை மலர் உண்டு என்று அறிவது இந்த அளவையுள் அடங்கும். அவிநாபாவம் - வீட்டுநீங்காத் தன்மை. அதனைக் காரணமாகக் கொண்டே அனுமானம் நிகழும். வழக்கமாகக் கூறப்படும் எடுத்துக்காட்டு புகை உள்ள இடத்தில் நெருப்பு உண்டு என்று அறிதலாகும்.

மேற்கூறிய இரண்டு அளவைகளுக்கும் அடங்காத பொருள்களைப் பற்றி அருளாளர்களும் சான்றோர்களும் மொழிந்த நூலைக் கொண்டு அறிவது உரைஅளவை ஆகும். விண்ணுலகம் பாதாள உலகம் முதலியவற்றின் இருப்பினை இந்த அளவையின் அடிப்படையிலே அறிகிறோம்.

கண்ட பொருளை இரட்டுறவே கருதல் ஐயம் ; திரியவே
கொண்டல் திரிவு ஆம் ; பெயர், சாதி, குணமே, கன்மம், பொருள் என ஐந்து
உண்டு அவ்விகற்ப உணர்வினுக்கு; பொருளின் உண்மை மாத்திரத்தின்
விண்டல் இல்லா அறிவு ஆகும் – விகற்பம் இல்லாக் காட்சியே. 9

எதிரே தோன்றுகிற ஒரு பொருளை இது இன்னது எனத் தெளிவுபட உணராமல் பொதுவாக ஒரு பொருள் உள்ளது என்று காணும் காட்சியை நிருவிகற்பக் காட்சி எனபர். இதுவே முதலில் நிகழ்வது. அதன் பின்னர் அப்பொருளின் பெயர், இனம், பண்பு, தொழில் பொருள் என்ற ஐந்து வகை இயல்புகளும் வேறுபடுத்தித் தெளிவுறக் காண்பது சவிகற்பக் காட்சி எனப்படும். அப்பொருளைக் காணும் போது இதுவோ அதுவோ என்று ஐயத்தோடு காண்பது ஐயக்காட்சி எனப்படும். ஒன்றை மற்றொன்றாகக் காண்பது திரிவுக்காட்சி எனப்படும்.

விகற்பம் - வேறுபாடு. நிருவிகற்பம் - வேறுபாடு அற்றது. சவிகற்பம் - வேறுபாட்டுடன் கூடியது.

எதிரே ஒரு மரம் தோன்றுகிறது. அதனைப் பொதுவாக அறிதல் நிருவிகற்பக் காட்சி. எதிரே தெரிவது ஒரு மரம் (பெயர்) அது மாமரம் (இனம்). இம்மரம் இன்னின்ன பண்புகள் உடையது (பண்பு) இது இப்போது பூத்துக் காய்த்து விளங்குகிறது (தொழில்). இம் மரத்தில் நல்ல கனிகளும் பழுத்துள்ளன. எனவே இது தேமாமரம் (பொருள்). இவ்வாறு அறிவதே சவிகற்பக் காட்சி.

காண்டல் வாயில், மனம், தன்வே தனையோடு, யோகக் காட்சி என
ஈண்டு நான்காம்; அனுமானம் தனக்கும் பிறர்க்கும் என்று இரண்டாம்;
மாண்ட உரைதந் திரமந்திரத்தோடு உபதே சச்சொல் என மூன்றாம்;
பூண்ட அளவைக்கு எதிர்புலன் தன் இயல்பு, பொது என்று இரண்டாமே. 10

காட்சி அளவையை நான்கு வகைகளாகப் பிரிப்பர். அவை முறையே வாயிற் காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக் காட்சி என்பனவாகும். கருதல் அளவையும் தன் பொருட்டு என்றும், பிறர் பொருட்டு என்றும் இரண்டாகக் கொள்ளப்படும். மாண்புடைய உரை அளவை மூன்றாகக் கூறப்படும். அவை தந்திரம், மந்திரம், உபதேசம் என்பனவாகும். இங்கே கூறப்பட்ட அளவைகளால் அறியப்படும் பொருள்களின் இயல்பு இரண்டாகக் கொள்ளப் பெறும். அவை முறையே தன்னியல்பு எனப்படும் சிறப்பியல்பும், பொது இயல்பும் என்று இரு வகைப்படும்.

இதனை அடுத்து வருகிற இரண்டு பாடல்களால் இங்கே விளக்கப்பட்ட நான்கு வகைக் காட்சிகளும், தன்னியல்பு பொது இயல்பு என்பனவும் ஆசிரியரால் விளக்கப்படுகின்றன.

அன்னிய சாதி யும்தன் சாதியும் அகன்று நிற்றல்,
தன்இயல்பு அன்னியத்தைத் தவிர்ந்துதன் சாதிக்கு ஒத்தல்
துன்னிய பொது, இயற்கை; சொன்ன இவ்விரண்டி னுள்ளே
மன்னிய பொருள்கள் யாவும் அடங்கிடும், மானம் உற்றால். 11

சிறப்பு இயல்பு எனப்படுவது வேற்று இனப் பொருள்களின் தன்மையையும் தன் இனப் பொருள்களின் தன்மையையும் விட்டு நீங்கித் தனக்கே உரிய இயல்புகளோடு விளங்குவது ஆகும். பொது இயல்பு எனப்படுவது வேற்று இனப் பொருள்களின் இயல்பில் இருந்து நீங்கியும் அதே நேரத்தில் தன் இனப் பொருள்களின் இயல்புகளோடு ஒத்தும் விளங்குவதாகும். இவ்விரண்டு இயல்புகளுள்ளே காட்சி முதலிய அளவைகளின் துணை கொண்டு அறியப்படும் பொருள்கள் யாவும் அடங்கும்.

விலங்கினங்களுக்குள்ளே பசு என்பது ஓர் இனம், எருமை குதிரை முதலியன விலங்குகளே ஆயினும் அவை வேற்று இனமாகும். இத்தகைய இனப்பாகுபாடு பார்த்த அளவிலேயே புலப்படுவது ஆகும். இதனையே பாடலில் அன்னிய சாதியைத் தவிர்த்து தன் சாதிக்கு ஒத்தல் என்று ஆசிரியர் குறிப்பிட்டார்.

நம் வீட்டுப் பசு கருப்பு நிறத்தையும் குட்டைக் கொம்புகளையும் உடையதாகவும் திமில் இல்லாததாகவும் இருக்கிறது. எனவே இந்தப் பசு, பொதுவாக எல்லாப் பசுக்களுக்கும் உரிய இயல்புகளோடு விளங்கினும் தனக்கு எனச் சில அடையாளங்களை உடையது ஆகிறது. இதுவே தன்னியல்பு என்று கூறப்படும் சிறப்பு இயல்பு ஆகும்.

உயிரின் ஒடுஉணர்வு – வாயில் ஒளிஉரு ஆதி பற்றிச்
செயிர்உரு விகற்பம் இன்றித் தெரிவது இந் திரியக் காட்சி;
அயர்வுஇல் இந்திரிய ஞானம், ஐம்புலன் சார்ந்து, உயிர்க்கண்,
மயர்வுஅற, வந்த ஞானம் மானதக் காண்டல் ஆமே. 12

உயிரின் அறிவு தொழிற்படும்போது அது பொருள்களை நோக்கிச் செல்லுகிறது. அப்போது அவ்வறிவு கண் முதலிய ஐம் பொறிகளையும், அப்பொறிகளுக்குத் துணையாக உடன் நிற்கும் தீ முதலிய ஐம்பூதங்களையும் அப்பூதங்களுக்கு முதற்காரணமாய் விளங்கும் உருவம் முதலிய ஐந்து தன் மாத்திரைகளையும் பொருந்தி நின்றே அறியும். ஐயம், திரிபு என்ற குற்றங்கள் இன்றி ஒரு பொருளை அதனுடைய பெயர், இனம் என்ற பாகுபாடுகள் இல்லாமல் பொதுமையாக அறிகின்ற அறிவு இந்திரியக் காட்சி எனப்படும். இது பொறி வழி அறியும் அறிவு எனப்படும். இவ்வாறு முதலில் எழுந்த அறிவு ஐம்புலன்களோடு பொருந்தி அறிந்த பின்னர் மீண்டும் மறக்கப்படாது சித்தத்தில் நிலை பெற்றுப் பெயர் இனம் முதலிய வேறுபாடுகளுடன் புத்தி தத்துவத்தின் தொழிற்பாட்டால் இன்னது எனத் தெளிவாக அறிகின்ற அறிவு மானதக் காட்சி எனப்படும்.

உயிரின் ஓடுஉணர்வு என்ற சொற்கள் அளவை பற்றிக் கூறப்படுகின்ற கருத்துக்கள் அனைத்திலும் கூட்டி உரைக்கப்படும் என்று மாதவச் சிவஞான முனிவர் உரை வரைகிறார்.

முதலில் கூறப்பட்ட இந்திரியக்காட்சி என்பது வாயிற்காட்சி எனவும் நிருவிகற்பக்காட்சி எனவும் கூறப்படும். மானதம் என்பது மனத்தின் தொழிற்பாட்டை முதலில் கொண்டு நிகழ்வது. ஆதலால் அது மனத்தின் வழி வந்த அறிவு ஆகும். ஒளி - நெருப்பு. உருஆதி - உருவம் முதலிய தன் மாத்திரைகள். செயிர் - குற்றம். அயர்வு இல் - மறத்தல் இன்றி. மயர்வு - மயக்கம்.

அருந்துஇன்பத் துன்பம் உள்ளத்து அறிவினுக்கு அராகம் ஆதி
தரும் தன்வே தனையாம் காட்சி; சமாதியால் மலங்கள் வாட்டிப்,
பொருந்திய தேச கால இயல்புஅகல் பொருள்கள் எல்லாம்,
இருந்து, உணர்கின்ற ஞானம் யோகநல் காண்டல் ஆமே. 13

தன் வேதனைக் காட்சி எனப்படுவது உயிர் அராகம் முதலிய ஐந்து தத்துவங்களாலும் செலுத்தப்பட்டு நுகர்கின்ற இன்பதுன்பங்களை இத்தகையது என்று அறிவதாகும். எட்டுவகை உறுப்புக்களைக் கொண்ட யோகப் பயிற்சியினால் மலங்களைக் கெடுத்து இருந்த இடத்தில் இருந்தவாறே தேச கால இயல்புகளின் எல்லைகளைக் கடந்து எவ்விடத்தும் எக்காலத்தும் உள்ள பொருள்களை உள்ளவாறே அறிகின்ற அறிவு யோகக் காட்சி எனப்படும்.

அராகம் ஆதி - அராகம் முதலியன. அராகம் முதலிய தத்துவங்களாவன காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பனவாகும். இவை வித்தியாதத்துவங்களுள் அடங்கும். உயிர் இவ்வைந்து தத்துவங்களோடு பொருந்தும் போதே அதற்கு இன்ப துன்ப உணர்வுகள் தோன்றும் என்பர். சத்துவகுணம் பொருந்தும் போது இன்பமும், தாமதகுணம் பொருந்தும் போது துன்பமும் விளையும். வேதனை என்ற சொல் இக்காலத்தில் துன்பத்தை மட்டும் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆயினும் அது நுகர்வு என்றே பொருள்படும். உயிரின் இன்ப துன்ப உணர்வுகளைத் தன் வேதனைக் காட்சி என்பர். வட மொழியில் இது ஸ்வவேதனா பிரத்யட்சம் என்று வழங்கும்.

யோகக் காட்சி எனப்படுவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, என்ற எட்டு உறுப்புக்களைக் கொண்ட யோக நெறியிலே நின்று அதனால் உயிரைக் கட்டியிருக்கும் மும்மலங்களையும் ஆற்றல் இழக்கச் செய்யும் யோகியரின் காட்சித்திறமாகும். அவர்கள் ஓரிடத்தில் ஒரு காலத்தில் இருந்த படியே இருந்து, விண்ணுலகம் மண்ணுலகம் கீழ் உலகம் ஆகிய மூன்று இடங்களிலும் இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் ஆகிய முக் காலத்தும் நிகழ்வனவற்றை உள்ளவாறே காண்பர்.

பக்கம் முன்றின், மூன்று ஏது உடைய பொருளைப் பார்த்து உணரத்
தக்க ஞானம் தன் பொருட்டாம்; பிறர்தம் பொருட்டாம் அனுமானம்,
தொக்க இவற்றால் பிறர்தெளியச் சொல்லல் ஆகும்; அச்சொல்லும்
மிக்க அன்னு வயத்தினொடு வெதிரே கச்சொல் என இரண்டாம். 14

பக்கம் என்பது மூன்று வகைப்படும். அவை முறையே பக்கம், சபக்கம், விபக்கம் என்பன. ஏது என்பதும் மூன்று வகைப்படும். அவை இயல்பு, காரியம், அநுபலத்தி எனப்படும். ஏதேனும் ஓர் ஏதுவை வைத்து விட்டுநீங்காத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொருளைக் கருதி அறிவது தன் பொருட்டு அனுமானம் எனப்படும். இவ்வாறே பக்கத்தோடு பொருந்திய மூன்று ஏதுக்களைக் கொண்டு தான் கருதி அறிந்ததை மற்றையோர் அறிய அறிவிக்கும் அளவை பிறர் பொருட்டு அனுமானம் எனப்படும். இவ்வாறு பிறருக்கு அறிவிப்பதும் உடன்பாட்டு வகை என்றும், எதிர்மறை வகை என்றும் இரண்டாகும்.

பக்கம் என்பது வடமொழியில் பட்சம் எனப்படும். அந்நுவயம் என்பது உடன்பாட்டு முறையையும், வெதிரேகம் என்பது எதிர் மறையையும் குறிப்பனவாகும். இங்குக் கூறப்பட்ட பக்கம், ஏது என்பன இதனை அடுத்து வரும் இரண்டு பாடல்களாலும் விளக்கப்படுகின்றன.

மூன்று பக்கம்; பக்கம், நிகர் பக்கம், நிகரில் பக்கம் எனத்
தோன்றும்; பக்கம் துணிபொருளுக்கு இடம் ஆம்; உவமை நிகர்பக்கம்;
ஆன்றபொருள் சென்று அடையாத இடம்ஆம், நிகரில்பக்கம் முதல்
ஏன்ற இரண்டும் பொருள் உண்மைக்கு இடமாம், ஒன்று பொருள் இன்றாம். 15

முற் கூறப்பட்ட பக்கம் என்பது பக்கம், சபக்கம், விபக்கம் என மூன்றாகும். இவற்றுள் பக்கமாவது கருதி உணரப்படும் பொருள் உள்ள இடமாம். சபக்கம் என்பது கருதி உணரும் பொருளுக்குச் சான்றாக எடுத்துக் காட்டப்படும் பொருள் உள்ள இடமாகும். விபக்கம் என்பது அப்பொருள் பொருந்தாத எதிர்மறையான இடமாகும். இவை மூன்றனுள் முதலில் கூறப்பட்ட பக்கம், சபக்கம் என்பன பொருள் உண்டு என்று அறிவதற்கு இடமாகும். மூன்றாவதாகிய விபக்கம் அப்பொருள் இல்லை என்று அறிவதற்கு உரிய இடமாகும்.

கருதல் அளவையில் ஐந்து உறுப்புக்கள் உள்ளதாக வைத்துக் காணுதல் வேண்டும். அதனைக் கீழ்காணுமாறு கொள்ளுதல் வேண்டும்.

1.	இம்மலையில் தீ உண்டு	- மேற்கோள்
2.	புகை உடைமையால்	- காரணம்
3.	எங்கே புகை உண்டோ அங்கே தீ உண்டு: அடுக்களையைப் போல	- எடுத்துக்காட்டு
4.	இங்கே புகை உண்டு (ஆதலால்)	- பொருத்திப் பார்த்தல்
5.	இங்கே தீ உண்டு	- முடிப்புரை.

மேற்கோள் என்பதனைப் பிரதிக்ஞை என்றும், காரணம் என்பதனை ஏது என்றும், எடுத்துக்காட்டு என்பதனை திருஷ்டாந்தம் என்றும், பொருத்திப் பார்த்தல் என்பதனை உபநயம் என்றும், முடிப் புரையை நிகமனம் என்றும் வடமொழியில் கூறுவர்.

பாடலில் சபக்கம், விபக்கம் என்ற வடசொற்களை நிகர் பக்கம், நிகரில் பக்கம் என்று ஆசிரியர் அருள் நந்தி சிவம் ஆண்டிருப்பதைக் காண்க.

மேலே காட்டப்பட்ட எடுத்துக்காட்டில் மேற்கோள் அல்லது துணிபொருள் தீ. அது இருக்கும் இடமாகிய மலை பக்கம் எனப்படும் அடுக்களை சபக்கம் ஆகும். இதனை எதிர்மறையாகக் காணும்போது பொய்கையில் தீ இல்லை என்று கூறப்படும். இவ்வாறு துணிபொருள் இல்லாத இடம் விபக்கம் ஆகும்.

ஏது மூன்று ஆம்; இயல்பு, காரியத்தோடு, அநுபலத்தி; இவை
ஓதின், இயல்பு மரம்மரத்தைக் காட்டல்; உறுகா ரியம்புகைதன்
ஆதியாய அனல்காட்டல் ஆகும்; அநுபலத்தியது
சீதமின்மை பனியின்மை காட்டல் போலும், செப்பிடினே. 16

ஏது என்று மேலே (பதினாலாம் பாடலில்) கூறப்பட்டதும் மூன்று வகைப்படும். அவை இயல்பு, காரியம், அனுபலத்தி என்பன. இவற்றுள் இயல்பு என்பது ஒரு பொருளை சுட்டிக்காட்டி இது இன்னது என்பதாகும். காரியம் என்பது புகையைக் கண்டவிடத்து அதற்குக் காரணமாக உள்ள நெருப்பு உண்டு என்று காட்டுதலாகும். அனுபலத்தி என்பது ஒன்று இன்மையை வைத்து மற்றொன்றின் இன்மையை உணர்வதாகும்.

இயல்பு எனப்பட்டது, ஒரு சொல் தன் ஆற்றலால் இயல்பாகவே பொருளை உணர்த்துதல் ஆகும்.

காரிய ஏது என்பது புகை என்னும் காரியம் தனக்குக் காரணமான நெருப்பின் இருப்பை உணர்த்துவது ஆகும். அநுபலத்தி (அநுபலப்தி) என்பது இல்லை என்னும் உணர்விற்குப் புலனாவது. உபலத்தி- விளங்குதல், அனுபலத்தி - விளங்காமை. இதற்கு எடுத்துக்காட்டாக 'இப்போது குளிர் இல்லை பனி இன்மையால்' என்பது கூறப்படும். இதனை மாற்றி 'இப்போது பனி இல்லை குளிர் இன்மையால்' என்றும் கூறப்படும். காரியத்தின் இன்மையைக் கொண்டு காரணத்தின் இன்மையையும், காரணத்தின் இன்மையைக் கொண்டு காரியத்தின் இன்மையையும் உணர்தல் அநுபலத்தியில் அடங்கும்.

புகையால் அனல் உண்டு, அடுக்களைபோல் என்னப் புகறல், அந்நுவயம்;
வகையாம் அனல்இ லாஇடத்துப் புகைஇன்று ஆகும் மலரினொடு
முகைஆர் நீரிற் போல்என்று மொழிதல் வெதிரே கச்சொல்; இவை 17
தொகைஆர் உறுப்புஐந் தொடும்கூடச் சொல்லு வாரும்உளர், துணிந்தே.

மேலே பதினான்காவது பாடலில் கூறப்பட்ட அந்நுவயம் என்பது உடன்பாட்டு முறையாகும். இங்கே புகை இருப்பதால் நெருப்பு உண்டு, அடுக்களையைப் போல என்று விளக்குவது இந்த வகையைச் சாரும். இதற்கு மாறாக நெருப்பு இல்லாத இடத்தில் புகையும் இல்லாது இருக்கும், மலரும் அரும்பும் நிறைந்த தாமரைப் பொய்கையைப் போல என்று எதிர்மறையாகக் கூறுவது வெதிரேகம் எனப்படும். இவை இரண்டும் ஐந்து உறுப்புக்களை உடையனவாக வரையறுத்துக் கூறப்படும்.

இப்பாடலில் கூறப்பட்ட உடன்பாடு (அந்நுவயம்) வெதிரேகம் (எதிர்மறை) என்ற இரண்டில் உடன்பாட்டுக்கு உரிய ஐந்து உறுப்புக்களும் பதினைந்தாம் பாடலின் விளக்கத்தில் காட்டப்பட்டன.

வெதிரேகம் என்பதற்கு உரிய ஐந்து உறுப்புக்களும் பின்வருமாறு அமையும்.

1. இம்மலை தீயுடையது	- மேற்கோள்
2. புகைஉடைமையால்	- காரணம்
3. எங்கே தீ இல்லையோ அங்கே புகை இல்லை; பொய்கை போல	- எடுத்துக்காட்டு
4. இம்மலை புகையின்மையை உடையதன்று. ஆதலால்	- பொருத்திப் பார்த்தல்
5. இம்மலை தீயுடையதே	- முடிப்புரை

போது நாற்றத் தால்அறிதல், பூர்வக் காட்சி அனுமானம்;
ஓதும் உரையால் அறிவின் அளவு உணர்தல், கருதல் அனுமானம்;
நீதியால் முன் கன்மபலம் நிகழ்வது இப்போது இச்செய்தி
ஆதி யாக வரும்பயன் என்று அறிதல், உரையால் அனுமானம். 18

கருதல் அளவை எனப்படும் அனுமானமும் மூன்று வகைப்படும். முன்பே மல்லிகை மலரின் மணத்தினை அறிந்தவன் ஒருவன் ஓர் அறைக்குள்ளே நுழைந்த போது அங்கு மல்லிகையின் நறுமணம் வீசுவதை முகர்ந்து பூவைக் கண்ணால் காணாத போதும் இங்கே மல்லிகை மலர் உண்டு என உணர்தல் பூர்வக் காட்சி அனுமானம் எனப்படும். ஒருவன் பேசுவதைக் கேட்டு அவன் சொற்களின் ஆழத்தையும் நுட்பத்தையும் கொண்டு இவன் அறிவால் மிக்கவன்; கல்வியால் நிறைந்தவன் என்று உய்த்து உணர்வது கருதல் அனுமானம் எனப்படும். இந்தப் பிறவியில் முறையாக வந்து பொருந்துகின்ற இன்ப துன்பங்கள் முந்திய பிறவியில் செய்த நல்வினை தீவினைகளின் பயன் என்று அருள் நூல்கள் உரைப்பதைக் கொண்டு, இப்பிறவியில் செய்யும் நல்வினை தீவினைகள் இனி வரும் பிறவியில் இன்பமும் துன்பமுமாக நம்மை வந்தடையும் என்று உய்த்து உணரும் அறிவு உரை அளவையால் வரும் அனுமானம் ஆகும்.

பூர்வம் என்பது முந்தியது என்று பொருள் தரும். முன்பே அறிந்திருந்த அறிவின் துணை கொண்டு இப்போது உய்த்து உணர்வதால் இது பூர்வக்காட்சி அனுமானம் எனப்பட்டது.

ஒருவன் வாயிற் பிறக்கும் சொற்களைக் கொண்டே அவனது அறிவின் ஆழத்தையும் குடிப் பெருமையையும் அறியலாம் என்பதனை "நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் காட்டும், குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்" (குறள் 959) என்ற திருக்குறளும் வலியுறுத்தும்.

அருள் நூல்களாகிய ஆகமங்கள் முதலியன கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு அவை கூறாது விடுத்தனவற்றையும் உய்த்து உணர்வது உரையால் அனுமானம்.

அநாதியே அமலன் ஆய அறிவன்நூல் ஆக மம்தான்
பின்ஆதிமா றுஇன்றிப் பேணல் தந்திரம்; மந்தி ரங்கள்,
மனாதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை, ஆகும்;
தன் ஆதிஈறு இலாதான் தன்மை உணர்த்துதல், உபதே சம்தான். 19

தோற்றமில் காலந் தொட்டே பாசத் தளைக்கு உட்படாத முழுமையான அறிவுடைய இறைவன் தன் பெருங் கருணையால் அருளிச் செய்த நூல்கள் வேத ஆகமங்கள் ஆகும். இவையே உரை அளவை என்று மேலோரால் கொள்ளப்படுகின்றன. ஆகமங்கள் மூன்று கலைகளை உடையனவாக விளங்குகின்றன. அவை முறையே தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை என்பன. இவற்றுள் தந்திர கலை என்பது கன்மகாண்டம் எனப்படும் கிரியை முறைகளைப் பற்றித் தெரிவிப்பதாகும். மந்திர கலை என்பது உபாசனா காண்டத்தின் அடிப் படையில் மனம் முதலிய அந்தக் கரணங்களைத் தம் போக்கில் செல்ல விடாது தடுத்து நிறுத்தித் தான் வழிபடும் தெய்வத்தை மனம் ஒன்றி வழிபடும் முறைமையைத் தெரிவிப்பது ஆகும். உபதேச கலை என்பது ஞான காண்டத்தின் அடிப்படையில், பிறப்பும் இறப்பும் அற்ற இறைவனின் இலக்கணங்களையும் அவனுக்கு வேறான பசுபாசங்களின் இயல்புகளையும் இறைவன் திருவடியைச் சார்ந்தே பசுக்கள் பாசத்தை நீக்க வல்லன என்பதையும் தானே ஓதி உணர்வதையும் பிறர்க்கு உணர்த்தும் முறைமையினையும் தெரிவிப்பது ஆகும்.

தந்திரம் என்பது நூல் என்ற பொருளைத் தருவது. மந்திரம் என்பது தன்னை நினைக்கிறவனைக் காப்பாற்றுவது என்ற பொருளைத் தரும். உபதேசம் எனபது அறிவிப்பது என்ற பொருளைத் தருவது. ஆசிரியர் இங்கே ஆகமத்தைப் பற்றி மட்டிலுமே கூறியுள்ளார். எனினும் இந் நூலில் 267ம் பாடலில் "வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்" என்று கூறியிருப்பதனால் இங்கு ஆகமங்களுடன் வேதங்களையும் சேர்த்துக் கூறுதல் ஆசிரியரின் கருத்து என்பதை உணரலாம். அறிவன் என்ற சொல் இயல்பாகவே முற்றுணர்வுடைய இறைவனைக் குறித்தது.

ஈண்டு பக்கப் போலி நான்கு; ஏதுப் போலி ஒரு மூன்றாய்,
வேண்டும் எழுமூன்று ஆகும்; விளங்கு உவமைப் போலி ஈரொன்பான்
காண்டும்; தோல்வித் தானம் இரண்டு, இருபத்து இரண்டாம்; கருதில், இவை
யாண்டும் ஒழிவர்; அவை எல்லாம் அளக்கில் அறுபத்து ஐந்தாகும். 20

கருதல் அளவையில் உறுப்புகளாக விளங்குகின்ற பக்கம், ஏது, உவமை என்ற மூன்றிலும் பிழை நேருமானால் அவை போலி எனப் படும். அவற்றின் வகைகளையும் பிறரோடு வாதிடும் போது தோல்விக்கு இடமான தோல்வித் தானத்தின் வகைகளையும் இந்தப் பாடலில் பட்டியல் இட்டுக் காட்டுகிறார். பக்கப் போலி என்பது நான்கு வகைப்படும். ஏதுப்போலி மூன்று வகைப்பட்டு விரித்துச் சொல்லுங்கால் இருபத்து ஒன்று ஆகும். உவமை பற்றிய போலி இரண்டு வகைப்பட்டு, விரித்துக் கூறும் போது பதினெட்டு ஆகும். தருக்கமிடும் போது பேசத் தெரியாமை காரணமாக மயங்கப் பேசுவதும், பேசாது இருத்தலும் என்ற இரண்டும் தோல்வித்தானம் எனப்படும். இவற்றை விரித்து உரைக்கும் போது அது இருபத்திரண்டு ஆகும். ஆகவே இவை யாவும் கூட்டிப் போலிகள் அறுபத்து ஐந்து எனப்படும்.

வடமொழியில் மேலே கூறப்பட்ட போலிகள் மூன்றும் பட்சா பாசம், ஹேத்துவாபாசம், திருஷ்டாந்தாபாசம் என்று வழங்கும். தோல்வித்தானம் என்பது நிக்ரகஸ்தானம் என்று வழங்கும். ஆபாசம் என்பது போலி என்ற பொருளைத் தருவது.

அளவை இயலில் பிழைகள் நேர்ந்தால் அளந்து அறிவதிலும் பிழைகள் நேரிடும். ஆதலால் அவற்றை அறிந்து நீக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பதை வலியுறுத்த ஆசிரியர் இப்பாடலை இங்கே அமைத்தார்.

இத்தகைய பிழைகளைப் பற்றிய விரிவான செய்திகள் சிவஞான சித்தியாருக்கு சிவாக்கிர யோகிகள் இயற்றிய உரையில் விரித்துக் கூறப் பட்டுள்ளன, (திருவாடுதுறை ஆதினப்பதிப்பு 1965). அவ்வாறே துத்துக்குடி திரு பொ. முத்தையா பிள்ளை அவர்கள் சிவஞான சித்தியாருக்கு எழுதிய பொழிப்புரையில் இவை விளக்கமாகச் சொல்லப் பட்டன. (முதற்பதிப்பு 1914).

முதற் நூற்பா

ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே,
தருபவன் ஒருவன் வேண்டும் ; தான் முதல் ஈறும் ஆகி,
மருவிடும் – அநாதி முத்த சித்து உரு மன்னி நின்றே. 21

ஒருவன் என்றும் ஒருத்தி என்றும் ஒன்று என்றும் கூறப்படுகின்ற இவ்வுலகத்துப் பொருள்கள் யாவும் முறையே தோன்றி முறையே நிலைத்து முறையே அழிகின்றன. ஆதலால் இவ்வுலகம் முழுவதையும் தோற்றுவிக்கின்ற காக்கின்ற இறுதியில் ஒடுக்குகின்ற இறைவன் ஒருவன் இன்றியமையாது வேண்டப்படுகிறான். அவன் தோற்றமும் ஈறும் இல்லாதவன். உலகத் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் மீளத் தோற்றுவிப்பதற்கும் அவனே முதல்வன் ஆவான். அத்தகையவன் அநாதி முத்த சித்துருவாக என்றும் நிலைபெற்றவன்.

சிவஞான போதம் முதல்நூற்பாவில் 'அவன் அவள் அது எனும் அவை' என்று ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனார் குறித்தார். ஆயினும் அந்நூற்பாவின் முதல் அதிகரணத்தின் மேற்கோளாக "ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்" என்று விரித்துரைத்தார். அதனை அடியொற்றியே இந் நூலாசிரியரும் ஒருவனோடு ஒருத்தி என்று இப்பாடலைத் தொடங்குகிறார்.

"வருமுறை வந்து நின்று போவதும்" என்பதனை முறைப்படி வந்து, முறைப்படி நின்று, முறைப்படி போவது என்று கூட்டிப் பொருள் காண வேண்டும். எனவே உலகம் தோன்றுதலும், நிலை பெறுதலும், ஒடுங்குதலும், முறையாக நிகழ்கின்றன என்பது பெறப்படும்.

இறைவனை அநாதி முத்த சித்து உரு என்ற சொற்களால் ஆசிரியர் குறிப்பிட்டார். அநாதி என்றதனால் கால எல்லைக்கு அப்பாற் பட்டவன் என்பது உணர்த்தப்பட்டது. அநாதி முத்தன் என்றதனால் அவன் தோற்றமில் காலந்தொட்டே மலப் பிணிப்பு இல்லாதவன் என்பதும் உணர்த்தப்பட்டது. சித்து உரு என்ற சொற்கள் அவன் அறிவே வடிவானவன் என்பதை உணர்த்தின. தருபவன் ஒருவன் வேண்டும் என்றதனால் உலகம் அனைத்திற்கும் ஒரு வினைமுதல் இன்றியமையாது வேண்டப்படும் என்பதைக் குறிப்பிட்டார். மருவிடும் என்பதனை மீளவும் மருவுவிக்கும் அதாவது தோன்றச் செய்யும் என்று பொருள் காண வேண்டும்.

இவ்வாறு முதல் நூலாகிய சிவஞான போதத்தில் முதல் நூற்பாக் கருத்தை இப்பாடலில் தொகுத்துக் கூறிய ஆசிரியர் இதனை அடுத்து வரும் பாடல்களில் அந்நூற்பாவின் மூன்று கூறுகளையும் முறையே விரித்துக் கூறுகிறார்.

உதிப்பதும்ஈறும் உண்டென்று உரைப்பது இங்கு என்னை ? முன்னோர்
மதித்துஉலகு அநாதி யாக மன்னியது என்பர்' – என்னின்,
இதற்குயான் அனுமா னாதி எடேன் ; இப்பூ தாதி எல்லாம்
விதிப்படி தோற்றி மாயக் காணலான், மேதி னிக்கே. 22

"இந்தஉலகம் தோற்றமும் அழிவும் உடையது என்று எப்படிக் கூற முடியும்? உலகம் தோன்றியதைக் கண்டார் இல்லை. அது போலவே உலகம் முற்றிலும் அழிந்ததையும் கண்டார் இல்லை. காட்சி அளவைக்குப் புலப்படாதவை எல்லாம் ஏற்றுக் கொள்ளத் தக்கன அல்ல என்பர் முன்னோர். ஆதலால் இவ்வுலகம் என்றும் நிலைபெற்று விளங்குவது என்றும் கூறுவர்" என்று உலகாயதர்கள் மறுத்தல் கூடும். இக்கொள்கையை மறுத்தற்குக் கருதல் முதலிய அளவைகளை மேற்கொள்ள வேண்டியதில்லை. உலகத்தில் உள்ள பொருள்கள் யாவும் பூதங்களின் கூட்டால் விளைந்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் இறைவனின் ஆணையின்படி தோன்றியும் நின்றும் அழிந்தும் வருதலைக் காட்சி அளவையினாலேயே கண்டு உணர முடியும். எனவே இதன் தொகையாகிய உலகமும் தோன்றி நின்று அழியும் தன்மை உடையது என்று காட்சி அளவையினாலே பெறப்படும்;.

'இயல்புகாண் தோற்றி மாய்கை' என்றிடில், இயல்பி னுக்குச்
செயலது இன்று; இயல்பு செய்தி செய்தியேல், இயல்பது இன்றாம்;
இயல்பதாம், பூதம் தானே; இயற்றிடும் செய்தி என்னில்,
செயல்செய்வான் ஒருவன் வேண்டும்; செயல்படும், அசேத னத்தால். 23

உலகாயதர் உலகைத் தோற்றுவிப்பதற்கு ஓர் இறைவன் வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் "தோன்றுவதும் அழிவதும் உலகத்தின் இயல்பு எனவே இவற்றை நடத்துவதற்கு இறைவன் ஒருவன் வேண்டுவதில்லை" என்பர். இயல்பு என்பது தன்மை. தோன்றுவது ஒரு தன்மை. அழிவது என்பது மற்றொரு தன்மை. இந்த இரு வேறுபட்ட செயல்கள் ஒரு பொருளுக்கு இயல்பு என்று கூற இயலாது. "அவ்வாறு அன்று இவ்வாறு வேறுபட்ட செயல்களே உலகத்துக்கு இயல்பு" என்று அவர்கள் மறுத்தல் கூடும், அப்படியானால் உலகத்துக்கு இயல்பு என்பதே ஒன்று இல்லாமல் இரு வேறுபட்ட செயல்களே உள்ளன என்று முடியும். அதனாலேயே அவர் கொள்கை மறுக்கப்பட்டது. இதற்கு மாறாக "இவ்வுலகம் நான்கு பூதங்களின் கூட்டம். அவையே கூடியும் பிரிந்தும் இவ்வுலகத்தைத் தோற்றுவித்தும் அழிவித்தும் வருகின்றன" என்று ஒரு சாரார் கூறக் கூடும். நாற்பூதங்களும் தோன்றி அழிவனவாகவும் அறிவற்றனவாகவும் உள்ளதால் அவற்றைச் செயல்படுத்துவதற்கு ஓர் இறைவன் அவற்றினும் வேறாக வேண்டும். அவனால் அறிவற்ற பொருள்கள் செயல்படுகின்றன என்பதும் உணரப்படும்.

'நிலம், புனல், அனல், கால் காண நிறுத்திடும், அழிக்கும் ஆக்கும்,
பலம்தரும்; ஒருவன் இங்குப் பண்ணிட வேண்டா' என்னின் –
இலங்கிய தோற்றம் நிற்றல் ஈறு, இவைஇசைத லாலே,
நலம் கிளர், தோற்றம் நாசம் தனக்குஇலா, நாதன் வேண்டும். 24

உலகாயதர்களின் கருத்துப்படி நிலம், நீர், நெருப்பு, காற்று என்று நான்கு பூதங்களே உள்ளன. அவையே தம்முட் கூடி உலகமாகத் தோன்றி நின்று அழிகின்றன. இவற்றைக் கண் கூடாகக் காண முடிகிறது. இதற்கெனத் தனி ஒரு இறைவன் வேண்டுவதில்லை என்பர் அவர். இந்த நான்கு பூதங்களும் தனித்தனியே தோன்றி நின்று அழிவ தாகிய முத்தொழில்களுக்கும் உட்படுகின்றன. ஆதலால் இவை நான்கும் கூடி மற்றைப் பொருள்களைச் செயல்படுத்தும் என்பது பொருந்தாது. இவற்றைச் செயல்படுத்தும் தலைவன், தனக்கு ஒரு தோற்றமும் அழிவும் இல்லாத மேம்பாட்டினை உடையவனாக இருத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

'சார்பினில் தோன்றும், எல்லாம்; தருபவன் இல்லை' என்னில்
தேரின்; இல் லதற்கோ தோற்றம், உள்ளதற் கோ? நீ செப்பாய் !
ஓரின்,இல் லதுவும் தோன்றாது; உள்ளதேல் உதிக்க வேண்டா;
சோர்விலாது இரண்டும் இன்றி நிற்பது தோன்றும் அன்றே. 25

"எல்லாப் பொருள்களும் கணந்தோறும் தோன்றிக் கணந்தோறும் அழியும். ஆனாலும் அவை நிலைத்து இருப்பன போல நமக்குத் தோன்றுகின்றன. எனவே முந்திய கணத்தினில் தோன்றிய பொருள் அடுத்த கணத்தில் தோன்றிய பொருளுக்குச் சார்பாக விளங்குகிறது" என்று சிலர் வாதிடுவர். ஆகையினால் இந்த உலகத்தைத் தோற்று வித்தவன் ஒருவன் இல்லை என்று சிலர் வாதிடுவர். அவ்வாறாயின் இல்லாத பொருள் தோன்றுகின்றதா, உள்ள பொருள் தோன்றுகின்றதா என்று கூறுக. ஆராய்ந்து பார்க்கின் இல்லாத பொருள் தோன்றாது. உள்ள பொருள் எனில் அது தோன்ற வேண்டு வதில்லை. இவ்விரண்டும் அன்றி உள்ள பொருளாய் கண்ணிற்குப் புலப்படாது இருந்த ஒன்றே காரியப்பட்டுத் தோன்றுவதாகும்.

இந்தப் பாடல் உட்பட மூன்று பாடல்கள் மாத்தியமிகர் சமணர் சௌத்திராந்திகர் ஆகிய மூவரின் கொள்கையை மறுப்பதாக அமைந்தன. சௌத்திராந்திகர் பொருள்கள் கணம் தோறும் தோன்றிக் கணம் தோறும் அழியும் இயல்பினை உடையன என்ற கொள்கையை ஏற்பவர்கள். இது கணபங்க வாதம் என்று கூறப்படும். பொருள்கள் தோன்றி அழியும் போது முந்திய கணத்தில் தோன்றியது பிந்திய கணத்தில் தோன்றுவதற்குச் சார்பாக இருக்கும் என்பதும் இவர்கள் கொள்கை. இல்லாத பொருளே தோன்றும் என்பதும் இவர்கள் கருத்து, இக்கருத்தின் அடிப்படையில் உலகத்தைத் தோற்றுவிக்கும் இறைவன் ஒருவன் வேண்டா என்பது இவர்கள் வாதமாகும்.

உள்ள பொருளே தோன்றும் இல்லாத பொருள் தோன்றாது என்ற கொள்கை சற்காரிய வாதம் எனப்படும். இதன்படி காரணத்தில் நுட்பமாக இருந்த ஒன்று காரியத்தில் வெளிப்பட்டுத்

தோன்றுவதே தோற்றம் ஆகும். சௌத்திராந்திகர்கள் சற்காரிய வாதத்தை ஏற்றுக் கொள்வதில்லை. சைவ சித்தாந்தம் சற்காரிய வாதத்தை ஏற்றுக் கொள்ளும்.

உள்ளதும் இலதும் இன்றி நின்றது ஒன்று உளதேல், உண்டாம்;
இல்லதேல் இல்லை ஆகும்; தோற்றமும் இசையாதாகும்;
உள்ளகாரணத்தில் உண்டாம் காரியம் உதிக்கும்; மண்ணில்
இல்லதாம் படம் கடாதி எழில்தரும் – இயற்றுவானால்; 26

உள்ளதும் இன்றி இல்லாததும் இன்றி இன்னது என்று வரையறுத்துக் கூற முடியாத ஒரு பொருளே தோன்றும் என்று பௌத்தருள் மற்றொரு சாரார் கூறுவர். அப்படி ஒரு பொருள் உலகத்தில் உண்டோ? உண்டு எனில் அதனை உள் பொருளாகவே கொள்ளுதல் வேண்டும். இல்லை என்று விடையிறுத்தால் அது இல்லாமலே ஒழியும் என்பதன்றி அதற்குத் தோற்றம் உண்டு என்று கூறுதல் இயலாதாகும். ஒழிபு அளவையின் அடிப்படையில் இதனைக் கருதிப் பார்த்தால் உள்ளதாகிய ஒரு பொருளே காரணத்தில் இருந்து காரியப்பட்டு ஓர் இறைவனால் தோற்றுவிக்கப்படும் என்பது புலனாகும். மண்ணில் இருந்து ஆடை தோன்றுவது இல்லை. ஆனால் மண்ணில் இருந்து குடம், பானை போன்ற பொருள்கள் வினை முதல்வனாகிய குயவனால் அழகுறத் தோன்றுவனவாகும்

சற்காரிய வாதத்தை வலியுறுத்தி, உள்ள பொருளில் இருந்தே உளதாகிய மற்றொரு பொருள் வினைமுதலாகிய ஒருவனால் இயற்றப்படும் என்பது இப்பாடலில் வலியுறுத்தப்பட்டது. படம் - ஆடை. மண்ணிலிருந்து ஆடை தோன்றுவதில்லை. மண்ணிலிருந்து குடம் முதலிய பொருள்கள் இயற்றுவோனால் எழில் பெறத் தோன்றும் என்று பொருள் காண்க.

ஒரு பொருள், ஒருவன் இன்றி உளது இலது ஆகும் என்னில்,
தருபொருள் உண்டேல் இன்றாம் தன்மை இன்று; இன்றேல் உண்டாய்
வருதல் இன்று; இலது காரியம், முதல் உளதாகும், என்னில்,
கருதுகா ரியமும் உண்டாய், தோற்றமும் கருத்தா வால்ஆம். 27

பொருள் என்பது அதனைத் தருபவன் ஒருவன் இல்லாமல் தானே தோன்றித் தானே அழியும் எனக் கொண்டால் என்ன என்று சமணர்கள் வினவுவர். ஏனெனில் சமணர் ஒரு பொருளைப் பற்றிக் கூறும்போது அது உள்ளதுமாம் இல்லதுமாம் என்று கூறும் கொள்கை உடையவர். இவ்வாறு இரண்டு தன்மை ஒரு பொருளுக்குக் கூற இயலாது. அது உள்பொருளாயின் அதற்கு இல்லையாம் தன்மை இல்லை. ஒரு பொருள் இல்பொருளாயின் அது உள்ளதாய்த் தோன்றுதல் இல்லை. அவ்வாறு அன்று ஒரு பொருள் காரணவடிவாய் உண்டு காரிய வடிவாய் இல்லை என்பதுதான் எங்கள் கருத்து என்று

அவர்கள் மறுமொழி கூறக்கூடும். காரணப் பொருளிலேயே காரியமும் நுட்பமாய் அடங்கி நிற்கும். பின்னர் அதுவே வினை முதலாகிய கருத்தாவால் பருப்பொருளாய் வெளிப்பட்டுத் தோன்றும். எனவே தருபவன் ஒருவன் வேண்டும் என்பது பெறப்படும்.

காயத்தின் அழிவு தோற்றம் கண்டனம்; உலகில் காணாம்;
நீ இத்தை உரைத்த வாறு இங்கு என்? எனின், நிகழ்த்தும் – உண்மை
மாயத்த உலகம் பூநீர் தீவளி வானம் ஆதி
ஆய இத்தான் ஒன்றின் ஒன்று தோன்றி நின்று அழிதலாலே, 28

உடம்புகள் தோன்றுவதையும், அழிவதையும் நாம் கண்டிருக்கின்றோம். ஆனால் உலகம் முழுவதும் தோன்றுவதையும் முழுவதும் அழிவதையும் ஒருவரும் கண்டதில்லை. அப்படி இருக்க உலகம் முழுவதும் ஒருசேரத் தோன்றும் என்றும், ஒரு சேர அழியும் என்றும் எப்படிக் கூறலாகும் என்று சிலர் வினவுவர். இப்படித் தோன்றி அழிவனவாகிய பொருள்களும் உலகமும் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகிய இவை யாவும் கலந்த மயக்கத்தால் தோன்றியனவே. அவை ஒன்றில் ஒன்று தோன்றிச் சில காலம் நின்று அதன் பின்னர் அழிவது தனித்தனிப் பொருளுக்குப் பொருந்துவது போலவே இவ்வுலகம் முழுவதற்கும் பொருந்தும்.

உடல் முதலியனவே தோன்றி நின்று அழிவன உலகம் முற்றும் தோற்றக் கேடுகளுக்கு உட்படாது என்பது மீமாஞ்சகர்களுடைய கொள்கை. அவர்களை மறுக்கவே ஆசிரியர் இப்பாடலை அருளினார். மாயத்த உலகம் என்பதனால் தோன்றி அழியும் உலகம் என்பதை உணர்த்தினார்.

ஓர்இடம் அழியப் பின்னும் ஓர்இடம் நிற்கும்; ஒக்கப்
பாரிடம் அழிவது இன்றாம்' என்றிடில், பயில்வித்து எல்லாம்
கார் இடம் அதனில் காட்டும் அங்குரம்; கழியும் வேனில் ;
சீர் உடைத்து உலகு காலம் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும். 29

நிலம், மலை, கடல் என்று பலவகைப்பட்ட பகுப்புடைய இவ் உலகம் ஒரு பகுதியில் அழிவதையும் மற்றொரு பகுதியில் தோன்றுவதையும் கண்டதுண்டு. உலகம் முழுவதும் ஒரு சேர அழிவதில்லை. அப்படி அழிந்தாலும் அது மீண்டும் தோன்றும் என்று கூறுவதற்கு இடமில்லை என்று சிலர் வாதிடுவர். அவ்வாறன்று மழைக் காலத்தில் வித்துக்கள் எல்லாம் முளைவிட்டுப் பயிராக வளர்வதைக் காண்கிறோம். வேனிற்காலம் வந்தபோது அப்பயிர்கள் யாவும் ஒருங்கே வாடி அழிந்து போவதையும் காண்கிறோம். அது போலவே இவ்வுலகமும் கால எல்லைக்கு உட்பட்டு ஒரு சேரத்தோன்றி ஒருங்கே அழியும் என்பதையும் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஐயம் எழுப்புபவர்கள் மீமாஞ்சகர்கள். அவர்களை இப் பாடலால் ஆசிரியர் மறுத்தார். பாரிடம் - உலகம். காரிடம் - கார் காலம். அங்குரம் - முளை.

காலமே கடவுளாகக் கண்டனம். தொழிலுக்கு என்னில்
காலமோ அறிவு இன்றாகும்; ஆயினும்; காரியங்கள்
காலமே தரவே காண்டும், காரணன் விதியினுக்குக்
காலமும் கடவுள் ஏவலால், துணைக் காரணம்காண். 30

இவ்வுலகம் உரியகாலத்தில் தோன்றி உரிய காலத்தில் அழிகின்றது. ஆதலால் இவ்வுலகத்துக்குத் தோற்றத்தையும் அழிவையும் தரவல்ல கடவுள் காலமே ஆகும் என்று கொண்டால் என்ன என்று சிலர் வினா எழுப்புவர். அக்கொள்கை பொருந்தாது. ஏனெனில் காலம் என்பதும் அறிவற்ற சடப்பொருள். எனவே அது தானாகச் செயற்படும் ஆற்றல் அற்றது. ஆயினும் முற்றறிவு உடைய இறைவனது ஏவலின் வழியே எல்லாச் செயல்களையும் இயற்றுவதற்குக் காலம் துணைக்காரணமாக அமையும். அது நிமித்த காரணம் ஆகமாட்டாது.

இப்பாடலும் மீமாஞ்சகரை மறுப்பதற்கு எழுந்தது. இவ்வுலகத்தின் தோற்றத்திற்கு முற்றறிவு உடைய இறைவனே நிமித்த காரணன் ஆவான். காலம் என்ற அறிவற்ற பொருள் இறைவனுக்குத் துணைக்காரணம் ஆவதன்றி அதுவே வினைமுதல் ஆவதில்லை.

அழிந்தபின் அணுக்கள் தாமே, அகிலமாய் வந்து நின்று
கழிந்திடும், கன்மத்து, என்னில் கன்மமும் அணுவும் கூட
மொழிந்திடும் சடமே ஆகி முடிதலான், முடியா செய்தி;
ஒழிந்திடும், அணுரூபங்கள் உலகு எலாம் ஒடுங்கும் அன்றே. 31

இப்போது காணப்படுகிற இவ்வுலகம் அழியும்போது பரமாணுக்களாக ஒடுங்கும். உலகம் அழியுமே தவிர பரமாணுக்கள் அழிவதில்லை. எனவே இப் பரமாணுக்கள் வினை காரணமாகத் தம்முட் கூடி மீண்டும் உலகமாகத் தோன்றும் என்று சிலர் கொள்ளுவர். இவர்கள் கொள்கையும் பொருத்த மற்றது. ஏனெனில் வினையும் அணுக்களும் அறிவற்றன. எனவே அவை தாமாகச் செயல்பட மாட்டா. மேலும் உலகம் அழியும் காலத்தில் நுண்ணியவாகிய வடிவுடைய அணுக்களும் ஒடுங்கும் என்பதே பொருந்தும். அவ்வணுக்கள் மீண்டும் கூடி உலகமாக வடிவு எடுக்கும் என்பது பொருந்தாது.

தார்க்கிகர், சௌத்திராந்திகர், வைபாடிகர், ஆசீவகர் ஆகியோர் உலகத்தின் தோற்றத்துக்குக் காரணம் பரமாணுக்களே என்ற கொள்கை உடையவர்கள். இப்பாடலில் ஆசிரியர் அவர்கள் கொள்கையை மறுத்தார்.

காரண அணுக்கள் கெட்டால் காரிய உலகு இன்று என்னில்,
காரணம் மாயை ஆகக் காரியம் காணலாகும்;
'காரணம் மாயை என்னை? காண்பது இங்கு அணுவே?' என்னில்,
காரணம் மாயை யேகாண் காரியம் அணுவில் கண்டால், 32

உலகத்துக்குக் காரணம் அணுக்களே. எனவே அப்பரமாணுக்கள் அழியுமானால் காரியப் பெருளாகிய இவ்வுலகம் இல்லாமல் போகும் என்பார் சிலர். உலகிற்கு முதற்காரணமாவது பரமாணுக்கள் அல்ல மாயையே ஆகும். எனவே மாயையிலிருந்து உலகம் மீண்டும் காரியப் பட்டுத் தோன்றும் என்பதே சித்தாந்தம். இதனை மறுத்து இவ்வுலகில் பரமாணுக்களே முதற்காரணமாகக் காணப்படுவது அல்லாமல் மாயை அன்று என்று மறுப்பர். அணுக்களும் காரியப் பொருள்களே ஆதலால் அவற்றை உலகத்திற்கு முதற் காரணமாகக் கொள்ளுதல் இயலாது என்பதனை உணர்க.

செய்யுளின் இறுதியில் வருகின்ற கண்டால் என்ற சொல் காண்டலால் என்ற சொல்லின் திரிபு ஆகும்.

காரியம் என்பது என்னை, காரண அணுவை? என்னில்,
காரியம் அவயவத்தால் கண்டனம், கடாதி போல;
காரிய உருவம் எல்லாம் அழிதரும் காரணத்தால்;
காரிய உறுப்பு இல்மாயை தரும் எனக் கருதிடாயே. 33

அணுக்கள் பலசேர்ந்து ஒரு பொருளாக வடிவம் கொள்ளுகின்றன. அவ்வாறு இருக்க உலகிற்கு முதற் காரணம் ஆகிய பரமாணுக்களைக் காரியப் பொருள் என்று எவ்வாறு கூறக் கூடும் என்று சிலர் கேட்பர். பல அணுக்கள் கூடி ஒரு பொருள் ஆகிறது என்று சொல்லும் போதே அணுக்களுக்கும் உருவம் உண்டு என்பது புலப்படும். உருவம் உடைய அணுக்கள் உறுப்புக்களும் உடையனவே என்பதும் விளங்கும். ஆதலால் நீங்கள் கூறும் அணுக்களும் குடம் முதலிய பொருள்கள் போல உருவமும் உறுப்புக்களும் உடையனவே. உருவமும் அவயவப் பகுப்புமுடைய எல்லாப் பொருள்களும் அழியும் என்பதே நியதி. ஆதலின் அணுக்களும் அழிவனவே. எனவே உருவம் அற்றதும் அழிவில்லாத நித்தப் பொருளும் ஆகிய மாயையே உலகத்துக்கு முதற் காரணமாகும் என்று கருதி உணர்க.

அணு காரண வாதம் பேசுவோர் பல அணுக்கள் கூடி ஒரு பொருள் தோன்றும் என்பர். இவ்வாறு அவை தம்முட் கூடுவது சையோகம் என்னும் சொல்லால் குறிக்கப்படும். சையோகம் - ஒன்றோடு ஒன்று சேர்தல். இவ்வாறு சேர்வதற்கு வடிவமும் உறுப்புக்களும் தேவை. எனவே அவை அழியும் என்று சொல்லப்பட்டது. இவை இரண்டும் அற்ற மாயை முதற் காரணம் எனப்பட்டது.

தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழிலது என்றே
சாற்றிடும், உலகம்; வித்துச் சாகாதி அணுக்களாக
ஏற்றதேல், ஈண்டு நிற்கும்; இல்லதேல், இயைவது இன்றாம்;
மாற்றம் நீ மறந்தாய்; இத்தால் மாயையை மதித்திடாயே. 34

தோற்றமும் இருப்பும் ஒடுக்கமும் ஆகிய முத்தொழில்களுமே மாயையின் செயல்பாடு என்று ஆன்றோர்கள் கூறுவர். மிகச் சிறிய வித்தின் உள்ளே இலை கிளை முதலிய மரத்தின் உறுப்புக்கள் யாவும் முன்பே நுட்பமாய் அமைந்திருந்தன. அதனால் தான் மரம் வளர்ந்து பெரிதான உடன் அவை பருமைநிலை அடைந்து கண்ணுக்குத் தோன்று கின்றன. அவ்வாறு இல்லையேல் வித்திலிருந்து பெரியதாகிய மரம் ஒன்று தோன்றாது. இந்த உண்மையை நீ மறந்தனை. மேலோர் வழக்கும் உலக நடப்பும் ஆகிய இவற்றைக் கொண்டு மாயையே உலகத்துக்கு முதற் காரணம் என்பதனை அறிவாயாக.

சாகாதி - கிளை முதலியன.

மாயையின், உள்ள வஞ்சம், வருவது போவது ஆகும்;
நீ அது இங்கு இல்லை என்னில், நிகழ்ந்திடும், முயலின் கோடு;
போய் உகும் இலைகள் எல்லாம் மரங்களின் புக்குப் போதின்
ஆயிடும், அதுவும்; என்னில், காரணம் கிடக்க ஆமே. 35

மாயையிலே நுட்பமான வடிவில் இவ்வுலகம் எல்லாம் ஒடுங்கி இருக்கிறது. அதன் பின்னர் இறைவன் திரு உள்ளக் குறிப்பினால் இவ்வுலகம் மாயையிலிருந்து பருவடிவோடு தோன்றும். இவ்வாறு தோன்றிய உலகம் மீண்டும் ஒடுங்கும். ஏனெனில் உள்ள பொருளே தோன்றும். இந்த முறைமை இல்லை எனின் முயலுக்குக் கொம்பு முளைக்கும் என்று கொள்ள நேரிடும். இதனை ஒத்துக் கொள்ளாதவர்கள் "அப்படியானால் ஒரு மரத்திலிருந்து உதிர்ந்த இலைகள் மீண்டும் அந்த மரத்திலேயே தானாக ஒடுங்கித் தோன்றுதல் வேண்டும் அல்லவா" என்று வினா எழுப்புவர். மரத்திலிருந்து உதிர்ந்த இலைகள் சருகுகளாகி மண்ணின் சாரமாய்க் கலந்து பின்னும் அம்மரத்தின் இலை தோன்றுவதற்குக் காரணமாகும் என்பது உண்மையே. ஆனால் அப்படித் தோன்றுவது உரிய காலம் முதலியன ஒருங்கு கூடிய போதே ஆகும்.

பாட்டின் முதல் அடியில் உள்ள வஞ்சம் என்ற சொல் பிரபஞ்சம் என்பதன் திரிபு. பிரபஞ்சம் பிரவஞ்சமாகி வஞ்சம் என்று தலைக் குறைந்து நின்றது.

முயலுக்கு ஒரு போதும் கொம்பு இல்லை என்பது உலகறிந்த உண்மை. உள்ள பொருள் தோன்ற வேண்டியதில்லை. இல்லாத பொருளே தோன்றும் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டால் முயலுக்கும் ஒரு காலத்தில் கொம்பு முளைக்கும் என்று கூறுவதைப் போன்றது அது. எனவே உள்ளதே

தோன்றும் இல்லாதது தோன்றாது என்ற சற்காரிய வாதமே ஏற்றுக் கொள்ளத் தக்கது என்று வலியுறுத்துகிறார்.

மரங்களிலிருந்து உதிர்ந்த இலைகள் ஒடுங்கித் தாமாகவே மீண்டும் அந்த மரத்தின் இலைகளாகத் தோன்றுமோ என்ற கேள்விக்கு ஆம் என்று விடையளிக்கிறார். உதிர்ந்த சருகுகள் மண்ணில் ஆற்றல் வடிவில் ஒடுங்கி உரிய காலத்தில் இலைகளாகத் தோன்றுதற்குரிய உரமாகிறது என்றார்.

கருதுகாரணம் உண்டாகக் காரியம் உள்ள தாகி
வருதலால், அநாதி வையம்; மற்றுஒரு கடவுள் இத்தைத்
தருதலால், ஆதியாகச் சாற்றல் ஆகும்; மாயைக்கு
ஒருவன் ஆர்என் இங்கு என்னில், உள்ளவாறு உரைப்ப, கேள் நீ, 36

இங்கே ஒரு ஐயம் பிறரால் எழுப்பப்படும். உள்ள பொருளே தோன்றும் என்ற சற்காரிய வாதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் உலகம் தோன்றி நின்று அழியும் என்று கூறலாமா? உலகத்தை என்றும் உள்ள பொருள் என்றல்லவா கொள்ள வேண்டும் என்பது அந்த ஐயம். அதற்கு இப்பாடலில் விடை தருகிறார்.

காரணமாகிய ஒன்று உள் பொருளாக இருக்க அதிலிருந்து தோன்றும் காரியமும் உள் பொருளாகவே இருக்கும் என்பது முன்னர் விளக்கப் பட்டது. ஆதலால் இவ்வுலகம் உள் பொருளேயாம். எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் இவ்வுலகத்தைத் தோற்றுவித்து ஒடுக்குவதால் நிலை வேறுபாடு பற்றி இவ்வுலகத்தை அழியும் பொருள் என்றும் கூறலாம்.

அழியும் பொருள் என்றும் கூறலாம் என்பதில் உள்ள உம்மை உலகம் நித்தப் பொருள் என்றே துணியப்படும் என்பதை உணர்த்திற்று.

இந்தப் பாடலில் மாயைக்கு ஒருவன் யார் என்று தொடங்குகின்ற பகுதிக்கு உரிய பொருள் இதனை அடுத்த பாடலோடு கூட்டிப் பொருள் உரைக்கப்படும்.

புத்திமற் காரியத்தால் பூதாதி புருடன் தானும்,
அத்தனு கரணம் பெற்றால், அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடும் அதனால் மாயைக்கு உணர்வு ஒன்றும் இல்லை என்றே
வைத்திடும் அதனால் – எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும். 37

மாயைக்கு ஒருவன் யார் என் இங்கு என்னில் உள்ளவாறு உரைப்பக் கேள் நீ என்ற முன் பாடலின் இறுதிப் பகுதியை இங்கே சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும்.

மாயையையும் செயல்படுத்துபவனாகிய ஓர் இறைவன் ஏன் என்று கேட்டபின் அதற்கு உரிய விடையை உள்ளபடி கூறுவேன் கேட்பாயாக. பூதம் முதலிய இவ்வுலகம் அனைத்தும் அறிவுடைய ஒரு பொருளால் இயற்றப் படுவனவே ஆகும். உயிராகிய புருடனும் அறிவுடைப் பொருளே ஆயினும் முதலில் எதனையும் அறியாது இருந்து அதன் பின்னர் உடல் கருவி ஆகிய

வற்றைப் பெற்ற பிறகே அறிகின்ற தன்மை உடையவனாகிறான். உடல், கருவி முதலியனவும் மாயையை முதற்காரணமாகக் கொண்டே தோன்று கின்றன. மாயையோ அறிவற்ற பொருள் என்றே கொள்ளப்படும் இவற்றின் அடிப்படையில் பார்த்தால் ஒழிபு அளவையினால் இவ்வனைத்திற்கும் வேறாய் மாயையிலிருந்து பூதம் முதலிய உலகப் பொருள் யாவற்றையும் தோற்றுவிக்கிற கடவுள் ஒருவர் வேண்டும் என்று அறியலாம்.

புத்திமற்காரியம் - அறிவோடு பொருந்திய செயல். இது வட சொல் முடிபு. மண்ணிலிருந்து குடத்தினைத் தோற்றுவிக்கிற அறிவினை உடைய வினைமுதல் ஒருவன் வேண்டும் என்பதை இப்பாடல் உணர்த்திற்று. பூதாதி அறிவற்றது. புருடன் என்னும் ஆன்மா உடல் கருவி இவற்றைப் பெற்ற பிறகே அறிகிறான். மாயையும் அறிவற்றது. இவை மூன்றுக்கும் வேறாக உலகத்தைத் தோற்றுவிக்கிற ஒரு கடவுள் உளன் என்று ஆசிரியர் நிறுவினார்.

காரியகாரணங்கள் முதல் துணை நிமித்தம். கண்டாம் –
பாரின்மண் திரிகை பண்ணு மவன் முதல் துணை நிமித்தம்;
தேரின் மண் மாயை ஆக திரிகைதன் சத்தி ஆக
ஆரியன் குலால னாய் நின்று ஆக்குவன் – அகிலம் எல்லாம். 38

ஒரு பொருள் தோன்றுவதற்கு மூன்று காரணங்கள் வேண்டும். அவற்றை முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என்பர். சான்றாக ஒருகுடம் வனையப்படுவதற்கு முதற்காரணம் மண். அதனை வனைவதற்கு உதவியாக இருக்கிற சக்கரம் போன்றன துணைக்காரணம். குடத்தை வனைபவனாகிய குயவன் நிமித்த காரணன். தேர்ந்து பார்த்தால் இவ்வுலகம் முதலிய எல்லாப் பொருள்களையும் தோற்றுவிப்பதற்கு உரிய முதற்காரணம் மாயை ஆகும். எனவே அது மண் போன்றது. இறைவனுடைய சத்தி, சக்கரத்தைப் போன்று துணைக் காரணம் ஆகும். சிவபெருமான் குயவனைப் போன்று நிமித்த காரணன் ஆவான்.

திரிகை - சக்கரம். ஆரியன் - இங்குச் சிவபெருமான். குலாலன் - குயவன்.

விந்துவின் மாயை ஆகி, மாயையின் அவ்வியத்தம்
வந்திடும்; விந்துத் தன்பால் வைகரி ஆதி மாயை,
முந்திடும் அராகம் ஆதி; முக்குணம் ஆதி மூலம்;
தந்திடும், சிவன வன்தன் சந்நிதி தன்னில் நின்றே. 39

முதற்காரணம் என்று கூறப்பட்ட மாயை தூய மாயை என்றும் தூவாமாயை என்றும் இரண்டு வகைப்படும். தூய மாயையிலிருந்து தூவா மாயை தோன்றும். அதிலிருந்து பிரகிருதி மாயை தோன்றும். தூயமாயையிலிருந்து வைகரி முதலிய நான்கு வகைப்பட்டவாக்குகளும் தோன்றும். தூவாமாயையிலிருந்து அராகம் முதலிய தத்துவங்கள் ஐந்தும் தோன்றும். அதன்பின் தோன்றும் பிரகிருதி மாயையிலிருந்து குணதத்துவம்

முதலாகக் கூறப்பட்ட இருபத்து நான்கு தத்துவங்களும் தோன்றும். இவை இறைவனுடைய திரு உள்ளக் குறிப்பின் படியே அவனுடைய அருட் சத்தியின் முன்னிலையில் தோன்றுவனவாகும்.

மாயை ஒன்றே தூய மாயை, தூவா மாயை என்று இரண்டு வேறு பெயர்களைப் பெறும். குன்றிமணியின் ஒரு பகுதி சிவப்பு நிறம் உடைய தாகவும் மற்றொரு பகுதி கருமை நிறம் உடையதாகவும் இருப்பதைப் போல இவ்வேறுபாடு என்பர். இருவகை மாயையும் வேறுவேறு. தூய மாயையிலிருந்து தோன்றியதே தூவா மாயை என்று கொள்வாரும் உளர்.

விந்து என்பது தூயமாயை ஆகிய சுத்த மாயையைக் குறிக்கும். ஆணவ மலத்தோடும் கன்மங்களோடும் விரவாமல் நிற்பதால் இது சுத்த மாயை எனப்படும்.

அசுத்தமாயை என்பது மல கன்மங்களோடு விரவி இருப்பது ஆகும். இதுவே தூவாமாயை எனப்பட்டது. இதனை அதோமாயை என்றும் கூறுவர். இதிலிருந்து பருப்பொருளாய்த் தோன்றுவது பிருகிருதி மாயை என்பர். மான் என்றும் இது வழங்கப்படும்.

இவ்வாறு முதற்காரணமாகிய மாயை மூன்று வகைப்பட்டது. இவ்வாறு தோன்றும் முறைமை பின்னர் விரித்துக் கூறப்படும்.

வைகரி செவியில் கேட்ப தாய், அத்த வசனம் ஆகி,
மெய்தரும்; உதான வாயு மேவிட விளைந்த வன்னம்,
பொய்யற அடைவு உடைத்தாய், புந்திகா ரணமது ஆகி,
ஐயம் இல் பிராண வாயு அடைந்துஎழுந்து, அடைவு உடைத்தாம். 40

முந்திய பாடலில் கூறப்பட்ட நான்கு வகை வாக்குகளில் வைகரி எனப் படுவது சொல்லுவோன் செவிக்கும் கேட்போன் செவிக்கும் கேட்பதாய் இருக்கும். பொருளை உணர்த்தும் சொல்லாக விளங்கும். சொல்லுபவனும் கேட்பவனும் அறிவு விளக்கம் பெறுவதற்குக் காரணமாக இருக்கும். உடம்பிலே தோன்றுகின்ற உதானன் எனும் காற்று உந்தி எழுவதால் இது தோன்றும். நுட்பமாகப் பிரிந்து பல வகையாகத் தோன்றுகின்ற எழுத்துக் களை உடையதாகும். இது உயிர்க்காற்றால் மேல் எழுந்து பொய்மை இலாமல் புறத்தே ஒலிவடிவமாக வருகின்ற இயல்பினை உடையதாகும்.

அத்தம் - பொருள். பொய்யற்ற - திரிபின்றி. அடைவு - முறைமை நால்வகை வாக்குகளும் பற்றிக் கூறத் தொடங்குகிற ஆசிரியர் முதலில் பருமையான வைகரி வாக்கைக் குறிப்பிட்டது ஒடுக்க முறைமை பற்றி என்கிறார் சிவஞான முனிவர். தோற்ற முறைமை பற்றிக் கூறினால் முதலில் சூக்குமை வாக்கைப் பற்றி ஆசிரியர் கூறியிருப்பார். வைகரி என்ற சொல் விகாரப்பட்டு அதாவது வேற்றுமைப்பட்டுத் தோன்றும் வாக்கு என்ற பொருளைத் தரும்.

உள்உணர் ஓசை ஆகி, செவியினில் உறுதல் செய்யாது –
ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடையது அன்றி,
தெள்ளிய அக்கரங்கள் சிந்திடும் செயலது இன்றி –
மெள்ளவே எழுவது, ஆகும் மத்திமை, வேற தாயே. 41

மத்திமை வாக்கு என்பது செவியில் கேட்கப்படாததாய் மெல்லிய ஒலி உடையதாக சொல்லுபவருடைய கழுத்தில் விளங்குவதாக அவர் தனக் குள்ளே உணர்கின்ற ஓசையாகும். உயிர்க் காற்றின் தொழிற்பாடு இல்லாமல் உதானன் என்னும் காற்றின் தொழிற்பாடு மட்டிலுமே உடையது. ஆகையினால் எழுத்துக்கள் நுட்பமாகத் தோன்றிடும் எனவே பல், நா, இதழ் முதலிய உறுப்புக்களில் பட்டு வெளியிலே தோன்றாத இயல்புடையது இம் மத்திமை என்னும் வாக்கு.

பாடலின் இறுதி அடியில் வேறதாய் என்று கூறியது இதற்கு முன் கூறப்பட்ட வைகரி வாக்குக்கும் இதன் பின் ஆசிரியர் கூற இருக்கிற பைசந்தி வாக்கிற்கும் வேறாக என்ற பொருளைத் தரும்.

வேற்றுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாகம் ஆகி,
தோற்றுதல் அடைவு ஒடுக்கி, சொயம்பிர காசம் ஆகி, –
சாற்றிய மயிலின் அண்டம் தரித்திடும் சலமே போன்று – அங்கு
ஆற்றவே உடையதாகி, பைசந்தி, அமர்ந்து நிற்கும். 42

பைசந்தி வாக்கு எனப்படுவது மயிலின் முட்டையை ஒத்தது என்று உவமை கூறப்படும். மயிலின் நிறங்கள் யாவும் மயில் முட்டையில் உள்ள நீரில் அடங்கி இருக்கின்றன. எனினும் அவை தனித்தனி தோன்றாமல் ஒடுங்கி உள்ளன. அது போலவே பல வகைப்பட்ட எழுத்துக்களும் பிரிந்து தோன்றுவதற்கு மத்திமையே காரணம் ஆயினும் அவை சிறிதும் தெரியாவதவாறு தன்னுள் அடக்கிக் கொண்டு சிந்தையின் நிற்றலும் நிருவிகற்ப உணர்வுக்குக் காரணமாக நிற்றலும் ஆகிய இரண்டு இயல்புகளையும் உடையதாகி விளங்கும். வன்னம், - எழுத்து, நிறம் என்று இரு பொருள் பட நின்றது.

விபாகம் - பிரிவு, சுயம்பிரகாசம் - தானாக ஒளியுடையதாதல்.

சூக்கும வாக்கது உள்ஓர் சோதியாய், அழிவது இன்றி,
ஆக்கிடும், அதிகாரத்திற்கு அழிவினை, தன்னைக் கண்டால்,
நீக்கம் இல் அறிவு, ஆனந்தம், முதன்மை,நித் தியம்உ டைத்தாய்,
போக்கொடு வரவு இளைப்பும் விகாரமும் புருடன் இன்று; ஆம். 43

சூக்கும வாக்கு என்பது மூவகை உடம்பினுக்குள்ளே சொல்லுவதற்கு அரிய அறிவு வடிவாய் விளங்குவது. இதற்கு முன் கூறப்பட்ட வைகரி, மத்திமை, பைசந்தி என்பனவற்றைப் போல் தோன்றுதலும் ஒடுங்குதலும் இல்லாதது. அதனால் சூக்குமை நிலைபேறு உடையது. மற்றைய மூன்று வாக்குகளையும் இதுவே தோற்றுவிக்கும். சூக்குமை வாக்கை உள்ளபடி உணர்ந்தவனுக்கு நீங்காத பேரறிவும், ஆனந்தமும், விடுதலையும், நிலை

பேறும் தரவல்லது. இறப்பும் பிறப்பும் அதனால் வரும் இளைப்பும் வேறுபாடுகளும் இல்லாமல் ஆக்கும் இயல்பு உடையது.

சூக்கும வாக்கு பரசரீரம் எனப்பட்ட காரண உடம்பு, கஞ்சுக உடம்பு, பூத உடம்பு இவற்றினுக்குள்ளே நாத மாத்திரையாக விளங்குவதனால் அது சுத்தமாயா வடிவமாக நிலைபெறும் எனப்பட்டது.

நிகழ்ந்திடும் வாக்கு நான்கும் நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் அஞ்ச தாக; செயல்பரி ணாமம் அன்று
புகழ்ந்திடும் விருத்தி ஆகும் படம்குடில் ஆனால் போல;
மகிழ்ந்திடும் பிரமம்; அன்று மாமாயை என்பர் நல்லோர். 44

இவ்வாறு கூறப்பட்ட நான்கு வாக்குகளும் நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகளையும் பற்றுக்கோடாகக் கொண்டு ஐந்தாக விளங்கும். இவை சிவ தத்துவம் முதலிய ஐந்து தத்துவங்களில் இருக்கும். சூக்குமை ஒன்றே ஐந்து வகைப்படுவது, விருத்தி என்ற காரியப்பாடே அன்றிப் பரிணாமம் என்ற வகையில் அடங்குவன அல்ல. விருத்தி என்ற காரியப் பாட்டிற்கு எடுத்துக் காட்டு துணியே கூடாரமானது போல என்பதாகும். சத்தப் பிரமவாதிகள் இதனையே பிரமம் என்பர். சைவ சித்தாந்தத்தின் படி இது தூய மாயையின் வடிவு எனப்படும்.

ஒரு பொருள் மற்றொரு பொருளாகக் காரியப் பட்டுத் தோன்றும் போது அந்த மாற்றம் பல பெயர்களைப் பெறும். இவற்றுள் சமுதாயம் ஆரம்பம், விவர்த்தனம் என்பன சைவ சித்தாந்தத்தில் ஏற்கப்படுவன அல்ல. சைவசித்தாந்தத்தில் ஏற்கப்படும் காரியப்பாடுகள் பரிணாமம், விருத்தி என்ற இரண்டே ஆகும். பரிணாமம் என்பது ஒன்று திரிந்து மற்றொன்றாக மாறுவதனைக் குறிக்கும். அதுவும் இரண்டு வகைப்படும். ஒன்று முழுவதும் பரிணாமப்படுதல் எனவும் மற்றொன்று ஒரு பகுதியே பரிணாமப்படுதல் எனவும் கொள்ளப்பெறும். பால் தயிராக உறைவது முற்றிலும் பரிணாமப் படுதலுக்கு எடுத்துக் காட்டு நெய்யில் புழு தோன்றுவது ஒரு பகுதி பரிணாமப்படுவதற்கு எடுத்துக் காட்டு. சுத்தமாயையின் காரியம் விருத்தி எனப்படும். அசுத்த மாயையின் காரியம் பரிணாமம் எனப்படும்.

ஐந்து கலைகள் என்பன பருமையிலிருந்து நுட்பத்தை நோக்கி வரிசைப் படுத்திக் கூறும் போது நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை எனப்படும். இந்த ஐந்து கலைகளில் உள்ள உலகங்கட்கும் வாக்குகள் முறையே வைகரி மத்திமை பைசந்தி சூக்குமை அதிசூக்குமை என்பன வாகும்.

பாடலின் இறுதி அடியில் சத்தப்பிரம வாதிகளின் கொள்கையை ஆசிரியர் மறுத்தார். அவர்களின் கொள்கைப்படி வாக்குகளே பிரமம் எனப் படும். நல்லோர் ஆகிய சைவ சித்தாந்திகள் அவற்றைப் பிரமம் என்று கொள்ளுவதில்லை. இவை சுத்த மாயாவடிவம் என்றே கொள்ளப்படும்.

வித்தைகள் வித்தையீசர் சதாசிவர் என்று இவர்க்கு
வைத்துறும் பதங்கள், வன்னம், புவனங்கள், மந்தி ரங்கள்
தத்துவம், சரீரம் போகம், கரணங்கள் தாம் எலாமும்
உய்த்திடும், வைந்த வம்தான், உபாதானமாகி நின்றே, 45

மேலே கூறப்பட்ட வாக்குகளுக்கு மட்டிலுமே அல்லாமல் வைந் தவம் எனப்படும் தூயமாயை, மந்திரேசுரர் மந்திரமயேசுரர் அணு சதாசிவர் ஆகிய இவர்களுக்கு வேண்டப்படும் அத்துவாக்களுக்கும் முதற்காரணமாக இருந்தே செலுத்தும் அத்துவாக்கள் என்பன எழுத்துக்களும் பதங்களும், மந்திரங்களும், தத்துவங்களும், புவனங்களும், உடல் நுகர்வு கரணங்கள் ஆகியவையும் என்க.

வித்தைகள் என்றது மந்திரேசுரரை, அவர்கள் சுத்தவித்தியா தத்துவத்தில் இருப்பவர். வித்தை ஈசர் என்பது மந்திரமயேசுரரை, அவர்கள் அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகஉருத்திரர், திரிமூர்த்தர், சீகண்டர், சிகண்டி என்னும் எண்மர் ஆவர். இவர்கள் யாவரும் ஈசுர தத்துவத்தில் வாழ்பவர் என்பர்.

சதாசிவர் என்றது இங்கே அணுசதாசிவரைக் குறித்தது. அவர்கள் பிரணவர், சாதாக்கியர், தீர்த்தர், காரணர், சுசீலர், ஈசர், சூக்குமர், காலர், தேகேசுரர், அம்பு என்னும் பதின்மர் ஆவர். இவர்கள் சாதாக்கிய தத்துவத்தில் வாழ்ந்து சதாசிவ மூர்த்தியை வழிபடுவோர் ஆவர்.

மந்திரேசுரர் மந்திரமயேசுரர் அணுசதாசிவர் ஆகிய இவர்களுக்கு வேண்டிய பதம், வன்னம், புவ்னம், தத்துவம், உடல், நுகர் பொருள்கள், கருவிகள் ஆகிய தூய அத்துவாக்கள் யாவற்றுக்கும் தூய மாயையே முதற் காரணம் என்பது இப்பாடலில் விளக்கப்பட்டது.

மூவகை அணுக்க ளுக்கும் முறைமையில் விந்து ஞானம்
மேவினது இல்லை ஆகில், விளங்கிய ஞானம் இன்றாம்;
ஓவிட விந்து ஞானம், உதிப்பதுஓர் ஞானம் உண்டேல்,
சேவுயர் கொடியி னான்தன் சேவடி சேரலாமே. 46

மேலே கூறப்பட்ட வாக்குகள் யாவும் மந்திரேசுரர் மந்திரமயேசுரர் அணுசதாசிவர் ஆகியோருக்கு மட்டும் அல்லாமல் மூன்று வகை உயிர்களுக்கும் முறையாகப் பொருந்தவில்லையாயின் அவர்களுக்கு விளங்கிய ஞானம் இல்லையாகும். ஆதலால் அனைவருக்கும் வாக்குகளின் துணை இன்றியமையாது வேண்டப்படும். ஏனெனில் வாக்குகளின் துணையைக் கொண்டே சவிகற்ப ஞானம் தோன்றும். இவ்வாக்குகள் தன்னிலும் வேறாக ஒருவரால் காணப்பட்டு நீங்கும் எனில் அந்நிலையில் அவனுக்கு மெய்யுணர்வு தோன்றும். அவன் விடைக் கொடியை உயர்த்திய சிவ பெருமானது திருவடியைச் சென்று சேர்வான்.

அணுக்கள் - உயிர்கள், மூவகை அணுக்கள் என்றது விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்பவர்களே ஆகும். இவர்கள் முறையே ஒரு மலம் உடையார், இருமலம் உடையார், மும்மலம் உடையார் எனப்படுவர். வாக்குகள் வழியாக வரும் அறிவு உலகத்துப் பொருள்களை அறிவதற்கே துணையாக இருக்கும் என்பதும், அதனை நீங்கிய அறிவு பேரின்பத்தை நல்கி இறைவன் திருவடியில் சேர்க்கும் என்பதும் இப்பாடலால் உணர்த்தப்பட்டன. திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் இறைவனை 'வாக்கிறந்த பூரணமாய்' என்று கூறியதை இங்கே நினைவுகூர்க.

அருவினில் உருவம் தோன்றி அங்காங்கி பாவம் ஆகி,
உருவினில் உருவமாயே உதித்திடும்; உலகம் எல்லாம்,
பெருகிடும் சுருங்கும்; பேதா பேதமோடு அபேதம் ஆகும்;
ஒருவனே எல்லாம் ஆகி அல்லவாய் உடனும் ஆவன். 47

யாவற்றினும் நுண்ணியதாகிய மாயையிலிருந்து கலை முதலிய தத்துவங்கள் தோன்றும். அதன் பின்னர் அவற்றினும் பருமை உடைய மூலப்பகுதியும் அதனினும் பருமையாகிய குணதத்துவமும் தோன்றும். இவ்வாறு நுட்பத்திலிருந்து பருமை நோக்கியே எல்லாப் பொருள்களும் தோன்றி ஐம்பூதங்களாகவும் ஆண் பெண் முதலிய உயிர்க் கூட்டங் களாகவும் வளர்ந்தும் தேய்ந்தும் வரும். இவை யாவும் பரிணாமப்பட்டுத் தோன்றுவதால் ஒரு வகையில் வேற்றுமையும் மற்றொரு வகையில் வேற்றுமை இன்றியும் விளங்கும். உள்ளதே தோன்றும் என்ற முறையில் வேற்றுமை இன்றியே தோன்றும். இவை யாவும் இறைவன் திருமுன்பே அவன் திருவுள்ளக் குறிப்பாலேயே தோன்றுவன ஆதலால் இறைவன் உலகத்துப் பொருள்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்பான்.

அங்கம் - உறுப்பு. அங்கி - உறுப்பினை உடையது; உயிர். நையாயிகர் கொள்கையின் அடிப்படையில் காரண காரியப் பொருள்கள் பெரும்பாலும் தம்முள் வேற்றுமை உடையன என்பது பொருந்தாது. ஆதலால் உலகத்துப் பொருள்கள் வேறும் அன்று என்று அக்கொள்கையை விலக்கினார். பேதா பேதத்தையும் அபேதத்தையும் உடன்பட்டார். இறைவன் முன்னிலையிலே உலகம் தோன்றும் என்பது மேலே 39 - வது பாடலில் "சின்னவன் தன் சந்நிதி தன்னில் நின்றே தோன்றும்" என்பதை வலியுறுத்திற்று.

அருஉரு ஈனாதாகும்; விகாரமும் அவிகா ரத்தின்
வருவதும் இல்லை என்னின் வான், வளி ஆதி பூதம்
தருவது தன்னின் மேக சலனசத் தங்க ளோடும்
உருவமின் உருமேறு எல்லாம் உதித்திடும்; உணர்ந்து கொள்ளே. 48

"அருவப் பொருள் உருவப் பொருளைத் தோற்றுவிக்காது. மாறுபாடு அற்ற பொருளில் இருந்து மாறுபாடு உடைய பொருளும் தோன்றாது.

அதாவது உங்கள் கொள்கைப்படி மாயை என்பது வேறுபாடு அற்றது அதிலிருந்து வேறுபட்ட பொருள்கள் எவ்வாறு தோன்றும் ? " என்று சிலர் தடை எழுப்புவர். ஐம்பூதங்களில் வானம் என்பது அருவாகவும் வேற்றுமை அற்றதாகவும் உள்ளது. மற்றைய பூதங்களான காற்று முதலிய நான்கும் வானில் இருந்தே தோன்றுகின்றன என்பதை நீங்களும் உடன்படுகிறீர்கள். அருவமும் வேறுபாடு அற்றதும் ஆகிய விண்ணில் மேகங்களும் அசைவும் ஓசைகளும் உடைய மின்னல் முதலியனவும் தோன்றுகின்றன. எனவே அருவமான மாயையிலிருந்து உலகத்துப் பொருள்கள் யாவும் தோன்றும் என்ற கொள்கையும் பொருத்தமுடையதே.

அவிகாரம் - வேறுபாடு அற்றது. வளி - காற்று. உருமேறு - இடி.

மண்ணினில் கடாதி எல்லாம் வருவது, குலாலனாலே;
எண்ணிய உருவம் எல்லாம் இயற்றுவன், ஈசன் தானும்;
கண்ணுகாரியங்கள் எல்லாம் காரணம் அதனில் காண்பன்;
'பண்ணுவது எங்கே நின்று ?' இங்கு, என்றிடில், பகரக்கேள், நீ. 49

"மண்ணினில் இருந்து குயவன் குடம் பானை முதலியவற்றைத் தோற்றுவித்தல் போல இறைவனும் மாயையிலிருந்து தான் நினைத்த உருவங்களை எல்லாம் இயற்றுவான் என்றீர்கள். குயவன் தான் தோற்றுவிக்கிற யாவற்றையும் முதற்காரணமாகிய மண்ணிலிருந்தும் துணைக் காரணமாகிய சக்கரத்தின் துணை கொண்டும் தோற்றுவிக்கிறான். இறைவன் எவற்றிலிருந்து உலகைத் தோற்றுவிக்கிறான்" என்று சிலர் கேட்பர். அதற்கு உரிய விடையைக் கூறுகிறேன் கேட்பாயாக.

கடாதி - குடம் முதலியன. குலாலன் - குயவன். கண்ணுகாரியங்கள் - கருதிய காரியங்கள்.

சீலமோ உலகம் போல தெரிப்பரிது; அதனால் நிற்கும்
கோலமும் அறிவார் இல்லை; ஆயினும் கூறக்கேள் நீ;
ஞாலம் ஏழினையும் தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமே போலக் கொள் நீ நிலைசெயல் கடவுட் கண்ணே. 50

உலகத்துப் பொருளைச் சொல்லால் கூறி உணர்த்துதல் இயலும். ஆனால் இறைவனின் இயல்போ அவ்வாறு கூறுவதற்கு அரியது. ஏனெனில் அவன் சொல்லையும் மனத்தையும் கடந்து நிற்பவன். இறைவனுடைய இயல்புகளை முழுவதும் அறிந்தவரும் இலர். ஆயினும் உவமை காட்டி அவனுடைய தன்மை இத்தகையது என்று காட்டி ஒருவகையாகக் கூறி விளக்க முற்படுவேன். அதனைக் கேட்பாயாக. உலகம் ஏழினையும் தோற்றுவித்து நிலை நிறுத்திப் பின்னர் அழித்திடுவது காலமே என்பது எல்லாரும் ஏற்றுக் கொள்வது. அத்தகைய காலத்திற்குப் பற்றுக்கோடு ஆவது எதுவும் இல்லை. ஆனால் காலம் எல்லாச் செயல்களுக்கும் பற்றுக்கோடு ஆகும்.

இறைவனும் இவ்வுலகத்தைச் செயற்படுத்தும் போது தான் யாவற்றுக்கும் பற்றுக் கோடாகவும் தனக்கு ஒரு பற்றுக்கோடு இல்லாதவனாகவும் நின்று தன் சத்தியினால் யாவற்றையும் செய்வான் என்று உணர்க.

கற்றநூல் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்றும்
பெற்றியும், சாக்கி ராதி உயிரினில் பிறந்து ஒடுக்கம்
உற்றதும் போல, எல்லா உலகமும் உதித்து ஒடுங்க,
பற்றொடு; பற்றது இன்றி நின்றனன், பரனும் அன்றே, 51

பல நூல்களை ஒருவன் கற்ற போது அவற்றின் பொருளும் சொல்லும் புத்தி தத்துவத்தை ஒட்டி நின்று ஆன்ம அறிவில் ஒடுங்கிப் பின்னர் வேண்டுங்கால் தோன்றும். ஆயினும் இவற்றால் ஆன்ம அறிவு தொடக்குறுதல் இல்லை. அது போலவே உலகங்கள் யாவற்றையும் தோற்றுவித்து அழிக்கும் இறைவன் அவற்றால் தொடக்குறுதல் இல்லை. உயிர் என்பது ஐந்து நிலை வேறுபாடுகளுக்கு உட்படுவது. அவை நனவு முதலியன. இவை நிகழ்வதற்குக் காரணம் கருவிகள் ஆன்மாவோடு கூடுதலும் பிரிதலும், இந்த நிலை வேறுபாடுகளால் ஆன்மாவும் தொடக் குறுவது போல் இறைவனும் உலகங்கள் அனைத்தும் தன்பால் ஒடுங்கி உதிப்பத் தானும் இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்று நிலைவேறு பாடுகளுக்கு உட்பட்டும் நிற்பான்.

இந்தப் பாடலில் இறைவன் பற்றொடு நின்றே பற்றது இன்றி நின்றனன் என்ற கருத்து விளக்கப்படுகிறது. இறைவன் பற்று இன்றி நின்றதற்குக் கற்ற நூல் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்றும் பெற்றி ஆசிரியரால் உவமையாகக் கூறப்படுகிறது. கற்ற நூலின் பொருளும் சொல்லும் ஆன்மாவின் அறிவில் பதிந்து கிடந்து மீண்டும் தோன்றும் போது அறிவில் மாற்றம் ஏதும் நிகழ்வதில்லை. அதாவது ஒரு முறை படித்து அறிவில் பதிந்த பாடலை ஒரு முறை கூறியவுடன் அறிவிலிருந்து அது அழிவதில்லை. அது போல இறைவன் பற்று இன்றி நின்றான் என்றார்.

நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்பு அடங்கல் என்பன ஆன்மாவின் ஐந்து நிலைவேறுபாடுகள் எனப்படும். அவை முறையே சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என வழங்கும். நிலை வேறுபாட்டை வடமொழியில் அவத்தை என்பர். இந்த நிலை வேறுபாடுகள் கருவிகள் உயிரோடு கூடுவதாலும் பிரிவதாலும் ஏற்படு கின்றன. இவற்றால் ஆன்மா நிலை வேறுபாடுகளை அடைகிறது. இறைவனும் இவ்வுலகத்தைத் தோற்றுவித்து நிலை நிறுத்தி ஒடுக்கும் போது இலயம் போகம் அதிகாரம் என்ற மூன்று நிலை வேறுபாடுகளை அடைகி றான் என்பர். அது பாடலில் பற்றொடு நின்றனன் என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டது.

இவ்விரண்டு கருத்துக்களையும் எதிர் நிரல் நிறையாகக் கொள்க என்று சிவஞான முனிவர் உரைவரைந்தார்.

உயிர் அவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பது என் அரன்பால் என்னில்
செயிர் உறு மலத்தின் ஆகும்; சிதைந்தது ஏது என்னில் சித்தத்து
அயர்வு ஒழிகாரியங்கள் அழியும்; காரணம் கிடக்கும்;
பயில்தரு காரியம்பின் பண்டுபோல் பண்ணும் – ஈசன் 52

உயிர்கள் யாவும் தமக்கு ஒடுக்கம் வந்த போது ஒடுக்கத்தைச் செய்கிற கடவுளிடத்தில் ஒடுங்கி, மீளவும் தோன்றும் போது அவனிடத்தில் இருந்தே தோன்றும் என்கிறீர்கள். அது எதற்காக என்று சிலர் வினவுதல் கூடும். உயிர்களோடு தோற்றமில் காலந் தொட்டே பொருந்திய குற்றமாகிய ஆணவ மலம் உயிர்களை விட்டு நீங்குவதற்காக உலகம் மீளவும் இறைவனால் தோற்றுவிக்கப்படுகிறது. "உயிர்களைப் பொருந்திய ஆணவ மலம் சிதைந்து ஒழியவில்லை எனில் ஒடுக்கம் நிகழ்ந்த போது அழிந்தது யாது?" என்று மேலும் ஒரு வினா எழும். உயிர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்துவதனால் இளைப்படைந்து விடுகின்றன. அவ்வாறு அயர்வினைத் தந்த காரியங்கள் அழியும். அவையும் அழியும் எனினும் தத்தமது காரணங்களில் வினையோடு ஒடுங்கி நிற்கும். தோற்றுவிக்கும் காலத்து இறைவன் இவற்றை ஒடுங்கியவாறே தோன்றுமாறு செய்வான்.

மீண்டும் தோற்றுவிக்கப்படுவதானால் உலகம் ஏன் ஒடுக்கப்படல் வேண்டும்? உயிரைக் கட்டி நின்ற ஆணவமலம் ஒடுக்க காலத்திலும் அழிய வில்லையானால் அழிந்தது தான் எது என்று கேட்டவர்களுக்கு விடையாக இப்பாடலை ஆசிரியர் அருளினார். உலகம் என்பது உயிரோடு கூடிய உலகம் என்று உரை வரைந்தார் சிவஞான முனிவர். சித்தத்து அயர்வு உறு என்பது உயிரின் அறிவினிடத்து நிகழ்ந்த இளைப்பு எனப் பொருள்படும். இதன் பின் வரும் 57வது பாடலில் "ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம் கழித்திடல்" என்ற பகுதியில் இக்கருத்து ஆசிரியரால் மேலும் விளக்கப் படுகிறது.

தோற்றுவித்து அளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்
போற்றவே உடையன், ஈசன் புகுந்தது விகாரம் என்னில்
சாற்றிய கதிரோன் நிற்க, தாமரை அலரும்; காந்தம்
காற்றிடும் கனலை; நீரும் கரந்திடும் – காசி னிக்கே. 53

இப்பெரிய உலகத்தைத் தோற்றுவிப்பதும், நிலை நிறுத்துவதும், அதன் பின்னர் ஒடுக்குவதும் ஆகிய மூன்று தொழில்களையும் சிவபெருமானாகிய இறைவன் ஒருவனே செய்வான் என்றீர்கள். இச் செயல்களில் ஈடுபடுகிற அவன் வேறுபடுவான் அல்லனோ என்று சிலர் வினாவுவர். இறைவன் வேறுபாடு அடையமாட்டான். வானத்தில் தோன்றும் கதிரவன் தன் நிலையில் திரியாது இயங்குகிறான். கதிரவன் தோன்றியதும் இவ்வுலகில் உள்ள சூரிய காந்தக் கற்கள் நெருப்பைக் கக்குகின்றன. தாமரை இதழ்கள் மலர்கின்றன. நிலத்தில் உள்ள நீர் ஆங்காங்கு வற்றுகிறது. உலகத்தில் இந்த

மாற்றங்கள் ஏற்படும் போதும் கதிரவன் மாற்றம் இன்றியே விளங்குகிறான். அதுபோலவே தான் மாற்றம் இன்றி நின்றே இறைவன் இவ்வுலகத்தை முத் தொழிற்படுத்துவான்.

காலுதல் என்பது உமிழ்தல் என்று பொருள் தரும். கான்றிடும் என்பது இங்கு பிறவினை வாய்பாட்டால் காற்றிடும் என்று வந்தது. விகாரம் - வேறுபாடு.

உரைத்தஇத் தொழில்கள் மூன்றும் மூவருக்கு உலகம் ஒத
வரைத்து ஒரு வனுக்கே ஆக்கி வைத்தது இங்கு என்னை? என்னின்
விரைக்கம லத்தோன் மாலும் ஏவலான் மேவி னோர்கள் –
புரைத்த அதிகார சத்தி புண்ணியம் நண்ண லாலே. 54

படைத்தல், காத்தல், ஒடுக்குதல் என்ற மூன்று தொழில்களும் நான் முகன் திருமால் உருத்திரன் ஆகிய மூன்று கடவுளர்களுக்கு உரியன என்று உலகத்தில் பெரு வழக்காக இருக்க இம்மூன்று தொழில்களையும் சிவபெருமான் ஒருவனே செய்வான் என்று கூறினீர்கள் அது எவ்வாறு பொருந்தும்? என்று சிலர் கேட்டபர். மணம் மிக்க தாமரை மலரில் வாழ்கின்ற அயனும் திருமாலும் தங்கள் புண்ணியச் சிறப்பால் படைத்தலும், காத்தலும் ஆகிய உயர்ந்த அதிகார ஆற்றலைச் சிவபிரானது ஏவலால் பெற்றனர். முத்தொழிலும் இயற்றும் வல்லமை சிவபெருமான் ஒருவனுக்கே உண்டு என அறிக.

விரை - மணம், புரை - உயர்வு அதிகாரசக்தி - இயற்றும் ஆற்றல்.

இறுதியாம் காலம் தன்னில் ஒருவனே இருவரும் தம்
உறுதியில் நின்றார் என்னில் இறுதிதான் உண்டாகாதாம்;
அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும் நாம் ஆக்கம் நோக்கம் பேர் அதி கரணத்தாலே. 55

உலகத்திற்கு இறுதி வருகின்ற ஒடுக்க காலத்தில் சிபெருமான் ஒருவனே நிலைபெற்று இருப்பான். அவனைத்தவிர மற்றை இருவராகிய அயனும் திருமாலும் நிலைபெற்றிராமல் ஒடுக்கமுறுவர். ஏனெனில் அவ்விருவரும் ஒடுக்கப்படாமல் எஞ்சி இருந்தால் அக்காலத்தைச் சங்காரக் காலம் என்று கூறுவது பொருந்தாது. ஒடுக்கத்தைச் செய்யும் சங்காரக் கடவுள் தவிர மற்ற யாவையும் எல்லோரும் ஒடுக்கத்திற்கு உட்படுவர். சங்காரக் கடவுளாகிய சிவபெருமான் யாவற்றுக்கும் ஒடுக்கத்தைச் செய்து தான் ஒருவனே எஞ்சி நிற்பான். சிவபெருமானே ஒடுங்கிய உலகங்களுக்குப் பெரியதோர் ஆதாரம் ஆதலால் அவனே உலகத்தை மீண்டும் தோற்று விப்பதற்கும் நிலை நிறுத்துவதற்கும் உரியவன் ஆவான்.

அறுதிஇல்அரன் - ஈறு இல்லாத சிவபெருமான். ஆக்கம் - தோற்று வித்தல்; நோக்கம் - காத்தல். அதிகரணம் - ஆதாரம்.

சொன்னஇத் தொழில்கள் என்ன காரணம் தோற்ற என்னில்,
முன்னவன், விளையாட்டு என்று மொழிதலும் ஆம்; உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவும், அருளான் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும், சொல்ல லாமே. 56

மேலே கூறப்பட்ட படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில் களையும் சிவபெருமான் செய்தற்குரிய காரணம் யாது எனச் சிலர் கேட்பர். அவை அவனுடைய திருவிளையாடல் என்று கூறுதலும் உண்டு. அது மட்டும் அல்லாமல் உயிர்களுக்கு இம்மை, மறுமை, விடு என்னும் இவற்றை வழங்கவும் இறைவன் முத்தொழில் செய்கிறான் என்றும் கூறுவர். மேலும் உயிர்களைப் பற்றியுள்ள மும்மலங்களையும் தன் அருளால் நீக்குவதற்கு எனவும் கூறுவர் பெரியோர்.

முன்னவன் விளையாட்டு என்ற சொற்களால் ஆசிரியர் குறித்ததற்கு காரணம் இறைவன் முத்தொழில்களையும் மிக எளிதில் செய்கிறான் என்பதேயாகும். "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" (திருவாசகம் - திருவெம்பாவை 12). "ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்" (திருவாசகம் - திருவெம்பாவை 11) என்ற திருவாக்குகள் இங்கு நினையத்தக்கன. மொழிதலும் என்ற உம்மை எதிரது தழுவிய எச்ச உம்மை. ஏனெனில் அதனைத் தொடர்ந்து வருகின்ற கருத்துக்களையும் அந்த உம்மை சுட்டிற்று. இதனை அடுத்த பாடலில் இறைவனின் செயல்கள் யாவும் அவனது பேரருளே என்பது விளக்கப்படுகிறது.

அழிப்புஇளைப்பு ஆற்றல்; ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல்; நுகரச் செய்தல், காப்பது; கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பு; அருள் செய்தி தானும்
பழிப்புஒழி; பந்தம்வீடு பார்த்திடில் அருளே, எல்லாம். 57

இறைவன் உலகத்தை ஒடுக்குவது உயிர்கள் இளைப்பாறுவதன் பொருட்டே ஆகும். உலகத்தை மீண்டும் தோற்றுவிப்பது உயிர்களின் வினை முழுவதையும் கழித்து அவற்றுக்கு மலக் கட்டினை நீக்குவதற்கு ஆகும். உலகத்தைக் காப்பது உயிர்களின் வினைப்பயனை அவை நுகரச் செய்வதற்கு ஆகும். மறைப்பு எனப்படுவது உயிர்களுக்கு இருவினை ஒப்பு நிகழுமாறு செய்து அவற்றின் மலங்களை நீக்குவதற்கு ஆகும். அருளல் என்பது பாசத்தை நீக்கி சிவப்பேற்றை வழங்குவதற்கு ஆகும். எனவே இறைவனின் ஐந்தொழில்களும் ஆராய்ந்து பார்க்கும்வழி அவனுடைய அருட் செயல்களே ஆகும். இவற்றுள் சில மறத்தொழில் போலும் என்று பழித்தலை ஒழிக.

முந்தியப் பாடலில் இறைவனின் தொழில்கள் மூன்று என்றார் ஆசிரியர். இப்பாடலில் அவற்றை ஐந்து என விரித்துக் கூறினார். மறைத்தல் என்னும்

தொழில் காத்தலில் அடங்கும். அருளல் என்னும் தொழில் ஒடுக்குதலில் அடங்கும். இறைவனின் ஐந்தொழில்களுமே அவனுடைய மாறாத பேரருளால் நிகழ்வன என்பதனை இப்பாடலில் கூறினார். தெழித்திடல் - நீக்குதல். பாடலின் இறுதி அடியில் வருகின்ற பழிப்பு ஒழி என்ற சொற்கள் பழித்தலை ஒழிவாயாக என்று முன்னிலை வியங்கோள் ஆயிற்று.

அருவமோ, உருவா ரூபம் ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவு? எனக்கு உணர்த்துஇங்கு ! என்னின்
அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும், சொன்ன ஒருவனுக்கு, உள்ள வாமே. 58

இறைவனின் வடிவம் அருவமா, அருஉருவமா, அல்லது அவை இரண்டும் அன்றி நிலைபெற்ற உருவமா என்று எனக்கு உணர்த்துக எனின், அருவமும், அருஉருவமும் , உருவமும் ஆகிய மூன்றுமே முன்னே கூறப்பட்ட இறைவனின் இயல்புகளாம் என்று அறிக.

கருத்தா-வினை முதல் சொன்ன ஒருவனுக்கு என்று இப்பாடலின் இறுதி அடியில் கூறப்பட்ட இறைவன் இந்நூலின் இருபத்து ஒன்றாம் பாடலில் அநாதி முத்தசித்து உரு என்று விதந்து கூறப்பட்டவன். எனவே அவன் காலங்கடந்தவன் கட்டுக்களிலிருந்து நீங்கியவன் அறிவே வடிவானவன் என்ற கருத்துக்கள் பெறப்படும்.

நண்ணிடும் உருவம் என்னின், நமக்குஉள உருவம் போலப்
பண்ணிட ஒருவன் வேண்டும்; இச்சையேல், பலரும் இச்சை
கண்ணிய உருவம் கொள்ளேம், யாம், பெரும் கடவுள் தானும்
எண்ணிய, யோக சித்தர் போல், உரு இசைப்பன் காணே 59

இறைவனுக்கு உருவம் உண்டு என்று கொண்டால் நமக்கு உள்ள உருவத்தை ஆக்குதற்கு ஒரு தலைவன் வேண்டும் என்று கொண்டது போல அவனது உருவத்தையும் தோற்றுவித்தற்கு ஒரு தலைவன் வேண்டும் என்றாகும். அவ்வாறு அன்று இறைவன் தான் நினைத்த வடிவத்தைத் தானே மேற் கொள்ளுவான் என்றால் அத்தகைய ஆற்றல் தம் போல்வார் பலருக்கும் இருத்தல் வேண்டும். ஆனால் நாம் கருதிய உருவத்தை மேற் கொள்ள இயலாது என்பது எல்லாரும் அறிந்தது. தலைவனாகிய கடவுள் யோக சித்தர்களைப் போலத் தான் விரும்பிய உருவத்தை மேற் கொள்ளுவான்.

வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ள மாபோல்,
உத்தமன் கொள்வன் என்னின், அவர்களில் ஒருவன் ஆவன்;
அத்தகை யவர்கள் எல்லாம் ஆக்குவது அருளால்; ஆங்கு
வைத்தது மாயை என்னின், வடிவெலாம் மாயை ஆமே. 60

வித்தகமுடைய யோக சித்தர்கள் தாம் விரும்பிய வடிவத்தை எடுத்துக் கொள்ளுவதைப் போலவே இறைவனும் தான் விரும்பிய வடிவத்தை எடுத்துக் கொள்ளுவான் என்று கூறினால் இறைவனும் அவர்களுள் ஒருவன் என ஆவான் அல்லனோ. அவ்வாறு அன்று. அத்தகைய சித்தர்கள்

எல்லாம் தாம் விரும்பிய வடிவத்தை எடுத்துக் கொள்வது இறைவன் அருளாலே ஆகும். இவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைவன் ஆதலால் இவனுக்கு அருள் பாலிப்பார் ஒருவரும் இலர். யோக சித்தர்கள் கொள்ளுவது மாயையில் இருந்து தோன்றிய வடிவமாகும். எனவே வடிவங்கள் எல்லாம் மாயையின் காரியங்கள் அல்லவோ என்ற வினா எழும்.

இதற்கு முந்திய பாடலிலும் இந்தப் பாடலிலும் ஒரே கருத்து தொடர்ச்சியாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இரண்டும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன. இரு பாடல்களும் வினாவாகவும் இனி வருவது விடையாகவும் அமையும்.

மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவம் ஆகும்;
ஆயஆ ணவம் அகன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும்
நாயகன், எல்லா ஞானத் தொழில்முதல் நண்ண லாலே,
காயமோ மாயை அன்று; காண்பது சத்தி தன்னால். 61

மாயையால் வருகின்ற உருவங்கள் யாவும் ஆணவ மலத்தின் தொடர்பினால் உயிர்களுக்கு இறைவனால் வழங்கப்படுகின்றன. உயிர்கள் ஆணவ மலத்தினால் பற்றப் பட்டிருப்பதால் அவற்றின் அறிவும் தொழிலும் சிற்றறிவும் சிறு தொழிலும் ஆகும். தலைவனாகிய இறைவனோ எல்லா ஞானத்துக்கும் எல்லாத் தொழில்களுக்கும் உரிய முதன்மை உடையவன். ஆதலால் அவனுடைய வடிவம் மாயையால் ஆகியது அன்று. அவனது சத்தியே அவனுக்கு வடிவமாகும்.

அகறல் - நீங்குதல், ஆர்த்தல் - பொருந்துதல். சத்தி என்று இங்கே கூறியது இறைவனது திருவருள் ஆகும்.

சத்தியே வடிவுஎன் றாலும், தான்பரி ணாமம் ஆகும்
நித்தமோ அழியும் ; அத்தால் நின்மலன் அருவே என்னில்
அத்துவா மார்க்கத்து உள்ளான் – அலன்; இவன் அருமை தன்னை;
புத்திதான் உடையை போல இருந்தனை; புகலக்கேள்நீ; 62

சிலர் இங்கு ஒரு தடையை எழுப்புவர். இறைவனது வடிவம் மாயையின் காரியம் அன்று என்பதையும் ஏற்றுக் கொள்ளலாம். அவனது வடிவம் என்பது அவனது சத்தியே என்பதையும் ஏற்றுக் கொள்ளலாம். ஆயினும் அவன் ஓர் உருவத்தைக் கொண்டவன் என்னும் போது அவனது சத்தி அவனது வடிவாகப் பரிணமித்தது என்று கொள்ள நேரிடும். அவ்வாறு கொண்டால் அத்தகைய வடிவமும் அழிவுறும் ஆதலால் இறைவன் அருவமானவன் என்று கொண்டால் என்ன? அவ்வாறு அன்று. இறைவன் அத்துவாக்கள் ஆறனையும் கடந்து நிற்பவன். அவற்றுக்கு உட்பட்டவன் அல்லன். அத்தகைய பெருமை உடைய இறைவனின் அருமையை அறிவுடையவன் போலத் தோன்றும் உனக்குச் சொல்லுவேன் கேட்பாயாக.

அத்துவாக்கள் என்பன ஆறு ஆகக் கொள்ளப்படும். அவை மந்திரம், பதம், வன்னம், புவனம், கலை தத்துவம் என்பன. அத்துவா என்ற சொல் வழி என்ற பொருளைத் தரும். சொல் உலகும், பொருள் உலகும் ஆகிய அனைத்தும் அத்துவாக்களுக்கு உட்பட்டவை. இறைவன் அத்துவாக்களைக் கடந்தவன்.

உலகினில் பதார்த்தம் எல்லாம் உருவமோடு அருவம் ஆகி
நிலவிடும்; ஒன்று ஒன்று ஆகா; நின்ற அந்நிலையே போல
அலகுஇலா அறிவன்தானும் அருவமே என்னில் ஆய்ந்து
குலவிய பதார்த்தத்து ஒன்றாய்க் கூடுவன்; குறித்திடாயே. 63

உலகத்தில் உள்ள பொருள்கள் யாவும் அருவமாக அல்லது உருவமாக அல்லது அருஉருவமாக விளங்குவன அவற்றில் ஒன்று மற்றொன்று ஆக முடியாது. அவை நின்ற நிலையிலேயே நிற்கும். முற்றறிவுடைய இறைவனையும் அருவம் என்று கொண்டால் அவனும் உலகப் பொருள்களுள் ஒன்றாக ஆவான். இதனை ஆராய்ந்து தெளிவாயாக.

உலகத்துப் பொருள்கள் யாவும் மூன்று வகைகளிலே அடங்கும். இவற்றுள் உருவம் என்பது எல்லாரும் அறிந்தது. எனவே எடுத்துக் காட்டுத் தேவை இல்லை. அருவப் பொருள் என்பது விண் போன்றது. அருஉருவம் என்பது நிலவின் கதிர் போன்றது. ஏனெனில் நிலவின் கதிர் ஒன்றின் மீது படியும் போது உருவம் உடையதாகவும் படியாத போது அருவமாகவும் தோன்றுகிறது. இவற்றில் ஒரு தன்மை உடைய பொருள் மற்ற இரு தன்மைகளையும் அடைய இயலாது. எனவே இறைவனை அருவம் என்று கொண்டால் அவன் மற்ற இரு தன்மைகளையும் எய்தமாட்டான் என்று ஆகும். எனவே அவனும் உலகியல் பொருளில் ஒன்றாகவே கருதப்படுவான்.

பந்தமும் வீடும் ஆய பதபதார்த்தங்கள் அல்லான்;
அந்தமும் ஆதி இல்லான்; அளப்பிலன் ஆதலாலே
எந்தை தான் இன்னன் என்றும் இன்னது ஆம் இன்னது ஆகி
வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே. 64

எந்தையாகிய இறைவன் சொல் உலகம் பொருள் உலகம் ஆகிய இரண்டையும் போலக் கட்டுக்கு உட்படுபவனும் அல்லன். கட்டுக்களில் இருந்து விடுபடுபவனும் அல்லன். அவனுக்குத் தோற்றமும் இல்லை. இறுதியும் இல்லை. அவனுடைய இயல்பை அளவைகளின் துணை கொண்டு அறிய இயலாது. ஆதலால் அவனுடைய வடிவு இத்தகையது என்றும், உயிர்களுக்கு அருள்பாலிப்பதற்காக இன்ன வடிவை ஏற்பான் என்றும். இன்ன வடிவை மேற்கொள்ள மாட்டான் என்றும் சொல்லுவதற்கு இயலாது.

பதம் - சொல். பதார்த்தம் - சொல்லால் குறிக்கப்படும் பொருள். திருஞான சம்பந்தர் திருப்பாசுரத்தில் ‘எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ’ என்று அருளியதை இங்கே நினைவு கூர்க. அளப்பிலன் என்ற

சொல்லால் இறைவன் அளவைகளுக்கு அப்பாற்பட்டவன் என்பது விளக்கப்பட்டது. இந்நூலின் ஐந்தாவது பாடலில் "குறைவிலா அளவினாலும் கூறொணாது ஆகி நின்ற இறைவனார் கமலபாதம்" என்றதும் நினையத்தக்கது.

குறித்தது ஒன்று ஆக மாட்டாக் குறைவு இலன் ஆதலானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பு ஒடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும்
நிறுத்திடும் நினைந்த மேனி – நின்மலன் அருளினாலே. 65

இறைவன் தான் விரும்பிய வடிவத்தை மேற்கொள்ள இயலாத குறைபாடு இல்லாதவன். அவன் முற்றறிவும், பேராற்றலும் உடையவன். வேண்டுதல் வேண்டாமை இலாதவன். எனவே உயிர்கள் மீது கொண்டே பேரருளினால் தான் நினைத்த வடிவை நினைத்த போதே கொள்ளும் ஆற்றல் உடையவன்.

உயிர்களின் உடல்கள் அவற்றின் வினைப் பயனுக்கு ஏற்ப இறைவனால் அவற்றுக்குத் தரப்பட்டவை. எனவே உயிர்கள் தாம் விரும்பிய வடிவை அடைய இயலாத குறைபாடு உடையவை. இறைவன் வினையின் நீங்கியவன் ஆகையினாலே அத்தகைய குறைபாடு இவனுக்கு இல்லை. உயிர்கள் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையன. இறைவனே பேரறிவும் எல்லாம் வல்ல பேராற்றலும் உடையவன். உயிர்கள் வெறுப்பும் விருப்பும் உடையன. இறைவனோ வேண்டுதல் வேண்டாமை இலான். அதனால் அவன் நினைத்த போது நினைத்த வடிவத்தைத் தன் அருளினால் கொள்ள வல்லவன். "ஆர் ஒருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்உருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" (அப்பர் தேவாரம் - திருப்பூவணம் 11) என்பதும் காண்க.

ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளானாகில் கதிப்பவர் இல்லையாகும்.
நாரணன் முதலாய் உள்ள சுரர் நரர் நாகர்க்கு எல்லாம்
சீர்அணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே. 66

இறைவன் தனது அளவற்ற கருணையினால் திருஉருவம் கொண்டு ஆரணங்களையும், ஆகமங்களையும் அருளிச் செய்திலனேல் உயிர்கள் வீடு பேறு அடைதல் இயலாது ஆகும். திருமால் முதலிய தேவர்கட்கும் மானுடர்க்கும் நாகர் முதலியோர்க்கும் சிறப்புடைய குரு மரபில் வைத்து அருள் பாலிப்பதும் செல்லாதாகும்.

கதிப்பவர் - நற்கதி அடைபவர். குரு சந்தானச் செய்தி - ஆசிரியத் திருமரபில் வைத்து அருள் உபதேசம் வழங்குதல். இறைவன் உருவத் திருமேனி கொள்ள வேண்டுவதன் இன்றியமையாமை இப்பாடலில் கூறப்பட்டது. உயிர்கள் உணர்த்தினால் அன்றித் தாமாக உணரமாட்டா

தவை. ஆதலால் மறைகளும் ஆகமங்களும் குருமரபும் அவற்றுக்குத் துணையாதல் வேண்டும் என்பது கருத்து.

உருஅருள்; குணங்களோடும் உணர்வு அருள்; உருவில் தோன்றும்
கருமமும் அருள்; அரன்தன் கரசரணாதி சாங்கம்
தரும் அருள் ; உபாங்கம் எல்லாம் தான் அருள் தனக்கு ஒன்று இன்றி
அருளுரு உயிருக்கு என்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே. 67

சிவபெருமானின் திருவடிவம் அருளே. ஆதலால் அவனுடைய ஐந்தொழில்களும் அத்திருவருளில் இருந்து தோன்றுகின்ற பண்புகளும் அருளே ஆகும். அவன் திருஉருவில் காட்சி தருகின்ற திருக்கை, திருவடி முதலிய உறுப்புக்களும் அத்திருவடிவில் அவன் ஏந்தியுள்ள மான், மழு மூவிலைச் சூலம் ஆகியனவும் அருளே வடிவானவை ஆகும். அவன் உடுத்தியுள்ள ஆடையும் புனைந்துள்ள மாலையும் போன்றனவும் அருளின் வடிவே ஆகும். தனக்கு என அவன் திருவடிவம் மேற்கொள்வது இலன். அவன் மேற்கொள்ளும் திருமேனி உயிர்களின் பொருட்டே ஆகும்.

உரு - திருமேனி. குணங்கள் - இறைவனுக்கு உரிய எண்குணங்கள். கருமம் - அவனது ஐந்தொழில்கள். கரசரணாதி - திருக்கை திருவடி முதலியன. சாங்கம் - உறுப்பை விட்டு நீங்காது அவன் ஏந்தியுள்ள மூவிலைச் சூலம், மான், மழு முதலியன. உபாங்கம் - உறுப்பில் பூண்டுள்ள ஆடை, மாலை போன்றவை. அசிந்தன் - உயிர்களின் சிந்தனைக்கு எட்டாதவன்.

உலகினை இறந்து நின்றது அரன் உரு என்பது ஓரார்;
உலகு அவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார்;
உலகினுக்கு உயிரும் ஆகி உலகும் ஆய் நின்றது ஓரார்;
உலகினில் ஒருவன் என்பர் உருவினை உணரார் எல்லாம். 68

தனது திருவருளால் இறைவன் திருமேனி கொண்டது உயிர்களின் பொருட்டே. எனினும் அரன் திருவடிவம் உலகினைக் கடந்தது என்பதை இவ்வுலகினர் உணரமாட்டார். இறைவன் திரு உருவில் இருந்தே உலகம் தோன்றி ஒடுங்கும் என்பதனையும் உணரார். இறைவனே உலகத்துக்கு உயிராய் விளங்குகிறான் என்பதனையும், அவனே உலகு ஆக நின்றதனையும் உணரார். இவ்வாறு சிவபெருமானின் இயல்பினை உணராத மாந்தர் தாம் கூறும் கடவுளரில் சிவபிரானும் ஒருவன் என்று கொள்வர்.

சுருதிகள் சிவபெருமானை விசுவாதிகள் (உலகைக் கடந்தவன்) என்றும், விசுவகாரணன் (உலகத்தோற்றத்துக்குக் காரணமானவன்) என்றும், விசுவ அந்தர்யாமி (உலகத்துக்கு உள்ளே நிறைந்தவன்) என்றும் விசுவரூபி (உலகே வடிவானவன்) என்றும் கூறுவதை உணராத மாந்தர் சிவபெருமானையும் தாம் கூறும் ஏனைக் கடவுளரில் ஒருவன் என்றே அறியாமையால் கூறுவர் என்பது இப்பாடலில் விளக்கப்பட்டது.

தேவரின் ஒருவன் என்பர். திருஉரு சிவனே; தேவர்
மூவராய் நின்றது ஓரார்; முதல் உருப்பாதி மாதர்
ஆவதும் உணரார்; ஆதி அரி அயற்கு அறிய ஒண்ணா
மேவுஉரு நிலையும் ஓரார்; அவன் உரு விளைவும் ஓரார். 69

சிவபெருமானுடைய திரு உருவத்தினையும் அவனுடைய மேம்பாட்டையும் அறிய இயலாதவர் நான்முகன், திருமால், உருத்திரன் என்னும் மூவரில் அவனும் ஒருவன் என்பார். சிவபெருமானே அம்மூவ ராயும் நின்றதை இவர் உணரார். மாது ஒரு பாகனாய் அருளுவதையும் இவர்கள் உணரார். திருமாலும் நான்முகனும் திருமுடியும் திருவடியும் தேடிக் காணாத பெருமை உடையவன் சிவபெருமான் என்பதையும் இவர்கள் உணரார். அருவமும் உருவமும் அரு உருவமும் ஆகவும், அவற்றைக் கடந்தவனாகவும் இருப்பவன் சிவபெருமான் என்பதையும் இவர்கள் உணரார்.

போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்;
யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்;
வேகி ஆனாற் போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்;
ஊகியா முடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர். 70

சிவபெருமான் திருமேனி கொள்ளும் போது போக வடிவத்தை மேற்கொண்டு உயிர்களுக்கு இன்ப வாழ்க்கையை அருளுவான் என்ப தையும் உணரமாட்டார். சில நேரங்களில் அவன் யோகத் திருமேனியை மேற்கொண்டு உயிர்களுக்கு வீடு பேறு அருளுவதையும் உணர மாட்டார்கள். மற்றும் சில நேரங்களில் சிவபெருமான் சினம் கொண்டவனைப் போல் திருமேனி தாங்கி உயிர்களின் வினைகளைக் கெடுப்பான் என்பதையும் இவர்கள் உணரமாட்டார்கள். இவ்வாறு இறைவன் திருமேனி கொள்ளும் முறைமையினை ஆராய்ந்து அறியும் வலிமை இல்லாதார் சிவபெருமானைத் தேவர்களில் ஒருவனாகவே கொள்ளுவார்.

சிவபெருமானே ஒப்பற்ற இறைவன் என்பதை அறியாதவர்கள் அவனை மற்றைத் தேவர்களுடன் ஒருங்கு வைத்து எண்ணும் தவறினைச் செய்வார் கள் என்பது கருத்து. வேகி - வேகம் உடையவன். வீட்டல் - அழித்தல்.

ஒன்றோடு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்;
அன்றி அவ்வேடம் எல்லாம் அருள்புரி தொழில் என்று ஓரார்
கொன்றது வினையைக் கொன்று நின்ற அக்குணம் என்று ஓரார். 71

ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் ஆகியவற்றை சிவபிரான் தானே தரித்துக் கொண்டு நிற்றலால் அவன் உலகத்தினைக் கடந்தவன் என்பதனையும் இத்தகை யோர் உணரமாட்டார்கள். அதுவும் அல்லாமல் வேகவடிவம் தாங்கி

இறைவன் சிலரை ஒறுத்தனன் என்பதற்குப் பொருள் அவர்களுடைய தீவினையை நீக்கி அவர்களுக்கு அருள் பாலித்தான் என்பதுவே என இவர்கள் அறியார்.

அருளே வடிவமான சிவபெருமான் சிலர் மீது சினம் கொண்டு அவர்களைக் கொன்றான் என்பது பொருந்துமா என்ற வினாவிற்கு இப்பாடல் விடையளிக்கிறது. இறைவன் உயிர்களை ஒறுப்பதும் அவற்றின் வினையைக் கெடுப்பதற்கே என்று ஆசிரியர் விளக்கினார்.

நாயகன் கண்நயப்பால் நாயகி புதைப்ப, எங்கும்
பாய் இருள் ஆகிமூட, பரிந்து உலகினுக்கு நெற்றித்
தூயநேத்திரத்தினாலே சுடர் ஒளி கொடுத்த பண்பின்,
தேயம் ஆர் ஒளிகள் எல்லாம் சிவன் உருத் தேசது என்னார். 72

ஒரு சமயம் இறைவி தன் திருவுள்ள மகிழ்ச்சியினால் இறைவனது இரு கண்களையும் தனது இரு கரங்களால் மூடித் திருவிளையாட்டு அயர்ந்தாள். அப்போது உலகு எங்கும் இருள் பரந்து மூடியது. உலகத்தில் உள்ளார் களிடத்தில் கொண்ட பரிவினால் இறைவன் தனது தூய்மையான நெற்றிக் கண்ணைத் திறந்தனன். அப்பொழுதே உலகம் முழுவதும் ஒளி படர்ந்தது. இவ்வாறு அருளிய சிவபிரானுடைய திருமேனியே பேரொளிப் பிழம்பு என்று இவர்கள் அறிந்திலர்.

நயப்பு - மகிழ்ச்சி, பாய்தல் - பரத்தல், தேயம் - உலகம், தேசு - ஒளி

கண்ணுதல் யோகு இருப்ப காமன் நின்றிடவேட் கைக்கு,
விண்உறு தேவர் ஆதி மெலிந்தமை ஓரார்; மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித்து இமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து உயிர்க்குப் பேரின்பம் அளித்தது ஓரார். 73

ஒரு சமயம் நெற்றிக்கண்ணினை உடைய சிவபெருமான் யோகத்தில் இருந்தருளினன். அப்பொழுது இன்பச் சுவைக்கு அதிதெய்வமாகிய மன்மதன் இருந்த போதும் உலகில் இன்ப வேட்கை இல்லாது நலியலாயிற்று. இதைக் கண்ணுற்ற திருமால் மன்மதனை ஏவிச்சிவ பெருமான் மீதுமலர்க்கணை தொடுக்குமாறு தூண்டினான். சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை நோக்க அவன் எரிந்து சாம்ப லானான். அதன் பின்னர் சிவபெருமான் மலை அரையன் பெற்ற உமையம்மையைக் கூடி உலகத்து உயிர்களுக்கு இன்பச் சுவையை அளித் தருளினான். இந்த நிகழ்ச்சியினையும் இவர்கள் உணரார்.

இறைவன் உலகினுக்கு உயிராய் நின்றான் என்று 68-வது பாடலில் கூறப் பட்டது. அதனை இவ்விரண்டு நிகழ்ச்சிகளால் ஆசிரியர் விளக்கினார்.

படைப்பு ஆதித் தொழிலும் பத்தர்க்கு அருளும்பா வனையும் நூலும்
இடப்பாகம் மாத ராளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானாம் அதுவும் முத்தி அளித்திடும் யோகும் பாசம்
துடைப்பானாம் தொழிலும் மேனி தொடக்கானேல் சொல் ஒணாதே, 74

படைப்பு முதலிய ஐந்தொழில்கள் இயற்றுவதற்கும், மெய்யடியார்க்கு அருளுதல் பொருட்டு இறைவன் செய்யும் பாவனையாகிய ஊன நடனம் இயற்றுவதற்கும் ஆரணம் ஆகமங்களாகிய நூற்களை இயற்றுவதற்கும் உயிர்களுக்கு இன்பம் தருவதற்காக உமையம்மையோடு இயைந்திருக்க வேண்டுதற்கும், உயிர்களுக்கு வீடுபேறு அளிக்க யோகத்தில் இருந்து காட்ட வேண்டுதற்கும், உயிர்களின் பாசத்தைத் துடைப்பதாகிய தொழிலுக்கும் இறைவனுக்கு உருவத் திருமேனி இன்றியமையாததாயிற்று.

மாதவச் சிவஞான முனிவர் படைப்பாகிய ஆதி தொழில்'என்று வாதுள ஆகமத்தில் கூறிய செய்திகளையும் தமது உரையில் விரிவாகச் சொல்லுவது மிக்க நயமுடையது.

உருமேனி தரித்துக் கொண்டது என்றலும் உரு இறந்த
அருமேனி அதுவும் கண்டோம் அரு–உரு ஆன போது
திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே. 75

இறைவனுக்கு உருவத் திருமேனி உண்டு என்பதனையும், அதனை அவனாகவே எடுத்துக் கொள்ளுவான் என்பதையும் இதுவரையில் சொன்ன பாடல்களில் கண்டோம். உருவம் என்பது பருவடிவும், அருவம் என்பது அதனது நுட்பத்தையும் குறிப்பன. ஆதலால் உருவத் திருமேனி உண்டு என்ற அளவிலே உருவைக் கடந்த அருவத் திருமேனியும் இறைவனுக்கு உண்டு என்பதை அறிந்தோம். இவை இரண்டும் உள்ளனவாகையால் இரண்டுக்கும் பொதுவாகிய அருஉருவத் திருமேனியும் இறைவனுக்கு உண்டு என்பது பெறப்படும். எனவே இறைவன் இம்மூன்று திருமேனிகளும் உடையவன் என்பது விளங்கும். அவையும் மாயையினால் ஆகிய நம்முடைய கருமேனியைக் கழிக்க வந்த கருணையின் வடிவமே ஆகும்.

அத்துவா மூர்த்தி ஆக அறைகுவது என்னை? என்னின்
நித்தனாய் நிறைந்து அவற்றின் நீங்கிடா நிலைமையானும்
சித்துடன் அசித்திற்கு எல்லாம் சேட்டிதன் ஆதலானும்
வைத்ததாம் அத்துவாவும் வடிவுஎன மறைகள் எல்லாம். 76

"இறைவனின் திருமேனி மாயையின் வடிவம் அன்று அருள் வடிவமே ஆகும் எனின் ஆகமங்கள் யாவும் இறைவனை அத்துவாமூர்த்தி என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும் " என்று சிலர் வினவக்கூடும். இறைவன் என்றும் உள்ளவன். ஆயினும் ஆறு அத்துவாக்கள் உள்ளும் நிறைந்து அவற்றை விட்டு நீங்காத நிலைமை உடையவன். அறிவுடைப் பொருள் அறிவற்ற பொருள் ஆகியவற்றையும் உடனாய் நின்று இயக்குபவன். இவ்வாறு ஒன்றாயும், உடனாயும், வேறாயும் நிற்கும் இறைவ்னை அத்துவா மூர்த்தி என்று ஆகமங்கள் ஏற்றுரையாகக் கூறின.

இறைவனுடைய அத்துவா மூர்த்தம் அவனுடைய உபசாரத் திருமேனி என்று வழங்கப்பெறும்.

மந்திரம் அத்து வாவின் மிகுத்து ஒரு வடிவம் ஆகத்
தந்தது என், அரனுக்கு? என்னின் சகத்தினுக்கு உபா தானங்கள்
விந்து மோ கினி மான் மூன்றாம்; இவற்றின் மேலாகி விந்துச்
சிந்தை ஆர் அதீதம் ஆன சிவசத்தி சேர்ந்து நிற்கும். 77

இறைவனுக்கு அத்துவா வடிவம் உண்டு எனக் கூறுகின்ற அருள் நூல்கள் மந்திரங்களை அவற்றுள் சிறப்பானது என்று கூறுவது ஏன்? என்ற வினா எழும். உலகிற்கு முதற்காரணங்கள் தூய மாயை தூவா மாயை, பிரகிருதி மாயை என்று மூன்றாகக் கூறப்பெறும். இவற்றுள் தூய மாயையே மிக உயர்ந்ததாகும். சிந்தையைக் கடந்த சிவசத்தி தூய மாயையைப் பொருந்தி நிற்கும்.

உபாதானம் - முதற்காரணம். விந்து - தூயமாயை மோகினி - தூவா மாயை, மான் - பிருகிருதி மாயை.

சுத்தம் ஆம் விந்துத் தன்னில் தோன்றிய ஆதலானும்
சத்திதான் பிரேரித் துப்பின் தான் அதிட்டித்துக் கொண்டே
அத்தினால் புத்தி முத்தி அளித்தலால் அரனுக்கு என்றே
வைத்த ஆம் – மந்திரங்கள் வடிவு என மறைகள் எல்லாம். 78

மந்திரங்கள் என்பன தூயமாயையில் தோன்றியன. அவை சிவசத்தியால் செலுத்தப்படுவன. மந்திரங்களைக் கணித்தவர்களுக்கு அதன் பயனைக் கொடுத்தற் பொருட்டு அவற்றையே வாயிலாகக் கொண்டு உயிர்களுக்கு இன்பமும் வீடு பேறும் அளித்தலாகிய பயனைத் தருவன. இக்காரணங் களால் ஆகமங்கள் யாவும் சிவ பெருமானுக்கு மந்திர வடிவம் சிறப்பு உரிமை உடையது என்று கூறுகின்றன.

மந்திரங்கள் பதினொன்று என்பர். அவற்றைப் பஞ்ச பிரமமந்திரம் என்றும் சடங்க மந்திரம் என்றும் வகைப்படுத்துவர். பிரேரித்தல் - செலுத்துதல், அதிட்டித்தல் - இடம் கொள்ளுதல்.

மந்திரம் அதனில் பஞ்ச மந்திரம் வடிவமாகத்
தந்திரம் சொன்னவாறு இங்கு ஏன்? எனில் சாற்றக் கேள் நீ
முந்திய தோற்றத் தாலும் மந்திர மூலத்தாலும்
அந்தம் இல் சத்தி ஆதிக்கு இசைத்தலும் ஆகும் அன்றே. 79

மந்திரங்கள் யாவற்றுள்ளும் பஞ்சப் பிரம மந்திரங்களின் வடிவையே ஆகமங்கள் சிறந்து எடுத்துக் கூறுகின்றன. அது ஏனெனில் ஏனைய மந்திரங்களுக்கு எல்லாம் முற்பட்டுத் தோன்றியதனாலும், அவற்றுக்கு மூலம் ஆதலாலும், அழிவற்ற ஆதிசத்திக்கு இம்மந்திரங்கள் உபசார வடிவமாகக் கொள்ளப்படும்.

தந்திரம் - ஆகமங்கள். அந்தமில் சத்தி ஆதிக்கு என்ற சொற்களை அந்தமில் ஆதி சத்திக்கு என்று மாற்றி வைத்துப் பொருள் கூற வேண்டும் என்று சிவஞான முனிவர் உரை வரைகிறார்.

அயன் தனை ஆதி ஆக அரன் உரு என்பது என்னை ?
பயந்திடும் சத்தி ஆதி பதிதலால் படைப்பு மூலம்
முயன்றனர் இவரே ஆயின் முன்னவன் தன்னை முற்றும்
நயந்திடும்; அவன் இவர்க்கு நண்ணுவது ஒரோவொன்று ஆமே. 80

நான்முகன் முதல் ஐந்து தனித்தனி தேவர்களை சிவபெருமானின் திருவருளால் மேற்கொண்ட வடிவங்களே என்று ஆகமங்களில் கூறப்படு கின்றமை எவ்வாறு பொருந்தும் என்று சிலர் கேட்பர். படைப்பு முதலிய ஐந்தொழில்களையும் செய்கின்ற ஐந்து சிவ சத்திகள் ஒவ்வொன்றும் நான்முகன் முதலிய ஒவ்வொருவரிடமும் பதிந்து நின்று அவர்களைச் செலுத்துகின்றனர். அந்த இயைபைக் கருதி இவ்வாறு ஆகமங்கள் ஏற்று ரையாகக் கூறுகின்றன. ஐந்தொழில்களையும் நான்முகன் முதலிய ஐவரே செய்திடுவார் என்னில் தலைவனாகிய இறைவன் வேண்டப்படான். முன்ன வனாகிய சிவபெருமானே ஐந்தொழில்களையும் இயற்றுவான். நான்முகன் முதலியோர் ஒவ்வொரு தொழிலையே இயற்றுதற்கு உரியர்.

செனனி, ரோதயித்திரி, ஆரணி என்று சத்திகள் மூன்றாகக் கூறப்படும். இவற்றுள் செனனி உலகத்தைப் படைக்கும். ரோதயித்திரி உலகத்தைக் காத்திடும். ஆரணி என்பது உலகத்தை ஒடுக்கும்.

சத்திதான் பலவோ? என்னில் தான் ஒன்றே; அநேகமாக
வைத்திடும் காரியத்தால்; மந்திரி ஆதிக்கு எல்லாம்
உய்த்திடும் ஒருவன் சத்தி போல் அரனுடையதாகி;
புத்திமுத்திகளை எல்லாம் புரிந்து அவன் நினைத்த வாறு ஆம். 81

அப்படியானால் சத்திகள் பல உளவோ எனக் கேட்பின் அவ்வாறு அன்று. சிவசத்தி ஒன்றே ஆகும். அரசனின் ஆற்றல் ஒன்றே அமைச்சர், படைத்தலைவர் முதலியோரிடத்து அவரவர் தொழிற் பாட்டுக்கு ஏற்ப வேறுபடுவது போல சிவசத்தி ஒன்றே, இறைவனை விட்டுப் பிரிதல் இன்றி உயிர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களையும் வீடுபேற்றையும் அளித்திடும். இறைவன் நினைந்தவாறே சிவசத்தி தொழிற்படும்.

சத்திதன் வடிவு ஏது? என்னில் தடை இலா ஞானம் ஆகும்;
உய்த்திடும் இச்சை செய்தி இவை ஞானத்து உளவோ? என்னில்
எத்திறம் ஞானம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி
வைத்தலால் மறைப்பு இல்ஞானால் மருவிடும் கிரியை எல்லாம். 82

சிவசத்தியின் வடிவம் யாது எனின் தடையும் வரம்பும்அற்ற ஞானமே சிவசத்தியின் வடிவமாகும். இதுவே பராசத்தி எனப்படும். இந்த ஞானம் உயிர்களின் மலநீக்கத்தின் பொருட்டு ஐந்தொழில் செய்யும் போது அதன் ஒரு கூறு திரோதான சத்தி எனப்படும். விழைவு ஆற்றலும், செயல் ஆற்றலும் என்னும் இவை இரண்டும்

ஞானத்தில் தோன்றுவனவோ எனக் கேட்பின் ஞானம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே விழைவும், செயலும் நிகழும் ஆதலால் அவை ஞானத்தினின்றும் வேறுபட்டன அல்ல என்று அறிக.

ஒன்றதாய், இச்சா, ஞானக் கிரியைஎன்று ஒருமூன் றாகி
நின்றிடும், சத்தி; இச்சை உயிர்க்கு அருள் நேசம் ஆகும்;
நன்றுஎலாம், ஞான சத்தி யான், நயந்து அறிவன்; நாதன்
அன்று, அருட் கிரியை தன்னால் ஆக்குவன், அகிலம் எல்லாம், **83**

சத்தியின் வடிவு தடையிலா ஞானம் என்று முந்திய பாடலில் குறிக்கப் பட்ட பராசத்தி ஒன்றே ஆகும். ஆயினும், அதன் செயல்பாடு பற்றி அதனை மூன்று என்றும் வகைப்படுத்திக் கூறுவர். அவை முறையே விழைவு, அறிவு, ஆற்றல் என்று பெயர் பெறும். அதன் மேலும் பல திறப்படக் கூறுவதும் உண்டு. இவற்றுள் விழைவு ஆற்றல் என்பது இறைவன் உயிர்களைப் பற்றி நின்ற மலத்தை நீக்கிச் சிவத்தை அளிப்பதற்காகக் கொண்ட கருணையே ஆகும். இறைவனுடைய ஞானசத்தி என்பது உயிர்களை உய்விப்பதற்கு உரியனவற்றைத் திருவுளக் குறிப்பால் அறிதலாகும். அருளில் இருந்து மாறுபடாத தனது செயலாற்றலால் இறைவன் உயிர்களை உய்விப்ப தற்கான யாவற்றையும் நினைந்த போதே நினைந்தவாறே செய்வான்.

நன்மை - நன்றெலாம் எனக் கூறப்பட்டது. அதாவது உயிர்களுக்கு நன்மை செய்யும் உத்தி.

சீவனும், இச்சா ஞானக் கிரியையால், சிவனை யொப்பன்
ஆவன்என் றிடின்,அ நாதி மலம்இவற் றினைம றைக்கும்;
காவலன் இவன்செய் கன்மத் தளவினில் கொடுப்பக் காண்பன்;
பாவிஆம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற்று ஆகும். **84**

"உயிர்களுக்கும் விழைவுஆற்றல், அறிவு ஆற்றல், செயல் ஆற்றல் என்ற மூன்றும் உள என்று கூறப்படுகிறது. ஆதலால் அம்மூன்று ஆற்றல் களும் உடைய சிவனை ஒத்தனவே உயிர்களும் என்று கொள்ளலாமோ" என்று சிலர் வினவுவர். அவ்வாறு அன்று; உயிர்களுக்கும் இம்மூவகை ஆற்றலும் உளவேனும் அவற்றை உயிர்களைத் தோற்றமில் காலந்தொட்டே பற்றியுள்ள ஆணவ மலம் முற்றிலும் மறைத்து நிற்கும். இது உயிர்களின் கேவல நிலையில் நிகழ்வதாகும். உயிர்களின் வினைப்பயன் களுக்கு ஏற்ப உடல், கருவி முதலியவற்றை இறைவன் கொடுப்ப உயிர்கள் சகல நிலையை அடையும். அப்போது வினைப்பயனுக்கு ஏற்ற விழைவு, அறிவு, ஆற்றல் ஆகியவற்றை உயிர்கள் பெறும். இறைவன் திருவரு ளால் வீடு பேற்றையும் உயிர்கள் அடையும். எனவே சுத்த நிலையிலும் இறைவன் கொடுப்பவே உயிர்கள் கொள்ளும். இதுவே உயிரின் பண்பு ஆகும்.

ஞானமே ஆனபோது சிவன், தொழில் ஞானம், ஒக்கின்
ஈனம்இல் சதாசி வன்;பேர் ஈசன்ஆம், தொழிலது ஏறின்;
ஊனமேல் கிரியை வித்தை ; உருத்திரன், இலயம் போகம்
ஆனபோர் அதிகா ரத்தோடு அதிகர ணத்தன் ஆமே. 85

மேலே கூறப்பட்ட இறைவனின் மூன்று சத்திகளுள்ளே இச்சாசத்தி என்னும் திருவருள் எப்போதும் எவ்விடத்தும் ஒரே தன்மை உடையதாய் விளங்கும். ஞான சத்தியும் கிரியா சத்தியும் என்னும் இவை இரண்டும் தனித்தும் ஒத்தும், கூடியும் குறைந்தும் விளங்குகின்ற நிலையில் ஒவ்வொன்றும் தனித்தனிப் பெயர் பெறும். முற்றிலும் அறிவே வடிவாக இறைவன் நிற்கின்ற நிலை சிவம் என்று பெயர் பெறும். முழுவதும் ஆற்றல் வடிவாகச் செயல்படும்போது சத்தி என்று பெயர் பெறும். ஞானமும் கிரியையும் ஆகிய இரண்டும் ஒத்து நிற்கின்ற நிலை சதாசிவம் எனப்படும். செயல் ஆற்றல் மிகுந்துஞானம் குறைந்து செயல்படும் போது மகேசுவரம் என்ற பெயர் பெறும். செயலாற்றல் குறைந்து அறிவு ஆற்றல் மிகுந்த நிலை சுத்தவித்தை என்று பெயர் பெறும். இந்த நிலைவேறுபாடுகள் ஐந்தும் இலயம், போகம், அதிகாரம் என்று மூன்றாகக் கூறப்பெறும்.

இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்றும் இறைவனின் செயல் வேறுபாட்டுக்கு ஏற்ப மூன்றாகக் கூறப்படும் எனினும் அதனால் அவன் விகாரம் அடைவான் அல்லன் என்பது பின்வரும் பாடல்களில் ஆசிரியரால் விளக்கப்படுகிறது.

வித்தையோடு, ஈசர், சாதாக் கியம், சத்தி, சிவங்கள் ஐந்தும்
சுத்ததத் துவம்;சி வன்தன் சுதந்திர வடிவம் ஆகும்;
நித்தம் என்று உரைப்பர்; காலம் நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர், முற்பிற் பாடு; வருவித்தார், கருமத்தாலே. 86

சுத்தவித்தை, மகேசுவரர், சதாசிவர், சத்தி, சிவம் ஆகிய இவ்வைந்தும் சுத்ததத்துவங்கள் என்றும் கூறப்பெறும். இவை யாவும் சிவபெருமான் தன்வயமாகவே நின்று ஏற்றுக் கொள்ளும் திருவடிவங்கள் ஆகும். அன்றியும் இவை என்றும் அழியாதவை என்றும் பெரியோர் கூறுவர். சுத்த தத்துவமாகிய இவை ஐந்தும் காலம் என்னும் தத்துவம் தோன்றுவதற்கு முன்பே தோன்றியனவாகும். எனவே அவை காலதத்துவத்தைக் கடந்தவை என்று கொள்ளப்பெறும். ஆதலால் இவற்றுக்குக் கால வயப்பட்ட முன் பின் என்று வரிசை முறை கூறப்படுவதில்லை. எனினும் ஞானம் கிரியை ஆக இரண்டு சத்திகளும் செயற்படும் முறைபற்றி முன்பின்னாகக் கூறினர்.

சாதாக்கியம் - சதாசிவம்.

ஒருவனே,இராவ ண ஆதி பாவகம் உற்றாற் போலத்
தருவன்,இவ் உருவம் எல்லாம்; தன்மையும் திரியான் ஆகும்;
வரும்வடிவு எல்லாம், சத்தி சத்திதான் மரமும் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச், சிவத்தினோடு இயைந்து நிற்கும், 87

நாடகத் தொழில் வல்லவன் ஒருவன் இராவணன் போன்ற பல வேடங்களைத் தாங்கி நாடகங்களில் நடித்தல் கூடும். ஆயினும் அவன் பூண்ட வேடங்கள் யாவும் அவனுடைய இயல்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தா. அதுபோலவே இறைவனும் உயிர்களிடத்துக் கொண்ட பேரருளால் அருவம், உருவம், அருஉருவம் என்னும் வடிவங்களைத் தான் நினைந்தவாறே தரித்துக் கொள்வான். ஆயினும் அவனுடைய தன்மையி லிருந்து சற்றேனும் திரிவான் அலன். இறைவன் கொள்ளுகிற வடிவங்கள் யாவும் சத்தியின் வடிவங்களே. அச்சத்தி, மரமும் அம்மரத்தின் உள்ளே உள்ள வயிரமும் ஒன்றோடு ஒன்று கூடி நீக்கமின்றி நிற்றல் போலச் சிவத்தினோடு இயைந்து நீக்கமின்றி நிற்கும். காழ்ப்பு - மரத்தின் வயிரம். இருமை என்றது இரண்டு என்ற எண்ணைக் குறித்தது.

பொன்மை, நீல ஆதி வன்னம் பொருந்திட, பளிங்கு அவற்றின்
தன்மையாய் நிற்கு மாபோல், சத்திதன் பேதம் எல்லாம்
நின்மலன் தானாத் தோன்றி நிலைமைஒன் றாயே நிற்பன்;
முன்அருட் சத்தி தன்பால் முகிழ்க்கும்; தான் முளையான் அன்றே. 88

பொன்மை, நீலம் முதலிய வண்ணங்களைப் பொருந்திய போது பளிங்கு அந்தந்த நிறங்களின் தன்மையையே கொண்டு வேற்றுமை இன்றி நிற்பது போல, இறைவனும் தன் சத்தியின் வேறுபாடுகள்யாவும் தானாகவே தோன்றுமாறு வேற்றுமை இன்றி நிற்பன். அவன் தோன்றும் போதும் அருட்சத்தின் இடமாகவே தோன்றுவானே அன்றித் தானாக வேறு தோன்றுவான் அல்லன்.

பொன்மை - நீலம் என்பன இங்கு நம் முன்னோர்கள் அடிப்படை நிறங்களாகக் கொண்ட ஐந்து நிறங்களைக் குறித்து நின்றன. "நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய் எம்பெருமான்" என்று திருவாசகம் சிவபுராணத்தில் அருளியதையும் இங்கு நினைவு கூர்க.

சத்தியும் சிவமும் ஆய தன்மை,இவ் உலகம் எல்லாம்
ஒத்துஒவ்வா ஆணும்பெண்ணும் உணர்குண குணியும் ஆகி,
வைத்தனன்; அவளால் வந்த ஆக்கம்,இவ் வாழ்க்கை எல்லாம்;
இத்தையும் அறியார், பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார். 89

இவ்வுலகம் முழுவதும் வாழ்வதற்குக் காரணம் இறைவன் சத்தியும் சிவ முமாக வடிவு கொண்டு அருளியமையே ஆகும். உயிர்த் தொகைகள் யாவும் ஆணும் பெண்ணும் என்று இரு வகைப்பட்டன. இவை தம்முள் ஒரு வகையால் ஒத்தும், ஒருவகையால் ஒவ்வாமலும் விளங்குவன. குணமும் குணத்தை உடைய பொருளுமாக இறைவனே வாழவைத்தவன். உயிர்க ளுக்கு இத்தகைய ஆக்கம் நிறைந்த வாழ்க்கை சிவத்தோடு இயைந்த சத்தி யினால் அருளப்பட்டது ஆகும். இதனை அறியாதவர்கள் பீடமும் லிங்க முமாக விளங்குகின்ற திருமேனி சத்தியும் சிவமும் ஆகும் என்பதனையும் உணர்ந்திலர்

சிவன் – அரு உருவும் அல்லன்; சித்தினோடு அசித்தும் அல்லன்;
பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும் அல்லன்;
தவம்முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன்; தானே
இவைபெற இயைந்தும், ஒன்றும் இயைந்திடா இயல்பி னானே. 90

சிவபெருமானுடைய தன்னியல்பு இன்னது என்று சொல்ல இயலாதது. சிவபிரான் அருவுமல்லன்; உருவுமல்லன்; அருஉருவுமல்லன். அவன் அறிவுடையதாகிய சித்துப் பொருளும் அல்லன். அறிவற்றதாகிய அசத்தின் வடிவினனும் அல்லன். சிவபிரான் படைப்பு முதலிய ஐந்தொழில்களும் இயற்றுவானும் அல்லன். உயிர்களுக்கு அறிவுறுத்துவதற்காக யோக வடிவம், போக வடிவம் ஆகியவற்றைத் தரிப்பவனும் அல்லன். சிவபெருமான் உயிர்களின் பொருட்டுப் பொது இயல்பாகிய இவற்றைப் பொருந்தி நின்றானாயினும் உண்மையில் அவற்றோடு சிறிதும் பொருந்தாத தன்னியல்பு உடையவனாவான்.

இறைவனுடைய இயல்பு உண்மை இயல்பு. பொது இயல்பு என்று இரண்டு வகையாகக் கூறப் பெறும். அவை முறையே சொரூப இலக்கணம் என்றும், தடத்த இலக்கணம் என்றும் வழங்கும். உயிர்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு இறைவன் தானாக மேற்கொள்ளுகிற வடிவங்களைப் பற்றி மட்டிலுமே இதற்கு முன் ஆசிரியர் கூறினார். அது இறைவனது தடத்த இலக்கணம் எனப்படும். சிவபெருமானது உண்மை இயல்பு என்ற சொரூப இலக்கணம் இந்த நூலின் உண்மை அதிகாரத்தில் ஆசிரியரால் விளக்கப்பெறும்

இரண்டாம் நூற்பா

உலகுஎலாம் ஆகி, வேறுஆய், உடனும்ஆய், ஒளிஆய், ஓங்கி,
அலகுஇலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய், இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றித் தானே
நிலவுசீர் அமலன் ஆகி, நின்றனன், நீங்காது எங்கும், 91

சிவபெருமான் கலப்பினால் உலகு உயிர்கள் அனைத்திலும் தானேயாய் நின்றனன். பொருள் தன்மையால் உலகு உயிர்களுக்கு வேறாகி நின்றனன். உயிர்க்கு உயிராக இருந்து அவற்றைச் சிவபெருமானே இயக்குகின்றான். ஆகையால் அவற்றின் உடனாய் நின்றனன். அந்தந்த உயிர்களின் வழி ஓங்கி நிற்பதாகிய ஒளி நிறைந்த சத்தி வடிவமாகவும் நின்றனன். சிவபிரானது ஆணையினால் வரும் இருவினைகளுக்கு ஏற்ப எண்ணற்ற உயிர்கள் ஐந்தொழிலுக்கு உட்பட்டுப் பிறந்தும், வாழ்ந்தும், இறந்தும் வருகின்ற காலத்துத் தானே தலைவனாய் இருந்து செலுத்துவான். இத்தகைய தன்மை உடைய உலகும் உயிர்களும் அவனை விட்டு நீங்காமல் நிற்பினும் அவற்றின் தன்மை தனக்கு எய்முதல் இன்றித் தான் இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவனாக நின்றனன். எங்கும் நீங்காது நிறைந்தும் நின்றனன்.

"அநாதி முத்த சித்துரு" (பாடல் 21) என்று ஆசிரியரால் முன்னர்க் கூறப்பட்ட இறைவன் எதிலும் தோய்வின்றித் தானே ஒளி வடிவாய் நிற்கின்ற தன் உண்மை நிலையில் சிவம் எனப்படுவான். உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய் உயிர்களின் வழி நிற்கும் தன்மையில் சத்தி எனப் படுவான். இவ்வாறு ஒருமையில் இருமை தாதான்மியம் என்று பெயர் பெறும். இறைவன் ஐந்தொழில் செய்யும் தன்மையில் பதி எனப் பெயர் பெறுவான். இவ்வியல்பு சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளது. அதனை உணர்த்துவதற்கே இந்நூலாசிரியர் இவ்வாறு பகுத்து ஓதினார் என்பது சிவஞான முனிவரின் உரை விளக்கம். சிவஞான போதத்தின் இரண்டாவது நூற்பாவின் கருத்து இந்நூலாசிரியரால் இப்பாடலில் கூறப்பட்டது. அது போலவே இப்பாடலும் நான்கு கூறுகளை உள்ளடக்கியது.

முதல் அதிகரணம்

ஒன்று என மறைகள் எல்லாம் உரைத்திட, உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவது என்னை? என்னின்,
அன்று; அவை பதிதான் ஒன்றுஎன்று அறையும்; அக்கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல நின்றனன், சிவனும் சேர்ந்தே. 92

மறைகள் யாவும் ஆன்மா ஒன்றே என்று கூறுகின்றன. அவ்வாறு இருக்க உயிர்கள் எண்ணிறந்தன என்றும், இறைவன் அவற்றோடு ஒன்றி நிற்பான் என்றும் கூறுவது பன்மைக் கருத்து அன்றோ. இது பொருந்துமோ என்று சிலர் வினவுவர். அவ்வாறு அன்று; மறைகள் எல்லாம் இறைவன் ஒருவனே என்று கூறுகின்றன. உயிர்களை ஒன்று என மறைகள் கூறிற்றல. உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்கள் யாவற்றுடனும் ஒன்றாகியும், அவற்றிலிருந்து வேறாகியும் அவற்றின் உடன் இருந்து இயக்குவதாயும் விளங்கும் அகர உயிர் போலச் சிவபெருமானும் உலகு உயிர்களோடு சேர்ந்து நின்றனன்.

மறைகள் யாவும் ஆன்மா ஒன்றே எனக் கூறியதற்கு உட்கிடை இறைவன் ஒருவனே என்பதாகும். 'அகர முதல எழுத்து எல்லாம்' எனத் தொடங்கும் திருக்குறளும் 'அகர உயிர் போல அறிவாகி' எனத் தொடங்கும் திருவருட்பயன் பாடலும் இங்கே நினையத்தக்கன.

உருவொடு கருவி எல்லாம் உயிர்கொடு நின்று வேறாய்
வருவது போல, ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன்;
தரும், உயிர் அவனை ஆகா, உயிரவை தானும் ஆகான்;
வருபவன், இவை, தான் ஆயும் வேறும் ஆய் மன்னி நின்றே. 93

உயிர் உடம்பையும், ஐம்பொறி முதலிய கருவிகளையும் கொண்டு உடம்பின் உடனாக நிற்பதே எனினும் உடம்பிற்கும் உயிர்க்கும் வேறுபாடு உண்டு. உடம்பைச் செலுத்துவது உயிரே. அதுபோல உயிர்களைச் செலுத் துபவன் இறைவனே. எனினும் உயிர்கள் இறைவனாகா; இறைவனும் உயிர் களாக மாட்டான். இறைவன் அவ்வுயிர்களோடு கலந்து நிற்பான். எனினும் அவற்றிற்கு வேறாகவும் இருப்பான்.

முந்திய பாடலாலும் இப்பாடலாலும் இறைவன் உயிர்களோடு ஒன்றாயும் உடனாயும் வேறாயும் நிற்பான் என்பது ஆசிரியரால் விளக்கப் படுகிறது. மற்றைச் சமயத்தவர் பேதம் (வேறுபாடு) பேதா பேதம் (ஒரு வகையால் வேறுபட்டும் ஒரு வகையால் வேறுபடாதும் இருப்பது) அபேதம் (வேறுபாடு அற்றது) என்ற மூன்றில் ஒன்றையே கொள்வர். சைவ சித்தாந்தம் ஒன்றாய் உடனாய் வேறாய் என்ற மூன்று கொள்கைகளையும் ஒரு சேர ஏற்றுக் கொள்ளும்.

உடம்பும் உயிரும் தமக்குள் வேற்றுமை இன்றி நிற்கின்றன. அவ்வாறே இறைவன் உயிர்களோடு ஒன்றாய் நிற்பான் என்பது விளக்கப்பட்டது.

உடம்பும் உயிரும் ஒற்றித்து நின்றாலும் உடம்பு வேறு உயிர் வேறு என்பது தெளிவாக அறியப்படுகிறது. உடம்பு கண்ணுக்குப் புலனாவது. அதற்கு என அறிவற்றது. அழியும் இயல்பு உடையது. இதற்கு மாறாக உயிர் கண்ணுக்குப் புலனாகாதது. தனக்கென ஓர் அறிவுடையது அழிவற்றது. இவ்வாறு இறைவன் வேறாய் நிற்பது விளக்கப்பட்டது.

உயிர் வேறு உடம்பு வேறு எனினும் உயிரோடு கூடினால் அன்றி உடம்புக்குச் செயற்பாடு இல்லை. அது போல இறைவனும் உயிரோடு உடனாய் நின்று செலுத்தினால் அல்லது உயிருக்கும் செயற்பாடு இல்லை. இவ்வாறு இறைவன் உடனாய் நிற்பது விளக்கப்பட்டது.

இக் கருத்தின் விரிவு இந்நூலின் இனிவரும் பகுதிகளில் விளக்கமாகக் கூறப்படும் என்பது பற்றி "ஈண்டு விரித்திலர்" என்றார் சிவஞான முனிவர்.

இரண்டாம் அதிகரணம்

இருவினை இன்பத் துன்பத்து, இவ்வுயிர், பிறந்து இறந்து
வருவது போவது ஆகும்; மன்னிய வினைப்பலன்கள்
தரும், அரன் தரணியோடு தராபதி போலத் தாமே
மருவிடா, வடிவும் கன்ம பயன்களும்; மறுமைக் கண்ணே. 94

முற்பிறவிகளில் உயிர்கள் ஈட்டிய இருவினைக்கு ஈடாக இந்தப் பிறவி யில் இன்ப துன்பங்களை நுகரும். அவ்வாறு நுகரும் காலத்து மேலும் வினைகளைச் செய்யும். இவ்வாறு மேலும் மேலும் வினையை ஈட்டுகிற உயிர்கள் இவ்வுலகத்தில் பிறந்தும் இறந்தும் துறக்க நிரயங்களில் சென்றும் மீண்டும் வரும். வினையின் பயன்களை உயிர்களுக்கு மருத்துவரைப் போலவும் மன்னனைப் போலவும் சிவபெருமானே தனது ஆணையால் கூட்டுவிப்பான். உடம்பும் வினைப்பயன்களும் அறிவற்றன. ஆதலால் அவை தாமாகவே மறுமையில் உயிரை வந்து பொருந்தா.

தரணம் - கடத்தல், நோயைக் கடப்பிப்பதனால் மருத்துவனைத் தரணி என்றார். இந்நூலின் 125 - வது பாடலில் மருத்துவன் நோய் தீர்க்கும் முறைமை விரித்துக் கூறப்படும். தராபதி - அரசன்.

இருவினை என்னை; இன்பத் துன்பங்கள் இயல்பது? என்னின்,
ஒருதன்மை இயல்புக்கு உள்ளது; ஒருவனுக்கு இரண்டு செய்தி
வருவது என்? மலரும் தீயும் மருவலின், வாசம் வெம்மை
தருவதுஎன், நீர்என் செய்து? தான் இயல்பு ஆகும் அன்றே. 95

"உலகில் ஒருவனுக்கு இன்பமும் துன்பமும் வருவதற்குக் காரணம் இருவினையின் பயனே என்பது எவ்வாறு பொருந்தும். இன்பமும் துன்பமும் இயல்பாக வருவனவே யன்றி அவற்றுக்கு ஒரு காரணம் கூறுவானேன்" என்று சிலர் வினவுவர். ஒரு பொருளின் இயல்பு என்பது ஒரு தன்மையாக இருப்பதன்றி இரு வேறுபட்ட தன்மைகள் ஒரு பொருளுக்கு இருத்தல் இயலாது. அவ்வாறு ஒருவனுக்கே இரண்டு வேறுபட்ட நுகர்வுகள் வருவனவாயின் அவை ஓர் காரணம் பற்றியே வரும்.

நீர் இயல்பாக மணமற்றது. குளிர்ந்தது. நீரோடு மலர் சேர்ந்தால் அந்நீர் மணம் உடையதாகிறது. நீரோடு நெருப்புச் சேர்ந்தால் அது வெப்பம் உடையதாகிறது. இதனால் நீரின் வினைக்கு ஏற்ப மணமும் வெப்பமும் வந்தன என்று கூற முடியுமா. இவை இயல்பு ஆவது போல இன்பமும் துன்பமும் உடம்புக்கு இயல்பே ஆம் என்று அவர்கள் கூறுவர். இதனை அடுத்த பாட்டில் மறுக்கின்றார்.

தன்இயல்பு ஒழிய, பூவும் தழலும் வந்து அணைய, நீரின்
மன்னியது இரண்டு செய்தி; வரும்இரு வினையி னாலும்
உன்னிய இன்பத் துன்பம் உறும், உயிர்; உணர்வு இல்லாத
துன்னிய அசித்தை இன்பத் துன்பங்கள் சூழ்ந்தி டாவே. 96

நீருக்கு இயல்பாய் உள்ள குளிர்ச்சி மாறிப் பூவும் நெருப்பும் வந்து பொருந்துவதால் அதற்கு மணமும், வெப்பமும் செயற்கையாக உண்டாயின. இன்ப துன்ப உணர்ச்சிகள் அறிவுடையதாகிய உயிருக்கே உளவாகும். அறிவற்ற உடலை இன்பமும் துன்பமும் பொருந்தும் என்பது கூடாது.

இம்மையின், முயற்சி யாலே இருநிதி ஈட்டி, இன்பம்
இம்மையே நுகர்வர்; செய்தி இலாதவர் பொருளும் இன்றி
இம்மையே இடர்உ ழப்பர்; வேறுஇரு வினையது உண்டேல்;
இம்மையின் முயற்சி இன்றி எய்திட வேண்டும், இங்கே. 97

இப்பிறவியிலேயே நல்ல முயற்சி உடையவர். அதனால் பெரும் பொருள் ஈட்டி அதனைக் கொண்டு இம்மையிலேயே இன்பம் துய்ப்பர். ஆள்வினை இல்லாதவர் முயற்சி இல்லாமையினாலே பொருளும் இன்றி இப்பிறவியிலேயே துன்பத்தில் உழல்வர். இதுதான் நியதி. இருவினை உண்டு எனில் இம்மையிலே எவ்வித முயற்சியும் இன்றிப் பெரும் பொருள் ஈட்டுதல் வேண்டும். அவ்வாறு யாரையும் கண்டதில்லை. எனவே செல்வத்துக்கும் இன்பத்துக்கும் முயற்சியே காரணமாகும். இருவினை காரணமாகாது என்று அவர்கள் மீண்டும் கூறுகிறார்கள். இதனை அடுத்த பாட்டில் மறுக்கின்றார் ஆசிரியர்.

செய்தி இல்லாதவர் - செயற்பாடு அற்றவர்கள். அதாவது முயற்சியற்றவர்கள்.

இருவினைச் செயல்காண்; இம்மை இரும்பொருள் இன்பம் வேண்டி
வருவினை செய்யுங் காலை, மடிவரும்; மடியும் இன்றித்
தருவினை அதனில், அத்தம் தான் அறும்; துயரும் தங்கும்;
ஒருவினை செய்யா தோரும் உடையர் இவ் வுலகத் துள்ளே. 98

இப்பிறவியில் மிகுந்த பொருளை ஈட்டி இன்பம் பெறுதல் வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒருவன் செயலாற்றும் போது அவனுக்குச் சோம்பல் வருவதைக் காண்கிறோம். அந்தச் சோம்பலினால் அவனுடைய முயற்சியில் தளர்வு வரும். அதுவும் இன்றி முயற்சி பயன்தராமல் பொருள் இழப்பு நேர்வதையும் காண்கிறோம். அதனால் அவன் துயர் படுவதையும் காண்கிறோம். இதற்கு மாறாக எந்த முயற்சியும் செய்யா தார்க்கும் செல்வம் மிகுவதையும் காண்கிறோம். இவற்றால் பொருள் ஈட்டுவதற்கும், இன்பம் துய்ப்பதற்கும் கண்ணுக்குப் புலப்படாத வேறு ஒரு காரணம் உண்டு என்பதை உய்த்து உணர்கிறோம். அதுவே இருவினைப் பயன் என்று அறிக.

உடையார் - செல்வம் உடையார். மடி - சோம்பல் ஆகூழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள், போகூழால் தோன்றும் மடி (குறள் 371) என்பதனை இங்கு நினைவு கூர்க.

பேறுஇழவு இன்ப மோடு, பிணிமூப்புச் சாக்காடு என்னும்
ஆறும்முன் கருவுள் பட்டது; அவ்விதி அனுப வத்தால்
ஏறிடும்; முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது
தேறுநீ — இனிச்செய் கன்மம் மேல்உடற் சேரும், என்றே. 99

இந்தப் பிறவியில் நிகழ்கின்ற நற்பேறுகளும், இழப்புகளும், இன்பமும், துயரமும், மூப்பினால் வரும் நரை திரையும், இறப்பும், என்னும் இவை ஆறும் ஒரு உயிர் கருவாய்க் கிடந்த போதே அதற்கு உரியனவாக அமைந்து கிடந்தன. அவையே பின்னர் அவ்வுயிர் வாழும் காலத்து அதனை வந்து பொருந்தும். முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயனே இங்குக் கூறப்பட்ட ஆறனுக்கும் காரணமாக அமைந்தவை என்பதைத் தேறித் தெளிக. இந்தப் பிறவியில் மீண்டும் ஈட்டப்படும் வினைகள் அவ்வுயிரால் இனிமேல் எடுக்கப்படும் பிறவிகளில் இந்த ஆறுவகை நுகர்வுகளுக்கும் காரணமாக அமையும்.

மாதவச் சிவஞானமுனிவர் சிவஞான சித்தியார் பொழிப்புரையில் மூப்பு என்ற சொல் உயர்வையும், சாக்காடு என்ற சொல் இழிவு என்ற பொருளையும் தருவன என்று உரை வரைந்துள்ளார். அவ்வாறு உரை வரைந்தமைக்கு நான்கு காரணங்கள் காட்டி அமைதியும் கூறினார்.

அவருடைய உரை வருமாறு: "ஈண்டு மூப்பு என்றது உயர்ச்சியின் மேற்று. அது விண்ணோர்க்கு எல்லாம் மூப்பாய் என்பதனாலும், மூத்த திருப்பதிகம் என்பதனாலும் உணர்க.

சாக்காடு போறலின் இழிவைச் சாக்காடு என்று உபசரித்தார்.

ஏனை மூப்புச் சாக்காடுகள் பேறு இழவு இன்பம் பிணி போலத் தம்முள் மறுதலை ஆகாமையானும் அவற்றின் மறுதலைப் பொருள்களை உடன் கூறாமையானும், இவற்றுள் அடங்குதலின் வேறு கூற வேண்டாமையானும், காலம் பற்றி ஒரு தலையான் வரும் மூப்பின்கண் ஐயம் அறுத்தல் வேண்டா மையானும், அவற்றை உடன் வைத்து எண்ணி உரை செய்தல் பொருந் தாமை அறிக"

உடற்செயல் கன்மம்; இந்த உடல்வந்த வாறு ஏது என்னின்
விடப்படும் முன் உடம்பின் வினை இந்த உடல் விளைக்கும்;
தொடர்ச்சியால் ஒன்றுக்கு ஒன்று தொன்று தொட்டு அநாதி – வித்தின்
இடத்தினின் மரம், மரத்தின் வித்தும் வந்து இயையு மாபோல். 100

இங்கு ஒரு வினா எழும். கன்மம் எனும் வினையைச் செய்வதற்கு உடல் இன்றியமையாது வேண்டப்படும். எனவே இந்த உடல் எவ்வாறு வந்தது என்பதே வினா. முந்திய பிறப்பில் செய்யப்பட்ட வினைகள் இந்தப் பிறவியில் வருகின்ற உடம்பைத் தோற்றுவிக்கும். அவ்வாறே இந்தப் பிறப்பில் செய்யப்பட்ட வினைகளுக்கு ஏற்ப அடுத்த பிறவி அமையும். சங்கிலித் தொடர் போல ஒன்றுக்கு ஒன்று தொன்று தொட்டுத் தோற்றமில் காலம் தொடங்கி இவ்வாறு வரும். வித்திலிருந்து மரமும் மரத்திலிருந்து வித்தும் தோன்றுவது போன்றது இத் தொடர்ச்சி

இவ்வாறு வருவது பிரவாக அநாதி என்று கூறப்படும். அதாவது ஓடுகின்ற வெள்ளநீர் இடம் பெயர்ந்து கொண்டே இருப்ப அந்த இடத்தை மேலும் வரும் நீர் நிரப்பியது போன்ற தொடர்ச்சி. இவ்வாறு விடை யிறுப்பதால் வரம்பின்றி ஓடி அநவத்தை என்னும் குற்றம் நிகழும் என்று கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் காணப்படும் பரு உடம்பிற்கு வேறாக நுண் உடம்பு (சூக்கும உடம்பு) ஒன்று உண்டு ஆகையால் என்று சிவஞான முனிவர் விளக்குகிறார்.

முன்செயல் விதியை இந்த முயற்சியோடு அனுபவித்தால்
இச்செயல் பலிக்குமாறு என்? இதம் அகிதங்கள் முன்னர்
அச்செயலானால்; இங்கும் அவைசெயின் மேலைக்கு ஆகும்;
பின்செயாது அனுபவிப்பது இன்று பின் தொடரும், செய்தி. 101

முந்திய பிறவிகளில் செய்த வினையின் பயனே இந்தப் பிறவியில் அனுபவிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆகவே இந்தப் பிறவியின் நுகர்வுகள் யாவும் முந்திய பிறப்பின் வினையால் தோன்றியவை என்பது பெறப்படும். அவற்றை நுகரும்போது நிகழும் செயல்கள் மீண்டும் வினையாகி அடுத்த பிறவிக்குக் காரணமாகும் என்பது எவ்வாறு என்று சிலர் வினவுவர். நலமும் தீங்கும் இயற்றிய உயிர் அடுத்த பிறவியில் அவற்றின் பயனை நுகரும் என்பதை உடன் பட்டவர்கள் .இப் பிறவியில் செய்யும் நலம் தீங்குகளும் அடுத்த பிறவிக்கும் தொடரும்

என்பதனை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். ஏனெனில் நுகர்வுகளும் செயற்பாடே ஆகும். அந்தச் செயற்பாட்டின் பயன்கள் அடுத்த பிறவியிலும் தொடரும்.

வினையின் பயன் இவ்வாறு தொடர்ந்து பிறழாது வரும் என்பதை உணர்த்துவதற்காகவே "பிற்செயாது அனுபவித்தல் இன்று' என்று எதிர்மறை வகையால் ஆசிரியர் கூறினார்.

மேலைக்கு வித்தும் ஆகி விளைந்தவை உணவும் ஆகி
ஞாலத்து வருமாபோல நாம்செயும் வினைகள் எல்லாம்
ஏலத்தான் பலமா – செய்யும் இதம் ஆகி தங்கட்கு எல்லாம்
மூலத்தது ஆகி என்றும் வந்திடும் முறைமை யோடே. 102

உலகத்திலே விளைந்த நெல்லும், கனியும் போன்றவை நமக்கு உணவாகப் பயன்படுகின்றன. அதனோடு அமையாமல் அவை அடுத்த பருவத்திற்கு வித்தாகவும் பயன்படுகின்றன. அதனைப் போன்றே தான் என்னும் முனைப்போடு செய்யப்படுகின்ற வினைகள் யாவும் எப்பொழுதும் முறையாக அவற்றின் நன்மை தீமைகளுக்கு ஏற்பப் பொருத்தமான நுகர்வுகளைத் தரும். பிற உயிர்களுக்கு இழைக்கப்படுகின்ற நலம் தீங்குகள் புண்ணியமும் பாவமும் என விளையும். அது மறு பிறவியில் இன்ப துன்பமாய் வந்து பொருந்தும். அவற்றை நுகரும் போதே மேலும் வினைகள் விளையும். இந்த முறைமை ஒரு போதும் பிறழாது வரும்.

இதம் அகிதங்கள் என்பது – இகல்மனம் வாக்குக் காயத்து
இதம் உயிர்க்கு உறுதி செய்தல்; அகிதம் மற்றது செய்யாமை;
இதம் அகிதங்கள் எல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டு இங்கு
இதம் அகிதத்தால் இன்பத் துன்பங்கள் ஈவன் அன்றே. 103

நலம் தீங்குகள் என்பன மனம் மொழி மெய்களால் உயிர்க்கு உறுதி பயப்பவற்றைச் செய்தலும் செய்யாது விடுதலுமாகும். இறைவனே ஒரு செயலின் நன்மை தீமைகளை மதிப்பிட வல்லவன். ஆகையால் அவற்றை அவனே கைக் கொண்டு அதனைச் செய்த உயிர்களுக்கு இன்பத் தையும் துன்பத்தையும் கூட்டுவான்.

இதம் அகிதம் என்ற வட சொற்களுக்கு முறையே நலம் தீங்கு என்று பொருள். இதம் என்பது உயிர்க்கு உறுதி பயப்பவற்றைச் செய்தல். அகிதம் என்பது செய்யத் தகாதவற்றைச் செய்தல் மட்டும் இன்றி செய்யத் தக்க வற்றைச் செய்யாமையுமாகும்.

இறைவன் இங்கு ஏற்பது என்னை இதம் அகி தங்கள்? என்னின்
நிறைபரன் உயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமை யாகும்;
அறம்மலி இதம் செய்வோருக்கு அநுக்கிரகத்தைச் செய்வன்;
மறம்மலி அகிதம் செய்யின் நிக்கிர கத்தை வைப்பன். 104

உயிர்கள் செய்த நலம் தீங்குகள் இரண்டினையும் இறைவனே ஏற்றுக் கொள்வான் என்பது ஏன்? எனில் எவ்விடத்தும் நீக்கம்

இன்றி நிறைந்திருக்கும் இறைவன் உயிர்களிடத்து வைத்த பேரருளினால் அவை வீடு பேறு அடைவதன் பொருட்டேயாகும். அறம் மிகுந்த நன்மைகளைச் செய்வோர்க்கு இறைவன் அருள்புரிவான். மறம் மிகுந்த தீங்கு புரிவோரை அதற்கு ஏற்ப ஒறுப்பான்.

அனுக்கிரகம் - அருள் செய்தல். நிக்கிரகம் - ஒறுத்தல்.

நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது;
அக்கிரமத்தால் குற்றம் அடித்துத் தீர்த்து அச்சம் பண்ணி
இக்கிரமத்தினாலே ஈண்டு அறம் இயற்றிடு என்பன்;
எக்கிராமத்தினாலும் இறைசெயல் அருளே என்றும். 105

இறைவன் உயிர்களை ஒறுத்தலும் கூட அவன் திருவருட் செயலே யாகும். எவ்வாறு என்னில் முறைமை தப்பிக் குற்றம் இழைத்த உயிரை ஒறுத்து இனித் தீவினை செய்யாத வண்ணம் அச்சுறுத்தி இனியேனும் அறத்தோடு பொருந்திய செயல்களைச் செய்வாயாக என்று உள் நின்று உணர்த்துவான். எம்முறையில் பார்த்தாலும் இறைவனின் செயல் என்றென்றும் அருளே ஆகும்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி வளாரினால் அடித்து தீய
பந்தமும் இடுவர்; எல்லாம் பார்த்திடின் பரிவே ஆகும்;
இந்த நீர் முறைமை யன்றே – ஈசனார் முனிவும் என்றும்? 106

தந்தையும் தாயும் தாம் பெற்றெடுத்த மக்கள் தம் சொல்படி நடக்க வில்லை எனின் அம்மக்களைச் சொல்லால் கடிந்தும், வளாரினால் அடித்தும், அதற்கும் பணியாத போது கட்டி வைத்து அவர்களைத் திருத்த முயல்வார்கள். வெளிப்பார்வைக்குச் சினத்தால் ஒறுப்பது போல் தோன்றி னாலும் ஆய்ந்து பார்க்கும் போது தாய் தந்தையர்களின் இச் செயல்கள் யாவும் தம் மக்களிடத்து அவர்கள் கொண்ட அன்பினால் விளைந்தனவே ஆகும். அவ்வாறே இறைவன் உயிர்களை ஒறுப்பது என்றென்றும் அவன் அருளால் விளைந்ததே.

செயல்களே பலத்தைச் செய்யும்; தெய்வம் வேண்டா இங்கு என்னின்
முயலும் இச்செயல்கள் இங்கே முழுவதும் அழியும்; எங்கே
பயன் அளிப்பன்? அழிந்தே பலன்களைப் பண்ணும் கெட்டே
வயல் இடும் தழையும் தின்னும் மருந்தும்பின் பலிக்கு மாபோல். 107

செய்த வினைகளே தத்தம் பயன்களைச் செய்தவர்க்குக் கூட்டு விக்கும். இதனை ஊட்டுவிப்பதற்கு ஒரு தெய்வம் வேண்டியதில்லை என்று சிலர் மறுப்பர். செயல்கள் யாவும் செய்த அப்பொழுதே அழிந்து ஒழிகின்றன. ஆதலால் வினைகளே வந்து பயனைத் தரும் என்ற கொள்கை பொருந்தாது. அழிந்த வினைகள் எவ்வாறு பயன் அளித்தல் கூடும் என்று மறுப்பாரை வினவுதல் வேண்டும். அவர்கள் மீட்டும் உவமை கூறி ஐயம் எழுப்புவர். வயலில் இட்ட தழை உரம் முழுவதும் கெடுகிறது. ஆயினும் அழிந்த தழையே பின்னர் பயிர்கள் செழித்து

வளர உரமாகிறது. ஒருவன் நோய் தீர்க்கும் மருந்தை அருந்து வானாயின் அம்மருந்து அவனால் செரிக்கப்பட்டு அழிகிறது. ஆனால் அழிந்த மருந்தே நோயை நீக்குகிறது. இந்த உவமைகள் வினைக்கும் பொருந்துவனவன்றோ. அழிந்த வினையும் பயன் தருமன்றோ என்பன அவர்கள் தொடுக்கும் வினாக்கள்.

செய்க்கு இடும் தழையும் தின்னும் திரவியம் அதுவும் போல
உய்த்திடும் செய்தி கெட்டே உறுவிக்கும் பலத்தை என்னின்
வைத்திடும் சோறும் பாக்கும் அருந்தினர் வயிற்றில் மாய்ந்தால்
மெய்த்திடும் பலம் உனக்கு; மலம் அலால் வேறும் உண்டோ ? 108

வயலுக்கு இடும் உரமும் நோய் தீர உண்ட மருந்தும் தாம் அழிந்தே பயனைத் தருகின்றன என்ற உவமை எல்லா இடத்துக்கும் பொருந்தாது. உண்ணும் சோறும் தின்னும் வெற்றிலையும் அருந்தியவர்களின் வயிற்றில் மாய்ந்தது என்றால் அதனால் விளைந்த பயன் மலம் அல்லது வேறு உண்டோ? இல்லை ஆகலின் நீ கூறிய உவமை எல்லா விடத்தும் பொருந்தாது என்பதை நீ உணர்க.

திரவியம் உவமை அன்று செய்திக்கண்; திரவியங்கள்
விரவிய இடத்தே வீந்து பலம் தரும்; இம்மை அம்மை
பரவி நீ பார்; நீர் அங்கி பாத்திரத்து இட்ட எல்லாம்
கரவிடும் இங்கே; எங்கே பலன் கொளக் கருதினாயே ? 109

நீ கூறிய உரமும் மருந்தும் கெட்டு அந்த இடத்திலேயே பயன் தருவன என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் வினையின் பயன்கள் செய்த அப் பிறவியிலேயே பயன் தருவன அல்ல. மறுபிறவியிலேயே பயன் தருவன என்பது உனக்கும் உடன்பாடு. ஆகவே இப்பிறவியில் நீரிலும் நெருப்பிலும் சொரிந்தனவும், ஏற்போர் கலத்தில் இட்டனவும் இங்கேயே அழிந்து போகின்றன. இதை நம் கண்ணால் காண்கிறோம். அவ்வாறு இருக்க அச் செயல்களின் பயன்கள் எங்கே வந்து உனக்குப் பொருந்தும் என்று எண்ணிப் பார்ப்பாயாக.

செய்தவர் மனத்தே எல்லாச் செய்தியும் கிடந்து பின்னர்
எய்தவே பலன்கள் ஈனும் என்றிடின் இருஞ்சுவர்க்கம்
பொய்யர் வாழ் நரகம் பூமி; புந்தியிற்கிடந்து போந்தது
ஐயனே ! அழகிது உன் சொல்;— இந்திர சாலம் ஆய்த்தே. 110

வினை தன்னைச் செய்தவர் மனத்திலே அடங்கிக் கிடக்கிறது. அதன் பின்னர் அடுத்த பிறவியில் வந்து தத்தம் பயனுக்கு ஏற்ப உயிரை வந்து பொருந்தும் என்பர் சிலர். இனிய துறக்கம், பொய்யர்கள் வாழ்கின்ற நிரயம், அதன் பின்னர் இந்த நில உலகம் ஆகிய பல உலகங்களிலும் உள்ள இன்ப துன்பங்களை புத்தியில் கிடந்த வினை தானே தரும் என்ற உன் சொல் அழகிது ! இது கண் கட்டு வித்தை போன்று உளது.

அழகிது என்பது இகழ்ச்சிக் குறிப்பாகக் கூறப்பட்டது. பொருந்துவது அன்று என்பது குறிப்பு. இந்திரசாலம் என்பது கண்கட்டு வித்தை செய்வோர் தொடர்பில்லாத ஒன்றிலிருந்து ஒரு பொருளைத் தோற்றுவிப்பது போல மயக்கம் தருவதாம் என்ற பொருளைத் தந்தது.

தானம்செய் பொருள் தரித்தோர் செய்தவர் தக்க செய்தி
ஊனம்பின் உறவே காண்டும்; பலம் உறுவிப்பான் வேண்டும்;
ஈனம் இல் செய்தி ஈசன் இடும்பணி; இவைநாம் செய்தால்
நூனங்கள் அதிகம் நோக்கி நுகர்விப்பன் வினைநோய் தீர. 111

ஒருவருக்குக் கொடையாக வழங்கப்பட்ட பொருள்களும், அக் கொடையை ஏற்றவரும், அக்கொடையை வழங்கியவரும், வழங்கியதாகிய செயலும் ஆகிய யாவும் நிலைபேறு இன்றி அழிவதை உலகில் காண்கிறோம். இவற்றால் நிகழும் பயன் நிலை பெற்றதாக விளங்கிச் செய்தவரைச் சென்று பொருந்துவதற்கு நிலைத்த தன்மை உடையவனாகிய ஒருவனே கூட்டுதல் வேண்டும். அத்தகைய நிலை பேறு உடையவன் இறைவனே. இறைவன் வினைகளின் பயன்களைக் கூட்டுவதற்கு இயைபு யாது என்னில் அறச் செயல்கள் யாவும் இறைவனின் கட்டளைகளே. ஆதலால் அவன் அருளிய விதிப்படி நடந்தால் அவற்றுள் குறைவு, மிகுதி நோக்கி அவற்றின் பயன்களை வினையாகிய நோய் தீருமாறு உயிர்களை நுகர்விப்பான்.

உலகு உடல் கரணம் காலம் உறுபலம் நியதி செய்தி
பலஇவை கொண்டு கன்மம் பண்ணுவது உண்பதனால்
நிலவிடாது இவைதாம் சென்று; நினைந்து உயிர் நிறுத்திக் கொள்ளாது
அலகு இலா அறிவன் ஆணை அணைத்திடும் அருளினாலே. 112

வினை செய்வதற்கு இன்றியமையாத வினைமுதற் பொருளாகிய உயிரும், உயிர் தங்கி இருப்பதற்கு உரிய உடலும், கருவிகளும், காலமும், காலத்தோடு இயைந்து நிகழ்வதாகிய செயலும், இன்னது செய்தால் இது பயன் என்னும் முறைமையும் ஆகிய இவற்றின் துணையால் உயிர்கள் வினைகள் ஈட்டலும் அவற்றின் பயனை நுகர்தலும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து ஆகும். இங்கே கூறப்பட்ட உலகு உடல் முதலியன யாவும் அறிவற்ற பொருள்கள். உயிரோ சிற்றறிவு உடையது. எனவே இவை யாவும் வினைப்பயனை அறிந்து துய்க்கின்ற ஆற்றல் அற்றவை. ஆதலால் இறைவனே தன்னுடைய ஆணையாகிய திருவருளால் வினையின் பயன்களை அந்தந்த உயிருக்கு ஊட்டுவான் என்பது பெறப்படும்.

உயிர்கள் சிற்றறிவு உடையன. மற்றையன அறிவற்ற பொருள்கள். எனவே இவை வினையின் பயன்களை உயிர்களுக்கு ஊட்டும் என்பதும்

பொருந்தாது. எனவே ஒழிபு அளவையின் அடிப்படையில் இறைவன் ஒருவனே வினைப்பயன்களை உயிர்களுக்கு ஊட்டுவான் என்பது ஆசிரியரால் விளக்கப்பட்டது.

ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கு இலாத்தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்குஇலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்குஇலா அறங்களானால் இரங்குவான் பணி அறங்கள் **113**

உலகத்தோடு ஒட்ட ஒழுகும் நல் ஒழுக்கமும், அன்புடைமையும், தொடர்பு இல்லாதாரிடத்து அருள் உடைமையும், விதித்தன செய்யும் வாழ்க்கை முறையும், தக்கோரிடத்துச் செய்யும் உபசாரமும், எல்லாரிடத்தும் கொள்ளும் நல்உறவும், பண்புடைமையும், ஒரு போதும் வழுவாத ஐம்பொறி அடக்கல் நோன்பு நோற்றல் ஆகிய தவமும், தகுதி உடையவர்க்கு மகிழ்வோடு அளிக்கும் கொடையும், தன்னிற் பெரியவரிடத்துச் செய்யும் வழிபாடும். வணக்கமும், வாய்மையும், விலக்கியன செய்யாத துறவும், அடக்கம் உடைமையும், அறிவுடைமையும், தன்னிற் பெரியாரைப் போற்றதலும் என்னும் இப்பதினாறு ஒழுகலாறும் ஒருவனுக்கு உளவாயின், இறைவன் அவற்றைத் தன் பணி என ஏற்று அவ்வாறு ஒழுகியவனுக்கு அருள் புரிவான்.

ஆசிரியர் இப்பாடலில் பதினாறு ஒழுக்கங்களை வகுத்துக் கூறினார். எனினும் அவற்றை நிகர்த்த மற்றைய நற்பண்புகளையும் சேர்த்துக் கொள்க. இங்கே துறவு எனப்பட்டது துறவறம் மேற்கொண்டவர்களுக்குச் சிறப்பாக விதிக்கப்பட்ட ஒழுக்கங்களை அன்று என்றும் இல்லறம் துறவறம், ஆகிய இரு நிலைகளையும் உளப்படுத்தியது என்றும் சிவஞான முனிவர் உரை செய்தார்.

இதனை அடுத்த பாடலில் "இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த தெய்வம் போற்றி" என்று ஆசிரியரால் மீண்டும் கூறப்படுவதால் வந்தித்தல், வணங்கல், அர்ச்சித்தல் என்று இப்பாடலில் குறிப்பிடப்பட்டவை. தம்மிற் பெரியாரை நோக்கிச் செய்யப்படுவன என்றும் சிவஞான முனிவர் உரை வரைந்தார்.

மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த தெய்வம் போற்றி
சினமுதல் அகற்றி வாழும் செயல் அறமானால் யார்க்கும்
முனம் ஒரு தெய்வம் எங்கும் செயற்குமுன் நிலையாம் அன்றே. **114**

மேற்கூறிய ஒழுக்கங்களை உடையவனாய் அவற்றுக்கு மறுதலையான தீமைகளை நீக்கி ஒழுகுபவன் தன் விருப்பத்துக்கு ஏற்ற ஒரு கடவுளை மனத்தால் நினைந்து, வாக்கால் வழுத்தி, மந்திரங்கள் சொல்லி, கையால் நல்ல மலர்களைத் தூவி வணங்குகின்ற இயல்பு உடையவனானால் அத்தகைய வனுக்கு எல்லாருக்கும் மேலவனாகிய சிவபெருமானே முன் நின்று அருள் பாலிப்பான்.

அறத்தின் வழி ஒழுகி, சினம் முதலிய தீமைகளை அகற்றி வாழ்கின்ற ஒருவன் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் சிவபெருமானே அவனுக்கு அருள் பாலிப்பான் என்றார். சிவஞான முனிவர் சினமுதல் அகற்றி என்பதில் வரும் அகற்றி என்பது பெயர் என்றும், அகற்றிக்கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு தொக்கது என்றும் உரை கண்டார்.

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர் மற்று அத்தெய்வங்கள்
வேதனைப் படும்; இறக்கும்; பிறக்கும் மேல் வினையும் செய்யும்;
ஆதலான் இவை இலாதான் அறிந்து அருள் செய்வன் அன்றே. 115

எந்த தெய்வத்தை வழிபடு தெய்வமாக வணங்கினாலும் வினை வயப்படாதவனாகிய சிவபெருமானே அம்மை அப்பனாக வந்து அவ்வழி பாட்டை ஏற்று அதற்குரிய பயனை அருளுவான். மற்றைத் தெய்வங்கள் எல்லாம் உயிர் வகையுள் ஒன்றாகுமே தவிர வேறு இல்லை. அத்தகைய பல தெய்வங்களும் பிறக்கும் இன்பத் துன்பங்களுக்கு உட்படும்; இருவினைகளைச் செய்யும்; இறக்கும் என்ற வரலாறு அனைவரும் அறிந்ததே. இவற்றுள் எதுவும் இல்லாதவனாகிய சிவபெருமான் ஒருவனே வினைவயப்படாத முதல்வன். ஆகையால் அவனே உயிர்களுக்கு வினையின் பயனைக் கூட்ட வல்லவன்.

இறைவன் ஒருவனே என்பதும் அவன் இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன் என்பதும் சைவ சமயத்தின் கொள்கை. மிகப் பழமையான தமிழ் நூல்களும் கூட சிவபெருமானைப் பிறவாயாக்கைப் பெரியோன் என்றே குறிப்பிடுகின்றன. இந்த உண்மையை அறியாதவர் செத்துப் பிறக்கின்ற இயல்புடைய சிறு தெய்வங்களை வழிபடுவராயினார். "சென்று நாம்சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம். சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" என்ற அப்பரடிகள் திருவாக்கை நினைவு கூர்க.

இங்கு நாம் சிலர்க்குப் பூசை இயற்றினால், இவர்களோ வந்து
அங்குவான் தருவார்? அன்றேல் அத்தெய்வம் அத்தனைக்காண்;
எங்கும் வாழ் தெய்வம் எல்லாம் இறைவன் ஆணையினால் நிற்பது
அங்கு நாம் செய்யும் செய்திக்கு ஆணைவைப்பால் அளிப்பன். 116

உலக வாழ்க்கையில் தாய் தந்தை ஆசிரியர் ஆகியோரை நாம் வழி படுகிறோம். அந்த வழிபாட்டின் பயனை மறுமையிலே நமக்குத் தருவதற்கு அவர்கள் வல்லவர் அல்லர். அது போன்றே உலகத்தார் கொண்ட முப்பத்து முக்கோடி தேவர்க்கும் செய்யப்படும் வழிபாட்டின் பயனை அத் தெய்வங்கள் வழங்க வல்லன அல்ல. சிவபிரான் ஆகிய முதல்வனே தன் ஆணையைத் தனது ஏவல் வழி நிற்கும் அந்தந்த தெய்வத்தின் இடத்து வைத்துப் பயனை வழங்குவான்.

காண்பவன் சிவனேயானால் அவன் அடிக்கு அன்பு செய்கை
மாண்புஅறம்; அரன்தன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம்
வீண்செயல்; இறைவன் சொன்ன விதி அறம்; விருப்பு ஒன்று இல்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே. 117

மேற்கூறியவற்றால் எந்தக் கடவுளை வழிபட்டாலும் அதனை அறிந்து அருள வல்லவன் சிவபிரானே என்பது தெளிவுறும். எனவே சிவபிரானின் திருவடிகளை அன்புடன் வணங்குவதே மாண்புடைய பேரறம் ஆகும். சிவபிரானின் திருவடியை மறந்து செய்கின்ற அறச் செயல்கள் எல்லாம் வீண் செயலாகவே முடியும். ஏனெனில் அறம் என்பது சிவபெருமானால் விதிக்கப் பட்டவற்றைச் செய்தலும் விலக்கப்பட்டவற்றை நீக்குதலும் ஆகும். இவ்வாறு அன்பு செய்யும் மெய்யடியார்க்கு விருப்பு வெறுப்பைக் கடந்த வனாகிய சிவபிரானே திருவருள் பாலிப்பான். எனவே அத்தகைய வழிபாட்டை மேற் கொள்வாயாக.

தாபர சங்கமங்கள் என்று இரண்டு உருவில் நின்று,
மாபரன், பூசை கொண்டு மன்னுயிர்க்கு அருளை வைப்பன்.
நீபரன் தன்னை நெஞ்சில் நினைவையேல், நிறைந்த பூசை;
ஆய் பரம் பொருளை நாளும் அர்ச்சி நீ அன்பு செய்தே 118

இயங்கியல் வடிவம், நிலைஇயல் வடிவம் என்று இரண்டு வடிவங்களைத் தாங்கி பெருமைக்குரிய சிவபெருமான் உயிர்கள் இயற்றும் வழிபாட்டை ஏற்றுக் கொண்டு அவற்றுக்குத் தன்னுடைய அருளை வழங்குவான். இத்தகைய வழிபாடுகள் புறவழிபாடுகள். இறைவனை உள்ளத்தின் உள்ளே கண்டு அகவழிபாடு செய்வோர்க்கு அப்பெருமானே அருள் பாலிப்பான். எனவே பரம்பொருளாகிய சிவபெருமானை நாள்தோறும் போற்றி அன்போடு வழிபடுவாயாக.

சிவனடியார்கள் வழிபாடு செய்யும் போது அதனை மூன்று வகையாகச் செய்வார்கள் என்று பெரியோர் வகைப்படுத்துவர். அவை குருவழிபாடு, லிங்க வழிபாடு, சங்கம வழிபாடு என்பன. சங்கமம் என்ற சொல் இயக்கும் இயல்பு உடையது என்ற நேரடிப் பொருளைத் தரும். இங்கு அச்சொல் மெய்யடியார்களைக் குறித்தது. திருக் கோவிலில் எழுந்தருளி உள்ள சிவ லிங்கத் திருமேனியை வழிபடுவது தாபரம் என்ற வகையில் அடங்கும். ஏனெனில் அத்திருமேனி நிலை இயல் வடிவத்தைக் கொண்டது. குரு சங்கம வழிபாடுகள் இரண்டும் ஒன்றாக சங்கம வழிபாட்டுள் அடங்கும். இவை தவிர அகவழிபாடு ஆற்றுதல் கொள்ளப்படும்.

அரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமது ஆகும்;
பரன் அடிக்கு அன்பு இலாதார் புண்ணியம் பாவம் ஆகும்;
வரம் உடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை ஆகி;
நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை ஆய்த்தே, 119

சிவபெருமானுடைய திருவடிக்கு அன்பு பூண்ட மெய்யடியார்கள் வழிபாடு செய்யும் காலத்தில் அவர்கள் செய்கிற பாவச் செயல்களும் அறமே ஆகும். தலைவனாகிய சிவனது திருவடிகளுக்கு அன்பு இல்லாதவர்கள் செய்யும் புண்ணியங்களும் பாவமே ஆகும். தன்தவ வலிமையால் பல வரங்களைப் பெற்ற தக்கன் இயற்றத் தொடங்கிய சிறந்த வேள்வி பாவச் செயலாக முடிந்தது. சிறிய பெருந்தகையான சண்டீசர் தமது தந்தையின் காலைத் தடிந்த பாதகம் நன்மையாக முடிந்தது.

சிவபெருமானை ஒதுக்கி விட்டுத் தன் முனைப்போடு வேள்வி செய்யத் தொடங்கினான் தக்கன். அந்த வேள்வி அவனுக்கு நன்மையைத் தராமல் தீமையில் முடிந்தது. இந்த வரலாறு கந்த புராணத்தில் இடம் பெறுகிறது.

சேய்ஞலூர்ப் பிள்ளையாராகிய சண்டீசர் மணலைச் சிவலிங்கமாகப் பிடித்து வைத்துப் பாலால் திருமஞ்சனம் ஆட்டி வழிபட்டார். அதனைத் தடுக்க முயன்ற தமது தந்தையின் காலை அருகில் கிடந்த சிறு கோலால் எறிந்தார். அதுவே வாளாகித் தந்தையின் கால்கள் இரண்டையும் துணித்து எறிந்தது. இவ்வரலாறு பெரியபுராணத்தில் கூறப்படுகிறது.

மறைகள் ஈசன்சொல்; அச்சொல் வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள் மா நிரயம்; இட்ட பணிசெய்வோர் செல்வத்தோடும்
உறையும் மாபதிகள் உம்பர் உலகங்கள் ; யோனிக்கு எல்லாம்
இறைவன் ஆணையினால் இன்பத் துன்பங்கள் இயைவதாகும். 120

மறைகள் சிவபெருமானால் அருளப்பட்டவை. மறைகளில் விதித்த வழிப்படி நடவாத உயிர்களைச் சிறையிட்டு வைப்பதற்காக அமைக்கப்பட்ட இடமே நிரயம் என்பர். துறக்கம் என்பது மறைநெறி வழுவாது நடந்த உயிர்கள் இன்பத்தோடு வாழ்வதற்கு இறைவனால் அமைக்கப் பட்டதாம். இது போன்றே பிற உலகுகளில் வாழ்கிற உயிர்களுக்கும் இறைவன் தனது ஆணையால் இன்ப துன்பங்களை ஊட்டுவான்.

ஆணையால் அவனி மன்னன் அருமறை முறைசெய்யாரை
ஆணையின் தண்டம் செய்தும் அரும்சிறை இட்டும் வைப்பன்;
ஆணையின் வழிசெல்வோருக்கு அரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன்; எங்கும் ஆணையே ஆணை யேகாண் ! 121

உலகத்தை ஆள்கின்ற வேந்தர்கள் அவர்களுடைய ஆணைகட்கு ஏற்ப நடவாதாரை ஒறுத்தும் சிறையிட்டும் வைப்பார்கள். அதே வேந்தர்கள் தம்முடைய ஆணைக்கு இணங்க நடப்பவர்களைப் பாராட்டி அவர்களுக்கு மாளிகையும் செல்வமும் அளித்து அதிகாரமும் வழங்கி வாழ்விப்பார்கள். இவ்வுலகில் ஒப்பற்ற பெருவேந்தனாகிய இறைவனும் இவ்வாறே தண்டம் செய்தும் தகுதிக்கு ஏற்ப உயர்த்தியும் தன் ஆணையை நடத்தி அருளுவான்.

அரசனும் செய்வது ஈசன் அருள்வழி – அரும்பாவங்கள்
தரையுளோர் செய்யில், தீய தண்டலின் வைத்து தண்டத்து
உரைசெய்து தீர்ப்பன்; பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்;
நிரயமும் சேரார்; அந்த நிரயம் முன் நீர்மை ஈது ஆம். 122

உலகத்து அரசர்கள் செய்யும் தண்டத் தொழிலும் அவன் வழங்கும் வரிசைகளும் இறைவனின் அருள்வழியே நடப்பதாகும். நாட்டில் உள்ளோர் பாதகங்கள் செய்தால்அரசன் அவர்களுக்குக் கொடிய தண்டனையை வழங்குவான். அதற்கு மேலும் கொடுமை செய்தால் அதனினும் கடுமையாகத் தண்டிப்பேன் என்று கூறி அச்சுறுத்தி அவர்களைத் திருத்துவான். இறைவனும் பாவம் செய்தவர்களை நரகத்தில் இடுவது அவர்களைத் திருத்துவதன் பொருட்டேயாகும். இவ்வாறு ஒறுக்கப் பட்டவர் இறைவனின் ஆணைப்படி நடப்பார்கள். தாம் நிரயத்தைச் சேராமல் இருக்கும் வண்ணம் ஒழுகுவார்கள்.

பாவம் செய்தால் தண்டனை வழங்குவான் என்று கூறவே புண்ணியம் செய்தால் அதற்குரிய மேம்பாட்டை வழங்குவான் என்பதும் பெறப்படும்.

இந்த மூன்று பாடல்களாலும் முன்னர் 94-வது பாடலில் "தராபதி போல (அரசனைப் போல)த் தருவான்" என்று கூறிய கருத்து ஆசிரியரால் விரித்துரைக்கப்பட்டது.

அருளினால் உரைத்த நூலின் வழிவாராது அதன்மம் செய்யின்
இருள்உலாம் நிரயத் துன்பத்து இட்டு இரும் பாவம் தீர்ப்பன்;
பொருள் உலாம் சுவர்க்கம் ஆதி போகத்தால் புணியம் தீர்ப்பன்;
மருள்உலாம் மலங்கள் தீர்க்கும் மருந்து இவை வயித்திய நாதன் 123

இறைவன் தன்னுடைய அருளினால் உரைத்த நூல்களின் வழி நில்லாது ஒருவன் பாவம் செய்வானாகில் அவனை இருள் செறிந்த நரகத்தில் இட்டுத் துன்பத்தை நுகர வைத்து அவனுடைய பெரும் பாவத்தினைத் தீர்ப்பான். அந்நூல்களில் உரைக்கப்பட்ட ஒழுக்கத்தின் வழி நின்றவனை இன்ப நுகர்வுக்கு உரிய துறக்கத்தில் இட்டு அவன் செய்த புண்ணியத்தினைத் தீர்ப்பான். பாவம் புண்ணியம் என்ற இரண்டு வினைகளுமே உயிர்கள் கட்டில் அகப்பட்டுப் பிறந்து இறந்து வருவதற்குக் காரணமான நோய்கள். ஆதலால் வைத்தியநாதனாகிய சிவபெருமான் அந்த நோயைத் தக்க மருந்தால் தீர்த்து அருளுவான்.

"வேதாகம நூல்வழி நில்லாமை பாவம். நூல் வழி நின்று அருள் வழி நில்லாமை புண்ணியம். இரண்டும் உயிர்க்கு நோய். ஆகையால் அவற்றால் பந்தம் உறாமைப் பொருட்டு சிவபிரானாகிய வைத்தியன் இன்ப துன்பங்களாகிய மருந்தை நுகர்விப்பான்" என்பது மாதவச் சிவஞான முனிவருடைய உரை. தீராத நோயாகிய பிறவிப் பெரும் பிணியைத் தீர்த்தலால் சிவபெருமான் வைத்தியநாதன் எனப்பட்டான்.

மருத்துவன் உரைத்த நூலின் வழிவரின் பிணிகள் வாரா;
வருத்திடும் பிணிகள் தப்பின் தப்பிய வழியும் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யாது உறும்பிணி சென்றும் தீர்ப்பன்;
உரைத்தநூல் சிவனும் இன்னே உறுங்கன்மம் ஊட்டித் தீர்ப்பன் 124

உடல் கூற்று இயல் உணர்ந்த மருத்துவ நூலில் விதிக்கப்பட்டபடி வாழ்ந்தால் நோய்கள் வரமாட்டா. அந்த நெறி தவறி வாழ்வார்க்கு நோய் தோன்றி உடலை வருத்தும். நோய் தோன்றிய பின்னரும் மருத்துவன் மருந்து கொடுத்து அந்நோயைத் தணிப்பான். சில நேரங்களில் மருந்து இன்றியும் கொடை, வழிபாடு முதலியன செய்வித்தும் நோயைத் தணிப்பான். இது போன்றே சிவபிரானும் உயிர்களைப் பொருந்திய இருவினையாகிய நோயைப் பல திறத்தானும் ஊட்டித் தீர்ப்பான்.

திருப்புள்ளிருக்கு வேளூர்ப் பதிகத்தில் அப்பரடிகள் இறைவனை "மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீரா நோய் தீர்த்து அருளவல்லான்" என்று போற்றுவதை இங்கு நினைவு கூர்க.

மண்ணுளே சிலவியாதி மருத்துவன் அருத்தியோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித் தீர்த்திடும் சிலநோயெல்லாம்
கண்ணிய கட்டி பாலும் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்;
அண்ணலும் இன்பத் துன்பம் அருத்தியே வினை அறுப்பன். 125

மருத்துவன் இவ்வுலகில் தோன்றுகின்ற சில நோய்களை அக்கரையோடும் திண்ணமாகவும் கத்தியால் கீறியும் அறுத்தும் தீர்ப்பான். வேறு சில நோய்களுக்கு வெல்லமும், பாலும் கலந்த மருந்துகளைத் தந்து தீர்ப்பான். அது போலவே இறைவனும் உயிர்களின் இருவினையாகிய நோய்களைத் தீர்க்கும் பொழுது வினைப் பயனுக்கு ஏற்றபடி அவற்றுக்கு இன்பத்தையோ, துன்பத்தையோ கொடுத்து அறுத்து நீக்குவான்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இலான் ஆகையால் அவன் உயிர்களுக்கு அதனதன் வினைப் பயனுக்கு ஏற்பவே இன்ப துன்பங்களை ஊட்டுவான் என்பது இப்பாடலில் விளக்கப்பட்டது. இம்மூன்று பாடல்களாலும் முன்னர் 94-ம் பாடலில் தரணி போல (மருத்துவன் போல) இறைவனே வினைப்பயன்களைத் தீர்ப்பான் என்பது விளக்கப்பட்டது.

பூதனா சரீரம் போனால் புரி அட்ட ரூபந்தானே
யாதனா சரீரம் ஆகி இன்பத்துன்பங்கள் எல்லாம்
நாதனார் ஆணை உய்க்க நரகொடு சுவர்க்கம் துய்த்துத்
தீது இலா அணுவாய்யோனி சேர்ந்திடும் – சீவன் எல்லாம். 126

உலகத்தில் நாம் தாங்கிய உடல்கள் ஐம்பூதக் கூட்டத்தால் ஆயவை. இப்பரு உடம்பை விட்ட உயிர்கள் நுண்ணுடம்பைப் பற்றிக் கொள்கின்றன. அதன் பிறகு வினைப் பயன்களை அனுபவித்

தற்கு உரிய வெவ்வேறு உடல்கள் உள்ளன. ஆதலால் இறைவனின் ஆணைப்படி வினைக்கு ஏற்ற உடம்புகளைப் பெற்றுத் துறக்கத்தில் சென்று இன்பத்தையும், நிரயத்தில் சென்று துன்பத்தையும் நுகர்கின்றன. வினைப் பயனை ஆங்கு நுகர்ந்த பிறகு மீண்டும் நுண்ணுடம்போடு நில உலகத்துக்கு வந்து தன்வினைப் பயனுக்கு ஏற்ற பிறப்பினை எடுக்கும்.

பூதனாசரீரம் ஐம்பெரும் பூதங்களின் கலப்பினால் ஆகிய பருஉடம்பு, இது தூல உடம்பு எனப்படும். புரியட்ட ரூபம் என்பது நுண்ணுடம்பு, இதனைப் புரியட்ட காயம் என்றும் கூறுவர். தன் மாத்திரைகள் ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் எனும் இம்மூன்றும் ஆக எட்டும் கூடி உளதாவது நுண்ணுடம்பு. இதனைச் சூக்கும உடம்பு என்றும் கூறுவர்.

யாதனா சரீரம் என்பது நிரயத்தில் சென்று துன்பத்தில் அழுந்துவதற்கு உரிய உடம்பு ஆகும். துறக்கத்தில் சென்று இன்பங்களை நுகர்வதற்கு உரிய உடல் பூதசார உடல் எனப்படும். துறக்க நிரயங்களில் சென்று இன்ப துன்பங்களைத் துய்த்த பிறகு எஞ்சியிருக்கும் வினைப் பயன்களைத் துய்ப்பதற்கு என உயிர்கள் மீண்டும் நில உலகிற்கு நுண்ணுடம்பைப் பற்றிக் கொண்டு வந்து பிறக்கின்றன என்பர்.

"துறக்கப்படாத உடலைத் துறந்து வெந்தூதுவரோடு, இறப்பன், இறந்தால் இரு விசும்பு ஏறுவன் ஏறி வந்து, பிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன் பேர், மறப்பன் கொலோ என்று என் உள்ளம் கிடந்து மறுகிடுமே" என்ற அப்பர் அடிகளின் தனித் திருவிருத்தம் இங்கு நினையத் தக்கது.

உடல்விடா யோனி பற்றி உதிப்பினும் உதிக்கும்; ஒன்றில்
படர்வுறாது உறும்பாவத்தால் பாடாணம் போல் கிடந்து
கடனதாம் காலம் சென்றால் கடுநரகதனில் வீழ்ந்து அங்கு
இடர் உறும்—உருவம் கன்மத்து அளவினில் எடுக்கும் அன்றே. 127

உயிர்கள் தாம் செய்த வினைகளின் வன்மை மென்மைக்கு ஏற்ப வேறு ஓர் உடம்பை எடுக்கும். அதாவது இப்பரு உடம்பை விட்ட பிறகு யாதனா உடம்பை எடுக்காமலே மற்றுமொரு பரு உடம்பை எடுத்தலும் உண்டு. யாதனா உடம்பை விட்டு நீங்கிய உயிர் மீண்டும் இவ்வுலகத்தில் பரு உடம்பு கொண்டு தோன்றாமல் மற்றொரு யாதனா உடம்பில் புகுதலும் கூடும். சில வேளைகளில் இவ்வுடம்பினை விட்டு நீங்கிய அளவிலே மற்றொரு கருப்பையில் தங்கி மீண்டும் பிறத்தலும் உண்டு. சில வேளைகளில் வேறு உடம்பில் சேராமல் மிகுந்த பாவம் செய்ததனால் கல்லைப் போலக் கிடத்தலும் உண்டு. அவ்வாறு கல்லைப் போலக் கிடந்த உயிர் உரிய காலம் கழிந்ததன் பின் கொடிய நிரயத்தில் சென்று துயர் உழன்று அதன் பின்னர்ப் பிறத்தலும் உண்டு.

உயிர்கள் உடம்பு விட்டு உடம்பு மாறுவது இவ்வாறு தான் நிகழும் என்று வரையறுத்துக் கூற இயலாது என்ற கருத்து இப்பாடலில் வலியுறுத்தப்பட்டது. இதற்கு முந்திய பாடலில் கூறிய

முறைமையிலும் அல்லது அதற்கு மாறுபட்டும் தத்தம் வினைக்கு ஏற்ப உயிர்கள் மாறிப் பிறந்து வரும். இவை எல்லாம் இடைவிடாது நிகழ்தலும் உண்டு. இடைவிட்டு நிகழ்தலும் உண்டு என்கிறார் சிவஞான முனிவர். பாடாணம் - கல்

பன்னகம் அண்டசங்கள் பரகாயந் தன்னில் பாய்வோர்
துன்னுதோல் முட்டை யாக்கை துறந்து செல்வதுவே போல
உன்னிய உயிர்கள் தூல உடல்விட்டு வானினூடு
மன்னிடும் நனவு மாறிக் கனவினை மருவு மாபோல். 128

பாம்பு தன்னுடைய தோலை உரித்து விட்டுப் புதிய தோலோடு செல்லுவது போலவும், பறவை முட்டையை உடைத்துக் கொண்டு வெளியேறிப் போவதைப் போலவும், கூடு விட்டுக் கூடு பாயும் ஆற்றல் கைவரப் பெற்றோர் தம் உடலை விட்டு வேறு ஒரு உடம்புக்குச் செல்வது போலவும் நிலைபெற்ற உயிர்கள் தம்முடைய உடம்பை விட்டு மற்றொரு உடம்போடு துறக்கத்தையோ, நிரயத்தையோ சென்று சேரும். அவ்வாறு சேரும் போது நனவு உணர்வு மாறிக் கனவு தோன்றுவது போல அவ் வுயிர்களின் அறிவும் வேறுபட்டு நிற்கும்.

பாம்பு தோலுரித்தல் என்ற உவமை உயிர் ஒரு பரு உடலை விட்டு மற்றொரு பரு உடலைச் சேருவதற்கு எடுத்துக் காட்டாயிற்று. முட்டையில் இருந்த பறவை வேறு இடத்துக்குச் செல்லும் என்ற உவமை இவ்வுடலை விட்ட உயிர் துறக்கத்திற்கோ, நிரயத்திற்கோ இடம் மாறிச் செல்லும் என்பதற்கு எடுத்துக் காட்டாயிற்று. பரகாயப் பிரவேசம் எனப்படும் கூடு விட்டுக் கூடுபாய்வது என்ற உவமை உயிர்கள் அச்சு மாறிப் பிறக்கும் என்பதற்கு எடுத்துக் காட்டப்பட்டது. நனவிலிருந்து கனவுக்குச் செல்லுவது உயிர்களின் அறிவு வேறுபட்டு வருவதற்கு உவமையாயிற்று. பன்னகம் - பாம்பு. அண்டசங்கள் - முட்டைகள்.

தன்மமோடு அதன்மம் ஆகி தான் இருபயனும் தந்து
நன்மை தீமையினும் இன்பத் துன்பினும் நாடிக்காண
முன்னமே ஆன்மா வின்தன் மும்மலத்து ஒன்றதாகி
கன்மமும் மூலம் காட்டிக் காமிய மலமாய் – நிற்கும். 129

முந்திய பிறவிகளில் ஆன்மாக்கள் ஈட்டிய கன்மம் எனப்படுவது தருமம், அதருமம் என்று இரு வகைப்படும். அவற்றிற்கு ஏற்ப இரண்டு வகைக்கும் உரிய பயன்களைத் தரும். இவ்வாறு பயன் தருவதனால் அதற்கு ஒரு முதற் காரணம் உண்டு என்பது பெறப்படும். மும்மலங்களில் ஒன்றாக இக்கான்மிய மலம் வைத்து எண்ணப்படும் நன்மை, தீமை ஆகிய காரணங் களாலும் இன்பம், துன்பம் ஆகிய காரியங்களாலும் இருவினை அனுமான அளவையினால் அறியப்படும்.

மாதவச் சிவஞான முனிவர் கான்மியம் என்பது காமியம் என மருவிற்று என்று உரை கூறுவார்.

இருவினை – அநாதி ஆதி இயற்றலால் நுகர்வால் அந்தம்
வரும்; மலம் சார்ந்து மாயா உருவுகள் மருவி ஆர்த்துத்
தருசெயல் முறைமை யாலே தான்பல பேதம் காட்டி
அருவதாய் நின்று அரன்தன் ஆணையின் – அமர்ந்து செல்லும் 130

இருவினை எனப்படுவன ஒரு வகையால் காலப் பழமைக்கும் எட்டாத தொன்மை உடையது. அதாவது இடையறாது ஓடும் ஆற்றின் வெள்ளப் பெருக்குப் போலத் தொடர்ந்து வருவது. இரு வினைகளும் தோற்றம் உடையனவும் ஆகும். ஏனெனில் உயிர்கள் மனம், மொழி மெய்களால் ஈட்டுவனவே இருவினைகளாகும். இரு வினைகளுக்கும் முடிவு உண்டு. ஏனெனில் வினைகளின் பயனை இறைவன் உயிருக்கு ஊட்டும் போது அவற்றை நுகர்ந்துஅவ்வினைகளை உயிர்கள் தீர்க்கின்றன. ஆணவமலத்தோடு சேர்ந்து மாயையின் காரியங்களாகிய உடல்களைத் தோற்றுவித்து உயிர்களைப் பிணித்துப் பலவேறுபட்ட வேறுபாடுகளைக் காட்டி அவ்வினைகள் அருவாக நின்று இறைவனுடைய ஆணையின் வண்ணம் செயல்படும் இயல்பு உடையன ஆகும்.

இந்த இரண்டு செய்யுள்களாலும் இருவினையின் இயல்பு இத்தகையது என்று ஆசிரியரால் எடுத்துரைக்கப்பட்டது. மேலே 91-வது பாடலில் "அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்ல" எனக் கூறப் பட்டது இங்கே மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இது முடிந்தது முடித்தல் என்னும் உத்தி என்பார் சிவஞான முனிவர்.

சங்கமம் தாபரங்கள் தத்தம் கன் மத்துக்கு ஈடா
அங்கு உருயோனி மாறும் அச்சுமாறாது இங்கு என்னின்
இங்குமானுடர் இயற்றும் புண்ணியத்து இன்ப ஈட்டம்
அங்குவான் சுரர்களாயோ நரர்களாய் அருந்துவாரோ. 131

மக்கள் விலங்குகள் போன்ற இயங்கியல் பொருள்களும், மரங்கள் கொடிகள் போன்ற நிலையியல் பொருள்களுமாகிய உயிர்கள் தாம் தாம் செய்த வினைக்கு ஈடாக வேறு வேறு பிறவிகளை எடுக்கும். அவ்வாறு பிறவி எடுக்கும் போது அதனுடைய வடிவமும் மாறும். உயிர்கள் மறுபிறப்பு எடுக்கும் போது அவற்றின் உடல் மாறாது என்று கூறினால், மானிடராய்ப் பிறந்து செய்த புண்ணியத்தின் பயனை வானுலகத்தினில் சென்று தேவர்களாக இருந்து நுகர்வார்களோ அன்றி மானுடர்களாக இருந்தே வானுலக இன்பங்களை நுகர்வார்களோ?

"இதனால் சொல்லியது பட்டாச்சாரியன் தெய்வ யோனி மானுட யோனி ஆகாது என்றும், மானுட யோனி தாவரங்கள் ஆகாது என்றும் அந்தந்த யோனி அந்தந்த யோனியாகவே சனிக்கும். அது ஒழிந்து அச்சு மாறாது என்றும் சொல்ல ! அவனை மறுத்து அச்சுமாறிப் பிறக்கும் என்னும் முறைமையும் அறிவித்தது" என்பது நிரம்ப அழகிய தேசிகரின் உரை. இதே கருத்தை சிவஞான சித்தியார் சுபக்கத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பில் திரு. J.M. நல்லசாமி பிள்ளை வலியுறுத்துகிறார்.

நரர்களாய்த் துய்ப்பர் என்னின் நரர்பதி சுரர் உலோகம்;
சுரர்களாய்த் துய்ப்பர் என்னின் சொன்ன அச்சு அழியும் ஆகும்
சுரர்களாய்ப் பலன்கள் துய்த்துத் தாம் இங்குத் தோன்றும் போது
நரர்களாய்ப் பிறப்பர் ஞாலத்து அமரராய் நண்ணிடாரே. 132

வானுலகத்தில் மானுட வடிவம் கொண்டே இவ்வுலகத்தில் செய்த புண்ணியப் பயன்களை நுகர்வார்கள் என்றால் அதனை வானுலகு என்று சொல்வது பொருந்தாது. அதுவும் இம்மண்ணுலகே எனல் வேண்டும். அவ்வாறு அன்று, தேவர்களாகவே இருந்து துய்ப்பார்கள் எனில் அவர்களின் வடிவம் மாறிற்று என்றே கொள்ள வேண்டும். தேவர்களாகி வானுலகத்தில் சேர்ந்து தாம் செய்த நல்வினைப் பயனை நுகர்ந்து கழித்த பிறகு மீண்டும் அவர்கள் இவ்வுலகில் பிறப்பார் எனின் மானுடராகவே பிறப்பார். வானவர் வடிவம் கொண்டு இவ்வுலகத்தில் பிறந்திடார்.

வண்டுகளாகி மாறும் மயிர்க்குட்டி; மற்றோர் செந்துப்
பண்டைய உருவந்தானே வேட்டுவனாய்ப் பிறக்கும்;
கண்டுகொள் யோனி எல்லாம் கன்மத்தான் மாறும் என்றே
கொண்டன சமயம் எல்லாம்; இச்சொல் நீ கொண்டது எங்கே ? 133

கம்பளிப் பூச்சிகள் எனப்படும் மயிர்க்குட்டிப் புழுக்கள் சிலகாலம் சென்ற பின் வண்டுகள் ஆவதைக் காண்கிறோம். இது போன்றே சில புழுவகைகள் குளவி வடிவு கொண்டு மாறுவதையும் பார்க்கிறோம். இதிலிருந்து பிறப்புக்கள் யாவும் வினைக்கு ஏற்ப மாறுபடும் என்பதனைக் கண்டு கொள்க. இவ்வாறு வினையின் பயனுக்கு ஏற்பப் பிறப்புகள் மாறிவரும் என்றே எல்லாச் சமயங்களும் கொண்டன. இதற்கு மாறான கருத்தை நீ எங்கிருந்து பெற்றாய்?

அகலியை கல்லதானாள்; அரிபலபிறவி ஆனான்;
பகலவன் குலத்தில் தோன்றிப் பார் எலாம் முழுதும் ஆண்டு
நிகர்இலா அரசன் ஆகும், சிலந்தி நீடுலகம் போற்றச்
சகமதில் எலிதான் அன்றோ மாவலி ஆய்த்துத் தானே. 134

கோதம முனிவரின் சாபப்படி அகலிகை கல்லாக மாறினாள். பிறகு முனிவரின் சாபத்தால் திருமால் பல பிறவிகளை எடுத்தார். சிலந்திப் பூச்சி தான் செய்த நற்செயலால் சூரிய குலத்தில் பேரரசனாகப் பிறந்து கோச்செங்கணான் என்ற பெயர் தாங்கி உலகெலாம் ஆண்டான். எலிஒன்று திருமறைக் காட்டில் இறைவன் திருமுன்பு எரிந்த திருவிளக்கைத் தன் மூக்கால் தூண்ட அது அடுத்த பிறவியில் மாவலியாய்த் தோன்றி மூவுலகங்களையும் ஆண்டது.

செய்வினாய் மாற வேறு சிலர்விதி யாலே; கன்மால்
வைப்புறும் யோனி எல்லாம் மாறிவந்திடா இங்கு என்னின்
எப்படி யானும் செய்திக்கு இறைகரியாவன் என்றே
முற்பட மொழிந்தேன்; எல்லாம் முதல்வன் தன் விதியே ஆகும். 135

அகலிகை, திருமால், கோச்செங்கட்சோழன் மாவலி ஆகியோருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் வினையினால் மட்டுமன்றி சாபத்தினாலும் நேர்ந்தனவாகும். அதனால் வினைப்பயன் காரணமாக உயிர்கள் கருப்பை மாறிப் பிறந்திடா என்று நீ மறுத்தல் கூடும். எவ்வகையாலும் உயிர்களின் வினைகளுக்கு எல்லாம் இறைவனே சான்றாவான் என்று முன்பே கூறப் பட்டது. எனவே சாபத்தின் பயன் ஆயினும் வினையின் பயனாயினும் இறைவன் ஆணை வழியே உயிர்களை வந்து பற்றும் என்பதே உண்மையாகும்.

மேல் 120-ஆம் பாடலில் இறைவன் ஆணையினால் இன்ப துன்பங்கள் இயைவதாகும் என்று கூறியதனை ஆசிரியர் இங்கு நினைவுறுத்தினார்.

கரி - சான்று, முதல்வன் தன் விதி - இறைவனது ஆணை

அவ்வவயோனிதோறும் அவ்வவ உலகந் தோறும்
செவ்விதின் அறிந்து கன்மம் சேர்ந்திடா; சீவன் சேரா;
இவ்வகை தம்மிற் சேர்வும் இறைசெயலானால் செய்த
எவ்வுருவும் தம் கன்மான் மாற்றுவன் இறைவன்தானே. 136

வினைகள் அறிவற்றவை ஆகையினால் அவை தாமாகவே தமது பயனுக்கு ஏற்ப உடல்களையும் அவ்வுடல்கள் வாழும் உலகங்களையும் சென்று சேரமாட்டா. உயிர்கள் அறிவுடையன ஆயினும் அவற்றின் அறிவு சிற்றறிவு ஆதலாலும் அவை உணர்த்த உணரும் தன்மை உடையன ஆதலாலும் வினைப் பயன்களைத் தாமே அறிந்து எடுத்துக் கொண்டு நுகர மாட்டா. ஆதலால் மாயை வினைகளைச் செயல்படுத்தி அவற்றை உயிர்களுக்கு ஊட்டுதல் இறைவன் திருவருளே என்பது பெறப்பட்டது. இறைவன் தானே உயிர்களுக்குக் கொடுத்த எவ்வகை உடல்களையும் அவற்றின் வினை வழியே மாற்றுவதற்கும் உரியவன் ஆவான்.

மேலே 112-வது பாடலில் ஒழிபு அளவையின் அடிப்படையில் இறைவனே வினைகளின் பயனை உயிர்களுக்கு ஊட்டுவான் என்று ஆசிரியர் எடுத்துரைத்ததை இங்கும் பொருத்திக் காணுதல் வேண்டும்.

மாறி இவ்வுருவம் எல்லாம் வருவது எங்கே நின்று? என்னின்
கூறிய சூக்குமத்தாம் உருவெனின் குறி ஒன்று என்னின்
வேறு ஒரு குறி ஆம் ஆரம் வீரசங்கிலியும் ஆகும்;
தேறுநீ ஒருவனால் இச் செயல் எலாம் சிவனால் ஆகும்.

இவ்வாறு உயிர்கள் பிறவி தோறும் உருவம் மாறித் தோன்றும் எனின் அவை எங்கிருந்து தோன்றும் என்ற வினா எழும். தூல உடம்பு முற்கூறிய நுண்ணுடம்பிலிருந்தும் தோன்றுவதாகும். இவ்வாறு விடையிறுத்தால் மற்றொரு வினா எழும் பல்வகைப்பட்ட பரு உடம்புகள் ஒன்றே ஆகிய நுண்ணுடம்பிலிருந்து தோன்றும் என்று கூறுவது உள்ளதே தோன்றும் என்ற சற்காரிய வாதத்துக்கு முரண் பட்டதன்றோ என்பதே அவ்வினா. பொன்னிலிருந்து மாலை வீர சங்கிலி போன்ற அணிகலன்கள் அவற்றைச் செய்வானது ஆற்றலால்

வெவ்வேறாகச் சமைக்கப்படுகின்றன. அவ்வாறே ஒப்பற்ற ஆற்றலுடைய சிவபெருமானால் ஒரு நுண்ணுடம்பு பல்வேறுபட்ட பரு உடம்புகளாய்த் தோன்றுதல் கூடும் என்று தெளிவாயாக.

சூக்குமம் கெட்டுத் தூலம் தோன்றிடா சூக்குமத்தின்
ஆக்கி ஓர் உடல் கிடப்பது இன்று உடல் ஆக்கும் தன்மைக்கு
ஒக்கிய சத்தி உண்டாய் உடல்தரும் காலம் உற்று
நீக்கிட மரம் பின்வேர் ஓர் நீள்மரம் நிகழ்த்து மாபோல். 138

நுண்ணுடம்பிலிருந்து பரு உடம்பு எவ்வாறு தோன்றும் என்பது இதனை அடுத்து எழுகின்ற வினா ஆகும். விதை கெட்டு மரம் ஆவது போல சூக்கும உடல் கெட்டுப் பருஉடல் தோன்றுவது அன்று. திங்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாகக் கலைகள் தோன்றுவதைப் போன்று பரு உடல் தோன்றுவது அன்று. அதற்கு உவமை யாது எனின் பல்லாண்டுகள் வாழ்ந்த ஒரு மரத்தினை வெட்டி நீக்கிய பிறகு அந்த மரத்தின் வேரினின்று மற்றொரு மரம் உண்டாதலே உவமையாகும். நுண்ணுடம்பில் தூல உடம்பிற்குத் தகுதியான ஆற்றல்கள் தங்கியிருந்து தோன்றுவனாவகும்.

இப்பாடலுக்கு உரை எழுதிய சிவஞானமுனிவர் இதனை அடுத்து வரும் பாடலின் கருத்தையும் உட்கொண்டு உரை கண்டார். யோக்கியம் என்பது ஒக்கியம் என மருவிற்று எனவும் முனிவர் கூறினார்.

விதிப்படி சூக்குமத்தே உருவரும் வினையால் இங்கே
உதித்திடா உருவமாக உருவரும் மரங்கள் வித்தில்
கதித்து எழும் மரமும் வித்தும் கழியும் பின் அழியும் சூக்கம்
மதிக்கு எழு கலைகள் போல வருவது போவதாமே. 139

உருவமாய் வளர்ந்து ஓங்கி விளங்குகின்ற மரங்கள் வித்திலிருந்து தோன்றிப் பருத்து எழுந்தவை ஆகும். அதுபோலவே உயிர்களின் வினைக்கு ஏற்ப இறைவனது ஆணையால் பரு உடம்புகள் நுண்ணுடம்புகளில் இருந்தும் தோன்றும். இங்கே ஒரு ஐயம் எழுப்பப்படும். மரம் அழியும் போது அதற்கு மூலமாகிய வித்தும் அழிதலைக் காண்கிறோம். அது போலவே பரு உடம்பு அழியும் போது அதற்குக் காரணமான நுண்ணு டம்பும் அழியுமா என்பது ஐயம். அவ்வாறு அன்று வித்திலிருந்து மரம் தோன்றும் என்னும் உவமை நுண்ணுடம்பிலிருந்து பரு உடம்பு தோன்றுவதற்கு ஒரு புடை ஒப்புமையே அன்றி முற்றுவுவமை அன்று. இங்கே பொருந்துகின்ற உவமை எது எனில் திங்களின் பதினாறு கலைகளில் ஒன்று அழியாமல் நிற்கும். அதுவே காரணமாகி மற்றக் கலைகள் முறையே தோன்றுதலும் ஒடுங்குதலுமாக வளர்வதும் தேய்வதும் நிகழ்கின்றன. அது போல நுண்ணுடம்பு அழியாது நிற்க அதிலிருந்து பரு உடம்பு தோன்றுவதும் ஒடுங்குவதும் நிகழும்.

இவ்வாறு அருந்தா பத்தி அளவையால் பரு உடம்புகள் தமக்கு ஒரு முதல் இல்லாத வழி உருவமாகத் தோன்றிடா என்று ஆசிரியர் வலியுறுத்தினார்.

தூலமாம் உருவினுக்குச் சூக்குமம் முதல் அதற்கு
மூலம், மான்; அதற்கு மூலம் மோகினி அதன் முதல்தான்
மேலதாம் விந்து சத்தி சிவம் இவை மிசை யாம் எல்லாம்
சால இன்று ஆகும் – ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்த போது. 140

பரு உடம்பிற்கு முதற் காரணமாக அமைந்தது நுண்ணுடம்பு. நுண்ணுடம்பிற்கு முதற் காரணமாக அமைந்தது மூலப்பகுதி. அதற்கு முதற்காரணமாக அமைந்தது மோகினி. மூலப் பகுதிக்குக் காரணமாகிய மோகினியே யாவற்றுக்கும் பரம முதற்காரணம் எனப்படும். இவற்றுக்கு மேலானது குண்டலினி சத்தி. அது தூய்மையே வடிவாய் இவை அனைத் திற்கும் வியாபகமாய் விளங்கும். உயிர் சிவத்தினைப் பொருந்தும் போது இவை யாவும் இலவாய்ப் போகும். உயிர் கட்டு நிலையிலே இருக்கும் வரைக்கும் இவையும் உள்ளனவாம்.

ஒவ்வொன்றுக்கும் முதற்காரணத்தை முறையே சொல்லிக் கொண்டு வருகிறார். பரு உடம்புக்கு நுண்ணுடம்பும், நுண்ணுடம்புக்கு மூலப் பகுதியும், மூலப்பகுதிக்குத் தூவாமாயையும் காரணம் என்கிறார். மான் என்றது மூலப்பகுதியை, மோகினி என்றது தூவாமாயையை. இது அசுத்தமாயை எனவும் படும். மற்ற உரையாசிரியர்கள் எல்லாம் மோகினிக்குக் காரணம் சுத்தமாயை என்னும் விந்து என்றும் பொருள் கண்டனர். சிவஞான முனிவர் இவர்களிலிருந்து மாறுபட்டு உரை காண்கிறார். அவருடைய உரை பின் வருமாறு; " அதன் முதற்றானென்பது அம்மூலப் பகுதிக்கு முதலாகிய தானென இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாய் மோகினியின் மேனின்றது. அதன் முதற்றானென்று அனுவதித்து மேலதாம் எனப் பரம முதற்காரணமாதல் கூறப்பட்டது; இவ்வாறன்றி முதல் என்ற தனை எழுவாயாக வைத்து உரைப்பார்க்கு, றகரம் இரட்டித்தல் பொருந்தாமையும் சித்தாந்தத்திற்கு ஏலாமையும் உணர்க".

அது போலவே சால இன்றாகும் என்பதற்கு மற்றைய உரையாசிரியர்கள் "ஆன்மா சிவத்திலே சார்ந்த போது இவை முற்றிலும் இல்லாமல் போகும்" என்று உரை கண்டனர், சிவஞான முனிவரோ இப் பகுதிக்கு உரை எழுதும் போது "ஆன்மா சிவத்தினைச் சார்தற்கு ஏதுவாகிய பக்குவ காலம் அமைதற் பொருட்டு இப்பெத்த காலத்து உளவாவன என்க" என்று உரை வரைந்தார்.

மூன்றாம் அதிகரணம்

அரன்விதி அருள தென்றே அறைந்தனன் அதுவும் முன்னே
தரை நரகு அருந்துறக்கம் தனுகரணாதி எல்லாம்
வருவதும் செய்து அநாதி மலங்கள் இம்மருந்தால் தீர்த்து
பரகதியதுவும் தந்து பாத பங் கயமும் சூட்டும், 141

சிவபெருமானுடைய செயல்கள் யாவும் அவனுடைய திருவருளே ஆகும் என்று முன்பே கூறப்பட்டது. இந்நில உலகம், நிரயம், துறக்கம் முதலிய உலகங்களில் சென்று ஆங்காங்கு உள்ள வினைப்

பயன்களை உயிர்கள் நுகர்வதற்கு உரிய உடல் உறுப்புகள் முதலியவற்றையும் இறைவனே அவற்றுக்குப் படைத்து அளித்தான். தொன்று தொட்டே உயிர்களைப் பற்றிய ஆணவமலம், கன்மமலம் ஆகிய நோய்களை இத்தகைய மருந்துகளினால் தீர்த்து அதன் பின்னர் பரஞானத்தை விளக்கி அதன் பின்னர் தன்னுடைய திருவடி மலர்களையும் இறைவனே அளித்தருளுவான்.

மேலே 105-வது பாடலில் 'எக்கிரமத்தினாலும் இறை செயல் அருளே என்றும்' என ஆசிரியர் கூறியதனை இங்கே மீண்டும் நினைவுறுத்தினார். மலமும் கன்மமும் ஆகிய நோய்களைத் தீர்ப்பதற்காக மாயையின் விளைவான உடல், கருவி, உலகு, நுகர்ச்சிப் பொருள் ஆகியவற்றை இறைவன் அவற்றுக்கு வழங்குகிறான்.

எழும் உடல் கரணம் ஆதி இவை மலம் மலம் மலத்தால்
கழுவுவன் என்று சொன்ன காரணம் என்னை? என்னின்
செழுநவை அறுவை சாணி உவர் செறிவித்து அழுக்கை
முழுவதும் கழிப்பன் மாயை கொடு மலம் ஒழிப்பன் முன்னோன் 142

மாயையிலிருந்து தோன்றுவனவாகிய உடல் கரணம் முதலிய யாவும் மலமேயாம். அவ்வாறு இருந்தும் இறைவன் மாயையாகிய மலத்தைக் கொண்டு ஆணவமலம், கன்மமலம் ஆகியவற்றை நீக்குவான் என்று கூறுவது பொருந்துமோ என்று சிலர் தடை எழுப்புவர். சலவைத் தொழிலாளாகள் துணியில் உள்ள அழுக்கைச் சாணியையும் உவர் மண்ணையும் பயன்படுத்தியே போக்குவர். அதே போல இறைவனும் மாயையைக் கொண்டு உயிர்களைப் பற்றியுள்ள மலங்களை ஒழிப்பான்.

முள்ளைக் கொண்டே முள்ளை எடுப்பது போல இறைவன் மாயையாகிய மலத்தைக் கொண்டு மலங்களை நீக்குவான் எனக் கொள்க.

நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய் புவன போகம் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே. 143

உலகிற்கு முதற்காரணம் எனப்படுகிற மாயை என்பது நித்தப் பொருளாகியும், அருவமாகியும், ஒன்றாகியும், உலகத் தோற்றத்திற்கு வித்தாகியும், அறிவற்ற சடமாகியும், எவ்விடத்தும் நிறைந்தும், இயல்பாகவே மலங்களிலிருந்து நீங்கிய இறைவனுக்கு வைப்பாற்றலாகியும், உயிர்களுக்கு உடல் கருவி உலகு நுகர்ச்சிப் பொருள்களாக விரிவடைகின்ற மலமாகியும், சில நேரங்களில் மயக்கத்தைத் தருவதாயும் விளங்கும்.

நித்தம் - நிலையான பொருள். ஏக நிலையதாய் - ஒன்றேயாகிய பொருள். வியாபியாய் - எங்கும் பரந்திருக்கும் பொருள். விமலனுக்கு ஒரு சத்தி என்பது இறைவனுக்கு வைப்பு ஆற்றலாய்

விளங்கும் என்பதைக் குறித்தது. இதனை வடமொழியில் பரிக்கிரக சத்தி என்பர். இச்சத்தி இறைவனோடு எப்போதும் இருப்பினும் அவனால் வேண்டும் போது மட்டும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இப்பாடலில் சைவசித்தாந்தத்தின்படி மாயையின் இயல்புகள் யாவும் ஒருங்கே தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

மாயையில் காலமோடு நியதி பின் கலாதி தோன்றும்;
ஆய அக்காலம் மூன்றாய் ஆக்கியும் அளித்தும் போக்கிக்
காயமோடு உலகுக்கு எல்லாம் காலசங்கையினைப் பண்ணி
நாயகன் ஆணையாலே நடத்திடும் சகத்தை எல்லாம் 144

மாயையிலிருந்து காலம், நியதி என்னும் தத்துவங்களும் அதன் பின்னர் கலை முதலிய தத்துவங்களும் தோன்றும். காலதத்துவம் நாயகனாகிய சிவபெருமான் ஆணையினால் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று மூன்று வகைப்படும். காலதத்துவம் உலகத்தைப் படைத்து நிலை நிறுத்தியும் ஒடுக்கியும் உடம்பொடு கூடிய உயிர்களுக்குக் காலத்தை வரையறுத்தும் உலகனைத்தையும் நடத்தி வரும்.

காலசங்கை - காலவரையறை. நாயகன் ஆணையாலே என்ற தொடரை தத்துவங்களைப் பற்றி எடுத்துரைக்கின்ற பாடல்கள் அனைத்தோடும் பொருத்திப் பொருள் காண வேண்டும்.

நியதிபின் தோன்றி கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்;
அயர்வு இலாக் கலை பின்தோன்றி, ஆணவம் ஒதுக்கி சித்தின்
செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்கும் சிறிதே; வித்தை
உயர்கலை யதனில் தோன்றி அறிவினை உதிக்கப் பண்ணும், 145

காலம் தோன்றிய பிறகு மாயையிலிருந்து தோன்றுவது நியதி தத்துவம் எனப்படும். உயிர்கள் ஒவ்வொன்றும் செய்த வினையின் பயனை அதுவதுவே நுகருமாறும் அந்த நுகர்ச்சியில் மிகுதியோ, குறைச்சலோ இல்லாதவாறும் செய்வதனால் அது நியதி தத்துவம் எனப்பட்டது. அதன்பின் மாயையி-லிருந்து கலை என்னும் தத்துவம் தோன்றும். கலை ஆணவமலத்தின் மறைப்பைச் சற்றே நீக்கி உயிரின் தொழில் ஆற்றலை விளக்கும். மேலும் வினைக்கு ஈடாக வரும் நுகர்ச்சியில் செலுத்தும். கலை என்பதிலிருந்து வித்தை என்னும் தத்துவம் தோன்றும். இது உயிரின் அறிவாற்றலை விளக்கு வதாகும். இதனால் நுகர்வுகளைப் பொருந்திய உயிர்கள் நுகர்வுகளை அறியும் திறனும் பெறும்.

விச்சையில் அராகம் தோன்றி வினைவழி போகத் தின்கண்
இச்சையைப் பண்ணி நிற்கும்; தொழில், அறிவு, இச்சை மூன்றும்
வைச்சபோது, இச்சா ஞானக் கிரியைமுன் மருவி, ஆன்மா
நிச்சயம் புருடன் ஆகி, பொதுமையின், நிற்பன் அன்றே. 146

வித்தை என்னும் தத்துவத்திலிருந்து நாயகன் ஆணையால் அராகம் என்னும் தத்துவம் தோன்றும். இது உயிரின் விழைவு ஆற்றலை

விளக்கி வினைக்கு ஈடாக வருகின்ற நுகர்வுகளில் செலுத்தும். கலை உயிரின் தொழிலாற்றலையும், வித்தை அறிவாற்றலையும், அராகம் விழைவு ஆற்றலையும் முறையே விளக்கிய போது உயிர் புருட தத்துவம் என்னும் பெயர் பெற்றுப் பொதுவான நிலையில் நிற்கும்.

இந்நிலையில் உயிர், காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்து சட்டைகளுடன் நிற்கும் என்று கூறப்படும். இவற்றைப் பஞ்சகஞ்சுகம் என்பர். இவ்வாறு நிற்கும் நிலை பொதுமையாகும். "சிறப்பு வகையால் புருடதத்துவம் என நிற்றல் மூலப்பகுதியில் தோன்றும் அவிச்சை முதலிய பஞ்சக்கிலேசமும் உடைத்தாய வழி என்பார், ஈண்டு பொதுமையில் நிற்பன் என்றார்" என்பது சிவஞான முனிவர் உரை.

வரும்குண வடிவாய் மூலப்பிரகிருதி கலையில் தோன்றித்
தரும்குணம் மூன்றாய், ஒன்றில்தான் மூன்றாய் மும்மூன்று ஆகும்,
இருங்குண ரூபமாகி இயைந்திடும், எங்கும் ஆன்மா;
பெருங்குண வடிவாய், போக சாதனம் பெந்தமாமே. 147

கலை என்னும் தத்துவத்திலிருந்து தோன்றுவது மூலப்பகுதி எனப்படும். இது சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூன்று குணங்களைத் தன்னுள் அடக்கியதாக விளங்குவது. குணங்கள் மூன்றும் வெளிப்பட்டுத் தோன்றும் போது அது குணதத்துவம் என்ற பெயரால் அழைக்கப்படும். மூன்று குணங்களும் ஒவ்வொன்றும் மூன்று வகைப்பட்டு ஒன்பதாகும். நுகர்வுக்குரிய சாதனமாய் அதனிடத்துத் தோன்றும் புத்தி முதலிய தத்துவங்களும் பெரிதாகிய குணவடிவே ஆக உயிர்களைக் கட்டுக்குள் அகப்படுத்தும். அதனால் உயிர் நுகர்கின்ற காலத்தில் அக்குணவடிவாகவே விளங்கும்.

மூலப்பகுதி - மூலப் பிரகிருதி. மூலப்பகுதியில் குணங்கள் வெளிப்பட்டுத் தோன்றாது இருப்பதனால் அதற்கு அவ்வியக்தம் என்றும் பெயர் உண்டு குணங்கள் மூன்றும் சாத்துவிகத்தில் சாத்துவிகம், சாத்துவிகத்தில் இராசதம், சாத்துவிகத்தில் தாமதம் என்று இவ்வாறு மூன்று வகைப்படும். இதனால் ஒன்பது வகை கூறப்பட்டது.

சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனையதுவும் செய்யும்;
புத்தி அவ்வியத்தில் தோன்றிப் புண்ணிய பாவம் சார்ந்து,
வத்துநிச்சயமும் பண்ணி, வரும் சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி, ஞானக் கிரியையும் பேணி நிற்கும், 148

மூலப்பகுதியிலிருந்தும் சித்தம் தோன்றும். அது உயிர்களுக்கு நுகர்விற்கு உரிய சிந்தனையையும் தோற்றுவிக்கும். மூலப்பகுதியிலிருந்தே புத்தி எனும் தத்துவமும் தோன்றும். உயிர்களின் புண்ணிய பாவங்கட்கு ஏற்ப ஒரு பொருளை இன்னது என நிச்சயிக்கும். அதன் பின்னர் இன்பம், துன்பம், மயக்கம் ஆகிய உணர்வுகளைத் தோற்றுவித்தும் உயிரின் அறிவையும், தொழிலையும் பேணியும் நிற்கும்.

'சித்தமாம் அவ்வியத்தம்' என்ற தொடருக்கு உரை எழுதும் போது மாதவச் சிவஞான முனிவர் "குணதத்துவத்துககுக் காரணம் என சித்திக்கப் பட்டதாகிய மூலப்பகுதி" என்று உரைகண்டார். அவ்வாறு உரை வகுத்ததற்கான காரணத்தையும் தனது உரையின் பிற்பகுதியில் விளக்கினார். இந்தப் பகுதி நயமுடையது. வத்து நிச்சயம் - வஸ்து -நிச்சயம்; பொருளை நிச்சயித்தல்.

ஆங்காரம், புத்தியின் கண் உதித்து, அகந்தைக்கு வித்தாய்,
ஈங்கு ஆர்தான் என்னோடு ஒப்பார் என்று, 'யான் என்னது' என்றே
நீங்காதே நிற்கும்; தானும் மூன்றதாய் நிகழும் என்பர்.
பாங்கு ஆர்பூதாதி, வைகாரிகம், தைசதந்தான் என்றே. 149

புத்தி தத்துவத்திலிருந்து அகங்காரம் தோன்றும். இதுவே அகந்தைக்கு வித்தாகும். இங்கு என்னை ஒப்பவர் யார் என்ற தருக்கும் யான் எனது என்ற, இருவகைப் பற்றுக்களும் உயிரோடு வேற்றுமை இல்லாமல் நிற்பதற்கு அகங்காரமே காரணமாகும். இது மூன்று வகையாகப் பகுக்கப்படும். அவை முறையே பூதாதி அகங்காரம், வைகரி அகங்காரம், தைசத அகங்காரம் என்பனவாம்.

மனமது தைசதத்தின் வந்து, ஒரு பொருளை முந்தி
நினைவதும் செய்து அங்கு ஐய நிலைமையின் நிற்கும்; ஆங்கே,
இனம்மலி சோத்திராதி, கன்மஇந்திரியம் எல்லாம்,
முனம் உரை செய்தவைகா ரிகம் தரும் என்பர் முன்னோர். 150

தைசத அகங்காரத்தினின்றும் மனம் தோன்றும். மனம் என்பது தனக்கு எதிர்ப்பட்ட ஒரு பொருளை இது யாதோ என்று நினைத்து ஐயம் கொள்ளும். மனத்தின் பின்னர் அறிவுப் பொறிகளும் தைசத அகங்காரத் திலிருந்தே தோன்றும். வைகரி அகங்காரத்திலிருந்து தொழிற் பொறிகள் ஐந்தும் தோன்றும் என்பர் முன்னோர்.

நல்செவி, துவக்குக், கண், நா, நாசிஐந்தினையும், நல்லோர்,
புத்திஇந் திரியம் என்று புகன்றனர்; இவை தமக்குச்,
சத்த, நற் பரிச; ரூப, இரத, கந்தங்கள் ஐந்தும்,
வைத்தனர், விடயமாக அடைவினின் மருவும் என்றே. 151

காது, மெய், கண், நா, மூக்கு, ஆகிய ஐந்தினையும் அறிவுப் பொறி என்று நல்லோர் கூறினர். இவற்றுக்குப் புலப்படுவனவாக ஓசை ஊறு உருவம் சுவை மணம் என்ற ஐந்தினையும் முறையே கூறுவார்கள்.

உடலில் உள்ள அறிவுப் பொறிகள் ஐந்தாகும். அவை மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும். இங்கு அவற்றை மாற்றி அமைத்ததற்குக் காரணம் அவற்றுக்குப் புலனாகின்ற பொருள்களாகக் கூறப்படுகின்ற சத்த பரிச ரூப இரச கந்தம் என்ற வைப்பு முறை பற்றி என்க. வடமொழியில் அறிவுப் பொறிகள் ஞானேந்திரியம் என்று கூறப்பெறும். செவியை சோத் திரம் என்றும், மெய்யைத் துவக்கு என்றும், கண்ணை சட்சு என்றும் நாவை சிங்குவை என்றும், மூக்கை ஆக்கிராணம் என்றும் வடநூலார் வழங்குவர்.

வாக்கொடு பாதம் பாணி பாயுவோடு உபத்தம் ஐந்தும்
நீக்கினர் முன்னே கன்மேந்திரியங்கள் என நினைந்தே;
ஆக்கிய வசன, கமன, தானமும் விசர்க்க ஆனந்தம்
ஊக்கமார் ஐந்தும் ஐந்தின் தொழிலென ஓதினாரே. 152

தொழிற் பொறிகள் என்பன வாக்கு, கால், கை, எருவாய், கருவாய் என்ற ஐந்துமாகும். இவற்றை நல்லோர் மேற் கூறப்பட்ட அறிவுப் பொறிகளில் இருந்து வேறுபட்டன என்று தனித்து வைத்தனர். இங்குக் கூறப்பட்ட தொழிற் பொறிகள் ஐந்தினுக்கும் உரிய தொழில்கள் முறையே சொல்லுதல், நடத்தல், இடுதல், கழித்தல், மகிழ்தல் என்றும்அமைத்தனர்.

வாக்கு - சொல், பாதம் - கால், பாணி - கை, பாயுரு - எருவாய், உபத்தம் - கருவாய், வசனம் - சொல்லுதல், கமனம் - நடத்தல், தானம் - இடுதல், விசர்க்கம் - கழித்தல், ஆனந்தம் - மகிழ்ச்சியைத் தருதல்.

வாயாதி சோத்திராதி புறத்து வாழ் கருவி ஆகும்.
ஓயாத மனாதி காயத்து உணரும் உட்கருவி ஆகும்.
ஆய்வார்கட்கு அராகம் ஆதி அவற்றின் உட்கருவி என்பர்.
மாயாள் தன் வயிற்று, இவற்றால் துடக்குண்டு வாழும் ஆன்மா. 153

சொல் முதலிய தொழிற் பொறிகளும் காது முதலிய அறிவுக் கருவிகளும் உடம்பின் புறத்தே உள்ள கருவிகள் ஆகையால் இவை பத்தும் புறக் கருவிகள் என்று கூறப்படும். எதிலும் நிலைத்து நில்லாத ஓய்வறியாத மனம் முதலியன உடம்பின் உள்ளே நின்றும் செயற்படுகின்ற கருவிகள். ஆகையினால் அவற்றை அகக் கருவிகள் என்று கூறுவார்கள். நுண்மையாக ஆராய்பவர்களுக்கு மனம் முதலிய அகக் கருவிகளுக்கும் அகக் கருவிகளாய் அராகம் முதலியன செயல்படுகின்றன என்பது புலனாகும். இங்குக் கூறப் பட்டயாவும் மாயையின் வயிற்றில் பிறந்து உயிரைத் தளைப்படுத்தி நிற்பனவாகும்.

ஓசை நன் பரிச ரூப இரத கந்தங்கள் என்று
பேசுமாத்திரைகள் ஐந்தும் பிறக்கும் பூ தாதி கத்தின்
நேச இந்திரியங்கட்கு நிகழ் அறிவு இதனாற் காண்டும்,
ஆசைசேர் மனாதி தன்மாத்திரை புரி அட்டகந்தான், 154

பூதாதி அகங்காரத்திலிருந்து ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்ற ஐந்து தன்மாத்திரைகளும் தோன்றும். இவை மேலே கூறப்பட்ட பொறிகளைத் தூண்டிப் பொருள்களை அறியும் விருப்பத்தினை அவற்றுக்கு ஊட்டுவனவாகும். விழைவைத் தோற்றுவிக்கின்ற மனம் புத்தி அகங்காரம் ஆகிய மூன்றும், இங்குக் கூறப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்தும் ஆகிய எட்டும் சேர்ந்த கூட்டமே புரியட்டக உடல் எனப்படும்.

செய்யுளின் மாத்திரை என்று குறிக்கப்பட்டது தன் மாத்திரை என்னும் சொல்லின் தலைக்குறையாகும். முன்னர் 151-வது பாடலில் கூறப்பட்ட ஐந்தும் விடயங்கள் என்று கூறப்படும். அவற்றுக்கும் இங்கே கூறப்பட்ட ஓசை ஊறு உருவம் சுவை மணம் ஆகிய வற்றுக்கும் வேறுபாடு உண்டு. இவ்வைந்தும் மிக நுண்ணியவாய் இருத் தலின் இவற்றைத் தன்மாத்திரை என்றனர் பெரியோர்.

சாற்றிய பஞ்ச தன்மாத்திரைகளின் சத்தம் முன்னாத்
தோற்றும், வான், வளி தீ, நீர், மண்; தொடக்கியே ஒன்றுக்கு ஒன்று அங்கு
ஏற்றமாம் ஓசை ஆதி இருங்குணம் இசைந்து நிற்கும்
ஆற்றவே விடயம், பூதம், அங்காங்கி பாவத்து ஆமே. 155

ஓசை ஊறு உருவம் சுவை நாற்றம் என்று கூறப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்திலிருந்தும் முறையே வான் வளி நெருப்பு நீர் மண் என்னும் ஐம்பெரும் பூதங்களும் தோன்றும். அவற்றிலிருந்து தொடங்கி ஒவ்வொன்றாகக் கூடி ஓசை முதலிய ஐந்து குணங்களும் இசைந்து நிற்கும். ஐம்பெரும் பூதங்களும் அவற்றுக்குக் கூறப்பட்ட குணங்களும் உடலும் உயிரும் போலப் பொருந்தி வரும்.

தன்மாத்திரைகளிலிருந்து ஐம்பெரும் பூதங்கள் குணங்களைப் பொருந்தித் தோன்றும் என்பது பாடலில் கூறப்பட்டது. விண் காற்று நெருப்பு நீர் மண் ஆகிய இவற்றின் குணங்கள் ஒன்றற்கு ஒன்று கூடினதாக அமையும் என்றார். விண், ஓசை மட்டுமே உடையது. காற்று, ஓசையும் ஊறும் உடையது. தீ, ஓசை, ஊறு ஒளி மூன்றையும் உடையது. நீர், ஓசை ஊறு ஒளி, சுவை நான்கினை உடையது. மண், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய ஐந்தொடும் கூடியதாகும். இவை யாவும் அகப்பூதம், அகப்புறப்பூதம், புறப்பூதம், என்று மூன்று வகைப்படும். இதனைத் தொடர்ந்து வரும் பாடல்களிலே புறப்பூதங்களுடைய இயல்பு ஆசிரியரால் கூறப்படுகிறது.

இரந்தரமாகி வான் தான் இடம் கொடுத்திடும்; சலித்துப்
பரந்தவை திரட்டும், கால் தீ சுட்டு ஒன்று வித்தல் பண்ணும்
நிரந்தரம் குளிர்ந்து நின்று பதஞ்செயும், நீர், மண் தானும்
உரந்தரு கடின மாகித் தரித்திடும்; உணர்ந்து கொள்ளே. 156

இங்கே கூறப்பட்ட ஐம்பெரும் பூதங்களுள் வான் பெருவெளியாகித் தன்னிடத்திலே மற்றைப் பொருள்கள் யாவும் இயங்குவதற்கு இடம் தரும். காற்று சலித்தலும் பரந்தவற்றைத் திரட்டுதலுமாகிய இயல்பும் தொழிலும் உடையது. நெருப்பு சுடுதலும் ஒன்றுவித்தலுமாகிய தன்மைகளை உடையது. நீர் எப்போதும் குளிர்ந்து இருக்கும். அதன் தொழில் பதம் செய்தல் ஆகும். மண் வலிமை உடையதாகிக் கடினமாக விளங்கும். யாவற்றையும் தாங்குவதாகிய தொழிலைச் செய்யும்.

இந்தப் பாடலில் ஐம்பெரும் பூதங்கள் ஒவ்வொன்றின் பண்பும் தொழிலும் கூறப்பட்டன.

மண் புனல், அனல், கால், வான்; பால் வடிவு நாற்கோணம், ஆகும் –
தண்பிறை மூன்று கோணம் தகும் அறுகோணம் வட்டம்.
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்போடு தூமம் வன்னம்.
எண்தரும் எழுத்துத் தானும் ல, வ, ர, ய அவ்வுமாமே. 157

ஐம் பெரும் பூதங்கட்கும் தனித்தனி வடிவமும் நிறமும் எழுத்தும் இன்னவென்று ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. மண்ணின் வடிவம் நாற்கோணம். அதன் நிறம் பொன்மை. அதற்குரிய எழுத்து லகரம், நீருக்கு உரிய வடிவு தண்ணியபிறை. அதன் நிறம் வெண்மை, எழுத்து லகரம். தீயின் வடிவு முக்கோணம். நிறம் செம்மை. எழுத்து ரகரம். காற்றின் வடிவு அறு கோணம். அதன் நிறம் கருமை. அதற்குரிய எழுத்து யகரம். விண்ணின் வடிவு வட்டம். அதன் நிறம் புகைநிறம். இதற்குரிய எழுத்து அகரம்.

குறிகள் வச்சிரத்தினோடு கோகநதம் சுவத்தி
அறுபுள்ளி அமுதவிந்து அதிதெய்வம் – அயன் மால் ஆதி
செறிபுகழ் ஈசனோடு சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலை ஐந்திற்கும் நிகழ்த்துவர் இந்த நீர்மை. 158

ஐம் பூதங்கட்கும் உரிய அடையாளமும் அதி தெய்வமும் இப்பாடலில் கூறப்படுகின்றன. மண்ணிற்குரிய அடையாளம் வச்சிராயுதம். அதி தெய்வம் அயன். நீருக்குரிய அடையாளம் தாமரை. அதி தெய்வம் திருமால். நெருப்பிற்கு உரிய அடையாளம் இருதலை மேழி. அதி தெய்வம் உருத்திரன். காற்றுக்கு உரிய அடையாளம் அறு புள்ளி. அதன்அதி தெய்வம் மகேசுவரன். விண்ணிற்கு உரிய அடையாளம் அமுதத்துளி. அதன் அதிதெய்வம் சதாசிவன். நிவிருத்தி முதலிய ஐந்து கலைகளுக்கும் உரிய தெய்வங்களும் இந்த முறையிலேயே அமையும் என்பர்.

ஐந்து கலைகளாவன நிவிருத்தி கலை, பிரதிட்டா கலை, வித்தியா கலை, சாந்தி கலை, சாந்தியதீத கலை என்பனவாகும்.

சுத்ததத் துவங்கள் என்று முன்னமே சொன்ன ஐந்தும்
இத்தகைமையின் இயம்பும் இவை முப்பத் தொன்று மாக
தத்துவம் முப்பத்தாறாம் சைதன்னி யங்கள் ஐந்தும்
சித்து அசித்து ஆன்மா ஒன்று முப்பதும் அசித்தே செப்பில். 159

முன்பே கூறப்பட்ட சுத்த தத்துவங்கள் ஐந்தும் அதன் பின்னர்க் கூறப்பட்ட அசுத்த தத்துவங்கள் 31-ம் ஆகத் தத்துவங்கள் மொத்தம் 36 ஆகும். இவற்றுள் முதலில் கூறப்பட்ட ஐந்தும் அறிவுடையவை ஆகும். உயிர் என்பது சார்ந்ததன் வண்ணம் ஆவதாலும் உணர்த்த உணர்தலாலும் சித்தசித்து எனப்படும். இவை ஆறும் தவிர்ந்த மற்றைய முப்பதும் அறிவற்றனவேயாகும்.

சுத்ததத்துவங்கள் பற்றி இந்நூலின் பாடல் 86-ல் ஆசிரியர் எடுத்துரைத்தார். அதற்குப் பின்வரும் பாடல்களிலும் அசுத்த தத்துவங்கள் முப்பத்தொன்றையும் விரித்துக் கூறினார். இவற்றுள் சுத்ததத்துவங்கள் ஐந்தும் அறிவற்றனவே ஆயினும் சித்சத்திக்கு உரிய வடிவங்களாக விளங்குவதால் அவை அறிவுடையனவாகவே கொள்ளப்பெறும் ஆன்மா ஒரு வகையால் அறிவுடையதாகியும் மற்றொரு வகையால்'அறிவற்றதைச் சார்ந்தும் நிற்பதால் அதனைச் சித்தசித்து என்றனர். மற்றைய முப்பது தத்துவங்களும் அறிவற்றனவே. சித்து - அறிவுடைப் பொருள். அசித்து - அறிவற்ற பொருள். சைதன்யம் - அறிவுடையன.

ஐந்துசுத் தத்தின் கீழ் ஏழ் – சுத்தாசுத் தம் அசுத்தம் –
தந்திடும் புமான் கீழ் எண்மூன்றாயதத் துவம்; சீவர்க்கு
வந்திடும் பிரேர காண்டம் ! மருவுபோக சயித்தி ரத்தோடு
அந்தம் இல் அணுக்களுக்குப் போக்கிய காண்டம் ஆமே. 160

மேலான தத்துவங்கள் ஐந்தும் சுத்த தத்துவங்கள் எனப்பட்டன. இத்தொகுதி பிரேரக காண்டம் என்றும் பெயர் பெறும். சுத்த தத்துவத்தின் கீழ்ப்பட்டனவாகிய ஏழு தத்துவங்களும் ஒரு தொகுதியாகக் கொள்ளப் படும். இதனை மிசிர தத்துவங்கள் என்பர். இத்தொகுதி போசயித்திரு காண்டம் என்று பெயர் பெறும். புருட தத்துவத்திற்குக் கீழ்ப்பட்டதாகிய 24 தத்துவங்களும் அசுத்த தத்துவங்களாகும். இத்தொகுதியை போக்கிய காண்டம் என்பர். எண்ணற்ற உயிர்களுக்கு இன்பத் துன்ப நுகர்வுகளைத் தருவன இவையே.

முதலாவதாகக் கூறப்பட்ட சுத்த தத்துவங்களுக்கு சிவதத்துவம் என்னும் பெயரும் வழங்கும். இவையே உயிர்களின் நுகர்வுகளைச் செயற்படுத்துவன. எனவே இவற்றுக்குப் பிரேரக காண்டம் என்று பெயர்.

அதனை அடுத்துக் கூறப்பட்ட ஏழு தத்துவங்களும் வித்தியா தத்துவங்கள் என்றும் பெயர் பெறும். இவை உயிர்களின் அறிவையும், தொழிலையும் ஓரளவு விளக்கும் தன்மை உடையன. இத்தொகுதி சுத்தமும், அசுத்தமும் ஆகிய கலப்பு என்பதால் சுத்தா சுத்தம் எனவும் மிச்சிராத்துவா எனவும் கூறப்படும். மிச்சிரம் - கலப்பு. உயிர்களுக்கு இன்பத் துன்ப நுகர்வுகளை'ஊட்டுவதற்குக் காரணமாக இருப்பதனாலே இது போசயித் திரு காண்டம் எனப் பெயர் பெறும்.

அதன் பின்னர் வருகின்ற எண்மூன்று (8x3) இருபத்து நான்கு தத்துவங்களும் ஆன்ம தத்துவங்கள் என்று பெயர் பெறும். இவை அனைத்தும் உயிர்களுக்கு நுகர்ச்சியைத் தருதலின் போக்கிய காண்டம் என்று பெயர் பெறும். புமான் - புருடதத்துவம்.

தத்துவ ரூபமாகும் தரும் அரு உருவம் எல்லாம்;
தத்துவம் தூல சூக்க பரங்களும் ஆகி நிற்கும்
தத்துவம் தன்னில் சாரும் அணுக்கள் சாதாக்கியத்தில்
தத்துவம் சத்தம் சாரும் சகலமும் தத்துவம் காண், 161

உலகத்தில் காணப்படுகின்ற அருவம், உருவம், அரு உருவம் ஆகிய எல்லாப் பொருள்களும் மாயையிலிருந்தும் தோன்றிய இத்தத்துவங்களின் வடிவமேயாகும். இம்முப்பத்தாறு தத்துவங்களும் பருப் பொருளானவை என்றும், நுண்பொருளானவை என்றும், மீநுண்பொருளானவை என்றும் ஒவ்வொன்றும் மூன்று வகைப்பட்டு விளங்குவனவாகும். உயிர்கள் இத்துத்துவங்களைப் பொருந்தியே நிற்கும். அந்தந்தத் தத்துவத்தின் அதி தெய்வங்களுக்கும் அந்தந்தத் தத்துவங்களின் பெயரே பொருந்தும். எனவே, எல்லாப் பொருளும் தத்துவமாகவே காணப்படும்.

தத்துவம் எண் மூன்றும் சென்று ஆன்மதத் துவத்து ஒடுங்கும்
வித்தையின் ஒடுங்கும் ஆறும் சிவத்தினில் ஒடுங்கும் மூன்றும்
நித்ததத் துவம் இம்மூன்றும் என்பார்கள் இரண்டும் நின்ற
சத்தமாம் சிவத்து ஒடுங்கும்; தோற்றமும் இதுபோல் ஆகும். 162

இப்பாடலில் முப்பத்தாறு தத்துவங்களும் ஒடுங்குங் காலத்து எவ்வாறு ஒடுங்கும் என்பதைத் தொகுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

முப்பத்தாறு தத்துவங்களும் ஒடுங்கும் போது நிலம் முதல் மூலப் பகுதி வரையுள்ள இருபத்து நான்கும் சீகண்டருத்திரனில் அடங்கும். அதற்கு மேல் உள்ள ஏழு தத்துவங்களும் வித்தைக்கு உரிய அனந்தரில் ஒடுங்கும். அதற்கு மேல் உள்ள மூன்று தத்துவங்களும் இலய சிவனில் ஒடுங்கும். மற்ற இரண்டாகிய சத்தி தத்துவம், சிவதத்துவம் என்பன சுத்த சிவனில் ஒடுங்கும். மீண்டும் இவை தோற்றுவிக்கப்படும் போது அவையவை அவரவரால் தோற்றுவிக்கப்படும் என்று மேலோர் கூறுவர்.

நான்காம் அதிகரணம்

மொய்தரு பூதம் ஆதி மோகினி அந்தம் ஆக
பொய்தரு சமயம் எல்லாம் புக்கு நின்றிடும் புகன்று
மெய்தரு சைவ மாதி இருமூன்றும் வித்தை ஆதி
எய்துதத் துவங்கள் ஏயும் ஒன்றும் இன்று எம் இறைக்கே. 163

மெய்யை உணராத உலோகாயதம் முதலாகக் கூறப்படுகின்ற புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம் என்பன யாவும் மேலே கூறப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. ஆகவே அச்சமயத்தவர் நிலம் முதல் தூவாமாயை முடிய உள்ள தத்துவங்களையே கொண்டனர். எனவே அவர்களுக்கு அவரவர் கொண்ட தத்துவங்களின் எல்லை வரை புகுதல் கூடும். இவர்க்கு மேலாக அகச் சமயத்தவர் அறுவகையினரும் இறை, உயிர், தளை என்ற முப்பொருள் உண்மை கொள்பவர் ஆவர். எனவே அவர்கள் எய்துகின்ற தத்துவங்களாவன சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவங்களுள் ஒன்றாகவே அமையும். சித்தாந்த சைவத்திற்கு இறைவனாக விளங்குகின்ற சுத்தசிவன் இம்முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்பவன் ஆவான்.

மேலே 91-வது பாடலிலே 'நிலவு சீர் அமலன் ஆகி நின்றனன்' என்று இறைவனைப் பற்றி ஆசிரியர் கூறியதை இப்பகுதி விளக்குகிறது. எந்தெந்த சமயத்தினர் எந்தெந்தத் தத்துவங்களைக் கொண்டார்களோ அதன் அளவினன்றி அதற்கு மேல் அவர்களுக்குச் செல்லுதல் கூடாது. ஆகையினால் அதுவரையிலே சென்று புகுவர் என்றார். சைவ சித்தாந்தம் த்த்துவங்கள் முப்பத்தாறு எனக் கொண்டு இறைவனாகிய சிவபெரு மானைத் தத்துவங்களைக் கடந்தவன் என்று கூறுவதையும் இப்பாடலில் ஆசிரியர் விளக்கினார்.

சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால் அயன் ஒன்றின் ஒன்றாய்ப்
பவந்தரும் அருவம் நாலு இங்கு உருவநால் உபயம் ஒன்று ஆய்
நவம் தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர். 164

சிவம், சத்தி, நாதம், விந்து சதாசிவம் மகேசுரன், உருத்திரன், திருமால் அயன் ஆகிய இவ்வடிவங்கள் ஒன்பதும் முறையே ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றும். இவை அனைத்தையும் நவந்தரு பேதம் என்பர். சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய முதல் நான்கும் அருவத் திருமேனிகள். நடுவிலே உள்ள சதாசிவம் என்பது அருஉருவத் திருமேனி. மகேசுரன், உருத்திரன், திருமால், அயன் ஆகிய நான்கும் உருவத் திருமேனிகள். இவ்வொன்பது வடிவுகளையும் கொண்டருள்பவன் இறைவன் ஒருவனே என்று மேலோர் கூறுவர்.

சத்தியாய் விந்து சத்தி யாய் மனோன் மணி தானாகி
ஒத்துறும் மகேசை ஆகி உமை திரு வாணி ஆகி
வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன் வரும் சத்தி ஒருத்தி ஆகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள். 165

நவம் தரு பேதம் என்று மேலே கூறப்பட்ட ஒன்பது சிவ வடிவங்க ளுக்கும் ஒத்த சத்தி வடிவங்களும் ஒன்பது ஆகக் கூறப்படும். அவை முறையே சிவம், சத்தி, நாதம் விந்து மனோன்மணி மகேசுவரி உமை திருமகள், கலைமகள் என்பன. இவை ஒன்பதாகக் கூறப்படினும் அனைத்தும் சிவ சத்தியின் வடிவங்களே. அவ்வொருத்தியே ஒன்பது திருவடிவங்களைக் கொள்ளுவாள். ஏவ்வாறு சிவபெருமான் ஒன்பது வடிவங்களைக் கொண்டு இவ்வுலகை நடத்தி வருகிறானோ அவன் திறத்துக்கு ஏற்ப அவனுக்குத் துணையாய் நின்று சத்தியும் நடத்தி வருவாள்.

சத்திதான் நாதம் ஆதி தான் ஆகும்; சிவமும் அந்தச்
சத்திதான் ஆதி ஆகும்; தரும்வடிவு ஆன எல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும் சத்திதான் சத்தனுக்கு ஓர்
சத்தியாம் சத்தன் வேண்டிற்று எல்லாம் ஆம் சத்திதானே. 166

சத்தி, நாதம் முதலிய எல்லாவற்றோடும் கூடி நிற்கும். சிவமும் சத்தி முதலியவற்றை இடங்கொண்டிருக்கும். எனவே சத்தியினால் தரப்படும். எல்லா வடிவங்களும் சத்தி, சிவம் இரண்டிற்கும் பொது

வடிவங்களேயாகும். சத்தன் ஆகிய சிவன் வேண்டியவாறு எல்லாம் ஆவது சத்தியே. சத்தியே சிவபெருமானுக்கு ஒப்பற்ற தேவியும் ஆகும்.

சிவம் சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்து இரு வரும்புணர்ந்து இங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும்
பவன் பிரமசாரி ஆகும்; பான்மொழி கன்னி ஆகும்;
தவம் தரு ஞானத் தோர்க்குஇத் தன்மைதான் தெரியும் அன்றே. 167

சிவத்திலிருந்து சத்தி தோன்றும். சத்தியிலிருந்து சிவம் தோன்றும். சத்தியும் சிவமுமாகிய இருவரும் கூடி உயிர்களிடத்துக் கொண்ட பெருங் கருணையினால் அறிவுடையதும், அறிவற்றதுமாகிய உலகு உயிர்களைத் தோற்றுவிப்பர். அவ்வாறு இருந்தும் சிவபெருமான் பிரமச்சாரியே ஆவன். பாலினும் இனிய மொழியுடைய சத்தி இளங்கன்னியே ஆவாள். தவத்தினால் ஞானம் பெற்றவர்களுக்கு இவ்வுண்மை விளங்கும்.

பரசிவத்திலிருந்து பராசத்தியும் பராசத்தியிலிருந்து ஞானவடிவே யான சிவமும் அதிலிருந்து கிரியாசத்தியாகிய ஆற்றலும் தோன்றும் என்பது முன்னர் 164-வது பாடலில் ஆசிரியரால் விளக்கப்பட்டது.

திருவாசகத்தில், திருபொற்சுண்ணம் பதின்மூன்றாவது பாடலில், "என்னுடைய ஆரமுது எங்களப்பன் எம் பெருமான் இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன் எம் ஐயன் தாள்கள் பாடி" என்று மாணிக்கவாசகர் அருளிச் செய்தார். அது போலவே திருக்கோவை யாரில், "அவள் அத்தனாம் மகனாம் தில்லையாம்" (பாடல் 112) என்று அருளினார். இப்பகுதிக்குப் பேராசிரியர் உரை எழுதும் போது "சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் அவள் அத்தனாம் என்றும், சத்திதத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் மகனாம் என்றும் கூறினார்" என்று விளக்கியுள்ளதும் காண்க.

குமரகுருபரர், சிதம்பரச் செய்யுட் கோவையுள் (பாடல் 33) "கனகமார் கவின்செய் மன்றில், அனக நாடகற்கு எம் அன்னை, மனைவி தாய் தங்கை மகள்" என்று அருளியதும் இங்கே நினைவு கூர்க.

தனு கரண புவன போகம் தற்பரம் பந்தம் வீடு என்று
அணுவினோடு எல்லாம் ஆகி அடைந்திடும் தத்துவங்கள்
இனிது அறிந்து இவை நிவிர்த்தி முதல் கலை இடத்தே நீக்கி,
நனிபரம் உணர்ந்தோன் – அந்தத் தத்துவ ஞானி ஆவன். 168

உடல், கருவி, உலகம் நுகர்ச்சிப் பொருள் என்பன உயிர்களைக் கட்டுக்குள் வைத்திருப்பவை ஆகும். அவற்றுக்கு மேலாக விளங்குவன வாகிய சிவதத்துவங்கள் ஐந்தும் உயிர்களை வீட்டு நிலைக்கு இட்டுச் செல்வனவாகும். இவ்வாறு தத்துவங்களினாலேயே உயிர் கட்டு

நிலைக்கு உட்பட்டும் வீட்டு நிலையைத் தலைப்பட்டும் வரும். தத்துவங்கள் யாவும் உயிர்களோடு பொருந்துவனவேயன்றி இறைவனோடு பொருந்துவனவாகா. இதனை இனிது அறிந்து நிவிருத்தி கலை முதலாகக் கழியும் முறைமையில் கழித்து தத்துவங்களைக் கடந்த பரம் பொருளை உணர்ந்தவன் எவனோ அவனே தத்துவஞானி ஆவான்.

முந்திய பாடலில் "தவம் தருஞானத்தோர்க்கு இத்தன்மைதான் தெரியுமன்றே" என்று கூறிய ஆசிரியர் அத்தகைய ஞானம் பெற்றவர்கள் யார் என்பதை இந்தப் பாடலில் விளக்கினார்.

எல்லாமாய்த் தத்துவங்கள் இயைந்தது என், அணுவுக்கு ? என்னின்
தொல்லாய கன்மம் எல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற்கும் பின்
நில்லாமை முற்று வித்து நீக்கவும் கூடி நின்ற
பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்தது அன்றே. 169

இங்கே கூறப்பட்ட தத்துவங்கள் உயிரோடு எல்லாமாகி இயைந்தது எதன் பொருட்டு எனில் பழமையான இருவினைகளையும் உயிரை நுகர்வித்து நீக்குவதற்காகவும், மேலும் வினைகள் ஏறாமல் தவிர்க்கவும் உயிரோடு தோற்றமில் காலந்தொட்டே கூடிநின்ற பொல்லாத ஆணவமலத்தைப் போக்குவதற்காகவும் என அறிக.

இங்ஙனம் கூறுவதால் நீக்கப்பட வேண்டிய மலகன்மங்கள் உயிருக்கே பொருந்துவனவன்றிச் சிவத்தோடு பொருந்துவனவல்ல என்பதனையும் தெளிவித்தார். அணு - உயிர்.

ஒன்றதாய் அநேகசத்தி உடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று போத்திருந்து வத்தை நிகழ்த்தி செம்பினில் களிம்பு ஏய்ந்து
என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே. 170

ஆணவமலம் என்பது ஒன்றே. ஆனாலும் அது எண்ணற்ற ஆற்றல் களை உடையது. செம்பில் களிம்பு போலத் தோற்றமில் காலந்தொட்டே ஆணவமலம் உயிர்களுடன் இயைந்து நின்றது. கேவல நிலையில் ஆன்மாவின் அறிவையும், செயலையும் ஆணவமலம் முற்றிலும் மறைத்து நிற்கும். உயிர்களின் சகலநிலையில் அவற்றை இன்ப, துன்ப நுகர்ச்சிக்கு வினை முதலாகுமாறு செய்யும். கேவலநிலை, சகலநிலை என்று கூறப்பட்ட இரண்டு நிலைகளிலும் உயிர்களுக்கு அறியாமையைச் செய்யும் இயல் புடையது ஆணவமலம்.

செம்பில் களிம்பு இடையில் வந்து பொருந்தியதன்று. அது போலவே ஆணவமலம் உயிர்களைத் தோற்றமில் காலந் தொட்டே பற்றியிருக்கிறது. ஆணவமலம் ஒன்றே. ஆயினும் எண்ணற்ற ஆற்றல்களை உடையது. கேவல நிலையில் உயிரின் அறிவையும், தொழிலையும் முற்றிலும் மறைத்து நிற்கும் ஆணவமலத்தின் ஆற்றல் ஆவாரகசத்தி எனப்படும். சகல நிலையில் உயிர்களின் அறியாமைக்குக் காரணமாகும் ஆணவமலத்தின் ஆற்றல் அதோநியாமிகா சத்தி எனப்படும்.

மலம் என வேறு ஒன்று இல்லை மாயாகா ரியமது? என்னின்
இலகு உயிர்க்கு இச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும் மாயை;
விலகிடும் மலம் இவற்றை வேறும் அன்று; அதுவேறாகி
உலகு உடல் கரணம் ஆகி, உதித்திடும், உணர்ந்து கொள்ளே. 171

ஐக்கியவாத சைவர் போன்றோர் ஆணவ மலம் என ஒன்று இல்லை என்றும், உயிர்களின் அறிவை மறைப்பது மாயையின் காரியங்களே என்றும் வாதிடுவர். விளங்குகின்ற உயிர்களுக்கு விழைவு, அறிவு, செயல் என்ற மூன்று ஆற்றல்களையும் தோன்றச் செய்வது மாயையே ஆகும். இதற்கு மாறாக ஆணவ மலம் இவை மூன்றனையும் மறைத்து நிற்பதாகும். மேலும் ஆணவமலம் தோற்றமில் காலந் தொட்டே உயிரோடு ஒற்றித்து நிற்கும். எனவே ஆணவ மலத்துக்கும், மாயைக்கும் இடையே உள்ள வேற்றுமை மிகப் பெரிது. மாயை உயிர்களுக்கு வேறாக நின்று உடல் கருவி உலகு நுகர்ச்சிப் பொருள் ஆகியவற்றைத் தோற்றுவிக்கும்.

இந்த வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டே திருஞான சம்பந்தர் திருமுதுகுன்றப் பதிகத்தில், மாயையை "ஒண்தளை" என்று அருளினார் (1-12-3).

மாயையே ஆன்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்கும் –
தூய அப்பரிதி தன்னைச் சுடர்முகில் மறைத்தாற் போல
போய்முகில் அகலச் சோதி புரிந்திடும் அதுவே போல
காயமும் அகல, ஞானத் தொழில் பிரகாசம் ஆமே. 172

தூயதாகிய கதிரவனின் ஒளிக்கற்றைகளை மேகம் படர்ந்து மறைத்தாற் போல மாயையே உயிரின் அறிவு, விழைவு ஆற்றல்களை மறைத்து நிற்கும். மேகங்கள் நீங்கிய போது அதுவரை மறைக்கப்பட்டிருந்த ஞாயிற்றின் பேரொளி விளங்கித் தோன்றும். அது போலவே மாயையின் காரியங்களாகிய உடல், கருவி, உலகு, நுகர்ச்சிப் பொருள் ஆகியவை நீங்கினால் உயிரின் அறிவு முதலிய ஆற்றல்களும் விளங்கித் தோன்றும் என்று சிலர் வாதிடுவர்.

பரிதியை முகில்ம றைப்பப் பாய் ஒளி பதுங்கி னாற்போல்
உரு உயிர் மறைக்கின் ஞானக் கிரியைகள் ஒழிக்குமாகும்;
கருதிடும் இச்சா ஞானக் காரியம் காயம் பெற்றால்
மருவிடும் உயிர்க்குக் காயம் வந்திடா விடில், மறைப்பே. 173

கதிரவனை மேகம் மறைத்தவுடனேயே கதிரவனின் ஒளி பரவாமல் மறைந்து போகும். அது இங்கே உவமை ஆகுமானால் உயிர் உடலைப் பெற்ற உடன் ஆன்மாவின் அறிவும், விழைவும், ஆற்றலும் மறைதல் வேண்டும். அதற்கு மாறாக உயிர் உடம்போடு பொருந்திய போதே உயிருக்கு அறிவு விழைவு ஆற்றல்கள் உளவாகின்றன. உடம்பில்லாத போது உயிரின் ஆற்றல்கள் மறைந்து போகின்றன. எனவே இந்த உவமை இங்கே பொருந்துவதன்று.

போத காரியம் மறைத்து நின்றது புகன்மலம்காண்;
ஓதலாம் குணமுமாக உயிரினுள் விரவலாலே
காதலால் அவித்தை சிந்த தரும் கலை ஆதி மாயை
ஆதலால் இரண்டும் சோதி இருள் என வேறாம் அன்றே. 174

உயிரின் அறிவு இச்சை செயல்களை மறைத்து நிற்பது ஆணவமேயன்றி மாயை ஆகாது. ஆணவமலம் தோற்றமில் காலந் தொட்டே உயிரோடு கலந்து நிற்றலால் அதனை உயிரின் குணமும் ஆகவே கூறத்தகும். ஆனால் மாயை கலை முதலிய தத்துவங்களைத் தோற்றுவித்து உயிரின் அறிவை முற்றிலும் மறைத்து நின்ற ஆணவ மலத்தினால் விளைந்த அறியாமையைப் போக்கி அறிவைத் தோற்றுவிக்கும். ஆதலால் மாயை ஒளி போன்றது. ஆணவம் இருள் போன்றது.

குணமும் என்பதில் உள்ள உம்மை எதிர்மறைக் கண் வந்தது என்று உரை வரைகிறார். சிவஞான முனிவர். இந்த நான்கு பாடல்களாலும் ஆணவ மலம் என ஒன்று இல்லை என்று கூறும் ஐக்கியவாத சைவர் பாசுபதர் ஆகியோரின் கொள்கை மறுக்கப்பட்டது. ஆணவ மலம் உண்டு என நிறுவப்பட்டது.

புருடன்தன் குணம்அ வித்தை எனின், சடம், புருடன் ஆகும்;
குருடன்தன் கண்ணின் குற்றம் கண்ணின்தன் குணமோ? கூறாய் !
மருள் தன்தன் குணம தாகி, மலம்அசித் தாகி நிற்கும்;
தெருள் தன்தன் குணம தாகிச் சித்தென நிற்கும், சீவன். 175

உயிரின் இயல்பே அறியாமை என்று கூறினால் உயிர் அறிவற்றது எனப் பட்டு வழுவாகும். குருடனுடைய கண், படலத்தால் மறைக்கப்பட்டிருப் பதால் அவன் பார்வையை அது தடுக்கிறது. படலம் என்னும் குற்றம் அவன் பார்வையை மறைக்கிறது என்று கொள்ள வேண்டுமே தவிர அதுவே கண்ணின் குணம் என்று கூற முடியுமா? உயிரின் அறிவை மறைத்து நிற்கும் ஆணவம் உயிரின் குணம் என்று கொள்ளுதல் தகாது. ஆணவ மலம் அறியாமையைத் தன் குணமாக உடைய குணிப் பொருள். ஆணவமலம் அறிவற்றது. அறிவுடைமையைத் தனது குணமாகக் கொண்டு குணிப் பொருளாக நிற்பது உயிர். உயிர் அறிவுடைப் பொருள் ஆகும்.

பாடாணவாதிகள் 'அறியாமை உயிரின் குணம்' என்று சொல்வார்கள். இப்பாடல் அவர்களை மறுப்பதற்கு எழுந்தது.

மும்மலம், நெல்லி னுக்கு முளையொடு தவிடு உமிப்போல்,
மம்மர்செய்து, அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று,
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்,
இம் மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன், இன்னும். 176

மும்மலங்களும் நெல்லிற்கு முளை, தவிடு, உமி போன்றன. கன்ம மலம் முளை போன்றது. மாயை தவிடு போன்றது. ஆணவ மலம் உமி போன்றது. இம்மும்மலங்களும் உயிர்களுக்கு மயக்கத்தைத்

தருவனவாகும். மேலும் உயிரின் உண்மையான தன்மையாகிய அறிவினை இவை மறைப்பனவாகும். முறையே பொய்ம்மையான நுகர்வுகளையும், கட்டினையும் நுகர்வுக்கு வினை முதலாகும் தன்மையையும் இவை தோற்றுவிக்கும். இங்குக் கூறப்பட்ட மும்மலங்களையும் தவிர மேலும் இரண்டு மலங்கள் உள்ளன என்பர் பெரியோர். அவை அடுத்த பாடலில் கூறப் பட்டுள்ளன

இங்கே கூறப்பட்ட முளை, தவிடு, உமி என்பன பந்தத்திற்கும், காரண மாதல் மாத்திரைக்கும், உவமையாயின என்பது சிவஞான முனிவரின் உரை.

மாயையின் காரி யத்தை மாயேய மலமது என்றும்,
ஏயும்மும் மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனது ஓர் சத்தி திரோதான கரியது என்றும்
ஆய்வர்;இம் மலங்கள் ஐந்தும், அணுக்களை அணைந்து நிற்கும். 177

மாயையிலிருந்து விளைவனவற்றை மாயேயமலம் என்று கூறுவர். பொருந்திய மும்மலங்களையும் அதனதனுக்கு உரிய தொழிலில் செலுத்தி உயிர்களைப் பக்குவப்படுத்தி வரும் சிவசத்தியை மறைத்தலைச் செய்தலாகிய திரோதாயி என்று ஆராய்ந்து கூறுவர். முந்திய பாட்டில் கூறிய மூன்றும் இங்குக் கூறிய இரண்டும் ஆக மலங்கள் ஐந்து என்பர். இவ்வைந்து மலங்களும் உயிர்களைக் கட்டி நிற்பனவாகும்.

தூயவன் - இயல்பாகவே பாசங்களில் நீங்கிய சிவபெருமான். திரோதானம் - மறைப்பு. கரி - செய்வது. "திரோதானத்தைச் செய்வது என்னும் பொருட்டாகிய வடசொல்" என்பார் சிவஞான முனிவர்.

மலம், மாயை கன்மம், மாயே யம், திரோ தாயி மன்னி,
சலமாரும் பிறப்பு இறப்பில் தங்கிஇத் தரைகீழ் மேலும்,
நிலையாத கொள்ளி வட்டம் கறங்குஎன நிமிடத் தின்கண்
அலமாரும், இறைவன் ஆணை யால், உயிர் நடக்கும் அன்றே. 178

ஆணவமலம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி ஆகிய ஐந்து மலங்களும் பொருந்திய உயிர் வஞ்சனையுடைய பிறப்பு இறப்புக்களில் உழன்று, நில உலகம், கீழ் உலகம், மேல் உலகம் ஆகிய மூவுலகங்களுக்கும் சென்று வரும்; நிலையற்ற கொள்ளி வட்டத்தினைப் போலவும் காற்றாடியைப் போலவும் நொடிப் பொழுதில் மேலும் கீழும் சென்று இறைவனின் ஆணையின் வழி உயிர்கள் அலமரும்.

கொள்ளி வட்டம் என்பது ஒரு கயிற்றின் நுனியில், கரிப்பொடி முதலியவற்றைச் சேர்த்து அதில் தீ இட்டுச் சிறுவர்கள் வேகமாகச் சுழற்றும் போது தோன்றுகின்ற வட்டமாகும். கறங்கு என்பது காற்றாடி. அலமரும் என்பது எதுகை நோக்கி அலமாரும் என நீண்டது.

அண்டசம், சுவேத சங்கள், உற்பிச்சம், சராயு சத்தோடு
எண்தரு நால், எண் பத்து நான்குநூ றாயி ரத்தாய்
உண்டுபல் யோனி எல்லாம் ஒழித்துமா னுடத்துஉ தித்தல்
கண்டிடில், கடலைக் கையால் நீந்தினன் காரி யம்காண். 179

முட்டையில் பிறப்பன, வியர்வையில் பிறப்பன, வித்திலிருந்து மேல் நோக்கி எழுவன, கருப்பையலிருந்து பிறப்பன என்று இல்வுலகினில் உயிர்கள் நான்கு வகையாகத் தோன்றும். அவற்றின் பிறப்புக்கள் எண்பத்து நான்கு நூறாயிரம் வகைப்படும் என்றும் பெரியோர் கூறுவர். இவற்றுள் ஒன்றாகப் பிறத்தலிலிருந்து தப்பி மானுடனாகப் பிறப்பது என்பது, கடலைக் கையால் நீந்திக் கடப்பது போன்ற அருமை உடையதாகும்.

அண்டசம் - முட்டையில் பிறப்பன. சுவேதசம் - வேர்வையில் பிறப்பன. உற்பீசம் - வித்திலிருந்து பிறந்து மேல் நோக்கி வளர்வன. சராயுசம் - கருப்பையில் பிறப்பன.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் (1-132-4) "உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேத நிரை சேரப் படைத்து" என்று அருளியுள்ளமையும் காண்க.

நரர்பயில் தேயந் தன்னில், நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து, தோன்றல் மிக்கபுண் ணியத்தான் ஆகும்;
தரையினில் கீழை விட்டுத் தவம்செய்சா தியினில் வந்து,
பரசம யங்கண் செல்லா; பாக்கியம் பண்ணொ ணாதே. 180

உலகத்தில் மக்களாய்ப் பிறத்தல் அரிது. அதனினும் அரிது அருள் நூல்கள் வழங்காத நாடுகளில் பிறவாமல், அவை வழங்குகின்ற நாட்டில் பிறப்பது. அவ்வாறு பிறப்பது மிகுந்த புண்ணியப் பயன் உடையார்க்கே வாய்ப்பதாகும். கீழ்மையோர் இனத்தில் பிறவாமல் தவம் செய்வதற்குரிய இனத்தில் பிறப்பது அதனினும் அரிதாகும். புறச் சமயங்களைச் சாராமல் சித்தாந்த சைவத்தைச் சார்ந்து வாழும் நன்மை ஒருவனுக்கு வாயத்தல் யாவற்றிலும் மிக்க அரிதாகும்.

வாழ்வெனும் மையல் விட்டு, வறுமையாம் சிறுமை தப்பி,
தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல், அரிது சால; உயர்சிவ ஞானத் தாலே,
போழ்இள மதியி னானைப் போற்றுவார், அருள்பெற் றாரே. 181

வளமிக்க வாழ்வு பெற்றதனால் தோன்றுகின்ற செருக்கினை விட்டும், வறுமையினால் தோன்றுகின்ற சிறுமையிலிருந்து நீங்கியும், பணிவு என்னும் நற்பண்பினைக் கடைப்பிடித்தும் சைவ சமயத்தை வந்து எய்துகின்ற புண்ணியத்தைப் பெறுதல் மிக அரிது. அதனினும் சித்தாந்த நெறியை உணர்ந்து சிவஞானம் பெற்று இளம்பிறையைச் சூடிய சிவபெருமானை வழிபடுவோரே சிவனருளால் வீடு பேற்றை எய்துவர்-.

வாழ்வு என்ற சொல்லால் இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் முதலியன குறிக்கப்பெற்றன. இத்தகைய பேறு வாய்க்கப் பெற்றவர்களுக்கு வருகின்ற செருக்கினின்றும் நீங்க வேண்டும் என்றார். வறுமையின் பிடியில் அகப்பட்டோர் சிறுமைக்கு உட்படுவது உலக இயல்பு. எனவே அதிலிருந்து தப்புதல் வேண்டும் என்றார். தாழ்வு என்ற தன்மை என்றதனால் பெருமை என்றும் பணியும் என்பதனையும், உயிர் என்றும் அடிமையே என்பதனையும் இறைவன் ஒருவனே உடையான் எனப்படுவான் என்பதனையும் உணர்த்தினார் ஆசிரியர். சைவ சமயத்தைச் சார்தல் அரிது. அதனினும் அரிது சைவ சித்தாந்த நெறியினை உணர்ந்து ஒழுகுதல் என்பது இப்பாடலால் விளக்கப்பட்டது.

மானுடப் பிறவி தானும் வகுத்தது, மனவாக் காயம்,
ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன்பணிக் காக அன்றோ?
வானிடத் தவரும் மண்மேல் வந்து, அரன் தனைஅர்ச் சிப்பர்;
ஊன்எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார், அந்தோ ! 182

பெறுதற்கரிய மானுடப் பிறவியை இறைவன் வகுத்துத் தந்ததன் பயனே, ஆனைந்தும் ஆடும் சிவ பெருமானை மனமொழி மெய்களால் வழிபடுவதற்காக அன்றோ? வானுலகத்தில் உள்ள தேவர்களும் தாங்கள் உய்வதற்காக இம்மண்ணுலகத்திற்கு வந்து சிவபெருமானை மலர் தூவிப் போற்றி வழிபடுவார்கள். இவ்வுலகில் ஊன் எடுத்து உழல்கின்ற ஊமர்கள் பலர் இவற்றுள் ஒன்றனையும் உணரார் என்பது இரங்குதற்கு உரியதாகும்.

மனவாக் காயம் - மனம் வாக்கு காயம் என்ற மூன்று சொற்களும் இவ்வாறு திரிந்து நின்றன. ஆனிடத்து ஐந்து - பஞ்சகவ்வியம் எனப்படும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பன.

கருவினுள் அழிவ தாயும், கழிந்திடாது அழிவ தாயும்,
பரிணமித்து அழிவ தாயும், பாலனாய் அழிவ தாயும்,
தருணனாய் அழிவ தாயும், தான்நரைத்து அழிவ தாயும்,
உருவமே அழிவே யானால், உள்ளபோ தேபார், உய்ய. 183

உடம்பொடு கூடி உருவெடுத்த உயிர் அழிவது திண்ணம். சில உயிர்கள் தாயின் கருப்பையிலேயே அழிவன. சில கருப்பையை விட்டுக் கழியாமலே அழியும். சில பிறந்த உடன் அழியும். சில குழந்தைப் பருவத்தில் அழியும், இன்னும் சில இளமையில் அழியும். மற்றும் சில நரை திரை வந்த பின் மூத்து அழியும். எனவே உருவம் என்பதே அழிவில் முடிவது என்பது தெளிவாகும். ஆதலால் காலம் உள்ள போதே உய்வைத் தேடுதல் நன்று.

ஒருபுலன் நுகரும் போது, அங்கு ஒன்று இல்லை; ஒன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடும்; எல்லாம் மாறும்,
ஒரு பொழுது; உணரின் உண்டாம் அல்லதுஇவ் அல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும், பின் மாயும் அன்றே. 184

இங்கு உடலோடு பொருந்தியுள்ள உயிர் ஒரு புலனால் நுகரும் போது மற்றவற்றை நுகர்வதில்லை. ஒன்றினையே அறியும் போது கூட இடையீடு பட்டு அறியுமே அல்லாது எப்பொழுதும் அறியாது. அவ்வறிவும் உறக்கம் மூர்ச்சை ஆகிய நிலைகளில் முற்றிலும் இல்லையாகும். அதுவுமல்லாமல் துன்ப மிகுந்த இந்த வாழ்க்கை மயக்கம் போல உடனே அழிவதாயும், கனவைப் போலச் சிறிது காலம் நீட்டித்து அழிவதாயும் அமைவதைக் காண்கிறோம்.

அரிசனம் பூசி, மாலை அணிந்து, பொன் னாடை சாத்தி,
பரிசனம் பின்பு செல்ல, பாரகர் பரிக்க, கொட்ட,
வரிசின்னம் ஊத தொங்கல் வந்திட உணர்வு மாண்டு
பெரியவர் பேச்சும் இன்றிக் கிடத்தலால் பிணத்தோடு ஒப்பர். 185

செல்வ வளம் பெற்றவர்கள் செருக்கோடு வீதியிலே உலாப் போவார்கள். அவ்வாறு போகுங் காலத்துச் சந்தனம் பூசி இருப்பர். மாலை அணிந்திருப்பர். பொன்னாடை அணிந்திருப்பர். அவருடைய பரிவாரங்கள் அவர் சவாரி செய்யும் சிவிகையைப் பின் தொடர்ந்து வருவர். சிவிகை தாங்கிகள் சுமக்கவும், இசைக் கருவிகள் முழங்கவும் சிலர் சின்னங்கள் ஊதவும் வெண் சாமரங்கள் நிழற்றவும், அத்தகைய செல்வர்கள் தமது அதிகாரச் செருக்கால் பேச்சும் இன்றி அச்சிவிகைக்குள் சாய்ந்து கிடப்பர். ஆழ்ந்து உணரின் இவருக்கும் பிணத்துக்கும் வேறுபாடு இல்லை என்பது தெரியும். இவ்வாறு அறிய வல்லவர்கள் செல்வத்தால் வந்த செருக்கைக் கை விடுதல் கூடும்.

பிணத்தினை ஒத்து வாழ்வோர் பின்நடைப் பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர் உங்கள் உடல்உயிர் உணர்வும் எல்லாம்
கணத்திடைத் தோன்றி மாயும் காயம் என்று அறிந்து ஒருக்கால்
வணக்குறீர் அரனை; என்றும் வானவர் வணங்க வைப்பன். 186

உலகத்திலே மற்றவர்கள், பிணத்தை ஒத்து வாழ்பவர்களாகிய செருக்கு மிகுந்த செல்வர்களின் பின்னே நடைப் பிணங்களைப் போலத் தம் உடல் அறிவு ஆகியவற்றைக் குறுக்கி அலைவார்கள். இந்த உடம்பு ஒரு கணத்திலே தோன்றி அழியும் இயல்புடையது என்பதை அறிந்து சிவ பெருமானை ஒரு பொழுதேனும் வணங்கி வழிபடுவீராக. அவ்வாறு வழிபட்டு வரின் அமரரும் வணங்கும் ஒப்பற்ற பேற்றினைச் சிவபெருமான் உங்களுக்கு வழங்குவான்.

மூன்றாவது நூற்பா

உயிரெனப் படுவது இந்த உடலின்வேறு; உளதாய் உற்றுச்
செயிர்உறும்; இச்சா ஞானச் செய்திகள் உடைய தாகிப்
பயில்வுறும்; இன்பத் துன்பப் பலங்களும் நுகரும் பார்க்கில்;
துயிலொடும்; அஞ்சு அவத்தைப் படும்; உண்மை துரியா தீதம் 187

உயிர் எனப்படுவது உள்ளதாகிய பொருளே. அது உடம்பு அன்று. ஏனெனில் அது உடம்பைப் பொருத்தி 'யான்', 'எனது' என்னும் செருக்கினை உடையது. உயிருக்கு அறிவு விழைவு ஆற்றல் என்னும் மூன்றும் உண்டு. உயிர், கனவில் நிகழ்ந்ததை விழித்த போது அறியும் இயல்புடையது. உயிருக்கு இன்ப துன்பப் பயன் கருவிகள் ஒடுங்கிய போது அல்லாமல் ஒடுங்காது விழித்த நிலையிலே நிகழ்வனவாகும். உயிர் அறியும் போது ஒரு தன்மையாய் அறியாமல் ஐந்து வகைப்பட்ட நிலைவேறு பாடுகளோடு அறிந்து வரும். எல்லாக் காரியங்களும் நீங்கிய துரியாதீத நிலையிலும் இவ்வுயிர் உளதாகும். ஆகையால் இவ்வுடலில் பொருந்தியுள்ள உயிர் இவை அனைத்துக்கும் வேறாகும்.

இந்தப்பாடலுக்கு உரை வரைந்த சிவஞானமுனிவர் பாடலின் சொற்கள் கிடந்தவாறே உரை எழுதாது முதல் நூலாகிய சிவஞான போதத்தின் மூன்றாவது நூற்பாவின் அமைப்பை ஒட்டியே உரை எழுதினார். இந்த நூற்பாவுள் மெய்கண்ட தேவநாயனார் சூனியான்மவாதி இந்திரியான்மவாதி முதலிய எழுவர் கொள்கைகளை மறுத்துள்ளார். முனிவரின் உரையும் அந்த வைப்பு முறையிலேயே அமைந்துள்ளது.

செயிர் - குற்றம். ஐந்தவத்தை என்பது உயிரின் ஐந்து நிலைவேறு பாடுகளைக் குறித்தது. அவத்தை நிலைவேறுபாடு. இவை - நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்பு அடங்கள் என்பனவாகும். துரியாதீதம் - உயிர்ப்படங்கல். இந் நிலையில் உயிர் கருவிகளோடு கூடாமல் ஆணவத் தால் மறைக்கப்பட்டு நிற்கும்.

உடலின் வேறு உயிர் ஏன்? இந்த உடல் அன்றோ உணர்வது? என்னின்
உடல்சவ மான போதும் உடலினுக்கு உணர்வுஉண் டோதான்?
உடலினின் வாயுப் போனால் உணர்ச்சி இன்று உடலுக்கு என்னின்
உடலினின் வாயுப் போகாத உறக்கத்தும் உணர்வது இன்றே. **188**

இந்த உடம்பின் வேறாக உயிர் ஒன்று உண்டு என்று கொள்வானேன். இந்த உடல் அன்றோ அறிவது என்று சிலர் வினவுவர். உயிர் நீங்கிய உடல் உறுப்பால் எவ்விதக் குறைபாடும் இல்லாத போதும் பிணமாக அறிவற்றுக் கிடைப்பதைக் காண்கிறோம். எனவே உயிர் வேறு என்பது புலனாகும்.

மற்றும் சிலர் வேறு வகையாகத் தடை எழுப்புவர். உடலில் இயங்கிக் கொண்டிருக்கின்ற உயிர்க்காற்று உடலை விட்டு நீங்கும் போது உணர்வும் நீங்கி விடுகிறது. எனவே உயிர் எனப்படுவது உயிர்க்காற்றே என்பது அவர்கள் கொள்கை. உறங்குங்காலத்து உயிர்க்காற்று உடலைவிட்டு நீங்குவதில்லை. எனவே அப்போதும் அவ்வுடலுக்கு அறிவு நிகழ்தல் வேண்டும். உயிர்க்காற்று இயங்கினும் உறக்க நிலையில் உடம்பு அறிவதில்லை. ஆதலால் அறிவது உடம்பு அன்று; அதனினும் வேறான உயிரே என்பது தெளிவாகும்.

அறிவதுஉம் பொறியே என்னின் உறக்கத்தின் அறியா வாகும்
அறிவதும் ஒன்றுஒன் றாக; ஒன்றுஒன்றாய் அறியும் என்னின்
அறிவுகள் ஒன்றை ஒன்று அங்கு அறிந்திடா; ஐந்தை யுங்கொண்டு
அறிவது ஒன்று உண்டு; அது ஆன்மா; ஐம்பொறி அறிந்தி டாவே. 189

வேறு சிலர் ஐம்பொறிகளே அறிவனவாகும். எனவே உயிர் என வேறு ஒன்று இல்லை என வாதிடுவர். அவர்கள் ஐம்பொறிகள் நனவின் போது அறியும் என்றும் உறக்கத்தின் போது அறியாமல் ஒடுங்கி நிற்கும் என்றும் கூறுவர். நனவின் போதும் ஐம்பொறிகள் ஒவ்வொரு பொறியாக அறியுமே அன்றி ஐந்தும் ஒரு சேர அறியா. அதுவே அவற்றின் இயல்பு என்று மேலும் கூறுவர். இக்கருத்துக்கள் பொருந்தா. ஐம்பொறிகளில் ஒன்று அறிந்ததைை மற்றொன்று அறியாது. எனவே ஐந்து பொறிகளையும் கொண்டு அறிவதாகிய ஆன்மா ஒன்று உண்டு என்பது பெறப்படும். எனவே பொறிகள் அறியா. ஆன்மாவே அறியும்.

அறிந்திடும், பிராண வாயு அடங்குதல் விடுதல் செய்தால்;
அறிந்திடாது உடல்உறக்கத்து அறிவின்மை, கரணம் இன்மை;
அறிந்திடும் முதலி ஆகின் அதுநிற்கக் கரணம் போக;
அறிந்திடும் பிராணன் தன்னை அடக்கியும் விட்டும் ஆன்மா 190

உயிர்க்காற்று உள்ளும் புறமும் சென்று இயங்கும் போதே அறிவு நிகழ்வதைக் காண்கிறோம். எனவே ஐம்பொறிகளையும் கொண்டு அறிவது உயிர்க்காற்றே. ஆன்மா அன்று என்று சிலர் வாதிடுவர். அவ்வாறு எனின் உறங்கும் போதும் உயிர்க்காற்று இயங்குவதனால் அப்போதும் அறிவு நிகழ்தல் வேண்டும். அப்படிக் கண்டதில்லை; ஆதலால் உயிர்க்காற்றே ஆன்மா என்பதும் பொருந்தாது என்று விடையிறுத்தல் வேண்டும். அதற்கு அவர்கள் உறக்கத்தின் போது கருவிகளின் துணையில்லை ஆதலால் அறிவு நிகழவில்லை என்பர். அவ்வாறானால் உயிர்காற்றே கருவிகளை இயக்கிடும் முதன்மை உடையதாக இருந்தும் அக்கருவிகள் ஏன் இயங்கவில்லை என்று வினாவுதல் வேண்டும். உயிர்க்காற்றை உள்ளே இழுத்தும் வெளியே விட்டும் இயக்க வல்லதாகிய ஆன்மா உயிர்க்காற்றிலிருந்தும் வேறானது ஆகும்.

நான்காம் நூற்பா

உணர்வன கரணம் என்னில் ஒன்றைஒன்று உணரா; வெவ்வேறு
அணைதரும் – செயல்கள் நான்கும் அறிந்து அவை அடக்கி ஆக்கிப்
புணரும்உட் கருவி ஆக்கி புறக்கரு வியினும் போக்கி
இணைதரும் இவற்றின் வேறாய் யான்எனது என்பது ஆன்மா. 191

மனம், புத்தி அகங்காரம் சித்தம் ஆகிய உட்கரணங்களே அறிவுடையன. ஆதலால் அவையே ஆன்மா என்று சிலர் வாதிடுவர். உட்கரணங்களாகிய இவை நான்கும் தம்முள் ஒன்றனை ஒன்று உணரா.

நான்கும் நான்கு வெவ்வேறு தொழில்களைச் செய்து தன்னளவில் நிற்கும். ஆனால் ஆன்மாவோ நான்கு உட்காரணங்களையும் இயக்கி, நான்கினால் வரும் பயனையும் உணர்ந்து யான் எனது என்னும் செருக்கினையும் கொண்டு நிற்பதாகும். ஆணவமலத்துடன் கூடி நிற்பதனாலேயே ஆன்மாவுக்கு யான் எனது என்னும் செருக்கு உளதாகிறது. ஆன்மாவே அந்தக்கரணங்கள் நான்கினையும், அடக்கி உட்கருவிகளாகக் கொண்டு, வேண்டும் போது புறக்கருவிகளை நோக்கிச் செலுத்தியும் ஐந்து நிலைவேறுபாடுகளை அடைந்தும் நிற்பதாகும்.

முதல் அதிகரணம்

கருவிஆம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும்
மருவிஆன் மாவே என்ன வரும்; தீபம் எனத்தெ ரிந்து அங்கு
ஒருவிஆன் மாவின் உண்மை உணர்ந்தவர் தமைஉ ணர்ந்தோர்;
தரும்இது பசுஞா னம்பின் சிவஞானம், தனக்கு மேலாம். 192

உட்கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய நான்கும் ஆன்மாவோடு பொருந்தி அவையே ஆன்மா என்று கருதும் வண்ணம் நிற்கும். இவ்வாறு பிறழ உணராமல், காணும் தன்மை உடைய கண்களுக்கு விளக்கு கருவியானாற் போல, அறியும் இயல்புடைய ஆன்மாவிற்கு உட்கரணங்கள் கருவிகளாம் என அறிதல் வேண்டும். இவ்வுண்மையை அறிந்து உட்கரணங்களிலிருந்து நீங்கி ஆன்மாவின் உண்மையான இயல்பை அறிந்தவர் யாரோ அவரே பசுஞானம் பெற்றவராவர். இவ்வாறு தம்மை உணர்ந்தவர்கள் தமக்கு மேலாகிய சிவஞானத்தைப் பெறும் தகுதி உடையோராவர்.

அவ்வுடன் உவ்வும் மவ்வும், மனம், புத்தி, அகங்கா ரங்கள்,
செவ்விய விந்து நாதம், சித்தமோடு உள்ளம் ஆகும்;
ஒவ்வெனும் எழுத்தாம் ஐந்தும் உணர்வுஉதித்து ஒடுங்கு மாறும்
பவ்வமும் திரையும் போலும்; பார்க்கில், இப் பண்பும் தோன்றும். 193

அகரம் அகங்காரத்தைச் செலுத்தும் உகரம் புத்தியைச் செலுத்தும். மகரம் மனத்தையும், வித்து சித்தத்தையும், நாதம் உள்ளத்தையும் செலுத்தும். இந்த ஐந்து எழுத்துக்களின் கூட்டமே பிரணவம் ஆகும். இந்த ஐந்து எழுத்துக்களாலும் உயிரின் அறிவு தோன்றியும் ஒடுங்கியும் வரும். கடலின் அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறித் தோன்றியும் ஒடுங்கியும் வருவதைப் போலவே உயிரின் அறிவும் தோன்றியும் ஒடுங்கியும் வரும். ஆய்ந்து பார்த்தால் இத்தன்மைகள் நன்கு விளங்கும்.

'அகார உகாரம் அகங்காரம் புத்தி மகாரம்' என்று சிவஞான போதம் நான்காவது நூற்பா மூன்றாவது எடுத்துக்காட்டு வெண்பாவில் முதல் நூல் ஆசிரியர் குறிப்பிட்டார். எனவே இங்கே கூறப்பட்டுள்ள முறை எதிர் நிரல் நிறை என்று கொள்க என்று சிவஞான முனிவர் உரை எழுதினார். அகரஉகர மகரம் விந்து நாதம் ஆகிய ஐந்தும் கூடிப் பிரணவமாகும். ஆயினும் பாடலில் இம்மந்திரத்தை வெளிப்படையாகக் கூறாமல் ஒவ்வும் என்று குறுக்கிச் சுட்டினார்.

பாடலில் பார்க்கின் என்ற சொல்லால் நிவிருத்தி முதலிய கலைகளைப் பற்றி ஐந்தாகத் திகழும் வாக்குகள் என்பது உணர்த்தினார். வைகரி அகரவடிவாகவும், மாத்திமை உகர வடிவாகவும், பைசந்தி மகர வடிவாகவும், சூக்குமை விந்து வடிவாகவும் அதிசூக்குமை நாத வடிவாகவும் நிற்கும் என்பர் பெரியோர்.

அயன்அரி அரனும் ஈசர் சதாசிவம் அதிதெய்வங்கள்
உயவரும், அவ்வோடு உவ்வும் மவ்விந்து நாதங் கட்கு;
பயன்உறும், அஞ்சில் ஆன்மாப் பரவிடில், அசித்தாம், பார்க்கில்;
சயம் உறு வளிஇ ரண்டும் தவிர்த்துறின், தானும் தோன்றும். 194

அகர உகர மகர விந்து நாதங்களுக்கு முறையே அயன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்பவர் அதி தெய்வங்களாவர், உட்கருவிகள் அவற்றைச் செலுத்தி நிற்கும் ஆற்றல் எழுத்துக்கள், அவற்றின் அதிதெய்வங்கள் என்று இம்மூவகைப்பட்ட ஐந்தோடும் ஆன்மா பொருந்திய போது ஆன்மாவுக்கு அறிவு உளதாகும். இவற்றோடு பொருந்தாத போது ஆன்மா சடம் போல அறிவு இல்லாததாக நிற்கும். இவ்வியல்பு இரு வகைக் காற்றையும் அடக்கி யோகப் பயிற்சியில் நின்றார்க்கு இனிது விளங்கும்.

ஆன்மாவின் வடிவு தானே அநேகார்த்தக் கூட்டம் என்னின்,
பார்ப்பார்கட்கு, ஆன்மா இன்றாய்ப் பலபொருள் உண்மை ஆகும்;
சேர்ப்பாய பலவே உண்மை, என்றிடில்; சென்று இவற்றை
ஓர்ப்பான், வேறு உணர்வோர்க்கு எல்லாம் உணர்பொருள் வேற தாமே. 195

மேற்கூறிய வண்ணம் ஆன்மா என்பது அகக் கருவிகளும் அகரம் முதலிய ஐந்து எழுத்துக்களும் அவற்றின் அதிதெய்வங்களும் ஆகிய இவற்றின் கூட்டாலேயே அறியும் எனப்பட்டால் அது பல பொருள்களும் சேர்த்து ஒன்றாகிய கூட்டம் ஆகுமே தவிர ஆன்மாவின் தனித்த நிலையைக் குறியாது அன்றே? என்று இங்கு ஒரு தடை நிகழும். கூட்டம் என்பது ஒரு பொருள் அன்று, கூடுகின்ற பல பொருள்களும் தனித்தனியாக அறியப்படும். மேலும் அறியப்படு பொருளும் அறியும் பொருளும் தனித்தனி இருத்தல் கூடுமேயன்றி இரண்டும் ஒன்றாகா. ஆகவே இப் பதினைந்தினையும் இவை தம்முட் கூடி நிற்கும் இயல்பையும் அறிகின்ற ஆன்மா தனித்து உளது என்பது பெறப்படும்.

இரண்டாம் அதிகரணம்

அறிவு, இச்சை, செயல்கள் எல்லாம் அடைந்து, அனல் வெம்மையும் போல்
குறிஉற்று அங்கு, ஏக அநேக குணகுணி பாவம் ஆகி,
நெறியுற்று நிற்கும் என்னின், நிகழ்புலன் கரணம் எல்லாம்
செறிவுற்று, அங்கு அறிவு கொள்ள வேண்டுமோ, சீவ னார்க்கே 196

உயிர்கள் யாவும் பிரமப் பொருளில் இருந்து பரிணமித்து அறிவு விழைவு ஆற்றல் ஆகியவற்றை அடைந்து, தீயும் அதன் வெப்பமும் போலக் குணமும் குணியுமாகி நிற்கும் என்று சிலர் கூறுவர். அவர்கள் கருத்து உண்மையானால் பிரமத்தின் பரிணாமமாகிய உயிர்கள் யாவும் புலன்களும் கருவிகளும் இன்றியே அறிதல் வேண்டும். ஆனால் உயிர் பொறிகளின் துணையோடும் கருவிகளின் துணையோடும் அறிகின்றதே அன்றித் தனித்து நின்று அறியாது. எனவே உயிர் பிரமத்தின் பரிணாமம் என்பது பொருந்தாது.

இந்தப் பாடலில் பரிணாம வாதிகளின் கொள்கை மறுக்கப்படுகிறது. பிரமப் பொருளும் உயிர்களும் ஓர் வகையால் வேறாகியும் மற்றொரு வகையில் வேறு அன்றியும் நிற்பன என்பது அவர்கள் கொள்கை. அதுவே பாடலில் ஏகானேகம், குணகுணி பாவமாகி என்ற சொற்களால் குறிக்கப் பட்டது. அறிவே வடிவாகிய பிரமப் பொருளுக்குப் பொறிகள் கருவிகளின் துணை தேவை இல்லை என்பதை எடுத்துக்காட்டி அவர்களின் கொள்கையை மறுத்தார்.

குணங்களை இன்றி ஒன்றாம் குறிஉடைத்து ஆன்மா என்னின்,
இணங்கிடா, இச்சா ஞானக் கிரியைகள் இவை, உடற்கண்;
பிணங்கிடும் சந்நி திக்கண் எனில், பிணத்து உறக்கத்து இன்றாம்;
உணங்கிடும் கரணம் என்னில் சந்நிதி ஒழிந்தது அன்றே. 197

அறிவு விழைவு ஆற்றல் என்னும் குணங்கள் இல்லாமல் வெறும் அறிவு மாத்திரமாய் நிற்பதே ஆன்மா என்று கொள்ளுவர் சிலர். அவர்கள் கருத்துப்படி ஆன்மா அறிவு வடிவமாய் நிற்கும். அதன் முன்னிலையில் உடம்பில் உள்ள கருவிகள் செயற்படும். அதனால் அறிவு விழைவு ஆற்றல் முதலியன உடம்பிலே நிகழும். அவ்வாறாயின் உடல் பிணமாகக் கிடக்கும் பொழுதும் உறக்கத்தின் போதும் கருவிகள் செயல்படுவதில்லையே அது ஏன்? என்று அவரை வினவினால் அதற்கு அவர்கள் அந்நிலைகளில் கரணங்கள் செயலற்று ஒடுங்கி இருக்கும் என்று விடையிறுப்பர். இவ்வாறு கூறினால் உயிரின் முன்னிலையில் அறிவு இச்சை செயல்கள் உடம்பில் நிகழும் என்று அவர்கள் கூறிய கூற்றுப் பொருந்தாது போகும். இவ்வாறு கூறுவோர் சாங்கியர்.

இணங்கிடா - பொருந்தா, பிணங்கிடும் - பொருந்தும். சந்நிதி - முன்னிலை. உணங்கிடும் - ஒடுங்கும்.

சந்நிதி குணம் தாகும் தான் என்போல் என்னின் காந்தம்
முன்இரும்பு என்றாய்; ஈர்க்கும் முறைமைஉண்டு அகற்றல் இன்றாம்;
உன்னுதல் ஒடுங்கல் ஓடல் இருத்தலே கிடத்தல் நிற்றல்
என்னும் இத் தொழில்கள் மற்றும் இயற்றுவது ஆன்மா என்னே? 198

"சன்னதி என்று யாங்கள் கூறுவது வெறும் முன்னிலையன்று. அது உயிரினிடத்து உள்ள ஒரு குணச் சிறப்பு. காந்தத்தின் முன்பு வைக்கப் பட்ட இரும்பை அக்காந்தம் ஈர்ப்பது போன்றது உயிரின் குணச்

சிறப்பு. எனவே நீங்கள் எழுப்பிய தடை இங்குப் பொருந்தாது” என்று சாங்கியர் மேலும் வாதிடுவர். அப்படியானால் காந்தம் இரும்பைத் தன்னை நோக்கி இழுக்கும் ஆற்றல் மட்டிலுமே உடையதாகும். அகற்றும் ஆற்றல் காந்தத்துக்கு இல்லை. ஆனால் நினைத்தல், மறத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல், நிற்றல் முதலிய மாறுபட்ட தொழில்களை ஆன்மா எவ்வாறு செய்கிறது என்று வினவுக.

உரு உயிர் என்னின் இந்த உடலினுள் காண வேண்டும்;
வருவது பரிணா மத்தாய் அநித்தமாம் பூதம் ஆகும்;
கருவினில் நுழையு மாறும் காட்டிட வேண்டும்; கண்ணில்
மருவிடாது என்னின் உன்தன் வாயினால் உரு அன்று என்னே. 199

உயிருக்கு உருவம் உண்டு என்று சிலர் கூறுவர். அவ்வாறு உருவம் உடையது என்னில் இந்த உடலுக்குள்ளே அது காணப்படுதல் வேண்டும். அப்படிக் கண்டவர் எவரும் இலர். மேலும் கண்ணுக்குப் புலனகின்ற பொருள் உலகத்தில் காணப்படும் மற்றைய ஐம்பூதக் கூட்டாலாகிய பொருள்களைப் போலவே தோன்றி வளர்ந்து அழிதல் வேண்டும். அன்றியும் உருவம் உடையது என்று உங்களால் சொல்லப்பட்ட உயிர், தாயின் கருப்பைக்குள் எவ்வாறு வந்து புகுந்தது என்று விளக்குதல் வேண்டும். அது உருவப் பொருள்தான் ஆனால் கண்ணுக்குப் புலனாகாது என்று விடை கூறினால் அது அருவப் பொருள் என்று கூறுதலே பொருத்தமானதாகும்.

சூக்கும உருவது என்னில் தூலகா ரணம தாகும்;
ஆக்கிய மனாதி தன்மாத்திரை, வடிவு, அசேத னம், பின்
நீக்கிய சூக்கு மத்தே நிற்பதுஓர் உருஉண்டு என்னின்
ஆக்கிடும் உருவம்; எல்லாம் அசித்துமாய் அநித்தம் ஆமே. 200

உயிரினுடைய உருவம் பருவடிவாயன்றி நுண்ணுடலாய் விளங்குவது. எனவே அது காட்சிக்குப் புலனாவதில்லை என்பர் சிலர். இந்நுண்ணுடம்பின் இயல்பு இதற்கு முன்னரே விளக்கப்பட்டது. மனம் புத்தி அகங்காரம், ஆகியனவும் தன்மாத்திரைகள் ஐந்தும் கொண்டதே நுண்ணுடல் அல்லது புரியட்டக உடல் என்று கூறப்பட்டது. இவை எட்டும் கூடி உடம்பே அன்றி உயிராகாது. ஏனெனில் நுண்ணுடல் அறிவற்றது. இதனை மறுத்து ‘அந்த நுண்ணுடம்புக்குள்ளேயும் மீநுண்ணுடம்பு என்ற ஒன்று உண்டு. அது உருவமுடையது. அதனையே உயிர் என்கிறோம்’ என்பர் அவர்கள். அந்த மீநுண்ணுடம்பும் அதிலிருந்து தோன்றும் வடிவங்களும் அறிவற்றவை ஆகவும் அழியும் தன்மை உடையனவாகவும் இருப்பதால் அதனை உயிர் என்று கூறுதல் பொருந்தாது.

அருவுரு என்னில், ஆன்மா அருஉரு ஆவது இன்றாம்;
உருஅரு ஆகா தாகும்; ஒருபொருட்கு, இரண்டு தன்மை
வருவதும் இல்லை; காட்ட வன்னிபோல் மருவும் என்னில்,
உருவமும் காண வேண்டும்; உண்மையும் ஒழிந்து போமே. 201

உயிர் அரு உருவப் பொருள் என்று சிலர் வாதிடுவர். அருவப் பொருளாயின் அதற்கு உருவம் தோன்றாது. உருவப் பொருளாயின் அது அருவமாதல் கூடாது. தம்முள் மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளுக்கு உண்டாவதில்லை. 'விறகுக்குள்ளே இருந்த தீ அருவமாகஇருந்தே பின்னர் எரிகின்ற போது உருவமாகத் தோன்றுவதைப் போன்றது உயிரின் தன்மை' என்று இவர்கள் உவமை கூறுவர். விறகுக்குள்ளே இருந்த நெருப்பு பற்றிக் கொண்ட போது வெளிப்பட்டு அதன் பின்னர் இரண்டுமே இல்லாது அழிந்து போகின்றன. எனவே இந்த எடுத்துக்காட்டு இங்கே பொருந்தாது.

சந்திரன் வடிவு போல தான்அரு உருவம் என்னின்
வந்துநங் கண்ணில் தோன்றும் வடிவுஉள தாம் உயிர்க்கும்;
இந்தஊன் உருவம் தானாய் எழுவதும் உயிரே என்னின்
பந்தமாய் அசித்தாய் ஆன்மாப் பவுதிகம் ஆகும் அன்றே. 202

வளர்பிறையின் முதல் நாளில் திங்கள் நம் கண்ணுக்குப் புலப்படுவ தில்லை. ஆனால் அது முறையாக வளர்ந்து முழு நிலா நாளில் நம் கண்ணுக்குப் புலப்படுகிறது அன்றோ? அது போலவே தாயின் கருப்பையில் கருவாய்க் கிடந்த உயிர் முறையே வளர்ந்து உருவாகி நம் கண்ணுக்குப் புலப்படுகிறது. எனவே உயிர் அரு உருவம் என்பது பொருந்தும் என்று அவர்கள் கூறுவர். இவ்வாறு கொண்டால், உயிரின் இயல்பு அறிவுடையதும் தளையில் கட்டுப்பட்டு விடுபடுவதும் நித்தமாய் இருப்பதும் என்பன வற்றுக்கு மாறாக அறிவற்றதும் ஐம்பூதத்தின் காரியமும் தளைப்படு வதுமாகிய உடம்பே என்று கூற நேரிடும்.

அருஅவி காரி ஆன்மா ஆகாயம் போல, என்னின்
உருவினைக் கட்டி ஆட்டி ஓட்டி மீட்டு உலாவப் பண்ணி
மருவிநிற் பித்து இருத்தி கிடத்தி மண் புரட்டி மற்றும்
பெருவிகா ரங்கள் எல்லாம் தருவது என்? பேசி டாயே ! 203

உயிர் என்பது ஐம்பூதங்களுள் ஒன்றாகிய வானைப் போல அருவ மாகவும் வேறுபாடுகளுக்கு உட்படாததாகவும் இருக்கும் என்பர் சிலர். உருவமாகிய உடம்பைக் கட்டியும் ஆட்டி வைத்தும் ஓட்டுவித்தும் உலாவச் செய்தும் நிறுத்தியும் இருத்தியும் கிடத்தியும் மண்ணில் புரட்டியும் இவ்வாறு பல வேறுபாடுகளுக்கு உட்படுத்தி வருவதாகிய உயிர் அருவம் ஆதல் எவ்வாறு? என்று வினவி அவர்களை மறுக்க. இக் கொள்கை பாதஞ்சலர் கொள்வதாகும்.

அசித்தெனின் உணராது ஆன்மா அசித்துச்சித்து ஆகும் என்னின்
அசித்துச்சித்து ஆகா தாகும்; சித்தசித்து ஆவது இல்லை;
அசித்துஒரு புறமாய் ஒன்றில் சித்துஒரு புறமாய் நில்லாது;
அசித்துஉறாச் சித்தே என்னின் அசித்து அடைந்து அறிவது இன்றாம். 204

உயிர் அறிவற்ற பொருள் எனில் அது எதனையும் அறியாது. வை சேடிகர் உயிரை அறிவற்றது என்று கொண்டு, ஆயினும் உயிர் மனத்

தோடு கூடிய போது அது சித்தாக அறியும் என்பர். இக்கொள்கை பொருந்தாது. அது போலவே சைவரில் ஒரு சாரார் ஒரு வகையால் உயிர் அறிவுடையதாகவும், மற்றொரு வகையால் அறிவற்றதாகவும் இருக்கும் என்பர். இதுவும் பொருந்தாத கூற்றே. பட்டாச்சாரியர் உயிர் கருவி களோடு பொருந்தாமலே அறியும் தன்மை உடையது என்பர். இவர் கொள்கையும் பொருந்தாதாகும். அசித்துப் பொருள் ஒரு போதும் சித்தாகாது என்று வைசேடிகர் கொள்கையை மறுத்தல் வேண்டும். மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரே பொருளுக்கு ஒரே நேரத்தில் இருக்க இயலாது என்று சைவரில் ஒரு சாராரை மறுத்தல் வேண்டும். கருவிகளின் துணை இன்றி உயிர் எதனையும் அறிவதில்லை என்பது கண்கூடு. எனவே உயிர் தனித்து நின்று அறியும் என்ற கொள்கை அடாது என்று கூறி பட்டாச் சாரியரை மறுத்தல் வேண்டும்.

உயிரினை அணுவது என்னின் உடல் பலதுவாரம் ஓடும்;
பயில்வுஉறக் கட்டு ணாது பாரமும் தரித்துச் செல்லாது
அயர்வுறும் அசித்தாய் பூத அணுக்களின் ஒன்றதாகும்;
இயல்புஉறும் அவய வத்தால் – அணுஉரு – இறக்கும் அன்றே. 205

உயிர் அணு அளவினதாய் உடலில் நிற்கும் என்று கூறுவர் சிலர். உடலிலே பல ஓட்டைகள் உள்ளன. உயிர் அணு அளவினதாயின் அது அந்த ஓட்டைகளின் வழியாக ஓடி விடும். மேலும் அவ்வுயிர் தான் புகுந்த உடலை இயக்கி அதற்குள்ளே கட்டுண்டு நில்லாது. அணுவளவாகிய உயிர் உடம்பு என்ற சுமையைத் தாங்கி நடத்த இயலாது. உயிர் அணுவளவினது என்றால் அது அழியக் கூடியது; அறிவு அற்றது; பூத அணுக்களில் ஒன்று என்றெல்லாம் கொள்ள நேரிடும். அணுக்களுக்கும் உறுப்புக்கள் உண்டு. ஆகையினால் அதற்கும் உருவம் உண்டு. ஆதலால் அதுவும் அழியும் என்று கொள்ளுதல் வேண்டும்.

உயிருக்கு அணுத்தன்மை கொள்பவர்கள் பாஞ்சராத்திரிகள் எனப்படும் வைணவர்கள் ஆவார்கள். அவர்கள் கொள்கையிலே உள்ள பொருந்தாமை ஆசிரியரால் இப்பாடலில் விளக்கப்பட்டது.

உடலினில் ஏக தேசி உயிர்எனின் உருவாய் மாயும்;
டர்வுறும் அறிவுஇன்று எங்கும் சுடர்ஒளிப் பண்பது' என்னின்
சுடர்தொடின் சுடுவது எங்கும் தொட்டிடம் அறிவுஉண் டாகும்;
அடர்புல னிடத்தும் ஒக்க அறிவு எழ வேண்டும் அன்றே. 206

உயிர் என்பது உடம்பில் உள்ள இதயத்தில் இடம் பெற்றுப் புல்லின் நுனியில் உள்ள நீர்த்துளி போல நிற்கும் எனவும் அவ்வாறா யினும் விளக்கு ஒளி போல அவ்வுயிரின் அறிவு எங்கும் படர்ந்து செல்லும் என்றும் சிலர் கூறுவர். இக் கொள்கை பொருந்தாது. ஏனெனில் உயிருக்கு உருவம் உண்டு என்று கொண்டோரின் கொள் கையில் உள்ள குற்றங்கள் யாவும் இங்கும் பொருந்துவனவாகும்.

விளக்கின் ஒளி என்பது விளக்கின் நுண்வடிவமே அன்றி அதன் குணம் அன்று. ஆகையால் இவ்வுவமை இங்குப் பொருந்தாது. விளக்கின் சுடர் தொட்டா லன்றிச் சுடாது. உயிரின் அறிவோ தொட்ட இடம் எங்கணும் அறியும் ஆற்றல் உடையது. விளக்கு ஓரிடத்தில் இருந்தவாறே தன்னைச் சூழ இருக்கும் எல்லாப் பொருள்களையும் விளக்கமுறச் செய்யும். இங்குக் கூறிய உவமை பொருந்துமானால் உயிர் ஐம்புலன்களையும் ஒருங்கே அறிதல் வேண்டும். அவ்வாறு நிகழக் கண்டதில்லை. எனவே இக்கொள்கை ஏற்புடையதன்று.

இங்கே கூறி மறுக்கப்பட்டது மிருதி நூலாரின் உயிர் பற்றிய கொள்கை யாகும்.

உருவினில் நிறைந்து நின்று அங்கு உணர்ந்திடும் உயிரது, என்னின்
மருவிடாது உறக்கம் வாயில் அறிவு ஒக்க வழங்க வேண்டும்;
பெருகிடும் சுருங்கும் போதம் பேர்உடல் சிற்று டற்கண்;
வரும்உடல் குறைக்க ஒக்கக் குறைந்து பின் மாயும் அன்றே. 207

உயிர் என்பது உடம்பின் அளவுக்கு ஏற்ப அதனுள் நிறைந்து நின்று அறியும் என்று சிலர் கூறுவார்கள். உடல் முழுக்கவும் உயிர் நிறைந்திருக்கும் என்றால் அதற்கு உறக்கம் என்ற ஒரு நிலை பொருந்துதல் கூடாது. அது மட்டுமன்றி உடல் முழுதும் நிறைந்துள்ள உயிர் ஐம்பொறிகள் அனைத் தையும் ஒரே நேரத்தில் அறிதல் வேண்டும். அவ்வாறு நிகழ்வதில்லை. மேலும் பெருத்த உடம்பின் உயிர் பெரிது ஆகையால் அது பேரறிவு உடையதாகவும் சிறிய உடம்பின் உயிர் சிறியது ஆகையால் அது சிற்றறிவு உடையதாகவும் இருத்தல் வேண்டும். உடம்பில் ஓர் உறுப்பை வெட்டி எறிந்து விட்டால் உயிரும் அந்த அளவுக்குக் குறையும் என்று கொள்ள வேண்டும். உடம்பு அழியும் காலத்து உடம்பு முழுவதும் நிறைந்திருந்த உயிரும் அழியும் என்று கொள்ள வேண்டும். எனவே இக்கருத்துப் பொருந்தாதது ஆகும்.

உயிரைப்பற்றிய இக்கருத்துக்கள் சமணர்களின் கொள்கைகளாகும். அவர்களது கொள்கையால் நேரிடுகின்ற பிழைகளை எடுத்துக்காட்டி ஆசிரியர் மறுத்தார்.

எங்கும்தான் வியாபி யாய் நின்று உணரும் இவ் ஆன்மா என்னின்
தங்கிடும் அவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்
பங்கம் ஆர் புலன் ஒன்று ஒன்றாப் பார்த்திடல் பகரல் வேண்டும்;
இங்குஎலாம் ஒழிந்தால் நிற்பது எங்ஙனம்? இயம்பல் வேண்டும். 208

உயிர் எங்கும் வியாபகமாகி நிறைந்த அறிவாகும் என்று சிலர் கொள்வார்கள். அவ்வாறாயின் உயிர் எவ்வாறு நிலைவேறுபாடுகளை அடைகிறது என்பதை விளக்கியாக வேண்டும். ஏனெனில் உறக்கம் பேருறக்கம் உயிர்ப்பு அடங்கல் ஆகிய மூன்று நிலைகளிலும் உயிருக்கு அறிவு நிகழ்தல் வேண்டும். உயிர் தன் வினைக்கு ஏற்பத் துறக்க

நிரயங்களுக்குச் சென்று திரும்பும் என்பர். எங்கும் நிறைந்த பொருளாயின் இது எவ்வாறு கூடும் என்று விளக்குதல் வேண்டும். உயிர் எங்கும் நிறைந்த தாயின் ஐம்பொறிகளில் நிறைந்ததாக ஒரே நேரத்தில் பொருந்தி நிற்ப தாகும். ஆனால் ஐம்பொறிகளில் இருந்தும் வருகின்ற அறிவை உயிர் ஒவ்வொன்றாய் அறிவதன்றி ஒருங்கே அறிவதில்லை. இது எங்ஙனம் கூடும் என விளக்குதல் வேண்டும். எங்கும் நிறைந்திருக்கின்ற உயிர் தன் வியாபகத்தை ஒழித்து எப்படி ஓர் உடலில் தங்கி நின்றது என்பதையும் இயம்புதல் வேண்டும். இவற்றுக்கெல்லாம் விடை இன்மையின் இக் கொள்கை பொருந்தாது.

சுத்தமாம் ஆன்ம சித்தைத் துகள் உடல் மறைத்தது என்னின்
வைத்துறாது உடற்கண் வாயில் கரணங்கள் வழியால் ஞானம்;
ஒத்துறும் மலம்; அற்றாலும் உறும்மலம் வீடும் இன்றாம்;
பெத்தமும் அடையான்; முத்தனாய்ப்பிர காச னாமே. 209

"உயிர் என்பது தோற்றமில் காலந் தொட்டே தூய அறிவு வடிவாக விளங்குவது. இடைப்பட்ட காலத்தில் உயிரை வந்துபொருந்திய மாயையின் காரியமாகிய உடலே உயிரின் தூய அறிவினை மறைத்தது என்பர் சிலர். மாயையின் காரியங்களாகிய உடல் கருவி முதலியன அறிவை விளக்குவனவே அன்றித் தடை செய்வன அல்ல. தூய நிலையில் இருந்த உயிரறிவை எந்தக் காரணமும் இல்லாமல் மாயையின் காரியங்கள் வந்து தடை செய்தன என்பதும் பொருத்தமற்றது. ஏனெனில் காரணமில்லாமல் உயிரைப்பற்றிக் கொண்ட மாயை வீடு பேறு அடைந்த போதும் மீண்டும் அதனைக் காரணமின்றியே பற்றுதல் கூடும். எனவே முத்தி என்ற நிலையே இல்லாது போகும். உயிர் வீடு பேறு பெற்ற பிறகு மாயை பற்றாது என்று அவர்கள் வாதிடின் தோற்றமில் காலத்திலேயே தளைக்குட் படாமல் உயிர் முத்தனாய் விளங்குதல் வேண்டும்.

அசித்து அருவியாப கம்போல் வியாபகம் அருவம் இன்றாய்
வசித்திட வரும்வி யாபி எனும் வழக்கு உடையன் ஆகி
நசித்திடா ஞானச் செய்தி அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடையன் ஆகிப் பசு என நிற்கும் ஆன்மா. 210

ஆன்மாவுக்கு மாயையினிடத்திலே வியாபகத் தன்மை உண்டு. ஆன்மா அருவமானது. ஆனால் அதனுடைய அருவமும் வியாபகத் தன்மையும் மாயையின் தன்மைகளைப் போன்றது அல்ல. ஆன்மா எப்பொருளைப் பற்றி நின்றதோ அதுவதுவாய் நிறைந்து நிற்கும் இயல்புடையது. ஆன்மா வின் அறிவு என்பது ஒரு போதும் அழிவதில்லை. ஆயினும் ஆணவ மலம் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களைத் தோற்றமில் காலந் தொட்டே மறைத்து நிற்பாதம். ஆதலால் ஆன்மா பசுத்தன்மை பெற்று நிற்கும்.

பசுத்துவம் - கட்டுக்குள் அகப்படும் தன்மை. பாசத்தால் கட்டுப்பட்டு நிற்பது எதுவோ அதுவே பசு. இங்கே உயிர் ஆணவமலத்தில் கட்டுண்டு இருப்பதால் பசு எனப் பெற்றது.

மாயையின் வயிற்றுள் மன்னி வருஞ்செயல் ஞானம் இச்சை
ஏயும் அக் கலாதி மூன்றால் ஏகதே சத்தில் ஏய்ந்து இங்கு
ஆயும் முக்குணங்கள் அந்தக் கரணங்கள் ஆதி எல்லாம்
காயம் பெத்தங்கள் ஆகி கலந்து உடன் நிற்கும் ஆன்மா. 211

பசுத்துவம் உடையது என்று கூறப்பட்ட உயிர் தூவா மாயையில் தத்துவங்களைப் பொருத்தி அதில் தோன்றும் கலை வித்தை அராகம் ஆகிய மூன்றோடும் கூடிப் பொதுவாக விளக்கம் பெற்று நிற்கும் அதன் பின்னர் இம்மூன்றினையும் சிறப்பு வகையால் கூடி உட்கரணங்கள் முக்குணங்கள் ஆகியவற்றோடும் பொருந்தி மேலும் விளக்கம் பெற்று நிற்கும்.

கலாதி மூன்றும் - கலை வித்தை அராகம் என்ற மூன்றும்-. காயபெத்தம்- உடல் ஆகிய கட்டு.

சூக்கும தேகி ஆகித் தூலரூ பத்தின் மன்னி
சாக்கிர முதலா யுள்ள அவத்தையுள் தங்கி எங்கும்
போக் கொடு வரவும் எல்லாம் புரிந்து புண்ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்கள் எல்லாம் அருந்தியும் நிற்கும் ஆன்மா. 212

உயிர் மேற்கூறியவாறு உட்கருவிகளுடன் கூடி நுண்ணுடம்பைப் பெறும். அதன் பிறகு வினைக்கேற்ற பரு உடம்பில் தங்கும். பருஉடம்போடு பொருந்திய நிலையில் உயிருக்கு ஐந்து வகைப்பட்ட நிலை வேறுபாடுகள் உளவாகும். பரு உடம்போடு எங்கும் சென்றும் வந்தும் செயல் புரிந்தும் செயல்களாலாகிய புண்ணிய பாவங்களை ஈட்டியும் அவற்றின் விளைவாகிய இன்பத்துன்பங்களை நுகர்ந்தும் வரும்.

மருவுஆ னந்தம் விஞ்ஞானம் மனோபிராணன் அன்னமயம்
உருவாம் தன்மை உண்டாய் முன்ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய்
வருமாம் அன்னமயம் பற்றி; மாயை முதற்காரணமாகும்,
அருவாய் ஆன்மா ஐங்கோசத்து ஆர்ப்புண்டு அவற்றின் அகம்புறமாம். 213

ஆன்மாவுக்கு ஆனந்தமயகோசம், விஞ்ஞான மயகோசம், மனோ மயகோசம், பிராணமய கோசம், அன்னமய கோசம் என்று ஐந்து உறைகள் உண்டு என்பர். இவ்வொவ்வொன்றும் முறையே ஒன்றிலிருந்து ஒன்று உளதாகும். இவற்றுள் முதலில் தோன்றுவது நுட்பமாகவும் அதன் பின்னர்த் தோன்றுவது அதனினும் பருமையாகவும் விளங்கும். இவ்வைந்து உறைகளையும் தனித்தனி உடல்களாகக் கூறுவர். இவை யாவற்றுக்கும் முதற் காரணமாக விளங்குவது த்ூவாமாயை ஆகும். அருவமான ஆன்மா இவ்வாறு ஐந்து உறைகளால் பிணிக்கப்பட்டு அதுவதுவாய் அவற்றோடு நின்று போக்கும் வரவும் புரியும்.

கோசம் - உறை. இந்த ஐந்து உறைகளுக்கும் காரண உடல், கஞ்சுக உடல், குண உடல், நுண்ணுடல், பருஉடல் என்றும் பெயர்கள் வழங்கும்.

தோற்பாவைக் கூத்தும் தொல்லை மரப்பாவை இயக்கமும் சீர்த்
தேர்ப்பாரின் செலவும் வேறாய்ச் செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடம் கட்டி ஆடுவோர் பரிசு போலும்
ஆர்ப்பாய காயந் தன்னை ஆன்மா நின்று ஆட்டும் ஆறே. 214

உயிரினைப் பதிந்து நிற்கும் மேற் கூறப்பட்ட ஐந்து உடல்களையும் வேற்றுமை இன்றி நின்றே உயிர் செலுத்தும் என்பதற்கு ஐந்து உவமைகள் கூறலாம். அவை முறையே சிறப்பான தேரை நிலத்தின் மீது செலுத்துவோர் தன்மையும், மரப் பாவையினை இயக்குவோர் தன்மையும், தோல் பாவையினை ஆட்டுவோர் தன்மையும், தன்னுடலை விட்டு இன்னொரு உடலில் கூடுவிட்டுக் கூடுபாய்வார் தன்மையும், பற்பல வேடங்களைப் புனைந்து நடிப்போர் தன்மையும் என்ற ஐந்துமாம்.

பாடலில் கூறப்பட்டுள்ள உவமைகளை இடம் மாற்றி உரை எழுதினார் சிவஞானமுனிவர். அவ்வாறு எழுதியதற்கு "இவை ஐந்தும் முறையே ஒன்றற்கொன்று அந்தரங்கமாய் அவ்ஐங்கோசங்களிலும் ஆன்மா நின்று செய்யும் ஆற்றிற்கு உவமை ஆமாறு தெரிந்து உணர்ந்து கொள்க. செய்யுளாகலின் முறை பிறழ வைத்தார்" என்று காரணமும் காட்டினார். இங்கே சிவஞான முனிவர் கூறிய வரிசை அன்னமய கோசம் பிராணமய கோசம் மனோமய கோசம் விஞ்ஞான மய கோசம் ஆனந்த மய கோசம் ஆகிய ஐந்திலும் ஆன்மா நின்று செலுத்து முறைமையை உணர்த்திற்று

என்உடல் பொறி பிராணன் கரணம் என் உணர்வு என்றக்கால்
தன்னின்வே றாகும் நீ என் தன்மனை என்ற எல்லாம்
நின்னின் வேறாகும்; என்னின் நீங்கிடா இவை இங்கு என்னின்
உன்னின் ஆகும் நீயாம் உகிர்மயிர் உகவும் காண்டி. 215

என் மனைவி, என் கணவன் என்று உன்னோடு வேற்றுமையற்று நீ கூறி வந்தன யாவும் ஆய்ந்து பார்க்கும் போது அவர்கள் உனக்கு வேறானவர் என்பது புலப்படும். அது போலவே என் உடல் என் பொறிகள், என் மூச்சு எனது கரணங்கள் என்று நீ கூறுபவை யாவும் ஆய்ந்து பார்க்கில் உன்னிலிருந்து வேறாகும். " அவ்வாறு அன்று; என் மனைவி என்ற போது அவள் என்னிலும் தனித்தவள். ஆனால் உடம்பும் பொறிகளும் கரணங்களும் என்னை விட்டு நீங்கா" என்று நீ கூறுதல் கூடும், அவையும் உனக்கு வேறானவையே. உனது நகமும் உனது தலை மயிரும் உன்னை விட்டு நீங்குவன அன்றோ? எனவே ஆன்மாவாகிய நீ இவற்றிலிருந்தும் வேறானவன் என்பதை அறிக.

பொன் அணி ஆடை மாலை போது மேலான போது இங்கு
என் அணி யான் என்று உன்னி இருந்தனை; பிரிந்த போது
நின் அணி நீயும் அல்ல ஆயினை; காயம் நின்னின்
அன்னியம் ஆகும்; உன்னை அறிந்து நீ பிரிந்து பாரே. 216

பொன்னால் செய்த அணிகலன்கள், உடுத்திய ஆடை, அணிந்த பூமாலை இவற்றை எல்லாம் நீ அணிந்து கொண்ட போது அவை உன்னோடு வேற்றுமையற்றன என்றே கருதியிருந்தாய். உன்னில் ஒரு தொகுதி என்று எண்ணியிருந்தாய். ஆனால் அவற்றை நீ களைந்த போது அவை வேறு நீ வேறு என்பதனை உணர்ந்தாய். அது போலவே உடம்பும் உன்னிலிருந்து வேறானது. இந்த உண்மையை அறிந்து அவற்றை விட்டு நீ நீங்கி நிற்பாயாக.

உடல்யான் அல்லேன் ! இந்த உணர்வுயான் அல்ல ஆன
கடன்யாதென்னின் வேறு கண்டு உணர்வு என்னது என்கை
இடர்இலா என்தன் ஆன்மா என்றபோது ஆன்மா வேறோ?
திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்பலே காண். 217

"உடல் யான் அல்லேன் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். அதனாலே என் ஆன்மா என்று கூறும் போது நான் என்பது ஆன்மாவின் வேறோ? என் உணர்வு என்பதும் என்னிலிருந்து வேறானதோ?" என்று சிலர் ஐயம் எழுப்புதல் கூடும். இவ்வாறு வழங்குகிற வழக்கு உயிரை மற்றவற்றிலிருந்து பிரித்துக் காணும் தெளிவு இல்லாதவர்களுடைய கூற்றேயாகும்.

'இந்த உணர்வு யான் அல்லவான கடன் யாது என்னில்' என்ற பகுதிக்கு உரை எழுதிய சிவஞான முனிவர் "விஞ்ஞான மய கோச ஆனந்தமய கோசங்கள் யான் அல்லேன் ஆகிய முறைமை யாது என்னில்" என்று எழுதினார். உயிர் ஐந்து உறைகளில் பொருந்தி இருக்கும் என்பது முன்பே கூறப்பட்டது. அந்த ஐந்தனுள்ளும் விஞ்ஞானமய கோசமும் ஆனந்தமய கோசமும்- உயிருக்கு மிக நெருங்கியன. ஆதலால் அவையும் உயிரின் வேறோ என்ற வினாவிற்கு விடை கூறியதாயிற்று. இங்கே விஞ்ஞானமய கோசம் மட்டிலுமே கூறப்பட்டது எனினும் இனம் பற்றி ஆனந்தமய கோசமும் உயிரிலிருந்து வேறானது என்பது பெறப்படும்.

புந்தியை மனமது என்றும் மனமது புந்தி என்றும்
சிந்தையைச் சீவன் என்றும் சீவனைச் சிந்தை என்றும்
முந்தனை ஆன்மா என்றும் ஆன்மாவை முந்தன் என்றும்
வந்திடும்; எந்தன் ஆன்மா என்றது மற்று ஒற்றைக்காண். 218

புத்தியை மனம் என்று வழங்குவர். மனத்தை புத்தி என்று வழங் குவர். சித்தத்தை உயிர் என்று வழங்குவர். உயிரைச் சித்தம் என்று

வழங்குவர். இறைவனை உயிர் என்றும் உயிரை இறைவன் என்றும் வழங்குவர். இது எவ்வாறு எனில் ஒன்றனோடு இயைபு உடைய பிறிது ஒன்றினை ஆகு பெயராகக் கொண்டு உரைப்பதாகும். எனவே எனது ஆன்மா என்று கூறும் பொழுது தன்னோடு இயைபு உடைய பிறிதொன்றுக்கு ஆகு பெயராயிற்று என்று அறிக.

முந்தன் - இறைவன், பரம காரணன் ஆதலால் இப்பெயர் பெற்றான்.

அறிவு உடல் சிந்தை ஆன்மா அணைதலால் ஆன்மா என்பர்
எறிசுடர் விளக்கு இருக்கும் இடத்தையும் விளக்கு என்றாற்போல்
பொறிபுலன் கரணம் எல்லாம் புலப்படும் அபேதமாகிப்
பிறிதராது அறிவது ஆன்மா அறிபொருள் பின்னம் ஆமே. 219

ஆன்மாவின் வேறாகிய அறிவு முதலிய ஐந்து கோசங்களையும் ஆன்மா பொருந்தி நிற்றலால் அவற்றையும் ஆன்மா என்று கூறுவர். இது எவ்வாறு எனில் ஒளியைத் தருகின்ற விளக்கு இருக்கிற தகழியையும் விளக்கு என்றே கூறுவது போன்றது. அவ்வாறே பொறி புலன் கரணம் யாவும் அபேதமாகப் பிரிப்பின்றி அறிவதாகிய ஆன்மாவும் அவற்றிலிருந்து வேறுபட்டதாகும். ஏனெனில் அறிகின்ற ஆன்மா அறியப்படுகின்ற பொருள்களாகிய அப்பொருள்களில் இருந்து வேறு பட்டதாகும்.

உபநிடதங்களில் சில இடங்களில் ஐந்து கோசங்களையும் ஆன்மா என்று கூறப்பட்டதன் உட்கருத்து இது என்று இப்பாடலில் ஆசிரியர் விளக்கினார்.

கண்டுஉணர் புருடன் வேறு கனவு கண்டு ஒடுங்கிக் காயம்
உண்டியும் வினையும் இன்றிக் கிடந்து உயிர்த்திட உணர்ந்து
கண்டிடும் கனவும் சொல்லி ஒடுக்கமும் கருதி வேறாய்
உண்டியும் வினையும் உற்று இங்கு உணர்த்திட உணரா நிற்கும் 220

உயிர் அன்னமய கோசம் முதலிய நான்கினையும் ஒன்றொன்றாக விடுவதன் மூலம் ஐந்து நிலைவேறுபாடுகளுக்கு உட்படும். கனவு நிலையில் நுகர்வும் தொழிலும் இல்லாமல் கிடந்த உயிர் விழித்த பின் தான் கண்ட கனவைச் சொல்லும். உறக்கத்தில் இருந்து எழுந்த பிறகு நன்றாகத் துயின்றேன் என்று கருதி உணரும். பேருறக்கமும் உயிர்ப்பு அடங்கலும் சித்தமும் கூடாத நிலை ஆகையினால் அவற்றைச் செயலும் தொழிலும் ஆகிய மறுதலையில் வைத்து உயிர் அறியும். இவ்வாறு நனவு நிலையில் மற்றைய நான்கு நிலைகளையும் உயிர் உணர்ந்து வரும். எனவே பொறி புலன் முதலியவற்றின் வேறாய் நின்று அறியும் தன்மை உடையது உயிர் என்று அறிதல் கூடும்.

இங்கு ஒடுக்கம் என்ற சொல் உறக்கத்தைக் குறித்தது. கனவு நிலையைப் போல உறக்கத்தைச் சொல்ல இயலாது. ஆகையால் "ஒடுக்கமும் கருதி" என்றார். பேருறக்கமும் உயிர்ப்படங்கலும் ஆகிய

இரண்டு நிலைகளிலும் சித்தம் செயல்படாமையினால் அவற்றைக் கருதியும் உணர இயலாது. அதன் மறுதலையில் வைத்தே உணர்தல் வேண்டும். எனவே "வேறாய் உண்டியும் வினையும் உற்று உணரா நிற்கும்" என்றார் ஆசிரியர்.

புருடனே அறிவனாகில் பொறிபுலன் ஆதி போதம்
தருவதுஎன்? அறிவு மாயா தனுகர ணாதி பற்றி
வருவது இங்கு; அநாதியாக மலத்தினின் மறைந்து நிற்பன்
அருவனாய்; இவற்றோடு ஆளும் அமைச்சரும் அரசும் போல்வன். 221

இங்கே ஒரு வினா எழும். உயிரே அறிய வல்லது என்று கூறினால் பொறி புலன்கள் முதலியன உயிருக்கு அறிவைத் தருவன என்று ஏன் கொள்ள வேண்டும்? என்பது அந்த வினா. ஆன்மா தோற்றமில் காலந்தொட்டே ஆணவ மலத்தில் மறைந்து அருவமாய் நிற்கும். எனவே ஆன்மாவுக்கு மாயையின் காரியங்களாகிய உடல் கருவிகள் ஆகியவற்றின் துணை வேண்டப்படுகிறது. அமைச்சரின் துணை கொண்டு ஆளுகின்ற அரசனைப் போல் உடல் கருவிகளின் துணை கொண்டு உயிரும் பொருள்களை அறிந்து வரும்.

இறைவன் முற்றறிவினன். அவனுடைய அறிவு வாலறிவு ஆகையினால் அவன் மாயா காரியங்களைப் பற்றி நின்று அறிதல் வேண்டா. உயிர் அவ்வாறு அன்றி மாயா காரியங்களைப் பற்றி நின்றே அறியும். ஆதலால் உயிர் அநாதியே ஆணவ மலத்தில் மறைந்து நின்றது என்பது பெறப்படும் என்பது சிவஞான முனிவரின் உரை.

மூன்றாம் அதிகரணம்

படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போது இல்லில்
கடைதொறும் விட்டுவிட்டு காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்புரத்தினில்; அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சு அவத்தை உறும் உயிர் காவலாக. 222

அரசன் உலா மேற்கொள்ளும் போது அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிவாரங்களுடன் செல்லுவான். அவன் மீண்டும் அரண்மனைக்குள் புகும்போது அவர்கள் அனைவரும் அவனுடன் புகமாட்டார்கள். ஒவ்வோரிடத்தினில் ஒவ்வொரு தகுதி உடையவர்களை நிறுத்திப் பிறர் யாரும் புகா வண்ணம் காவலும் இடுவான். இறுதியாக அரசன் தான் மட்டும் அந்தப்புரத்துக்குள் செல்வான். அது போலவே உடல் கருவிகளுடன் கூடிப் பொருள்களை அறிந்து நுகரும் உயிரும், உடலுக் குள்ளே ஒடுங்கும் போது தனக்குத் துணையாக நின்ற கருவிகளை விட்டு நீங்கி உந்தியில் உயிர்க் காற்றைக் காவலாக நிறுத்தி மூலாதாரமாகிய அந்தப்புரத்துக்குள் தான் சென்று தனியாய் விடும். இவ்வாறு உயிர் ஐந்து நிலைவேறுபாடுகளை எய்தும்.

உயிரின் நிலைவேறுபாடுகள் ஐந்தவத்தை எனப்படும். அவற்றின் இயல்புகளும் இடமும் கூடும் கருவிகளும் ஆகிய விரிவுகள் இனிவரும் பாடல்களில் ஆசிரியரால் விளக்கப்படுகின்றன.

சாக்கிரம் முப்பத்தைந்து நுதலினில்; கனவு தன்னில்
ஆக்கிய இருபத்தைந்து களத்தினில்; சுழுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில் துரியத்தில் இரண்டு நாபி;
நோக்கிய துரியா தீதம் நுவலின் மூலத்தின் ஒன்றே. 223

நனவு நிலையில் உயிர் புருவ நடுவை இடமாகக் கொண்டு தங்கி நிற்கும். அந்நிலையில் தொழிற்படும் கருவிகள் முப்பத்தைந்து. கனவு நிலையில் உயிர் கழுத்தை இடமாகக் கொண்டு தங்கி நிற்கும். அந்நிலையில் தொழிற்படும் கருவிகள் இருபத்தைந்து, உறக்க நிலையில் உயிர் இதயத்தை இடமாகக் கொண்டு தங்கி நிற்கும். அந்நிலையில் தொழிற்படும் கருவிகள் மூன்று மட்டிலுமே. பேருறக்க நிலையில் உயிர் உந்தியை இடமாகக் கொண்டு தங்கி நிற்கும். அந்நிலையில் தொழிற்படும் கருவிகள் இரண்டு ஆகும். உயிர்ப்பு அடங்கல் நிலையில் உயிர் மூலாதாரத்தை இடமாகக் கொண்டு தங்கி நிற்கும். அந்நிலையில் உயிர் மட்டிலுமே தொழிற்படும்.

நனவு நிலையில் தொழிற்படும் கருவிகளாவன; அறிவுப் பொறிகள் ஐந்து. செயற் பொறிகள் ஐந்து புலன்கள் ஐந்து. செயற் பொறிகளின் செயல்பாடு ஐந்து, உயிர்க்காற்று முதலிய காற்றுகள் பத்து, உட்கருவிகள் நான்கு, உயிர் ஒன்று. ஆக முப்பத்தைந்து. கனவு நிலையில் அறிவுப் பொறிகள் ஐந்தும் செயற் பொறிகள் ஐந்தும் ஆகிய பத்தும் நீங்கி விடுகின்றன. எனவே கனவு நிலையில் தொழிற்படுவன இருபத்தைந்து கருவிகளாகும். உறக்க நிலையில் செயற்படும் கருவிகள் மூன்றேயாகும். அவை சித்தம், உயிர்க் காற்று, உயிர் என்பன. பேருறக்க நிலையில் சித்தமும் தொழிற்படாது நீங்கிவிட உயிர்க்காற்றும் உயிரும் ஆகிய இரண்டே தொழிற்படும். உயிர்ப்படங்கல் நிலையில் உயிர் ஒன்றே தனித்துச் செயல்படும்.

களம் - கழுத்து. நாபி - உந்திச்சுழி

இருவகை சாக்கிராதி அவத்தைகள் இயல்புதானும்
ஒருவகை கீழே நூக்கி உற்பவம் காட்டும்; ஒன்று
பெருகமேல் நோக்கித் தீய பிறப்பு அறுத்திடும் ! யோகில்
தருவதோர் சமாதி தானும் தாழ்ந்து பின் சனனம் சாரும். 224

முந்திய பாடலில் கூறிய நனவு முதலிய ஐந்து நிலைவேறுபாடுகளும் இரண்டு வகையாகக் கூறப்படும். அவற்றுள் முதல்வகை கீழ் நோக்கிச் சென்று ஒடுங்கும் முறைமையும், மற்றொரு வகைமேல் நோக்கித் தோன்றும் முறைமையும், உணர்த்தும் என்றார். இவற்றுள் கீழ்நோக்கி ஒடுங்குகின்ற முறை . பிறவிக்கு வித்தாகும். மற்றொன்று

பெருக மேல் நோக்கிச் செல்லுவதனால் தீய பிறப்பினை அறுத்திடும். யோக நிலையும் கூட அதுபோல ஒடுங்கியும் தோன்றியும் அவ்வாறே பயனைத் தரும்.

சிவஞான முனிவர் "இச்செய்யுளில் கூறிய மூன்று பேதமும் முறையே சகலத்தில் கேவலம், சகலத்தில் சகலம், சகலத்தில் சுத்தம் எனப்படும் என்க" என்று சிறப்புரை வரைந்தார்.

அறிதரு முதல் அவத்தை அடை தரும் இடத்தே ஐந்தும்
செறிதரும் கரணம் தன்னில் செயல்தொறும் கண்டு கொள் நீ
பிறிவிலா ஞானத் தோரும் பிறப்புஅற அருளால் ஆங்கே
குறியொடும் அஞ்சு அவத்தை கூடுவர், வீடு கூட 225

மேற்கூறிய ஐந்து நிலைவேறுபாடுகளில் எல்லாக் கருவிகளோடும் கூடி உயிர் அறியும் என்று கூறப்பட்ட நிலை நனவு ஆகும். அதுவே முதல் அவத்தை என்றும் கூறப்பெறும். அது நிகழ்வது புருவநடுவில் என்றும் கூறப்பட்டது. அங்கேயும் மேற்கூறிய நனவு முதலிய ஐந்து நிலைவேறுபாடுகளும் நிகழும். இவ்வாறு நிகழ்கிறது என்பதைக் கருவிகளின் துணையோடு பொருள்களை அறியும் ஒவ்வொரு செயலிலும் நுணுக்கமாக உற்றுக் கவனித்தால் நீயே உணர்ந்து கொள்ளுதல் கூடும். இத்தகைய அவத்தைகளைத் தவிர கேவலம் சகலம் இரண்டும் நீங்கிய மெய்ஞ் ஞானத்தை அறிந்தோரும் வீடு பெறற் பொருட்டு இவ்வாறு ஐந்து நிலை வேறுபாடுகளைக் கொள்ளுவர்.

சிவஞான முனிவர் கேவல சகலங்கள் நீங்கிய சுத்தத்தில் உளதாகிய ஐந்து அவத்தைகள் உண்மை அதிகாரத்துள் உணர்த்த நின்றன என்று குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.

ஐந்துசாக்கிரத்தின் நான்கு கனவினில், சுழுனை மூன்று
வந்திடும் துரியம் தன்னில் இரண்டு ஒன்று துரியா தீதம்,
தந்திடும் சாக்கிராதி அவத்தைகள் தானம் தோறும்
உந்திடும், கரணம் தன்னில் செயல்தொறும்; உணர்ந்து கொள்ளே. 226

நனவு நிலையில் சிவதத்துவம் முதல் சுத்தவித்தை ஈறாக ஐந்து தத்துவங்களும் கலை முதலியவற்றைச் செலுத்தும். கனவில் சிவதத்துவம் தொடங்கி மகேசுவரன் ஈறான நான்கும், உறக்க நிலையில் சதாசிவம் ஈறான மூன்றும் பேருறக்க நிலையில் சிவமும் சத்தியும் என இரண்டும், உயிர்ப்படங்கலில் சிவதத்துவம் ஒன்றே தனித்தும் செயற்படுத்தி வரும் என்பதை ஒவ்வொரு செயலிலும் நுண்ணுணர்வால் உணர்ந்து கொள்க.

"இச் செய்யுள் பிறிதோர் அவத்தைக்கு ஓதியது போலும் என மலையாமைப் பொருட்டுக் கரணந் தன்னின் செயல்தோறும் கண்டு கொள்ளென மேற் கூறியதனை ஈண்டு மறித்துணர்வு நிகழக் கூறினார்" என்பது சிவஞான முனிவர் தரும் உரைக் குறிப்பு.

கேவல சகல சுத்தம் என்று மூன்று அவத்தை ஆன்மா
மேவுவன் கேவலம்தன் உண்மை மெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது சகலனாம்; மலங்கள் எல்லாம்
ஓவினபோது, சுத்தம் உடையன், உற்பவம் துடைத்தே, 227

உயிர் மேற் கூறிய ஐந்து நிலை வேறுபாடுகள் எய்துவதற்குக் காரணமாக அமைந்தவை மூன்று என்று கூறப்படும். அவை கேவலம் சகலம் சுத்தம் என்று பெயர் பெறும். கேவலம் என்பது உயிர் எந்தக் கருவிகளோடும் பொருந்தாமல் தனித்து நின்று ஆணவ மலத்தால் பிணிக்கப் பட்டு இருக்கின்ற நிலையாகும். அதன் பின்னர் உயிரின் வினைக்கு ஏற்ற உடல் கருவிகளை இறைவன் கூட்டுவிக்க நிகழும் நிலை சகலம் எனப்படும். அதன் பிறகு உயிர் ஐந்து மலங்களையும் விட்டு நீங்கிப் பிறவியையும் ஒழித்து இறைவனோடு கூடி விளங்கும் நிலை சுத்தம் எனப்படும்.

இதற்கு முன் கூறிய பாடல்களில் உயிர் அடையும் நிலை வேறுபாடுகள் நனவு முதலிய ஐந்து. அவை காரிய அவத்தைகள் எனப்படும். அவத்தை - அவஸ்தை - நிலை. இவற்றுக்குக் காரணமாக விளங்குபவை ஆகையினால் கேவலம் சகலம் சுத்தம் என்ற மூன்றும் காரண அவத்தைகள் என்று பெயர் பெறும். கேவலம் என்ற சொல் தனிமை என்ற பொருளைத்தரும். தோற்றமில் காலத்தில் உயிர் உடல் முதலிய கருவிகள் இல்லாமல் முற்றிலும் ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டு இருக்கின்ற நிலையைக் கேவலம் என்பர். இது தமிழின் தன் உண்மை என்று ஆசிரியரால் மொழி பெயர்க்கப்பட்டது. இதனை அடுத்த நிலை சகலம் எனப்படும். இந்நிலையில் உயிரின் வினைக்கு ஏற்ற உடல் கருவிகளை இறைவன் அதற்குக் கூட்ட, அதன் அறிவு விழைவு ஆற்றல்கள் ஓரளவு விளங்கும். அதன் பின்னர் உயிர் பக்குவம் பெற்று ஐந்து மலங்களிலிருந்தும் நீங்கிப் பிறவியை அழித்துத் தூய்மை எய்திய நிலை சுத்தம் எனப்படும்.

காவலன் - இறைவன். ஓவினபோது - ஒழிந்த போது. உற்பவம் - பிறப்பு.

அறிவு இலன்; அமூர்த்தன், நித்தன், அராகாதி குணங்களோடும்
செறிவு இலன், கலாதியோடும் சேர்வு இலன் செயல்கள் இல்லான்
குறிஇலன், கருத்தா அல்லன், போகத்தில் கொள்கை இல்லான்
பிறிவு இலன், மலத்தினோடும் வியாபிகே வலத்தில் ஆன்மா. 228

தன்னுண்மை எனப்பட்ட கேவல நிலையில் உயிர் ஆணவ மலத்தால் முற்றிலும் மறைக்கப்பட்டிருப்பதால் அறிவற்று இருக்கும். அந்நிலையில் அதற்கு வடிவம் கிடையாது. ஆயினும் உயிர் நித்தப் பொருளே. இந் நிலையில் உயிருக்குக் கலை முதலிய அறிவுகள் சேர்தல் இல்லை. புத்தி குணங்கள் எட்டினோடும் உயிர் செறிவதில்லை. உயிருக்குச் செயலும் இல்லை. விழைவு இல்லை. நுகர்ச்சியில் நோக்கம் இல்லை. ஆணவ மலத்தோடு முற்றிலும் உயிர் கூடி நிற்கும்.

காரண அவத்தை எனப்பட்ட மூன்று நிலைகளிலும் நிற்கும் உயிரின் இயல்பை ஆசிரியர் கூறத் தொடங்கினார். இந்தப் பாடலில் உயிரின் தன்னுண்மை எனப்படும் கேவல நிலையைப் பற்றித் தொகுத்துரைத்தார்.

உருவினைக் கொண்டு போக, போக்கியத்து உன்னல், செய்பல்
வருசெயல் மருவி, சத்தம் ஆதியாம் விடயம் தன்னில்
புரிவதும் செய்து, இங்கு எல்லா யோனியும் புக்கு உழன்று
திரிதரும் சகலமான அவத்தையில் சீவன் சென்றே. 229

கட்டுநிலை எனப்படும் சகலநிலையில் உயிர் உடம்போடு சேர்ந்து அதனைப் பற்றி நிற்கும். எனவே அதற்குக் கருவிகளும் உளவாகும். நுகர்வ தற்குரிய பொருள்களை மனம் மொழி மெய்களால் நினைந்தும் பேசியும் இயற்றியும் வரும். ஓசை முதலிய பொருள்களை ஐம்பொறிகளாலும் நுகரும். எண்பத்து நான்கு நூறாயிரம் வகையான பிறவி வகைகளைத் தன் வினைக்கு ஏற்ப எடுத்து மாறி மாறிப் பிறப்புட்படும்.

சகல அவத்தையில் உயிரின் இயல்பு இப்பாடலில் கூறப்பட்டது.

இருவினைச் செயல்கள் ஒப்பில் ஈசன் தன் சத்தி தோய
குரு அருள் பெற்று, ஞான யோகத்தைக் குறுகி, முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச் சிற்றறிவு ஒழிந்து, ஞானம்
பெருகி, நாயகன் தன் பாதம் பெறுவது சுத்தமாமே. 230

உயிர் இருவினை ஒப்பு அடைந்த போது அதனிடத்து அருட் சத்தி பதியும். அதனால் அருட் குருவின் திருநோக்கம் பெற்று யோகம் ஞானங்களை அடைந்து தொன்மையாக உள்ள மும்மலங்களிலிருந்தும் நீங்கும். அதனால் தன்னுடைய சிற்றறிவினை ஒழித்து மெய்ஞ்ஞானம் பெறுவதற்குரிய வாய்ப் பினை உயிர் பெறும். பெருகிய ஞானத்தால் சிவ பெருமான் திருவடியைப் பெறுவது உயிரின் சுத்த நிலை ஆகும்.

ஐந்தாவது நூற்பா

பொறி, புலன் கரணம் எல்லாம் புருடனால், அறிந்தான் மாவை
அறிதரா அவையே போல, ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும்
செறிதரும் சிவன்தனாலே அறிந்திடும்; சிவனைக்காணா
அறிதரும் சிவனே எல்லாம் அறிந்து அறிவித்தும் நிற்பன். 231

ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் உட்கருவிகளும் உயிரின் துணை கொண்டே தாம் தாம் அறிவனவற்றை இது இன்னது என்று அள விட்டு அறிந்து வரும். ஆயினும் அவை யாவும் தம்மைச் செலுத்துகின்ற உயிரை அறியமாட்டா. அவற்றைப் போலவே உயிரும் உலகத்துப் பொருள்களை அறிந்தும் நுகர்ந்தும் வருகின்ற போதும், எல்லாவிடத் திலும் செறிந்து நிற்கின்ற சிவபிரானுடைய திருவருளினாலே அறிந்து

வருகின்றது. ஆயினும் அது தன்னைச் செலுத்தி நிற்கும் இறைவனை அறியாது. மெய்யறிவைத் தரவல்ல சிவபிரானே முழுவதையும் அறிந்தும் உயிர்களுக்கு அறிவித்தும் உடன் நிற்பான்.

இரண்டாம் அதிகரணம்

இறைவனே அறிவிப்பானேல், ஈண்டு அறிவு எவர்க்கும் ஒக்கும்,
குறைவு அதிகங்கள் தத்தம் கன்மமேல் கோமான் வேண்டா;
முறைதரு செயற்குப் பாரும் முளரிகட்கு இரவியும் போல்
அறைதரு தத்தம் கன்மத்து அளவனுக்கு அளிப்பன் ஆதி. 232

"இறைவனே உயிர்களுக்கு அறிவிப்பான் என்று கொண்டால் உயிர்களின் அறிவுத்திறன் கூடியும் குறைந்தும் இருத்தல் கூடாது. எல்லார்க்கும் ஒத்த அறிவே நிகழ்தல் வேண்டும்" என்று சிலர் தடை எழுப்புவர். அவ்வாறு அறிவில் ஏற்றத் தாழ்வுகள் அமைவதற்குக் காரணம் உயிர்களின் வினைப்பயன்களே என்று விடை கூறினால், "அவ்வாறாயின் வினையே போதுமானது. இறைவன் ஒருவன் வேண்டும் என்று கொள்ளுதல் மிகையன்றோ?" என்று மேலும் தடை எழுப்புவர். தாமரை மொட்டு மலர்வதற்குக் கதிரவனின் ஒளி தேவைப்படுவது போலவும், பயிரை விளைவிப்பதற்கு உழுதல், உரமிடல், விதைத்தல் நீர் பாய்ச்சுதல், களை கட்டுதல் ஆகிய செயல்களின் பயனைத் தருவதற்கு அச்செயல்களே அன்றி விளை நிலமும் காரணமாவதுபோலவும் வினைப் பயன்களை உயிர்களுக்கு ஊட்டுவதற்கு இறைவன் ஒருவன் வேண்டும். அவனே வினைப் பயன்களை அளவறிந்து உயிர்களுக்குத் தருவான்.

அறிந்திடும் ஆன்மா – ஒன்றை ஒன்றினால் அறிதலானும்,
அறிந்தவை மறத்தலானும் அறிவிக்க அறிதலானும்
அறிந்திடும் தன்னையுந்தான் அறியாமையானும் தானே
அறிந்திடும் அறிவன் அன்றாம்; அறிவிக்க அறிவன் அன்றே. 233

அறியும் இயல்புடைய இவ்வுயிர் ஒவ்வொரு பொறியின் துணையுடனேயே ஒவ்வொரு பொருளை அறியும். அறிந்த பொருளை மறந்தும் போகும். உயிர் தானாக அறியாது. அறிவித்த போதே அறியும் இயல்புடையது. அறிகின்ற உயிர் தன்னைத்தானே அறியாது. எனவே தானே அறியும் இயல்புடைய முதல்வன் அறிவிக்கவே உயிர்கள் அறிந்து வருகின்றன.

இந்தப் பாடலில் ஆசிரியர்சாங்கியர்களின் கொள்கையை மறுத்துக் கூறினார்.

கருவியால், பொருளால், காட்டால், காலத்தால், கருமம் தன்னால்,
உருவினால், அளவால், நூலால், ஒருவரால் உணர்த்தலானும்
அருவனாய், உண்மை தன்னில் அறியாது நிற்ற லானும்
ஒருவனே, எல்லாம் தானும் உணர்த்துவன், அருளினாலே, 234

கட்டு நிலையில் உள்ள உயிர்களுக்கு அறிவு நிகழும் முறைமை எவ்வாறு என்பது இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

உயிர்கள் ஐம்பொறி முதலிய கருவிகளாலும், புலன்களாலும், தமக்குக் காட்டாக விளங்குகின்ற கலை முதலியவற்றினாலும், கால தத்துவத்தினாலும்,வினைப்பயனை வரையறுத்துத் தருகின்ற நியதி தத்துவத்தாலும், உருவத்தினாலும், அளவைகளினாலும், நூல்களுக்கு அடிப்படையாக விளங்குகின்ற நால்வகை வாக்குகளாலும், ஒருவரால் உணர்த்தப்படுவதாலும் அறிவு விளக்கம் பெறுகின்றன. இங்கே கூறப்பட்ட இந்த எட்டுத் துணைகளும், உணர்த்தும் அறிவுடைப் பொருளும் இல்லை எனில் தன் உண்மை என்னும் கேவல நிலையில் உயிர் அருவமாய் அறியாது நிற்கும். எனவே யாவற்றையும் ஒருங்கே அறிய வல்ல இறைவனே இவை அனைத்தையும் தன் பேரருளாலே உயிருடன் கூட்டி உயிருக்கு அறிவிப்பான்.

'காட்டால்' என்ற சொல்லுக்குக் காண்பதற்குத் துணை செய்கின்ற கதிரவன், திங்கள் போன்ற பொருள்கள் என்று உரை கண்டனர் சில ஆசிரியர்கள். அவ்வாறே நூல் என்பதற்கு 'சாத்திரங்களால்' என்றும் பொருள் கொண்டனர். இங்கே இவ்விரு சொற்களுக்கும் சிவஞான முனிவரை அடியொற்றிப் பொருள் கொள்ளப்பட்டது.

கருவியும், பொருளும், காட்டும், காலமும், கருமம் தானும்,
உருவமும், அளவும் நூலும் ஒருவரும் உணர்த்தல் இன்றி
அருவனாய் உலகம் எல்லாம் அறிந்து அவை ஆக்கி வேறாய்,
ஒருவனே உயிர்கட்கு எல்லாம் உயிருமாய், உணர்த்தி நிற்பன், 235

இறைவன் ஒருவனே முற்கூறப்பட்ட கருவி முதலியவற்றோடு கூடாமலும், மற்றொருவர் உணர்த்தல் இன்றித் தானே யாவற்றையும் அறிந்தும், உயிர்கள் கேவல நிலையில் நிற்கும் போதும் நுண்ணிய ஐந்தொழில் இயற்றியும், பின்னர் படைத்தல் முதலிய தூல ஐந்தொழில் செய்தும், உயிர்க்கு உயிராக நின்று உயிர்களுக்கு அறிவிக்கும் பொழுது மிக நுண்ணிய ஐந்தொழில் இயற்றியும் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பான்.

இறைவன் இயற்றும் ஐந்தொழில்களும் மூன்று வகைப்படுத்திக் கூறப்படும். அவை மிக நுண்ணிய ஐந்தொழில் (அதிசூக்கும ஐந்தொழில்) நுண்ணிய ஐந்தொழில் (சூக்கும ஐந்தொழில்) தூல ஐந்தொழில் என்பன ஆகும். இவற்றின் விரிவு எல்லாம் சிவஞான மாபாடியத்தில் இரண்டாம் நூற்பாவுக்கு மாதவச் சிவஞான முனிவர் வகுத்த பேருரையிலே காணலாம்.

இறைவன் தன் சந்நி திக்கண் உலகின் தன் சேட்டை என்னும்
மறைகளும் மறந்தாய்; மாயை மருவிடான், சிவன் அவன் கண்
உறைதராது அசேதனத்தால்; உருவுடை உயிர் கட்கு எல்லாம்
நிறைபரன் சந்நிதிக்கண் நீடு உணர்வு, உதிக்கும் அன்றே, 236

இறைவன் முன்னிலையிலேயே உலகம் செயற்படும் என்று மறைகள்-எல்லாம்முழங்கவும் அதனை நீ மறந்தாய். சிவபெருமான் எல்லா இடங்களிலும் நிறைந்து உறைகின்றவன். ஆதலால் அவன் மாயையைப் பொருந்துவதில்லை. அறிவற்றதாகிய மாயை பேரறிவாளனாகிய இறைவனைப் பொருந்துவதில்லை. மாயையின் காரியங்களாகிய உடல் கருவிகளைப் பொருந்திய உயிர்களுக்கு எங்கும் நிறைந்த சிவபெருமானின் திருமுன்பு தத்தம் வினைக்கேற்ற அறிவு விளையும். வினை நீங்கிய காலத்து மெய்யுணர்வும் உதிக்கும்.

சேட்டை - செயற்பாடு. சிவஞான போதம் ஐந்தாம் நூற்பாவில் இரண்டாவது எடுத்துக்காட்டு வெண்பாவில் "மன்னு சிவன் சன்னிதியில் மற்று உலகம் சேட்டித்தது. என்னும் மறையின் இயல் மறந்தாய்" என்று கூறியது இங்கு நினைவு கூரத்தக்கது.

உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக,
இலகுபேர் இச்சா ஞானக் கிரியை உட்கரணமாக,
அலகுஇலா உயிர்ப் புலன்கட்கு அறிவினை ஆக்கி ஐந்து
நலம் மிகுதொழில்களோடும் நாடகம் நடிப்பன் நாதன். 237

இப்பேருலகில் இருநூற்று இருபத்து நான்கு புவனங்கள் உள்ளன. இறைவன் அவற்றை திருமேனியாகவும், அவற்றில் உள்ள எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களை உறுப்புக்களாகவும், விளங்குகின்ற அறிவு விழைவு ஆற்றல்களை உட்கரணமாகவும் கொண்டு எண்ணற்ற உயிர்களிடத்தில் அவற்றின் அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்துவதாகிய அதி நுண்ணிய ஐந்தொழில்களையும் இயற்றி உலக நாடகத்தை நடத்தி அருளுவான்.

இறைவன் ஐந்தொழில்களை உயிர்கள் போலக் கரணத்தால் அன்றித் திருஉள்ளக் குறிப்பினாலே செய்தருளுவான் என்பதை நாடகம் நடிப்பான் நாதன் என்ற சொற்களால் உணர்த்தினார்.

தெரிந்து கொண்டு ஒரோஒன்றாகச் சென்று ஐந்து புலனும் பற்றிப்
புரிந்திடும் உணர்வினோடும் போகமும் கொடுத்து யோனி
திரிந்திடு மதுவும் செய்து செய்தி கண்டு உயிர்கட்கு எல்லாம்
விரிந்திடும் அறிவும் காட்டி வீட்டையும் அளிப்பன் – மேலோன் 238

அத்தகைய இறைவன் உயிர்களுக்கு ஐம்பொறிகளின் வழியாக ஒவ்வொரு புலனிலும் பற்றுகிற அறிவினைச் சேர்த்து அருளுவான். இதனால் உயிர் வரையறைக்கு உட்பட்ட அறிவோடு உலகியல் இன்பங்களில் ஈடுபடும். பின்னர் இறைவன் உயிர்களின் வினைகளுக்கு ஏற்பப் பல்வேறு பிறவிகளில் செலுத்துவான். இதனாலே உயிர்களின் அறிவு முதிர்ந்து பக்குவம் பெறும். அந்நிலையில் இறைவன் உயிருக்கு வியாபாக அறிவை நிகழ்வித்து வீடு பேற்றையும் தந்தருளுவான்.

மேலோன் - இறைவன்.

அருளது, சத்தி ஆகும், அரன்தனக்கு; அருளை இன்றித்
தெருள்சிவம் இல்லை; அந்தச் சிவம் இன்றிச் சத்தி இல்லை;
மருளினை அருளினால் வாட்டி மன் உயிர்க்கு அளிப்பன் – கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல – ஈசன் 239

சென்ற பாடலில் கூறியவாறு போகமும் கொடுத்து விரிந்திடும் அறிவும் காட்டி உயிர்களுக்கு வீட்டின்பம் அளிப்பதாகிய அருள் இறைவனின் சத்தியாகும். அது அவனது இயற்கைக் குணம் எனப்படும். இறைவன் குணி எனப்படுவான். அருள் இல்லாமல் சிவம் இல்லை. சிவம் இல்லாமல் அருட்சத்தி பிரிந்து நிற்பதும் இல்லை. உலகத்து இருளைத் தனது கதிர்க் கைகளால் ஓட்டிக் கண்களுக்கு ஒளி தருகின்ற கதிரவனைப் போல நிலை பெற்ற உயிர்களுக்கு இறைவன் வீடு பேற்றை வழங்கி அருளுவான்.

புற இருளைக் கதிரவனது கதிர்கள் நீக்குகின்றன. உயிர்களின் அறிவை மறைத்து நின்ற மல இருளை இறைவனது திருவருளாகிய ஒளியே நீக்கி அருளும்.

ஆறாம் நூற்பா

அறிவுறும் பொருளோ, ஈசன் அறிவுஉறா தவனோ? என்னின்
அறிபொருள் அசித்து அசத்தாம் அறியாதது இன்றாம்; எங்கும்
செறிசிவம் இரண்டும் இன்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்;
நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றிடாவே. 240

சிவபெருமான் உயிர்களால் அறியப்படுகின்ற இயல்புடையவனோ அன்றி ஒரு வகையாலும் அறியப்படாதவனோ என்று வினாக்கள் எழும். உயிர்களின் அறிவால் அறியப்படுகின்ற பொருள்கள் யாவும் அறிவற்றன வாயும். அழிந்து போகும் இயல்பு உடையனவாயும் உள்ளனவே ஆகும். ஒரு வகையாலும் அறியப்படாத பொருள் என்பது இல் பொருளாகும். எங்கும் செறிந்து நிற்கும் சிவபெருமான் இவ்விரண்டு தன்மையும் இலாதவன் ஆவான். அவன் முற்றறிவினனாயும் அழிவற்றவனாயும், அவன் அருளாலேயே அறியப்படும் தன்மை உடையவனாயும் விளங்குகிறான். அவன் திருமுன்பு அழியும் தன்மை உடைய பாசஞானம் சிறிதும் நில்லாது.

முதலதிகரணம்

ஆவதாய் அழிவது ஆகி வருதலால் – அறிவு தானும் –
தாவலால் உலகு போகம் தனுகர ணாதி ஆகி
மேவலால் மலங்கள் ஆகி விரவலால் வேறும் ஆகி
ஓவலால் அசத்தாம் – சுட்டி உணர்பொருள் ஆன எல்லாம், 241

உயிர்களின் சுட்டறிவு தோன்றியும் அழிந்தும் வருவதாகும். ஒன்றைப் பற்றி அதன் பின்னர் அதனை விட்டு மற்றொன்றைப் பற்று

கின்ற இயல்புடையது. உடல் கருவி உலகு நுகர்ச்சிப் பொருள் என இவ்வாறு பல்வேறு வகைப்படுவது அவ்வறிவு, மலத்தோடு விரவி வருவது. வேறுபட்டு அழிகின்ற இயல்பு உடையது. எனவே இந்த அறிவினால் சுட்டி அறியப்பட்ட பொருள் யாவையும் அழியும் இயல்பு உடையன ஆகும்.

மண்தனில் வாழ்வும் வானத்து அரசு அயன் மாலார் வாழ்வும்
எண்தரு பூத பேத யோனிகள் யாவும் எல்லாம்
கண்டஇந் திரமா சாலம் கனாக் கழு திரதம் காட்டி
உண்டு போல் இன்றாம் பண்பில் உலகினை அசத்தும் என்பர். 242

இவ்வுலகத்தில் வாய்க்கப் பெற்ற பெரு வாழ்வும், விண்ணுலகத்து அரசனாகிய இந்திரன் பிரமன் திருமால் முதலிய பதங்களைப் பொருந்திய வாழ்வும், எண்பத்து நான்கு நூறாயிரம் பிறப்பு வகைகள் யாவும் கண் முன்னே நிகழ்கின்ற இந்திரசாலம் போலவும் கானல் நீர் போலவும் மறைந்து ஒழிவன. ஆதலால் உள்ளது போலக் காட்டி இல்லாது போகும் பண்பினை உடைய இவ்வுலகினை அசத்தும் ஆகும் என்று கூறுவர் மேலோர்.

இந்திரசாலம் தோன்றும் பொழுதே இல்லாது போவதற்கும், கனவு முடிவுறுதல் இன்றி இடையே இல்லாது போவதற்கும், கானல் நீர் சூரியனை மேகம்மறைக்கும் போது இல்லாது போவதால் காரணம் காட்டி அழிவனவற்றுக்கும் உவமைகள் ஆயின.

சிவஞானபோதம் ஆறாம் நூற்பாவில் முதல் எடுத்துக்காட்டு வெண் பாவில் "நீரில் எழுத்தும் நிகழ் கனவும் பேய்த் தேரும்" என்று முதல் நூல் ஆசிரியர் காட்டிய உவமைகளும் அதற்கான பேருரையும் இங்கே ஒப்பு நோக்கத் தக்கன.

கழுது - பேய். இரதம் - தேர்; பேய்த் தேராகிய கானல் நீர்.

அசத்தும் என்பர் என்ற சொல்லில் உள்ள உம்மை பொருள் தன்மை யால் சத்து என்பதுபட நின்ற எதிர்மறை என்று சிவஞானமுனிவர் உரைத்தார். சற்காரியவாதத்தை உடன்படுகின்ற 'சைவசித்தாந்தத்தில் அசத்து என ஒன்று இன்மையால் அறிவினால் அறிந்த பொருள் அசத்து ஆவது எவ்வாறு என்பதை விளக்க உவமை கூறி அசத்தும் ஆம் என்றார்.

இரண்டாம் அதிகரணம்

உணராத பொருள் சத்து என்னின் ஒரு பயன் இல்லை; தானும்
புணராது; நாமும் சென்று பொருந்துவது இன்றாம் என்றும்
தணவாத கருமம் ஒன்றும் தருவதும் இல்லை; வானத்து
இணர் ஆர்பூந் தொடையும் ஆமைக்கு எழுமயிர்க் கயிறும் போலும் 243

அறியப்பட்ட பொருள்கள் எல்லாம் அசத்துமாம் எனப்பட்டன. எனவே இறைவன் எனும் உள் பொருள் ஒரு வகையாலும் அறியப்

படாத பொருளே என்று சிலர் கொள்ளுவர். அவ்வாறு கொள்ளுவதனால் அத்தகைய பொருளால் வருகின்ற ஒரு பயனும் இல்லை. உணரப்படாத பொருள் நம்மை வந்து பொருந்துதலும் இல்லை. நாமும் அதனைச் சென்று பொருந்துவதில்லை. அத்தகைய பொருளால் எந்தச் செயலும் நிகழ்வதில்லை. எனவே ஒரு வகையாலும் அறியப்படாத பொருள் என்பது ஆகாயப் பூமாலை போலவும் ஆமை மயிர்க் கயிறு போலவும் இல் பொருளேயாகும்.

வானத்து இணர் ஆர் பூந்தொடை - ஆகாயப் பூவினால் தொடுக்கப் பட்ட மாலை. யாமை - ஆமை. தணவாத - நீங்காத.

மூன்றாம் அதிகரணம்

தத்துவம் சத்துஅ சத்துச் சதசத்தும் அன்று என்றால் என்?
உய்த்து உணர்ந்து உண்டோ இன்றோ? என்றவர்க்கு உண்டு என்று ஓதில்
வைத்திடும் சத்தே ஆகும்; மனத்தொடு வாக்கு இறந்த
சித்துரு அது அசித்தாம் மனத்தினால் தேர்வது எல்லாம். 244

பரம்பொருள் என்பது உள் பொருளும் அன்று; இல்பொருளும் அன்று. இந்த இரண்டும் ஆவதும் அன்று. எனவே அதனைச் சொல்லொணாதது என்று கூறினால் என்ன என்று சிலர் வினா எழுப்புவர் அத்தகைய சொல் லொணாப் பொருள் உண்டோ இல்லையோ என்று வினவியவர்களுக்கு இல்லை என்று விடையிறுத்தால், உணராத பொருளுக்குக் கூறப்பட்ட குற்றம் நேரும் என்று கருதி உண்டு என்றே விடை இருத்தல் வேண்டும். அவ்வாறு விடையிறுப்பது பரம்பொருளை உள்பொருள் எனக் குறிக்குமே தவிர சொல்லொணாதது என்று குறியாது. உள் பொருளாயின் அறியப் படுதல் வேண்டும். அறியப்படுவதாயின் சுட்டுணர்வினால் அறிந்த எல்லாம் சடமுமாய் அழிவெய்தும் ஆதலால் அப்பரம் பொருளை உயிரின் சுட்டுணர் வைக் கடந்து நின்ற அறிவுடைப் பொருளே என்று கூறுதல் வேண்டும்.

அறிபொருள் அசித்தாய் வேறாம்; அறிவுறாப் பொருள் சத்து என்னின்
அறிபவன் அறியானாகில் அது இன்று பயனும் இல்லை;
அறிபவன் அருளினாலே அநந்நிய மாகக் காண்பன்;
அறிபொருள் அறிவாய் வேறாய் அறிவு அருள் உருவாய் நிற்கும். 245

"உயிரால் அறியப்பட்ட பொருள் சடமும் ஆகி அழிதலும் கூடும். உயிரால் அறியப்படாத பொருளே சத்துப் பொருள் என்னின், அறிகின்ற வனாகிய உயிரால் அது அறியத் தக்கது ஆக வேண்டும். அவ்வாறு இல்லை யேல் அத்தகைய பொருளும் இல்லை. அதனால் பெறப்படும் பயனும் இல்லை என்று முடியும்" என்று இங்கு தடை எழுதல் கூடும். அத்தடைக்கு உரிய விடை பாடலின் பிற்பகுதியிலே தரப்படுகிறது. அறிபவனாகிய உயிர் திருவருளின் துணை கொண்டு அச்சிவப் பொருளை அதனோடு ஒற்றித்து நின்று அறிவான் . அப்பரம் பொருள் அவ்வறிவேயாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் இயல்பு உடையது.

சிவப் பொருளை எவ்வாறு அறிவது ? என்ற வினாவிற்கு ஒழிபு அளவையின் அடிப்படையில் ஆசிரியர் இங்கு விடை கூறினார். அநந்நியம்- வேற்றுமையின்மை.

இந்த இரண்டு பாடல்களாலும் மாயாவாதிகளின் கொள்கை எடுத்துக் கூறி மறுக்கப்பட்டது.

பாவிப்ப தென்னின் பாவம்; பாவகம் கடக்கின் பாவம்;
பாவிக்கும் அதுநான் என்னின் பாவகம்; பாவம் கெட்டுப்
பாவிப்பது என்னின் பாவம் பாவனை இறந்து நின்று
பாவிக்கப் படுவதாகும் – பரம்பரன் அருளினாலே. 246

சிவப்பொருள் பாவனையால் அறியக் கூடாததோ என்ற வினாவிற்கு ஆசிரியர் இப்பாடலில் விடை கூறுகிறார்.

பாவனை என்பது மனம் முதலிய கருவிகளோடு கூடி நின்று செய்யும் பாவனை என்னில் அவ்வாறு அறியப்படும் பொருள் சுட்டறிவுக்கு எட்டும் பொருள். ஆகையால் அது அழியும் பொருளாகும். எனவே அப்பாவனை பயனற்றது. மனம் முதலிய கருவிகளை விட்டு நீங்கிச் செய்யப்படும் பாவனை என்று கூறினால் கருவிகளை விட்டு நீங்கிய உயிர் கேவல நிலையில் அமிழும் ஆதலால் அதுவும் பயனற்றதாகும். இவ்விரண்டு தன்மையும் இன்றிப் பாவிப்பது என்று கூறினால் அது சொல்லொணாதது எனப்பட்டுப் பாழாய் முடியும். இதனின் வேறாகப் பாவனைக்கு எட்டாத பொருளை எட்டியதாக வைத்து நான் பாவிக்கிறேன் என்று சொன்னால் அதனாலும் பயன் இல்லை. எனவே இவை யாவற்றுக்கும் வேறாக இறைவன் திருவருளிலே வேற்றுமையறப் பொருந்தி நின்று அறிதலே உண்மைப் பாவகம் ஆகும்.

யோகமதத்தினர் யோகபாவனையின் வழியாகவே இறைவனைக் காணுதல் கூடும் என்பர். இப்பாடலில் அவர்கள் கருத்து மறுக்கப்பட்டது. முதல் நூலில் ஆறாம் நூற்பாவில் இரண்டாம் அதிகரணத்தின் மூன்றாவது எடுத்துக்காட்டு வெண்பாவில் மெய்கண்ட தேவநாயனார் அருளிய 'பாவக மேல் தான் அசத்தாம்' என்று தொடங்கும் பாடலின் கருத்து இங்கு விளக்கப்பட்டது.

அந்நியம் இலாமையானும் அறிவினுள் நிற்றலானும்
உன்னிய எல்லாம் உள் நின்று உணர்த்துவன் ஆதலானும்
என்னது யான் என்று ஓதும் இரும்செருக்கு அறுத்தலானும்
தன் அறிவு அதனால் காணும் தகைமையன் அல்லன்; ஈசன். 247

சிவபெருமான் உயிருடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பவன் ஆதலாலும் உயிரின் குற்றமாகிய யான் எனது என்னும் செருக்கை அறுப் பவன் ஆதலாலும் அந்நிலையில் அறிவானும் அறியப்படு பொருளும் அறிவும் எனப் பகுத்துக் காண இயலாது ஆகையாலும் உயிரின் அறிவால் அப்பெருமான் அறியப்படுவான் அல்லன்.

அன்னியமிலாமை என்பதனால் இறைவன் ஒன்றாய் நிற்றலையும், அறிவினுள் நிற்றல் என்பதனால் வேறாய் நிற்றலையும், உள்நின்று உணர்த்துவன் என்பதனால் உடனாய் நிற்றலையும் ஆசிரியர் குறிப்பிட்டார். தன்னறிவு என்ற சொல் உயிரின் அறிவு என்ற பொருளைத் தந்தது.

ஒன்றெனும் அதனால் ஒன்றென்றும் உரைப்பதுண்டு ஆகையாலே
நின்றனன் வேறாய்; தன்னின் நீங்கிடா நிலைமையாலே
பின்றிய உணர்வுக்கு எட்டாப் பெருமையன் ! அறிவின் உள்ளே
என்றும் நின்றிடுத லாலே இவன் அவன் என்னலாமே. 248

"இறைவனும் உயிரும் ஒன்று" என்று கூறும் பொழுது அவ்வாறு ஒன்று என்று கூறும் உயிர் இறைவனுக்கு வேறாய் உளது என்பது பெறப்படும். எனவே இறைவன் உயிரிலிருந்து வேறுபட்டவன் என்பதும் புலனாகும். இறைவன் உயிரோடு பிரிப்பின்றி உடனாய் நிற்பவன் ஆதலால் அவனை வேறு என்று பகுத்தறியும் உணர்வுக்கு எட்டாத பெருமையை உடையவன் ஆவன். உயிர் அறிவின் உள்ளே நின்று உயிரை இயக்கி வருவதால் உயிரே இறைவன் என்னும்படி ஒன்றாகி நிற்பவனும் ஆவான்.

தன்னில் - உயிரில். இவன் - உயிர். அவன் - இறைவன்.

ஏழாவது நூற்பா

அனைத்தும் சத்து என்னின் ஒன்றை அறிந்திடாது அசத்தால் என்னின்
முனைத்திடாது அசத்து சத்தின் முன் இருள் இரவி முன்போல்;
நினைப்பது இங்கு அசத்தே என்னின் சத்தின்முன் நிலாமையானும்
தனைக்கொடு ஒன்று உணர்தலானும், தான் அசத்து உணராது அன்றே. 249

முந்திய சூத்திரத்தில் சத்துப் பொருளும் அசத்துப் பொருளும் வரையறை செய்து கூறப்பட்டன. இவற்றுள் சத்தாகிய சிவமே யாவற்றையும் அறியும் இயல்புடையது என்பர் சிலர். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதாகிய சிவம் யாவற்றையும் ஒருங்கே அறிந்து நிற்குமேயன்றி அவற்றைப் பகுத்து அறிவது இல்லை. சத்தாகிய சிவம் உயிரின் பொருட்டு அசத்து எனப்படும் கருவி கரணங்களை இடமாகக் கொண்டு அறியும் என்பர் சிலர். கதிரவன் முன்இருள் போல சத்தின் முன்னிலையில் அசத்து முனைத்து நில்லாது. எனவே அதுவும் பொருந்தாது. ஆன்மாவின் முன்னிலையில் அசத்தாகிய கருவியே அறியும் என்பர் வேறு சிலர். கருவிகளினால் உயிரே அறிவதனாலும் கருவிகளுக்கு அறிவு இன்மையினாலும் அழியும் பொருள் அழியாப் பொருளை அறியும் என்பதும் பொருந்தாது.

முதல் நூலில் இந்த நூற்பா மூன்று அதிகரணங்களைக் கொண்டதாக மெய்கண்ட தேவ நாயனாரால் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்நூலில் இப் பாடலில் முதல் இரண்டு அதிகரணங்களையும் வினா எழுப்பி அவற்றுக்கு விடை தந்து நிறைவு செய்கிறார் அருள் நந்தி சிவம். முதல் வினா: சத்துப் பொருளாகிய சிவமே அசத்துப் பொருளாகிய பாசங்கள் அனைத்தையும் அறியும் என்று கொண்டால் , என்ன? என்பது. இது சிவாத்துவித சைவர் எழுப்பும் வினா. அதற்கு விடை; சிவம் வியாபகப் பொருள் ஆதலால் யாவற்றையும் ஒருங்கே அறியுமே அன்றி எதனையும் பிரித்து அறிவது அன்று. மேலும் கதிரவன் முன் இருள் போல சத்துப் பொருளின் முன்னிலையில் அசத்துப் பொருள் முனைத்து நில்லாது என்பதாகும்.

இரண்டாவது வினா : ஆன்மாவின் முன்னிலையில் அசத்தாகிய கருவியே சிவகரணமாக நின்று சத்தாகிய சிவத்தை அறியும் என்றால் என்ன? என்பது. இந்த வினா சிவசங்கிராந்த வாதிகள் எழுப்புவது. கருவிகள் தமக்கென்று அறிவு இல்லாமல் ஆன்மா அறிவதற்குக் கருவியாய் நிற்கும் என்பதாலும், சத்தின் முன்னர் அசத்து முனைத்து நில்லாது என்று கூறப் பட்டதனாலும் இக்கருத்துப் பொருந்தாது என்பது ஆசிரியர் தருகின்ற விடை.

சத்துப் பொருளும் அசத்துப் பொருளும் ஆகிய இரண்டும் அறியா என்று கழிக்கப்பட்டதனால் இவை இரண்டினும் வேறாய் நின்ற சதசத்தாகிய உயிரே அறியும் தன்மை உடையது என்பது ஒழிபு அளவையின் அடிப்படையில் பெறப்படும்.

மூன்றாம் அதிகரணம்

சத்து அசத்து அறிவது ஆன்மா; தான் சத்தும் அசத்தும் அன்று;
நித்தனாய்ச் சதசத்தாகி நின்றிடும்; இரண்டன் பாலும்
ஒத்துஉடன் உதித்து நில்லாது; உதியாதும் நின்றிடாது,
வைத்திடும் தோற்றம் நாற்றம் மலரினில் வருதல் போலும். **250**

அழிவற்ற பொருளாகிய இறைவனையும் அழிவுடைய பொருளாகிய பாசங்களையும் அறியவல்லது ஆன்மாவேயாகும். ஆன்மா சத்து அசத்து என்கிற இரண்டினுக்கும் வேறாய் நிற்பதாகும். எனவே அது சத்தும் அன்று அசத்தும் அன்று. ஆன்மா என்றும் உள்ள பொருளாயும் சதசத்தாகியும் நிற்கும். சத்து அசத்து ஆகிய இரண்டின் பகுதியிலும் விளங்கித் தோன்றியும், விளங்கித் தோன்றாமலும் மலரின் மணம்போல அது அதனிடத்து அடங்கி விளங்குவதாகும்.

மலரின் மணம் மலரினுள் அடங்கித் தோன்றுவது போல சத்தோடும் அசத்தோடும் சேர்ந்து அவற்றுள் அடங்கி உயிர் நின்றிடும் என்று உவமை கூறினார். திருவாசகம் அதிசயப்பத்தில் " உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரும் நாற்றம் போல்" என்று மாணிக்கவாசகர் அருளியது இங்கு நினைவு கூரத்தக்கது.

சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபால் அசத்து அஞ்ஞானம்
ஒத்துறா; குற்றம் எல்லாம் உற்றிடும் உயிரின் கண்ணே;
சத்து உளபோதே வேறாம் சதசத்தும் அசத்தும் எல்லாம்
வைத்திடும் அநாதியாக; வாரிநீர் லவணம் போலும். 251

தூய்மையான உண்மை ஞானமே தனது திருமேனியாக உடைய ஒளிப்பிழம்பாகிய சிவபெருமானை அசத்தாகிய பாசம் பற்றாது. உயிர்களிடத்தேயே ஆணவம் முதலிய குற்றங்கள் அனைத்தும் உற்றிடும். சத்து, சதசத்து, அசத்து என்ற முப்பொருள்களும் எப்பொழுதும் உள்ளனவேயாம். கடல் என்னும் இடமும் கடல் நீரும் ஆகிய இரண்டனுள் உப்பு கடலின் இடத்தைப் பற்றாமல் நீரைப் பற்றிக் கொள்வதைப் போலப் பாசமும் இறைவனைப் பற்றாமல் உயிர்களையே பற்றும்.

இறைவன் அறிவே வடிவானவன். எனவே அவனிடத்துத் தளைகளாகிய குற்றங்கள் சாரமாட்டா. உயிரோ அறிவுடையது; ஆயினும் அதன் அறிவு சிற்றறிவாகும். எனவே பாசமாகிய குற்றங்கள் உயிரைப் பற்றுமேயன்றி இறைவனைப் பற்றா. கடலில் நிறைந்திருக்கும் நீரில் மட்டுமே உப்பின் உவர்த்தன்மை ஏறும்; கடலாகிய வெளியிடத்து உப்பின் உவர்த்தன்மை படியாது. இறைவன் கடல்போன்றவன். உயிர்கள் கடல் நீர் போன்றவை. உயிர்களைப் பற்றுகின்ற பாசங்கள் உப்புப் போன்றவை. இறைவனை அதிசூக்கும சித்து என்றும் உயிரைத் தூல சித்து என்றும் குறிப்பிடுவர்.

முதல் நூலாகிய சிவஞான போதத்தில் ஏழாம் நூற்பாவில் மூன்றாவது அதிகரணத்தில் மூன்றாவது எடுத்துக்காட்டு வெண்பாவாக அமைந்துள்ள "மெய்ஞ்ஞானம் தன்னில்" என்று தொடங்கும் பாடலை இங்கு நினைவு கூர்க.

அறிவிக்க அறிதலானும் அழிவின்றி நிற்றலானும்
குறிபெற்ற சித்தும் சத்தும் கூறுவது உயிருக்கு ஈசன் –
நெறிநித்த முத்த சுத்த சித்தென நிற்பன் அன்றே –
பிறவிப்பன் மலங்கள் எல்லாம் பின் உயிர்க்கு அருளினாலே, 252

உயிர் அறிவித்தால் அறியும் இயல்பு உடையது. தானாக அறியும் இயல்பு அற்றது. அறிவிக்க அறிந்த பின் மீண்டும் பிறப்பு இன்றி நிற்கின்ற இயல்புடையது. ஆதலாலே உயிர் அழிவற்ற பொருளுமாகும் எனவே உயிர் தூல சித்து என்றும் தூல சத்து என்றும் கூறப்படும். இறைவனோ தானாகவே யாவற்றையும் எப்போதும் அறிகின்ற அறிவினை உடையவன். அவனே தன் பேரருளால் உயிர்களைப் பற்றிக் கொண்டே மலங்களை நீக்கி உயிரின் அறிவையும் விளக்குபவன். எனவே சிவபிரானை நித்தமுத்த அதி சூக்கும சித்தாகவும் சத்தாகவும் விளங்குபவன் என்று அறிக.

என்றும் கட்டுக்கு உட்படாத சிவபெருமானை 'நித்த முத்த சுத்த' என்றும், அறிவே வடிவாம் நிற்றலால் சித்து என்றும் ஆசிரியர் கூறினார்.

எட்டாம் நூற்பா

மன்னவன் தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்து அவனை அறியாது மயங்கி நிற்ப
பின் அவனும் என் மகன் நீ என்று அவரின் பிரித்துப்
பெருமையொடும் தான் ஆக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது துயர் உறும் தொல் உயிரை
மன்னும் அருள் குரு ஆகி வந்து அவரின் நீக்கி
மலம் அகற்றி தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன். 253

அரசிளங்குமரன் ஒருவன் அறிவறியாப் பருவத்தில் வேடர்கள் கூட்டத்தில் அகப்பட்டான். தான் அரச குமாரன் என்பதை அறியாது வேடர்களுள் ஒருவனாய் வளர்ந்து வந்தான். அந்நிலையில் அவன் தான் யார் என்பதையும் தன் தந்தை யார் என்பதையும் அறியாது மயங்கி வாழ்ந்தான். உரிய பருவம் வந்த பின்னர் அரசன் நீ என் மகன் என்று அறிவுறுத்தி வேடர் களை விட்டுப் பிரித்து ஓர் இளவரசனுக்குரிய பெருமைகளை எல்லாம் அவனுக்கு வழங்கி அவனைத் தன்னைப் போலவே பேணினான். அது போலவே தன் நிலையிலிருந்து பிறழ்ந்து ஐம்பொறிகள் என்னும் வேடர்களின் சுழலில் பட்டுத் தன்னையும் அறியாது தன் தலைவனையும் அறியாது நெடுங் காலமாகத் துயரத்தில் அழுந்தி வருந்தும் உயிரைஅதனுடைய பக்குவத்தை அறிந்து இறைவனே குரு வடிவமும் கொண்டு எழுந்தருளி வந்து அவ் வேடரின் கூட்டத்திலிருந்தும் நீக்கி மலமாகிய மாசினை அகற்றி உயிரையும் தன் வண்ணமாக்கித் தன்னுடைய மலர்போன்ற திரு வடியின் கீழ் வைத்துப் பெருவாழ்வினை அளிப்பான்.

முதல் அதிகரணம்

உரைதரும் இப்பசுவர்க்கம் உணரின் மூன்று ஆம்;
உயரும் விஞ்ஞா னகலர், பிரளயாகலர் சகலர்;
நிரையின்மலம் மலம்கன்மம் மலம் கன்மம் மாயை
நிற்கும்; முதல் இருவர்க்கும் நிராதாரம் ஆகி
கரையில் அருட்பரன், துவிதா சத்திநியா தத்தால்,
கழிப்பன், மலம்; சகலர்க்குக் கன்ம ஒப்பில்,
தரையில்ஆ சான்மூர்த்தி ஆதாரமாகித்
தரித்து ஒழிப்பன் மலம் சதுர்த்தா சத்தி நிபாதத்தால். 254

எண்ணற்ற உயிர்கள் மூன்று வகையாவன என்று கூறப்படும். விஞ்ஞான கலர், பிரளயா கலர், சகலர் என்பன அவை. விஞ்ஞான கலர் என்போர் ஆணவ மலம் மட்டிலுமே உடையவர்கள். பிரளயா கலர் என்போர் ஆணவம் கன்மம் ஆகிய இருமலம் உடையவர். சகலர் என்போர் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங் களும் உடையவர்கள். விஞ்ஞான கலர் பிரளயா கலர் ஆகிய

இருவர்க்கும் இறைவன் தீவிரம், தீவிரதரம் எனும் இருவகை சத்திநி பாதத்தால் நிராதாரமாய் நன்று அருள் பாலிப்பான். மும்மலமுடைய சகலர்க்கு இருவினை ஒப்பு எய்திய போது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் ஆகிய நான்கு வகை சத்திநிபாதத்தால் குருவடிவை ஆதாரமாகக் கொண்டு எழுந்தருளி மலத்தை ஒழித்து அருள் பாலிப்பான்.

விஞ்ஞான கலர் ஆகிய ஒருமலம் உடையார்க்கு இறைவன் உள்நின்று உணர்த்துவான். இது தன்மையில் நின்று உணர்த்துவதாகும். பிரளயா கலர் ஆகிய இருமலம் உடையார்க்கு இறைவன் மானும், மழுவும், நான்கு தோளும், திரு நீலகண்டமும், முக்கண்ணும் ஆகிய உறுப்புக்களோடு முன் நின்று உணர்த்துவான். இது முன்னிலையில் நின்று உணர்த்துவதாகும். சகலராகிய மும்மலம் உடையார்க்கு மானுடச் சட்டை தாங்கிக் குருவடிவில் எழுந்தருளி வந்து உணர்த்துவான். இது படர்க்கையில் நின்று உணர்த்துவதாகும்.

முதல் இரு வகையினருக்கும் உணர்த்துவது நிராதாரம் எனப்படும். ஆதாரமற்றது என்று பொருள். அவ்வாறு உணர்த்தப்படும் உயிர்கள் இரு வகையான சத்திநிபாதம் உடையன எனப்படும். தீவிரம் தீவிரதரம் என்பன அவற்றின் பெயராகும். மூன்றவாது வகையான உயிர்களுக்கு ஓர் வடிவத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு இறைவன் உணர்த்துவான். அதனை ஆதாரம்என்று வழங்குவர். இவர்களுக்கு நிகழும் சத்திநிபாதம் நான்கு வகைப்படும். அவை மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்பன. இவற்றுள் ஏதேனும் ஒன்றால் இவர்களுக்கு இறைவன் அருள் பாலிப்பான்.

நிராதாரம் - பற்றுக்கோடு இல்லாதது, துவிதா - இரண்டு. கன்ம ஒப்பு-இருவினை ஒப்பு - நல்வினை தீவினை ஆகிய இரண்டிலும் ஒப்ப உவர்ப்பு உண்டாகிய நிலை. ஆதாரம் - பற்றுக்கோடு உடையது. சதுர்த்தா - நான்கு வகை.

பலவிதம்ஆ சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத்து அருள்பரிசம் வாசகம் மா னதமும்
அலகுஇல்சாத் திரம்யோகம் அவுத்தி ராதி
அநேகம்உள; அவற்றின் அவுத்திரி இரண்டு திறனாம்
இலகுஞா னம்கிரியை என; ஞானம் மனத்தால்
இயற்றுவது கிரியை; எழில் குண்டமண் டலம்; ஆதி
நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதி; தான் இன்னும்
நிர்ப்பீசம் சபீசம்என இரண்டாகி நிகழும். 255

இறைவன் குரு வடிவாக எழுந்தருளி வந்து உயிரின் மலத்தை நீக்குகின்ற முறைகள் பலவாகும். அவற்றைத் தீக்கை என்பர். திருக் கண்ணால் நோக்கியும், திருக் கரத்தாலோ திருவடியாலோ தொட்டும், மொழியால் உணர்த்தியும், மனத்தினால் எண்ணியும், ஞான நூல்களைப்

பயிற்றுவித்தும், யோக நிலையில் நிறுத்தியும், அழல் ஓம்பியும் இவ்வாறு பலவகையாகக் குருவடிவில் எழுந்தருளி வந்த இறைவன் தீக்கை செய்து அருளுவான். இவற்றுள் ஔத்திரி என்று சொல்லப்பட்டது இரண்டு வகைப்படும். அவை ஞானவதி, கிரியாவதி என்பன. ஞான வதி என்பது மனத்தினாலேயே கற்பித்துக் கொண்டு அகத்தே ஆகுதி முதலியன செய்வதாகும். கிரியாவதி என்பது அகத்தேயன்றிப் புறத்தே ஓமகுண்டம், மண்டலம் முதலியவற்றை அமைத்துச் செய்வதாகும். இவையும் நிர்பீச தீக்கை எனவும், சபீசதீக்கை எனவும் இரண்டாகும்.

திரு நோக்கால் செய்யப்படும் தீக்கையை நயனதீக்கை என்றும் சட்சுதீக்கை என்றும் வழங்குவர். குரு வடிவாய் வந்த இறைவன் தனது திருக் கரத்தாலோ திருவடியாலோ மாணவரைத் தொட்டு வழங்கும் தீக்கையைப் பரிசதீக்கை என்பர். மாணவருக்குத் திருமொழியால் வழங்கப்படும் தீக்கை வாசக தீக்கை எனப்படும்.

ஔத்திரி தீக்கை எனப்படுவது அழல் ஓம்பிச் செய்யப்படும் தீக்கை யாகும். ஹூதம் - ஓமம். ஹூதத்தோடு கூடியது ஹௌத்திரி. ஔத்திரி தீக்கையில் ஞானவதி என்பது மனத்தளவில் கற்பித்துச் செய்யப்படுவது. கிரியாவதி என்பது புறத்தே ஓமகுண்டம் முதலியன அமைத்து இயற்றப் படுவது. இவையும் இன்னும் இரு வகைப்படும் என்றும் கூறினார். அவற் றுள் நிர்ப்பீசம் என்பது பீசாக்கரம் இல்லாமல் மந்திரத்தை ஓதுவித்தல், சபீசம் என்பது மந்திரத்தோடு பீசாக்கரத்தையும் சேர்த்து ஓதுவிப்பது.

பீசம் - வித்து, நிர்ப்பீசம் - வித்து இல்லாதது சபீசம் - வித்து உள்ளது.

பாலரொடு வாலீசர், விருத்தர், பணி மொழியார்,
 பலபோகத் தவர் வியாதிப் பட்டவர்க்குப் பண்ணும்
சீலமது நிர்ப்பீசம்; சமயா சாரம்
 திகழ்சுத்தி, சமயிபுத்திரர்க்கு நித்தத்து
ஏலும்அதி காரத்தை இயற்றி, தானும்
 எழில்நிரதி காரை என நின்று இரண்டாய் விளங்கும்
சாலநிகழ் தேகபா தத்தினோடு
 சத்தியநிர் வாணம்என, சாற்றுங் காலே. 256

சிறு வயது உடையவர்கள், இளைஞர்கள் மிகுந்த முதுமையடைந் தவர்கள், பெண்கள், பல நுகர்வுகளை விரும்புகிறவர்கள், நோயால் துன்புறுபவர்கள் ஆகிய இவர்களுக்கு நிர்பீசத் தீக்கையே வழங்கப் படும். ஏனெனில் வழுவின்றிச் செய்யக்கடவனவான சமய ஒழுக்கங்களை நிறைவேற்றும் ஆற்றல் அற்றவர்கள் இத்தகையோர். இத்தகைய தீக்கை பெற்றவர்கள் தாம் நாள் தோறும் செய்கின்ற வழிபாட்டினை மட்டும் செய்வதற்கு உரிமை உடையவர். இவர்களுக்கு நைமித்திகம், காமியம் என்னும் இரண்டனையும் செய்வதற்கு அதிகாரம் இல்லாமை

யால் இத்தீக்கை நிராதிகார தீக்கை எனப்படும். தீக்கை வகைகள் சமயம், விசேடம், நிர்வாணம் என மூன்றாகும். நிருவாண தீக்கையும் சத்தியோ நிருவாணம், அசத்தியோ நிருவாணம் என்று இரு வகைப்படும்.

இறை வழிபாட்டில் மூன்று வகைக் கடமைகள் கூறப்படும். அவை நித்தியம், நைமித்திகம், காமியம் என்று பெயர் பெறும், நிராதிகார தீக்கை பெற்றவர்கள் நாட்டபடி இயற்றும் கடனைச் செய்வதற்கு உரியவர்கள். நைமித்திகம் என்பது நிமித்தத்தின் பொருட்டுச் செய்யப்படுவது என்று பொருள் தரும். சிறப்பான நாட்களிலும் விழாக்காலம் முதலியவற்றிலும் செய்யப் பெறுகின்ற கிரியைகள் நைமித்திகம் எனப்படும். காமியம் என்பது செல்வப்பேறு, மக்கட பேறு முதலிய பயன்களைக் கருதிச் செய்யப்படும் கிரியைகளாகும்.

நிருவான தீக்கை என்பது மலப் பிணிப்பிலிருந்து முற்றிலும் விடு படுவதற்காக ஆசிரியரால் வழங்கப்படும் தீக்கை. அது சத்தியோ நிருவாணம், அசத்தியோ நிருவாணம் என்று இருவகையாகும். சத்தியோ நிருவாண தீக்கை பெற்றவர்கள் அதனைப் பெற்ற அளவிலே வீடு பேறு அடைவார்கள் என்பர். அசத்தியோ நிருவாண தீக்கை பெற்றவர்கள் மலப் பிணிப்பிலிருந்து நீங்கினாலும் இவ்வுடலோடு வாழ்கின்ற காலம் வரை சமய ஒழுக்கங்களைப் பேணி உரியகாலம் சென்றதும் வீடு பேற்றினை அடைவார்கள்.

சமயி - சமயதீக்கை பெற்றவன். புத்திரன் - சமயம் விசேடம் ஆகிய தீக்கைகளைப் பெற்றவன். தேக பாதம் - உடலின் இறுதி.

ஓதிஉணர்ந்து ஒழுக்கநெறி இழுக்கா நல்ல
உத்தமர்க்குச் செய்வதுஉயர் பீசம்; இவர் தம்மை
நீதியினால் நித்திய, நை மித்திக கா மியத்தின்
நிறுத்தி நிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்து,
சாதகா சாரியரும் ஆக்கி வீடு
தருவிக்கும்; உலோகசிவ தருமிணி என்று இரண்டாம்;
ஆதலினால் அதிகாரை யாம்; சமய, விசேட,
நிருவாணம், அபிடேகம் இவற்று அடங்கும் அன்றே. 257

சிவாகமங்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும், ஆகமங்கள் விதித்த ஒழுக்க நெறியிலிருந்து பிறழாது வாழும் உயர்ந்தோர்க்கு வழங்கப் படுவது சபீசதீக்கை எனப்படும். இதனைப் பெற்றவர்கள் நித்தியம், நைமித் திகம், காமியம் ஆகிய மூன்று வகைக் கடமையும் ஆற்றுவதற்கு உரிமை உடையவராவர். இத்தீக்கை பெற்றவர்கள் சாதகரும் ஆசாரியரும் என்று இரண்டு வகைப்படுவர். இதுவும் உலோக தருமிணி என்றும், சிவதருமிணி என்றும் இரண்டு வகைப்படும். சமயம் விசேடம், நிருவாணம், அபிடே கம்ஆகிய நான்கு வகைப்பட்ட தீக்கைகளும் நிர்பீசம், சபீசம் என்ற இரண்டு வகையுள் அடங்கும்.

சாதகர் என்பவர் சமய ஒழுக்கத்தினால் வீடு பேற்றை அடைவதற்கு உரியவர்கள் ஆவர். ஆசாரியர் என்பவர் தாமும் வீடுபேறு அடைந்து தம் மாணவரையும் வீடு பேறு அடைவிக்கும் உரிமை உடையவர்.

உலோக தருமிணி என்பது உலகியல் வாழ்வில் ஈடுபட்ட நல்லோருக்குத் தலையை மழித்தல் இன்றிச் செய்யப் பெறுவது ஆகும். இதற்கு பௌதீக தீக்கை என்று பெயர். சிவதருமிணி என்பது துறவற நெறி நின்று வீடுபேறு அடைவதற்குத் தலையை மழித்துச் செய்யப்படும். இது நைட்டிக தீக்கை என்றும் பெயர் பெறும்.

அழிவிலாக் கிரியையினால் ஆதல் சத்தி மத்தான்

ஆதல், அத்து வாசுத்தி பண்ணி, மலம் அகற்றி,

ஒழிவிலாச் சிவப்பிரகா சித்தற்கு ஞானம்

உதிப்பித்து உற் பவம்துடைப்பன், அரன், – ஒரு மூவர்க்கும்;

வழுவிலா வழி ஆறாம், மந்திரங்கள், பதங்கள்

வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்,

கழிவிலாது உரைத்தமுறை ஒன்றின் ஒன்று வியாத்தி;

கருதுகலை சத்தியின்கண்; சத்திசிவன் கண்ணாம். 258

சிவபெருமான் குருவடிவாக எழுந்தருளி வந்து மேலே கூறப்பட்ட கிரியாவதி முறைமையிலாவது அல்லது ஞானவதியிலாவது ஆறுவகை வழிகளையும் தூய்மை செய்து உயிர்களைப் பற்றி இருந்த மலப்பிணிப்பை நீக்கி அருளுவான். அத்தகைய உயிர்களிடத்திலே எங்கும் நிறைந்திருக்கும் சிவப் பொருள் ஒளி மயமாக விளங்கும்படி உதிக்கச் செய்வான். அதனால் அவ்வுயிர்களின் பிறவித் துன்பத்தினைத் துடைப்பான். இவ்வாறு செய்வது மேலே கூறப்பட்ட இரண்டு கிரியாவதி தீக்கைகளுக்கும் ஞானவதி தீக்கைக்கும் பொருந்தும். அத்துவாக்கள் என்று கூறப்பட்ட வழிகள் ஆறு ஆகும். அவை மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை ஆகியனவாகும். இவை ஆறும் முறையே ஒன்றில் ஒன்று அடங்கும். கலை எனப்பட்ட இறுதியாகச் சொல்லப்பட்ட வழி சிவசத்தியில் அடங்கும். சத்தி சிவத்தில் அடங்கும்.

சத்திமத் - ஞானவதி. அத்துவாக்கள் - வழிகள்; வியாத்தி - ஒன்றில் நிறைந்து இருப்பது. ஒரு மூவர் என்பதற்கு உத்தமத்தில் உத்தமர், உத்தமத்தில் மத்திமர், உத்தமத்தில் அதமர் என்று சிவஞான முனிவர் உரை எழுதினார். அதே பகுதிக்கு "கிரியா தீட்சாதிகாரிக்கும் ஞான தீட்சாதிகாரிக்கும் சாம்பவ தீட்சாதிகாரிக்கும்" ஆகிய மூவரும் என்று சிவாக்கிர யோகிகள் உரை வரைந்தார்.

மந்திரங்கள் முதல் ஐந்தும் கலைஐந்தின் வியாத்தி;

மருவுமந் திரம் இரண்டு; பதங்கள் நால் ஏழ்;

அந்தநிலை எழுத்து ஒன்று; புவனம் நூற்றெட்டு;

அவனிதத் துவம் ஒன்று; நிவிர்த்தி, அயன் தெய்வம்,

வந்திடும்மந் திரம்இரண்டு; பதங்கள் மூவேழ்;
வன்னங்கள் நாலாறு, புரம் ஐம்பத் தாறு;
தந்திடும்தத் துவங்கள்இரு பத்து மூன்று;
தரும்பிரதிட்டாகலை, மால் அதிதெய்வம் தானாம். 259

மந்திரங்கள் இரண்டும், பதங்கள் இருபத்து எட்டும், இறுதி எழுத்து ஒன்றும், நூற்றெட்டு புவனங்களும், நிலமாகிய தத்துவமும் நிவிர்த்தி கலையில் அடங்கும் என்பர். இதற்கு அதிதெய்வம் பிரமன். மந்திரங்கள் இரண்டும், பதங்கள் இருபத்தொன்றும், இருபத்து நான்கு எழுத்துக்களும், புவனங்கள் ஐம்பத்து ஆறும் இருபத்து மூன்று தத்துவங்களும் ஆகிய இவை பிரதிட்டா கலையில் அடங்கும். இதற்கு அதிதெய்வம் திருமால் என்பர்.

வித்தையின், மந் திரம்இரண்டு, பதம்நால் ஐந்து,
விரவும் எழுத்து ஏழு புரம் இருபத்துஏழு
தத்துவமும் ஓர்ஏழு, தங்கும்; அதிதெய்வம்
தாவுஇல் உருத்திரன் ஆகும்; சாந்தி தன்னில்
வைத்தனமந் திரம்இரண்டு, பதங்கள்பதி னொன்று
வன்னம்ஒரு மூன்று, புரம் பதினெட்டு, ஆகும்;
உத்தமமாம் தத்துவமும் ஒரு மூன்று ஆகும்;
உணரில், அதி தேவதையும் உணர் ஈசன் ஆமே 260

மந்திரங்கள் இரண்டும், பதங்கள் இருபதும், எழுத்துக்கள் ஏழும், புவனங்கள் இருபத்து ஏழும், வித்தியா தத்துவங்கள் ஏழும் ஆகிய இவை வித்தியாகலையில் அடங்கும். இதற்கு அதிதெய்வம் உருத்திரன் என்பர். மந்திரங்கள் இரண்டும், பதங்கள் பதினொன்றும், எழுத்துக்கள் மூன்றும், புவனங்கள் பதினெட்டும், தத்துவங்கள் மூன்றுமாகிய இவை சாந்தி கலையில் அடங்கும். இதற்கு அதிதெய்வம் மகேசுரர் என்பர்.

சாந்தியா தீதகலை தன்னின் மந் திரங்கள்
தாம் மூன்று பதம் ஒன்று அக்கரங்கள் பதி னாறு
வாய்ந்தபுரம் மூவைந்து தத்துவங்கள் இரண்டு
மருவும்; அதி தேவதையும் மன்னுசதா சிவர் ஆம்;
ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்கள்
எண்பத்தொன்று அக்கரங்கள் ஐம்பத்தொன்று ஆகும்;
ஆய்ந்தபுரம் இருநூற்றோடு இருபத்து நாலாம்;
அறிதருதத் துவம்முப்பத் தாறு; கலை ஐந்தே. 261

மந்திரங்கள் மூன்றும், பதம் ஒன்றும், எழுத்துக்கள் பதினாறும், புவனங்கள் பதினைந்தும், தத்துவங்கள் இரண்டுமாகிய இவை சாந்தியதீத கலையில் அடங்கும். இதற்கு அதி தெய்வம் சதாசிவர் என்பர். இம் முறையில் மந்திரங்கள் சத்தியோ சாதம் முதல் பதினொன்று ஆகும்.

பதங்கள் எண்பத்து ஒன்று ஆகும். எழுத்துக்கள் ஐம்பத்தொன்று ஆகும். புவனங்கள் இருநூற்று இருபத்து நான்கு. தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும். கலைகள் ஐந்து ஆகும். இவ்வாறு கூறிய வரிசை முறை ஒடுக்கமுறை எனப்படும்.

மூன்றுதிறத்து அணுக்கள் செயும் கன்மங் கட்கு
முன்னிலையாம் மூவிரண்டாம் அத்து வாவின்
ஆன்றமுறை அவை அருத்தி அறுத்து மலம் முதிர்வித்து
அரும்பருவம் அடைதலுமே ஆசா னாகித்
தோன்றி நுக ராதவகை முன்செய் கன்மத்
துகள் அறுத்து அங்கு அத்துவாத்துடக்கு அறவே சோதித்து,
ஏன்றஉடல் கன்மம் அனுபவத்தினால் அறுத்து இங்கு
இனிச் செய்கன்மம், மூலமலம் ஞானத்தால் இடிப்பன். 262

உயிர்கள் மனம், மொழி, மெய் எனும் மூன்று திறத்தாலும் ஈட்டிய வினையின் பயன்களை அவற்றுக்கு முன்னிலையாய் விளக்குகின்ற ஆறு அத்துவாக்களின் வழியாக இறைவன் உயிர்களுக்கு ஊட்டியும், உயிர்களை நுகர்வித்தும் கழித்தருளுவான். ஆணவ மலத்தையும் முதிர்வித்து அதன் வலிமை கெடுமாறு செய்வான். இந்நிலையில் உயிர்கள் பக்குவம் பெறும். அப்போது இறைவனே குருவடிவம் தாங்கி எழுந்ததருளி வந்து தீக்கையினால் அத்துவ சோதனை செய்து தூய்மையாக்கி அவற்றின் பழவினையை அழிப்பான். நுகர்வினையை உயிர்களின் உடலூழாய்க் கழியுமாறு அருளுவான். மேலும் வினை ஏறாதபடி அருளி மூலமலமாகிய ஆணவ மலத்தை ஒளிமுன் இருள் போல ஞானத்தினால் ஒழித்தருளுவான்.

இரண்டாம் அதிகரணம்

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழிஉழன்றும், புகலும் ஆச் சிரம
அறத்துறைகள் அவை அடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர்; இதில்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர் 263

இவ்வுலகத்து மாந்தர் பல பிறப்புகள் எடுத்த பிறகே உண்மை ஞானம் கைவரப் பெற்று வீடுபேற்றை அடைவர். அது படிப்படியே நிகழும். புறச் சமய நெறியிலே நின்று ஒழுகியும், அதன் பிறகு அகச் சமயத்திலே புகுந்தும், அதன் பின்னர் மிருதி நூல் ஒழுக்கங்களைக் கைகொண்டும், மாணவ நிலை, இல்லற நிலை மனைவியோடு காட்டில்

சென்று வாழும் நிலை துறவற நிலை ஆகியவற்றில் படிப்படியே பயின்றும், அரிய தவங்களை ஆற்றியும், அரிய கலைகளைக் கற்றும், நான்மறைகளைப் படித்தும், சிறப்பான புராணங்களை உணர்ந்தும், மறைமுடிவு எனக் கூறப்பட்ட உபநிடதங்களைக் கற்றும், தெளிந்தும் படிப்படியாக முன்னேறிச் சென்றவர்கள் சைவசித்தாந்தச் செம்மை நெறியில் வந்து அடைவார்கள். சைவ சித்தாந்தத்தில் விதிக்கப்பட்ட சீலம், நோன்பு, செறிவு என்னும் மூன்று ஒழுக்கங்களையும் முறைப்படி நிறைவேற்றிய பிறகு மெய்யறிவு எனப்படும் ஞானத்தை அடைந்த பின் சிவபெருமானின் திருவடி நிழலை எய்துவதாகிய வீடுபேற்றினைப் பெறுவர்.

புகல் மிருதி - ஸ்மிருதி நூல்கள், ஆச்சிரமங்கள் - பிரமச்சரியம், இல்லறம் வானப் பிரத்தம், துறவறம் என நான்கு. ஆரணங்கள் - மறை நூல்கள், சிறப்புடைய புராணங்கள் என்று ஆசிரியர் கூறியதனால் சிறப்பிலாத புராணங்களும் உண்டு என்பது உய்த்து உணரப்படும். வேத சிரப்பொருள்- வேதத்தின் நான்காவது பாதமாகிய உபநிடதங்கள். இவை ஞானபாதப் பொருளை உணர்த்துவன.

இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும்
ஏந்திழைஆர் முத்தி என்றும் இரும்சுவர்க்க முத்தி
அம்மையே என்றும் முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை என்றும் அட்ட குணம் முத்தி என்றும்
மெய்ம்மையே பாடாணம் போல்கை முத்தி என்றும்
விவேகமுத்தி என்றும் தன் மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி என்றும் செப்புவர்கள்;
சிவன் அடியைச் சேரும்முத்தி செப்புவது இங்குயாமே. 264

மேலே கூறப்பட்ட புறச்சமயங்களிலும் அகச் சமயங்களிலும் வீடு பேறு என்பது பல்வேறு வகையாகக் கூறப்படுகிறது. இம்மையிலே பதினாறு வயது நிரம்பிய எழில் மிக்க மங்கையரோடு கூடி இன்புறுவதே வீடு பேறு என்பர் ஒரு சாரார். துறக்கத்தில் சென்று வானவராக இன்பம் துய்த்தலே வீடு பேறு என்பர் மற்றொரு சாரார். ஐந்து கந்தங்களும் அறவே கெடுவது வீடுபேறு என்பர் வேறொரு சாரார். மற்றும் சிலர் எல்லையற்ற அறிவு முதலிய எட்டுக் குணங்களையும் அடைவதே வீடுபேறு என்பர். வேறு சிலர் உயிர் உண்மையாகக் கல்லைப் போல் கிடத்தல் வீடு பேறு என்பர். வேறும் சிலர் தத்துவங்களை வகுத்து உணரும் விவேகமே வீடுபேறு என்பர். மற்றும் சிலர் பிரமப் பொருளை உள்ளவாறு உணர்தலே வீடுபேறு என்பர். சிலர் சிவவடிவம் முதலிய பதமுத்திகளையே வீடுபேறு என்பார். இங்கு யாம் கூறுகின்ற சித்தாந்த வீடு பேறு என்பது உயிர் நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகிச் சிவபிரான் திருவடியை அணைந்து எல்லையற்ற இன்பத்தில் திளைத்திருத்தலாகும்.

மகளிரோடு கூடி வாழ்தல் வீடு பேறு என்பவர்கள் உலகாயதர். துறக்கம் புகுதல் வீடு பேறு என்பவர்கள் மீமாஞ்சகர். கந்தகங்கள் ஐந்தும் அறக் கெடுவது வீடுபேறு என்று கொள்பவர்கள் பௌத்தரில் சௌத்தி ராந்திகர். எட்டுக் குணங்களைப் பெறுவது வீடுபேறு என்பவர் ஆருகதர். கல்லைப் போல் கிடப்பது வீடுபேறு எனக் கொள்பவர் வைசேடிகர். உயிரைப் பிரித்துக் காணும் அறிவே வீடுபேறு என்று கொள்பவர் சாங்கியர். மாயை பிரமங்களை உண்மையாக அறிவது வீடுபேறு என்பது மாயா வாதிகள் கொள்கை. சிவ வடிவு பெறுதல் முத்தி என்பது சிவசமவாதியர் கொள்கை.

ஓதுசம யங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடுஒன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம் பொருள்நூல் யாது இங்கு? என்னின்
இதுஆகும் அது அல்லது எனும்பிணக்கது இன்றி
நீதியினால் இவை எல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயா தொரு சமயம்? அதுசமயம் பொருள்நூல்
ஆதலினால் இவைஎல்லாம் அருமறை ஆ கமத்தே
அடங்கியிடும் இவை இரண்டும் அரன் அடிக்கீழ் அடங்கும், 265

உலகத்தில் கணக்கற்ற சமயங்கள் உள்ளன. அவ்வச் சமயத்தில் கூறப்படும் பொருள்களும் அவற்றை விளக்கும் நூல்களும் பற்பல உள்ளன. இவை தமக்குள் ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் பிணங்குவனவாகும். இவற்றுள்ளே எந்தச் சமயம் முதன்மையானது? அச்சமயத்தின் பொருள்களை உணர்த்தும் நூல் எது? என்ற வினாக்கள் எழுவது இயல்பே இக்கருத்துப் பொருந்தும், அது பொருந்தாது என்று பிணங்குவது இல்லாமல் முறையாக இவை அனைத்தும் எச்சமயத்தில் காணப்படுமோ அதுவே முதன்மையான சமயம் என்று கொள்ளல் தகும். அச்சமயத்தின் பொருள்களைத் தெளிவுற உணர்த்தும் நூலே மெய்ம்மையான நூலாகும். எனவே எல்லாச் சமயங்களும் அருமறைகளிலும், ஆகமங்களிலும் அடங்கும். மறைகளும், ஆகமங்களும் சிவபிரானின் இரண்டு திருவடிகளிலும் அடங்கும்.

உலகத்தில் சமயங்கள் பல்வகைப்படுவன. அச்சமயங்கள் எல்லாம் உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்பப் படிமுறையாக இறைவனால் செய்யப்பட்டன என்பது சைவசித்தாந்தத்தின் கொள்கை. எனவே ஒவ்வொரு சமயத்தில் நின்றும் ஒழுகியும் பக்குவப்பட்ட உயிர் சமயப் பிணக்குகளைக் கடந்த சித்ததாந்தச் செந்நெறியை வந்து அடையும். அதன் பின்னர் ஞானத்தினால் வீடுபேற்றை அடையும். இக் கருத்து ஆசிரியரால் 263-வது பாடலில் தெளிவுற விளக்கப்பட்டது.

அருமறைஆ கமம்முதனூல் அனைத்தும் உரைக்கையினால்
அளப்பு அரிதாம் அப்பொருளை அரன் அருளால் அணுக்கள்
தருவர்கள் பின் தனித்தனியே தாம் அறிந்த அளவில்
தர்க்க மொடுஉத் தரங்களினால் சமயம் சா தித்து

மிருதிபுரா ணம்கலைகள் மற்றும் எல்லாம்
மெய்ந்நூலின் வழி புடையாம் அங்கம்வே தாங்கம்
சுருதிசிவா கமம்ஒழியச் சொல்லுவது ஒன்றுஇல்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொணாதே. 266

நான் மறைகளும் சிவாகமங்களும் அளவிடுவதற்கு அரிய உயர்ந்த பொருளை எடுத்துரைப்பதனால் அவை முதல் நூல்கள் எனப்படும். இம் முதல் நூல்கள் உயிர்கள் உய்வு பெறும் பொருட்டுச் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டவை. உயிர்களின் படி முறை வளர்ச்சியைக் கருதி இறைவன் இவற்றுள் எல்லாப் பொருளையும் செறிவித்து அருளினான். ஆயினும் பிற்காலத்தில் தோன்றிய சமயத் தலைவர்கள் அந்நூல்களின் கொள்கைகளைத் தாம் அறிந்த அளவில் எடுத்துக் கொண்டு வினாக்களை எழுப்பி விடைகளையும் தந்தார்கள். இவையே பிற்காலத்தில் வெவ்வேறு சமயங்களாக வளர்ந்தன. மிருதிகள் புராணங்கள் கலைகள் ஆகிய எல்லா நூல்களும் நான்மறைகள் சிவாகமங்கள் ஆகியவற்றின் வழிநூல்களாகும். இந்த வழிநூல்களை விரித்துரைக்கின்ற அங்கங்கள் புடை நூல்கள் எனப்படும். நான் மறைகளிலும் சிவாகமங்களிலும் கூறப்படாத பொருள் ஒன்றுமில்லை. இதற்கு மாறாக வேறுநூல் உண்டு என்று கொள்ளுவார்க்கு விடை கூறித் தெளிவித்தல் இயலாது.

அணுக்கள் - உயிர்கள். தருக்கமொடு உத்தரங்கள் - பிறர் கருத்தும் அதற்குத் தான் கூறும் விடையும்.

வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்;
வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதி நூல் அநாதி அம லன் தருநூல்; இரண்டும்;
ஆரணநூல்; பொதுசைவம் அரும்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள்வே தாந்தத்
தீதுஇல்பொருள் கொண்டு உரைக்கும் நூல்சைவம்; பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும். 267

உலகத்தில் உயர்ந்த நூல்கள் எனக் கூறப்படுவன மறைகளும் சிவாகமங்களுமாகிய இரண்டேதாம். இவற்றின் வேறாக எழுந்த நூல்கள் எல்லாம் இவற்றின் கருத்துக்களை விரித்துரைக்கும் நூல்களே ஆகும். வினையின் நீங்கி விளங்கிய அறிவினை உடையவனும் இயல்பாகவே பாசங்களில் நீங்கியவனுமாகிய சிவபெருமானால் அருளப் பட்டவை இவை இரண்டும் ஆகும். இவ்விரு நூல்களும் முதல் நூல் களேயாம். இவை முறையே உலகத்தவர்க்கும் சத்திநிபாதம் எய்திய வர்க்கும் என இறைவனால் அருளப்பட்டன. இவற்றுள் மறைகள் பொது என்றும் சிவாகமங்கள் சிறப்பு என்றும் கூறப்படும். விரிந்த வேதத்துள் கூறப்பட்டவற்றைத் தவிர எஞ்சி நின்ற பொருள்களையும்,

வேத முடிபாகிய உபநிடதங்களின் சாரமாகிய குற்றமற்ற பொருள்களையும் தனித்து எடுத்துக் கொண்டு இனிதே விளக்குவது சிவாகமம். எனவே பிற நூல்கள் எல்லாம் பூர்வ பக்கம் எனவும் சிவாகமங்கள் சித்தாந்தம் என்றும் கொள்ளப்படும்.

நான்மறைகள் உலக வழக்குப் பற்றிக் கூறுவனவாகும். சிவாகமங்கள் சித்தாந்த மெய்ந்நெறியை விளக்குவனவாகும். எனவே இவை பொதுவும் சிறப்புமாகும். பூர்வ பக்கம் - பிறர் கொள்கை.

சித்தாந்தத் தே, சிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்தி
செனனம்ஒன்றி லே சீவன் முத்த ராக
வைத்து ஆண்டு மலம்கழுவி ஞான வாரி
மடுத்துஆனந் தம் பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகர்எல்லாம் மூர்க்கர் ஆகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இது என்ன பிராந்தி? 268

சிவபிரான் தனது பேரருளால் உயிர்களுக்கு ஒரு பிறப்பிலேயே தன் திருக் கடைக்கண்சாத்தி, ஞானக் கடலில் மூழ்குவித்து, சிவப் பேரின்பத்தை மிகுவித்து, அவர்களின் மும்மல அழுக்கை நீக்கி, சீவன் முத்தராகச் செய்து, இனிமேல் அவர்களுக்கு வரும் பிறவியை அறுத்து, முத்தி முடிபாகிய தன் திருவடி மலர்களின் கீழ் வைப்பான் என்று சைவ சித்தாந்தத்தை நன்கு உணர்ந்த அருளாளர்கள் எடுத்துரைக்கின்றார்கள். அவ்வாறு இருந்தும் உலகத்தில் பலர் கொண்டதை விடாத தன்மையராகிப் பெரும் பித்துப் பிடித்து வேறு சமயங்களைப் பற்றி நின்று பலவாறு பிதற்றி அத்தீவினையால் பெருங்குழியில் விழுந்து துன்புறுகின்றனரே. இதுவென்ன மயக்கம்?

திருக்கடைக்கண் என்று ஆசிரியர் கூறியதைக் கொண்டு தீக்கை முறைகள் யாவற்றையும் கொள்க. சீவன் முத்தர் இவ்வுலக வாழ்க்கையிலிருந்தே வீடுபேற்றை அடைந்தோர். முத்தி + அந்தம் - முத்தாந்தம். பித்து + அந்தம் - பித்தாந்தம். பிராந்தி - மயக்கம்.

இறைவன்ஆ வான்; ஞானம் எல்லாம் எல்லா
முதன்மை அனுக்கிரகம்எல்லாம் இயல்புடையான் இயம்பும்
மறைகள்ஆ கமங்களினால் அறிவெல்லாம் தோற்றும்
மரபின் வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கும்
முறைமையினால் இன்பத்துன் பம்கொடுத்தலாலே
முதன்மையெலாம் அறிந்தும் முயங்கு இரண்டு போகத்
திறமதனால் வினை அறுக்கும் செய்தியாலே
சேரும் அனுக்கிரகம் எலாம்; காணுதும்நாம், சிவற்கே. 269

மற்று யாரும் தன்னை ஒப்பார் இல்லாத சிவபெருமான் ஒருவனே முற்றறிவையும் வரம்பிலா ஆற்றலையும் பேரருளையும் தனக்கு இயல்

பாக உடையவன். நான்மறைகளையும் சிவபெருமானே அருளிச் செய்தான். அதனால் அவனுடைய முற்றறிவு விளங்கும். மறைகளிலும், ஆகமங்களிலும் அவனால் வகுத்துரைக்கப்பட்ட வழிகளில் ஒழுகுபவர்களுக்கும் ஒழுகாதவர்க்கும் முறையே இன்பங்களையும் துன்பங்களையும் சிவ பெருமான் வழங்குவான். இதிலிருந்து அவனுடைய வரம்பிலாத ஆற்றல் புலப்படும். உயிர்களின் வினைக்கு ஏற்ப இன்பத் துன்பங்களை ஊட்டி அவற்றின் வினைச் சுமையை நீக்குவதனால் சிவபெருமானின் பேரருள் தெளியப்படும்.

இந்த இரண்டு பாடல்களாலும் சைவ சித்தாந்தச் செந்நெறியின் சிறப்பு ஆசிரியரால் கூறப்பட்டது.

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க் கம்என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நால் அவைதாம் ஞானம் யோகம்
நல்கிரியா சரியைஎன நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கிய சா மீப்பிய
சாரூப்பிய, சாயுச்சியம் என்றுசதுர் விதமாம்;
முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி
முடிவு என்பர்; மூன்றினுக்கும் முத்திபதம் என்பர். 270

சிவபெருமானை அடையும் நெறிகள் நான்கு என்பர். அவை தொண்டு நெறி (தாதமார்க்கம்) மகன்மை நெறி (சற்புத்திரமார்க்கம்) தோழமை நெறி (சகமார்க்கம்) நன்னெறி (சன்மார்க்கம்) என்று பெயர் பெறும். இவற்றையே சீலம் (சரியை), நோன்பு (கிரியை), செறிவு (யோகம்), அறிவு (ஞானம்) என்றும் வழங்குவர். இங்குக் கூறப்பட்ட நால்வகை நெறிகளிலும் நிற்பவர்களுக்கு முறையே எய்துகின்ற பயன்கள் இறைவனோடு ஓர் உலகத்தில் இருத்தல் (சாலோகம்). இறைவனுக்கு அருகிருத்தல் (சாமீபம்), நெற்றியில் கண்ணரும், நாற்பெரும் தோளரும், நீறணிமேனியரும் ஆக அவன் வடிவத்தைப் பெறுதல் (சாரூபம்). இறைவனோடு இரண்டறக் கலத்தல் (சாயுச்சியம்) என்பனவாகும். இவற்றுள் முதலில் கூறப்பட்ட மூன்றும் பதமுத்திகள் எனப் படும். நான்காவதாகக் கூறப்பட்டது பரமுத்தியாகும்.

சதுர் விதம் - நான்கு வகை. தாதன் - அடியவன்.

தாதமார்க் கம் சாற்றில், சங்கரன்தன் கோயில்
தலம் அலகுஇட்டு, இலகுதிரு மெழுக்கும் சாத்தி,
போதுகளும் கொய்து பூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடி
தீதுஇல் திரு விளக்குஇட்டு, திருநந்த வனமும்
செய்து திருவேடங்கண்டால் அடியேன் செய்வது
யாது? பணியீர்! என்று பணிந்து, அவர்தம் பணியும்
இயற்றுவது; இச்சரியை செய்வோர் ஈசன் உலகு இருப்பர் 271

சிவபெருமானுடைய திருக்கோவிலைத் திருஅலகிட்டும், திருமெழுக்கிட்டும், மொட்டறா மலர் பறித்து இறைவனுக்கெனத் தாரும் மாலையும் கண்ணியும் தொடுத்தும், இறைவன் பெருமைகளைப் புகழ்ந்து பாடியும், இருளகற்றும் திருவிளக்கு ஏற்றியும், திருநந்தவனங்களை அமைத்துக் காத்தும், திருவேடம் கொண்ட அடியார்களைக் கண்டால் தங்களுக்கு நான் செய்யும் பணி யாது என்று கேட்டு அவர்கள் இடும் பணியை உவந்து இயற்றியும் வருவது தாதமார்க்கம் ஆகும். இதுவே சரியை நெறி. இந்நெறியில் ஒழுகுவோர் ஈசன் உலகத்தில் இருப்பர்.

புத்திரமார்க் கம்புகலின், புதியவிரைப் போது
புகைஒளிமஞ் சனம் அமுது முதல்கொண்டு ஐந்து
சுத்திசெய்துஆ சனம், மூர்த்தி மூர்த்தி மானாம்
சோதியையும் பாவித்துஆ வாகித்து சுத்த
பத்தியினால் அருச்சித்து பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும் இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பார், நினையுங் காலே. 272

புதிய மணம் உள்ள மலர்கள், நறும்புகை, திருவிளக்கு, திருமஞ்சனப் பொருள்கள், திருஅமுது ஆகிய வழிபாட்டுக்கு உரிய பொருள்களை எல்லாம் சேகரித்துக் கொண்டு ஐந்து வகைத் தூய்மைகளையும் செய்து இருக்கை இட்டு, திருமேனியை எழுந்தருளச் செய்து திருமேனியை உடையானாகிய பேரொளி வடிவாகிய இறைவனைப் பாவித்து அதில் எழுந்தருளச் செய்து தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று, அழல் ஓம்பி நாள்தோறும் வழிபடுவது மகன்மை நெறி எனப்படும். இதனை வழுவாது இயற்றி வருபவர்கள் சிவபெருமானின் அருகில் இருக்கும் பேற்றினைப் பெறுவார்கள். இந்நெறி கிரியை நெறி எனப்படும்.

ஐந்துவகைத் தூய்மைகள் பஞ்ச சுத்தி எனப்படும். அவை பூத தூய்மை, இடத்தூய்மை, பொருள் தூய்மை, மந்திரத் தூய்மை, லிங்கத் தூய்மை என்பன. ஆவாகித்தல் - எழுந்தருளுவித்தல்.

சகமார்க்கம் புலன் ஒடுக்கித் தடுத்துவளி இரண்டும்
சலிப்பு அற்று முச்சதுர முதல் ஆதா ரங்கள்
அகமார்க்கம் அறிந்து அவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்து அங்கு
அணைந்துபோய் மேல்ஏறி அலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க அமுது உடலம் முட்டத் தேக்கி
முழுச் சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல்; உழந் தவர்சிவன் தன் உருவத்தைப் பெறுவர். 273

ஐம்புலன்களையும் ஒடுக்கி உள் மூச்சு, வெளிமூச்சு இரண்டனையும் அடக்கி உயிர்க் காற்றைக் கட்டுப் படுத்தி, முக்கோணம் சதுரம் முதலிய

வடிவினைக் கொண்ட ஆறு ஆதாரங்களையும் உணர்ந்து அந்தந்த ஆதாரத்தில் அதனதற்குரிய அதி தெய்வங்களை வழிபட்டு மேலேறிச் சென்று பிரமரந்திர தானத்தில் சென்றெய்தி அதில் உள்ள தாமரை மொட்டை மலர்வித்து அங்குள்ள திங்கள் மண்டலத்தினை இளகச் செய்து அதன் அமுதத்தை உடல் முழுவதும் தேக்கிப் பேரொளி வடிவாகிய இறைவனை இடையீடின்றி நினைந்திருப்பது தோழமை நெறியாகும். இதில் நிற்போர் எட்டு உறுப்புக்கள் கொண்ட யோக நெறியை மேற்கொண்டு ஒழுகுவோராவர். இவர்கள் சிவபெருமானின் உருவத்தைப் பெறுவர். இது யோக நெறி எனப்படும்.

அட்டாங்க யோகத்தில் சிவயோகமே சைவ சித்தாந்தத்தில் வலியுறுத் தப்படும். மற்றைய யோகங்கள் மீண்டும் பிறப்பினை நோக்கி உயிரை இட்டுச் செல்லும் என்பர்.

சன்மார்க்கம் சகலகலை புராணம் வேதம்
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து
பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம்
பதிபசுபா சம்தெரித்துப் பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவும் நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்
பெருமைஉடையோர் சிவனைப் பெறுவர் காணே. 274

எல்லாக் கலை ஞானங்களையும், புராணங்களையும், சாத்திரங்களையும் புறச்சமய நூல்களையும் நுணுகி ஆராய்ந்து பொய்யைப் பொய் என்று தள்ளி இறை உயிர்தளை என்ற முப்பொருள்களின் உண்மையை உணர்ந்து சிவபெருமானை அடைவதற்குரிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்று, அறிவு அறிபவன் அறியப்படும் பொருள் என்ற வேறுபாடு இல்லாமல் சிவபெருமானோடு இரண்டறக் கலந்து நிற்பதுவே நன்னெறி எனப்படும். இந்த நெறியில் நிற்கும் பெருமை உடையவர்கள் சிவனை அடைவார்கள். இது ஞான நெறி எனப்படும்.

இதுவரை சிவபெருமானை அடைவதற்குரிய நான்கு நெறிகளும் ஆசிரியரால் நான்கு தனித்தனிப் பாடல்களில் எடுத்துரைக்கப்பட்டன. இந் நெறிகளில் நின்று சிவனருளைப் பெற்றவர்கள் முறையே அப்பரடிகள், திருஞான சம்பந்த நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மணிவாசப் பெருமான் என்று பெரியோர் கூறுவர்.

ஞானநூல் தனைஓதல் ஓதுவித்தல்
நல்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனம்இலாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவன் அடி அடைவிக்கும் எழில்ஞான பூசை

ஊனம்இலாக் கன்மங்கள் தபம் செபங்கள் தியானம்
ஒன்றுக்கு ஒன்று உயரும்; இவை ஊட்டுவது போகம்
ஆனவையான் – மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடுஎய்த அறிந்தோர் எல்லாம். 275

சிவஞானப் பொருளை விளக்குகின்ற நூல்களைத் தான் ஓதுதலும், பிறர்க்கு ஓதுவித்தலும், நலம் தரும் அந்நூற் பொருள்களை நன்கு உணர்ந்து பிறர்க்கு உரைத்தலும், தான் அதனை ஆசிரியர் பால் கேட்டலும், குறைவிலாத அப்பொருளைச் சிந்தித்தலும் ஆகிய இவை ஐந்தும் சிவபெருமான் திருவடியை அடைவிக்கும் அழகிய ஞான வேள்வி என்று போற்றப்படும். குறைவிலாத கன்மவேள்வி, தவவேள்வி, சிவவேள்வி, தியான வேள்வி, என்ற நான்கும் நூல்களால் கூறப்படுவனவாகும். இவை ஒன்றுக்கொன்று உயர்ந்ததாகக் கூறப்படும். ஆயினும் இவை நான்காலும் பெறுகின்ற பயன் இன்ப நுகர்வே ஆகும். எனவே வீடுபேற்றை அடைய விரும்பும் பெரியோரெல்லாம் மேம்பட்ட ஞான வேள்வியினாலே சிவபெருமானை வழிபடுவர்.

கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
கிளத்தல் எனஈர் இரண்டாம் கிளக்கில் ஞானம்
வீட்டை அடைந் திடுவர் நிட்டை மேவி னோர்கள்;
மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்கு
ஈட்டியபுண் ணியநாத ராகி இன்பம்
இனிதுநுகர்ந்து அரன் அருளால் இந்தப் பார்மேல்
நாட்டியநல் குலத்தினில் வந்து அவதரித்துக் குருவான்
ஞானநிட்டை அடைந்து அடைவர் நாதன் தாளே, 276

ஞானவேள்வியில் நான்கு வகைகள் கூறப்பட்டன. அவற்றுள் இறுதியாகக் கூறப்பட்டது கேட்டல், கேட்டலுடன் கேட்ட பொருளைப் பற்றிச் சிந்தித்தலும் சிந்தனையின் பயனாகத் தெளிவு பெறுதலும் அதன் பின்னர் நிட்டை கூடுவதும் என்று இவ்வாறு நான்கு வகையாக ஞானம் நிகழும். நிட்டை கை கூடியவர்கள் மேலாகிய வீட்டின்பத்தினைத் தலைப் படுவர். நிட்டை கை கூடாது முதல் மூன்று படிகளில் நின்று தாம் தாம் செய்த நல்வினைகளுக்கு ஏற்ப மேலான உலகங்களுக்குச் சென்று அங்குள்ள இன்பத்தை இனிது நுகர்ந்து மீண்டும் சிவபெருமான் அருளால் இந்த உலகில் நல்ல குடியில் வந்து பிறப்பார்கள். அதன் பின்னர் அருளாசிரியர்களிடம் பயின்று ஞானநிட்டை பொருந்தி இறைவன் திருவடியை அடைவார்கள்.

தானம் யா கம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள்
சாந்தி விர தம் கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனம் இலாச் சுவர்க்கம்பெற்று இமைப்பள வில் மீள்வர்;
ஈசன்யோ கக்கிரியா சரியையினின் நின்றோர்,

ஊனம் இலா முத்திபதம் பெற்று உலக மெல்லாம்
ஒடுங்கும் போது அரன்முன் நிலாது ஒழியின் உற்பவித்து
ஞானநெறி அடைந்து அடைவர் சிவனை அங்கு
நாதனே முன்னிற்கின் நணுகுவர் நற்றாளே. 277

கொடை வேள்வி, புண்ணியத்துறைகளில் ஆடுதல், மாணவநெறி இல்லறநெறி கானகத்தவம், துறவு ஆகியவற்றின் வழி ஒழுகுதல், தவஞ் செய்தல், கழுவாய் செய்தல், நோன்பு நோற்றல், யோகநெறி நிற்றல் ஆகிய இவை எல்லாம் நல்வினைகளே. ஆயினும் இத்தகைய நோன்புகளை மேற்கொண்டவர்கள் குறைவற்ற துறக்க உலகினைச் சென்று இன்பங்களை நுகர்ந்து இமைப்பளவில் இவ்வுலகில் மீண்டும் வந்து பிறப்பர். ஆனால் இறைவன் அருளிய ஆகமநெறியில் கூறப்பட்ட மேம்பட்ட சரியை கிரியை யோகம் என்னும் சிவபுண்ணியங்களை இயற்றினோர் பதமுத்திகளை அடைந்து அங்கு நெடுங்காலம் வாழ்வர். உலகமெலாம் ஒடுங்கும் சங்கார காலத்தில் சிவபெருமான் இவர்களுக்கு முன்னின்று அருளானாகில், மீண்டும் இவ்வுலகில் பிறந்து ஞான நெறியைத் தலைப்பட்டு வீடுபெறுவர். பதமுத்திகளில் வைகுவோர்க்கு இறைவன் திருவருள் கிட்டுமாயின் அங்கிருந்தே அவன் திருவடியில் கலப்பர்.

இந்தப் பாடலில் பல்வகை நோன்புகளையும் தவங்களையும் விடச் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நால்வகை நெறிகள் உயர்ந்தன என்பது கூறப்பட்டது. எவ்வகையாயினும் ஞானத்தைப் பெற்றே வீடுபேறு அடைதல் கூடும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

சரித்தோர் - ஒழுக்கத்தைப் பூண்டவர்கள். உற்பவித்து - பிறந்து

சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
திலம் அளவே செய்திடினும் நிலம்மலைபோல் திகழ்ந்து
பவமாயக் கடலின் அழுந்தாவகை எடுத்துப்
பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கத்
தவம்ஆரும் பிறப்புஒன்றின் சாரப் பண்ணி
சரியைகிரி யாயோகந் தன்னிலும் சா ராமே
நவம்ஆகும் தத்துவஞா னத்தை நல்கி
நாதன் அடிக் கமலங்கள் நணுகுவிக்கும் தானே. 278

சிவஞானிகளின் கையிலே அளித்த கொடை எள்ளளவே ஆயினும் நிலம் போல் அகன்றும் மலைபோல் ஓங்கியும் திகழும். அவ்வாறு வழங்கிய கொடை மீண்டும் பிறவிக் கடலுள் அழுந்தாதபடி எடுத்து மேலான இன்பங்களையும் நுகர்வித்து, பாசத்தை அறுப்பதற்கு ஏற்ற பிறப்பிலே சாரு மாறு செய்து, சரியை கிரியை யோகம் என்பனவற்றை எளிதாக முற்றுவித்து, உண்மை ஞான நெறியை அடைவித்துச் சிவபெருமானுடைய செந்தாமரை மலர் போலும் திருவடியாகிய வீட்டின்பத்தினை எய்துவிக்கும். திலம் - எள்.

ஞானத்தால் வீடு என்றே நான்மறைகள் புராணம்
நல்லஆ கமம்சொல்ல அல்லவாம் என்னும்
ஊனத்தார் என்கடவர் – அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம் உயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தால் அதுபோவது,அ லர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும்முத்தி ஆகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவன் அடி ஞானமே ஞானம் என்பர். 279

எல்லாவற்றிலும் மேலான சிவஞானத்தினாலேயே வீடுபேற்றை அடையமுடியும் என்று நான்மறைகளும் புராணங்களும் சிவாகமங்களும் முழங்குகின்றன. அதற்கு மாறாக வேறு வகை முயற்சிகளாலும் வீடுபேற்றை அடையலாம் எனக் கூறும் புறச் சமயத்தார் கூற்று குறைபாடு உடையது. உயிருக்கு அறியாமையினால் விளைவதே கட்டுநிலை. கட்டுநிலையிலிருந்து விடுபட வேண்டுமானால் உயர்ந்த மெய்ஞ்ஞானம் தோன்றுதல் வேண்டும். மெய்ஞ்ஞானம் தோன்றவே கதிரவன் முன் இருள் போல அறியாமை விலகும். அறியாமை நீங்கிய உடனே பாசப் பிணிப்பு அகலும். வீடுபேறும் வாய்க்கும். மற்றையோர்கூறும் ஞானங்கள் எல்லாம் ஞானம் ஆகாது. சிவபெருமான் திருவடி ஞானமே மெய்ஞ்ஞானம் என்று மேலோர் கூறுவர்.

பாசப்பிணிப்பு என்பது அறியாமையால் விளைவதாகும். எனவே பாசப்பிணிப்பு அறுவதற்கு மெய்ஞ்ஞானம் தோன்றுதல் வேண்டும். ஞானம் என்பது பாசஞானம் பசுஞானம் பதிஞானம் என்று மூன்றாகக் கூறப்படும். இவற்றுள் பாசஞானமும் பசுஞானமும் உயிருக்கு வீடுபேற்றை அளிக்கவல்லன அல்ல. இறைவன் திருவடிஞானம் எனப்பட்ட பதிஞானமே உயிர்களின் அறியாமையைப் போக்கி கட்டுக்களில் இருந்து விடுவித்து வீடு பேற்றையும் தரும் என்பதனை ஆசிரியர் இப்பாடலால் விளக்கினார்.

சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றியி டச்சோதி தோன்று மாபோல் –
ஆரியனாம் ஆசான்வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்; தோன்றத்
தூரியனாம் சிவன் தோன்றும் தானும்தோன்றும்
தொல்லுலக மெல்லாம்தன் னுள்ளே தோன்றும்;
நேரியனாய் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும்
நின்றநிலை எல்லாம் முன் நிகழ்ந்து தோன்றும். 280

செம்மை நிறம் பொருந்திய ஞாயிறு வானில் விளங்கித் தோன்றிய உடனே சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றுவது போல மேலோனாகிய ஞான ஆசிரியன் தன் அருளால் காட்சி தரும் போது உயிரினி

டத்துத் திருவடிஞானம் தோன்றும். அவ்வாறு தோன்றவே இறைவனாகிய சிவபெருமானும் நிருவிகற்பமாய் விளங்கித் தோன்றுவான். அவன் அணு விற்கு அணுவாயும் எங்கும் நிறைந்து நிற்பவனாகவும் விளங்குவதால் உயிரின் இயல்பும் உலகின் இயல்பும் உடன் தோன்றும். இவை யாவும் "ஈரிரண்டாம் கிளக்கில் ஞானம்" என்று கூறப்பட்டவற்றுள் கேட்டலின் பயனாய் விளைவனவாகும்.

ஆரியன் - மேலோன்; இங்கே குருவடிவாய் எழுந்தருளி வந்த இறைவ னைக் குறித்தது. நேரியன் - நுட்பமானவன். பரியன் - பருமை உடையவன்.

மிக்கது ஒரு பக்குவத்தில் மிகுசத்தி நிபாதம்
மேவுதலும் ஞானம்விளைந்து ஓர்குருவின் அருளால்
புக்குஅ நுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்தில் புகழ்சீவன் முத்த ராகி
தக்கபிரி யாப்பிரியம் இன்றி ஓட்டில்
தபநியத்தில் சமபுத்தி பண்ணி சங்கரனோடு
ஒக்க உறைந்து இவர் அவனை அவன் இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர். 281

பக்குவம் முதிர்ந்த போது உயிர்களுக்குத் தீவிரதர சத்திநிபாதம் விளையும். அந்நிலையில் ஞானமும் முதிரும். அப்போது குருவின் அருளால் கேட்டு சிந்தித்து தெளிந்து நிட்டை கூடுதலும் கைகூடும். இவ்வாறு நிட்டை கூடியவர்கள் இவ்வுலகில் வாழும் காலத்திலேயே சீவன் முத்தி நிலையைப் பெறுவர். அவர்களுக்கு எதன் மேலும் விருப்பும் வெறுப்பும் இல்லாததால் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் இயல்புடைய வராய்ச் சிவபெருமானோடு ஒன்றி இருப்பர். சிவபெருமானை இவர்கள் சிக்கெனப் பிடித்த அடியார்களாகவும் அப்பெருமான் இவர்களைக் கை நழுவவிடாத அருளாளனாகவும் விளங்குவதால் இவர்கள் சிவத்தோற்றம் ஒன்றை மட்டிலுமே கண்டு இன்புற்றிருப்பர்.

பிரியாப்பிரியம் - விருப்பு வெறுப்பு. தபநியம் - தமனியம் - பொன்.

அறியாமை அறிவு அகற்றி அறிவினுள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து
குறியாதே குறித்து அந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்து இருப்பை யாயின் —
பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றி
பிரபஞ்ச பேதம்எல்லாம் தானாய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
நின்றுஎன்றும் தோன்றிடுவன் நிராதாரன் ஆயே. 282

திருவருளின் துணை கொண்டு அறியாமை எனப்படும் கேவல நிலை யிலிருந்தும், அறிவு எனப்படும் சகல நிலையிலிருந்தும் நீங்கி அறிவுக்கு

அறிவாக இருக்கிற இறைவனைச் சுட்டறிவினால் அல்லாமல் திருவருளால் தன் முனைப்பின்றி அறிந்து அடங்கி நிற்கப் பெறுவாரானால், தம்மை விட்டு ஒரு போதும் பிரியாத முதல்வன் பொருள் தன்மை பற்றிப் பிரிந்து தோன்றி, சிந்தித்தற் காலத்து உலகத்துப் பொருள்கள் யாவையினும் கலப்புப் பற்றி அவையேயாய்த் தோன்றி, அதன் பின்னர் தெளிந்த பின் இவ்விரண்டு மன்றி இவையாவும் அல்லவாகி ஒன்றிலும் தோய்வு இன்றி அருளுவான்.

அறியாமை நிலை என்பது உயிரின் கேவல நிலையைக் குறித்தது. அறிவு என்பது உயிரின் சகல நிலையைக் குறித்தது. சகல நிலையில் உயிருக்கு நிகழ்வது சுட்டறிவே யாகும். இறைவன் உயிரின் அறியாமைக் காலத்தும் ஏகதேச அறிவு எனப்படும். சுட்டறிவுக் காலத்தும் உயிருக்குப் புலப்படாத தன்மையை உடையவன். எனவே அறியாமை அறிவு அகற்றி என்றார். அறிவுக்கு அறிவாய் நிற்கும் இறைவனை நான் அறிகிறேன் என்ற உணர்வோடு அறிய முயலும் போது உயிருக்குத் தன் முனைப்பு எழும் ஆதலால் திருவருளோடு ஒற்றித்துக் கண்டால் அல்லது அவனைக் காண இயலாது. ஆதலால் "அறிவின் உள்ளே அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து" என்றார். அவ்வாறு தன் முனைப்பு இன்றி அறிந்த பிறகு மீண்டும் அந்தக் கரணங்களோடு கூடாமலும் அவற்றுக்கு ஆட்பட்டு வாடாமலும் சிவபெருமானின் திருவடிக்கு அன்பு செய்து நெஞ்சம் குழைந்து நிற்றல் வேண்டும் என்பதை உணர்த்த "அந்தக்கரணங்களோடும் கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயின்" என்றார். இந்நிலையிலே இறைவன் நிராதாரனாகத் தோன்றி அருளுவான் என்பது தெளிதலின் பயன்.

"பார் விரித்த நூல் எல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, ஓர் விருத்தப் பாதி போதும்" என்று குருஞான சம்பந்தரும் "பாதிவிருத்தத்தால் இந்தப் பார்விருத்தமாக உண்மை சாதித்தார் பொன்னடியைச் சாரும் நாள் எந் நாளோ" என்று தாயுமானவரும் போற்றிப் பாராட்டிய பாடல் இவ்விருத்தப்பாவின் முற்பகுதி என்பர் பெரியோர்.

புண்ணியம்மேல் நோக்குவிக்கும் பாவம்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே
நண்ணியஞா னத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணா னாகி
எண்ணும்இக லோகத்தே முத்திபெறும்; இவன்தான்
எங்குளழில்என் ஞாயிறு எமக்கு என்று குறைவு இன்றி
கண்ணுதல்தன் நிறைவு அதனில் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருது அரன்போல் நிற்பன், 283

ஓர் உயிர் செய்த புண்ணியத்தின் பயனாக அது மேல் உலகுக்குச் சென்று துறக்க இன்பத்தினை நுகர்ந்து மகிழும். ஓர் உயிர் பாவத்தின் பயனாகக் கீழ் உலகத்துக்குச் சென்று நிரயத் துன்பத்தில் அழுந்தும்

சிவபெருமான் திருவடிகளைத் தவறாது வழிபட்ட சிவ புண்ணியத்தினாலே உண்மையான சிவஞானம் உயிர்களுக்குக் கிட்டும். கிட்டவே சிவ புண்ணியம் என்னும் வாளினால் முதலில் கூறப்பட்ட புண்ணிய பாவங்களின் தளைகளை அறுத்து இவ்வுலகத்திலும் கீழ் உலகத்திலும் மேல் உலகத்திலும் அடைவதைத் தவிர்த்து இம்மையிலேயே சீவன் முத்தராகி விளங்குவர். இச்சீவன் முத்தர்கள் நெற்றிக் கண்ணை உடைய சிவபிரானின் முழு நிறைவிலே கலந்து "சூரியன் எங்கே உதித்தால் என்ன? எமக்கு ஒரு குறையும் இல்லை" என்று இறுமாந்து வாழ்வர்; உடலைத் துறக்கும் காலம் வரும் பொழுது இவர்கள் நீக்கமின்றி எங்கும் நிறைந்திருக்கும் இறைவனுடன் கலந்து நிற்பர்.

நூக்குதல் - கீழ் நோக்கிச் செலுத்துதல். காயம் - உடம்பு. திருவாசகத்தில் திருவெம்பாவையில் "எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்" (பாடல் 19) "என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்" (பாடல் 9) என்று மாணிக்க வாசகர் அருளி இருப்பதும் நினையத்தக்கது. இப் பாடல் நிட்டையும் அதன் பயனும் கூறிற்று.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமை இலை நாடுவது ஒன்று இல்லை;
சீலம்இலை தவம்இல்லை விரதமொடு ஆச் சிரமச்
செயல்இல்லை; தியானம்இலை; சித்தமலம்இல்லை;
கோலம்இலை; புலன்இல்லை; கரணம் இல்லை;
குணம் இல்லை; குறி இல்லை; குலமும் இல்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவி
பாடலினொடு ஆடல் இவை பயின்றிடினும் பயில்வர். 284

இவ்வுலகத்தில் ஞானத்தின் உயர்நிலை ஆகிய நிட்டையைக் கைகூடினோர்களுக்கு நன்மையும் இல்லை; தீமையும் இல்லை; அவர்கள் எதனையும் நாடுவதில்லை. அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சமய நெறிகள் இல்லை, தவ ஒழுக்கம் இல்லை. நோன்புகளோ, ஆசிரம நெறிகளோ, செயல்களோ இல்லை. அவர்கள் தியானத்தைக் கைக் கொள்ள வேண்டியது இல்லை. அவர்கள் சித்தத்தில் மாசு இல்லை. அவர்களுக்குப் புறச் சின்னங்கள் தேவையில்லை. ஐம்புலன்களாலும் அகக்கருவிகளாலும் அவர்களுக்கு நுகர்வு எதுவும் இல்லை. அவர்கள் முக்குணவயப்படுவதில்லை. அவர்கள் எய்த வேண்டிய குறிகள் ஏதும் இல்லை. அவர்கள் குல வேறுபாடுகள் பாராட்டுவதில்லை. குழந்தைகள் போலவும், பித்தர் போலவும். பேய் பிடித்தவர் போலவும் அவர்கள் பாடி ஆடி வருவதும்உண்டு.

தேசம் இடம் காலம் திக்கு ஆசனங்க இன்றி
செய்வதுஒன்று போல்செய்யாச் செயலதனைச் செய்து அங்கு
ஊசல்படும் மனம் இன்றி உலாவல் நிற்றல்
உறக்கம் உணர்வு உண்டிபட்டினி இருத்தல் கிடத்தல்

மாசு அதனின் தூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்தின் திருத்தத்தின் மைதுனத்தின் சினத்தின்
ஆசையினின் வெறுப்பின் இவை அல்லாதும் எல்லாம்
அடைந்தாலும் ஞானிகள்தாம் அரன் அடியை அகலார். 285

சிவஞானம் கைவரப் பெற்றவர்கள் நாடு, ஊர், காலம், திக்கு, இருக்கை இவற்றை எல்லாம் ஒரு பொருட்டாகக் கொள்ளார். செயற்கரிய செயல்களை மிக எளிதாகச் செய்வர். அவர்கள் மனம் ஒரு போதும் ஊசலாடாது. நிலைத்த சிந்தையராய் இருப்பர். உலாவுதலும் நிற்றலும், உறங்கலும், விழித்தலும், உண்ணுதலும் பட்டினி கிடத்தலும், இருத்தலும் கிடத்தலும் மாசும் தூய்மையும் வறுமையும் செல்வமும் துன்பமும் மகிழ்ச்சியும் கூடுதலும், பிரிதலும், விரும்பலும் வெறுத்தலும் இவற்றுள் எது நேர்ந்தாலும் அதனால் சிவஞானியர் தமது ஒருமை நிலையிலிருந்து பிறழ மாட்டார்கள். எது நேரிடினும் இவர்கள் சிவ பெருமான் திருவடியை விட்டு அகலார்.

இந்நிலைதான் இல்லையேல் எல்லாம் ஈசன்
இடத்தினிலும் ஈசன் எல்லா இடத்தினிலும் நின்ற
அந்நிலையை அறிந்து அந்தக் கரணங்கள் அடக்கி
அறிவது ஒரு குறி குருவின் அருளினால் அறிந்து
மன்னுசிவன் தனை அடைந்து நின்றவந்த னாலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாக
துன்னியசாக் கிரம் அதனில் துரியா தீதம்
தோன்றமுயல் சிவா நுபவம் சுவாநுபூ திகமாம், 286

இவ்வாறு இறை நிறைவில் அழுந்துவதாகிய நிட்டை கூடுதல் கைவரப் பெறாதவர் கடைப்பிடிக்க வேண்டிய நெறி ஒன்று உண்டு. அது யாதெனில் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன் என்றும், எல்லாப் பொருளிலும் அவன் உளன் என்றும், அவன் இல்லாது எப்பொருளும் இல்லை என்றும் அறிதல் வேண்டும். உட்கருவிகள் யாவற்றையும் அடக்கி, மெய்ப் பொருளாகிய சிவபெருமானை ஞானாசிரியரால் அருளப்பட்ட நெறியிலே சென்று சிவன் திருவருளைப் பொருந்திப் பசு கரணங்கள் யாவும் சிவ கரணமாக சகல சாக்கிர நிலையிலேயே நின்மல துரியாதீத நிலை கைகூடும்படி முயலுதல் வேண்டும். முயற்சியின் பயனாகச் சிவானுபவத்தைத் தமது அனுபவமாக நுகர்தல் கைகூடும்.

ஞான நிட்டை கை கூடப் பெறாதவர்க்கு அதனைப் பெறும் வழி இப் பாடலால் கூறப்பட்டது.

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள்; இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுஎன்? இம்மையிலே உயிரின்
பற்று அறுத்துப் பரத்தை அடை பராவுசிவர் அன்றோ?

ஆக்குமுடி கவித்துஅரசு ஆண்டு அவர்கள் அரிவையரோடு
அனுபவித்து அங்கு இருந்திடினும் அகப்பற்று அற்று இருப்பர்;
நோக்கி இதுபுரியாதோர் புறப்பற்று அற் றாலும்
நுழைவர் பிறப் பினில், வினைகள் நுங்கி டாவே, 287

முந்திய பாடலில் கூறப்பட்ட படி சகல சாக்கிரத்தில் நின்றே நின்மல துரியாதீதத்தைப் புரிந்தவர்கள் இவ்வுலகத்தில் யாவற்றையும் பற்றறத் துறந்த பெருந்தவத்தோர் ஆவர். இவர்கள் பெற்ற பெரும் பேற்றினை எவ்வாறு சொற்களால் கூற முடியும்? இம்மையிலேயே அகப் பற்றையும் புறப் பற்றையும் அறுத்துச் சிவபெருமானோடு கலந்து நிற்கின்ற இவர்கள் நம்மால் வணங்கத் தகுந்த சிவனே ஆவர் அன்றோ? இத்தகையோர் முடியுடை வேந்தராக அரசாண்டு மகளிரோடு கூடி இன்புற்று இருந்தாலும் தமது அகப்பற்றை முற்றிலும் அறுத்தவராவர். இந்நிலை கை கூடாதவர் புறப்பற்றை ஒழித்தாலும் அகப் பற்றை ஒழியாமையினால் அவர்கள் மீண்டும் பிறப்புட் படுவர். அவர்களின் வினைகளும் கெடா.

சர்வசங்க நிவிர்த்தி - யாவற்றிலும் பற்று அறுதல். தபோதனர் - துறவிகள். பராவு சிவர் - வணங்கத்தக்க சிவத் தன்மை உடையவர். நுங்கிடா - கெடா.

மூன்றாம் அதிகரணம்

கருவிகழிந் தால்காணார் ஒன்றும் எனில் காணார்
காணாதார் கன்னிகைதான் காமரதம் காணாள்
மருவி இரு வரும்புணர வந்த இன்பம்
வாயினால் பேசரிது மணந்தவர்தாம் உணர்வர்
உருவின் உயிர் வடிவதுவும் உணர்ந்திலர் காண் சிவனை
உணராதார் உணர்வினால் உணர்வதுகற் பனைகாண்
அருள்பெறின் அவ் இருவரையும் அறிவுஇறந்து அங்கு அறிவர்
அறியாரேல் பிறப்பும் விடாது ஆணவமும் அறாதே. 288

"கருவிகளை விட்டு நீங்கப் பெற்றவர்கள் எதனையும் காண முடியாதவர் ஆவார் அன்றோ? எனவே அந்தக்கரணங்களோடும் கூடாதே நின்றவர்களே இறைவனைக் காண்பார் என்பது பொருந்துமா?" என்று சிலர் வினவுவர். உலகியற் பொருளைக் காண்பதற்கு உட்கருவி புறக்கருவி ஆகியவற்றின் துணை வேண்டும் என்பது உண்மையே. ஆனால் ஞான நிட்டை கூடியவர்கள் இறைவனைக் கண்டவர்கள் ஆதலால் சிவ ஞானத்தால் யாவற்றையும் அறியும் அறிவு பெற்றவர்கள். எனவே திருவருளைப் பெற்றவர்கள் தம்மையும் தலைவனையும் கருவி அறிவைக் கடந்து அறிவார்கள். இது எத்தகையது எனில் திருமணமாகாத கன்னிப் பெண் ஒருத்தி இன்பச் சுவையை அறிய மாட்டாள். ஒருவனும்

ஒருத்தியுமாகக் கலந்து அனுபவிக்கும் இன்பம் இத்தகையது எனச் சொல்லினால் உணர்த்த இயலாது. அவ்வின்பத்தைத் துய்த்தவரே அதனை உணர்வர். அது போலவே இறைவனைக் கண்டவர்கள் பெறுகின்ற இன்பமும் இத்தகையது என்று உணர்த்த இயலாது. திருவருள் வழி நின்று உணராதவர்கள் தாம் உணர்வதாகக் கூறினால் அது கற்பனையே அன்றி வேறன்று. திருவடி ஞானம் பெற்றவர்க்கு அல்லாமல் பிறர்க்குப் பிறப்பும் நீங்காது; ஆணவமும் அறாது.

பல்நிறங்கள் அவை காட்டும் படிகம் போல் உள்ளம்
பல புலன்கள் நிறம்காட்டும் பரிசு பார்த்திட்டு
இந்நிறங்கள் என்நிறம் அன்று என்று தன்தன்
எழில்நிறம் கண்டு அருளினால் இந்நிறத்தின் வேறாய்
பொய்ந்நிற ஐம்புல நிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினொ டும் போதான் பின்னை –
முன்நிறைநீர் சிறை முறிய முடுகி ஓடி
முந்நீர்சேர்ந்து அந்நீராய்ப் பின்நீங்கா முறைபோல். 289

தன்னை அடுத்தபொருள்களின் பல்வேறுபட்ட நிறங்களைத் தன்னுடையது போலக் காட்டும் இயல்புடையது படிகம். இது போலவே உயிரும் தான் சார்ந்திருக்கும் கருவிகளின் இயல்பையே தன்னுடையது போலக் காட்டும். இது ஆன்மாவின் பொது இயல்பு ஆகும். முதலில் இப் பொது இயல்பைச் சிந்தித்து அறிந்து கொண்டு தனது சிறப்பு இயல்பு இவற்றின் வேறாய் உண்டு என்று அறிந்து கொண்டு, கருவிகளால் வந்த இயல்பு பொய் என்று கண்டு கழித்தவன் உண்மையை உணர்ந்தவன் ஆவான். அவனே சிவத்தினோடும் பொருந்திடுவான். சிவத்தைப் பொருந்திய பின் அதனை விட்டு நீங்கான். அணைகட்டித் தடுத்துத் தேக்கி வைக்கப்பட்ட வெள்ளம் அணை உடைந்த போது விரைந்து ஓடி கடல் நீரோடு சேர்ந்து பின் அதனை விட்டு நீங்காத தன்மை போன்றது இவன் தன்மை.

எங்கும்தான் என்னின் நாம் எய்த வேண்டா
எங்கும்இலன் என்னின் வேறு இறையும் அல்லன்
அங்கம்சேர் உயிர்போல்வன் என்னின் அங்கத்து
அவயவங்கள் கண்போலக் காணா – ஆன்மா –
இங்கு நாம் இயம்பும் தத்துவங்களின் வைத்து அறிவது
இறைஞானம் தந்து தாள் ஈதல் சுடர் இழந்த
துங்கவிழிச் சோதியும்உட் சோதியும் பெற்றாற்போல்
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. 290

இறைவன் உலகு உயிர் யாவற்றிலும் நிறைந்திருக்கிறான் என்றால் நாம் அவனைச் சென்று அடைய வேண்டியது இல்லை. இறைவன் உயிருக்கு வேறாய் நிற்பன் என்று கொண்டால் அவனுடைய இறைமைத் தன்மைக்கு இழுக்காகும். அவ்வாறு அன்று உடம்புக்கு உயிர்

போல இறைவன் உயிருக்கு உயிராய் நிற்பான். உயிர் உடம்பு முழுவதும் நிறைந்திருந்தாலும் கண்ணைக் கொண்டே உயிரால் காண முடியும். அவ்வாறே சிவம் உயிரோடும் நிறைந்து கலந்திருந்தாலும் நிட்டையாகிய கண் ஒளியும் சிவனருளாகிய பேரொளியும் கலந்த போதே உயிர் தனது இயல்பையும் இறைவனது இயல்பையும் உள்ளவாறு அறிய முடியும். நிட்டை கூடிய போதே விழியிலான் ஒருவன் கண் பெற்றது போல இறைவனைக் காணும் தன்மை உயிருக்கு வாய்க்கும்.

பாசி படு குட்டத்தில் கல்லினை விட்டு எறியப்
படும் பொழுது நீங்கி அது விடும் பொழுதில் பரக்கும்
ஆசுபடும் மலம்மாயை அருங்கன்மம் அனைத்தும்
அரன்அடியை உணரும்போது அகலும் பின் அணுகும்
நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே ஆகி
ஆசையொடும் அங்கும்இங்கும் ஆகிஅல மருவோர்
அரும்பாசம் அறுக்கும்வகை அருளின்வழி உரைப்பாம், 291

ஒரு நீர் நிலையில் உள்ள தண்ணீரை நீர்ப்பாசி முற்றிலும் மறைத்துக் கொண்டிருக்கிறது. அதிலே ஓர் கல்லினை விட்டெறிந்தால் அக்கல் குளத்தில் படும்போது நீரை மறைத்துள்ள பாசி சற்றே விலகும். பின்னர் சற்று நேரத்தில் அப்பாசி மீண்டும் பரந்து நீர் முழுவதும் மூடிக் கொள்ளும். குற்றம் பொருந்திய மலமும் மாயையும் வினையும் உயிர் சிவத்தை உணரும் போது நீங்கி, உணராத நேரம் வருமாயின் மீண்டும் குளத்துப் பாசி போல் பற்றிக் கொள்ளும். இடையறாத அன்போடு சிவ பெருமான் திருவடியில் பொருந்தி நிற்கின்றநிட்டை கைவரப் பெற்றவர் அந்நிலையிலேயே பிறழாது நிற்பர். அவ்வாறு நில்லாது உலகியல் ஆசைகளினால் கருவிகளிடத்திலும் சிவன் திருவடியிலுமாக அலமருவோர் தமது மலத் துன்பத்தைப் போக்கும் உபாயத்தை இதன் பின்னர் உரைப்போம்.

ஒன்பதாவது நூற்பா

பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத
நீழல்கீழ் நில்லாதே நீங்கிப் போதின்
ஆசைதரும் உலகம்எலாம் அலகைத்தே ராம்என்று
அறிந்து அகல அந்நிலையே ஆகும் பின்னும்
ஓசைதரும் அஞ்சு எழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்து அளிப்பன் ஊனமெலாம் ஓட. 292

சிவபெருமான் பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறிய இயலாத தன்மையினை உடையவன். அப்பெருமானை அவனுடைய

திருவருள் வழியில் நின்று பதிஞானத்தால் தன் உள்ளத்தின் உள்ளே அன்பினோடும் தேடி வழிபடுதல் வேண்டும். அவ்வாறு இல்லாத போது இவ்வுலகியல் உணர்வு மேல் எழுதல் கூடும். உலகியல் உணர்வை வெறும் கானல் நீர், நொடிப் பொழுதில் மறையும் தன்மை உடையது என்று உணர்ந்து அதனை விட்டு நீங்கி இறைவன் திருவடியை விட்டு விலகாத ஆற்றலைத் தரவல்ல திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரித்தல் வேண்டும். அந்நிலையில் திருவடி ஞானம் விளங்கி உயிரின் குற்றம் எல்லாம் நீங்குமாறு இறைவன் திருவருள் பாலிப்பான்.

முதல் அதிகரணம்

வேதம் சாத்திரம் மிருதி புராணம் கலைஞானம்
விரும்பு அசபை வைகரி ஆ தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வான எல்லாம் பாசஞானம்
நணுகிஆன்மா இவை கீழ் நாட லாலே
காதலினால் நான்பிரமம் என்னும் ஞானம்
கருதுபசு ஞானம் இவன் உடலில் கட்டுண்டு
ஓதிஉணர்ந்து ஒன்றுஒன்றாய் உணர்ந்திடலால் பசு ஆம்
ஒன்றாகச் சிவன் இயல்பின் உணர்ந்திடுவன் காணே. 293

மறைகள், சாத்திர நூல்கள், மிருதி நூல்கள், புராண வரலாறுகள், உயர்ந்த கலை ஞானங்கள், விரும்பத் தக்க அசபை என்ற மந்திரம் வைகரி முதலிய நால் வகை வாக்குகள், மண் முதல் நாதம் முடிவாக உள்ள தத்துவங்கள் ஆகிய இவற்றினால் உயிர் பெறும் அறிவு பாச ஞானம் எனப் படும். ஏனெனில் இவற்றால் விளைந்த அறிவு உலகியல் பற்றைத் தோற்று வித்து அதனால் உயிரை மீண்டும் பிறப்புக்கு உட்படுத்தும். உயிர் தன் முனைப்போடு "நானே பிரமம்" என்று கூறிக் கொள்ளும் அறிவு பசு ஞானம் எனப்படும். ஏனெனில் ஆன்மா ஆகிய இவன் உடல்களில் கட்டுண்டு நிற்பவன். தானாக அறியாமல் உணர்த்த உணரும் அறிவினை உடையவன். தானே அறியாமல் பொறிகளின் துணையால் ஒன்றொன்றாய் உணர்ந்து வரும் இயல்பினை உடையவன். எனவே இவனைப் பசு என்றும் இவனது அறிவைப் பசு ஞானம் என்றும் பெரியோர் கூறுவர். இறைவனோ தன் வயமுடைய முற்றறிவினன். என்வே தான் இறைவன் பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் காண்டற்கு அரியவன் என்பர் மேலோர்.

கரணங்கள் கெட இருக்கை முத்தி ஆம் என்னின்
கதி ஆகும் சினை முட்டை கரு மரத்தின் உயிர்கள்
மரணம்கொண் டிட உறங்க மயங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பனைபண்ண வல்விடத்தை அடையச்

'சரணங்கள் புகும்நிழல்போல் தனை அடையும் சமாதி
தவிராது மலம் இதுவும் பசுஞானம் ஆகும்
அரணங்கள் எரித்தவன்தன் அடியை அறிவு இறந்து அங்கு
அறிந்திடீர் ! செறிந்ததுகள் அகற்றிடீரே. 294

உயிர்கரணங்களோடு பொருந்தாது அவற்றைக் கெடுத்திருத்தலே வீடுபேறு என்று சிலர் கூறுவர். இது பொருந்துவதன்று. ஏனெனில் சினையிலும் முட்டையிலும், கருவிலும், மரத்திலும் உயிர் உண்டு. உயிர் இருந்தும் அந்நிலையில் அவற்றுக்குக் கருவியும் கரணமும் இல்லை. எனவே அந் நிலையை வீடுபேறு என்று கூறுதல் அடாது. மேலும் இறப்பு நிலையிலும், உறக்க நிலையிலும், மயங்கி மூர்ச்சித்த நிலையிலும், உயிர்க் காற்றை அடக்கிய நிலையிலும், கொடிய நஞ்சு தலைக்கு ஏறிய நிலையிலும், கரணங்கள் செயல்படுவதில்லை ஆயினும் அவை எல்லாம் வீடுபேற்று நிலையாகா. வேறும் சிலர் யோக நிலையில் நின்று ஆன்மா தன்னுள் ஒடுங்கி நிற்பதே வீடுபேறு என்பர். காலைப் பொழுதிலும், மாலைப் பொழுதிலும் ஒருவனுடைய நிழல் அவனை விட்டு வெகு தொலைவுக்கு நீண்டு கிடக்கும். உச்சிப் பொழுதிலே அவனது நிழல் அவன் காலடியிலேயே அடங்கி நிற்கும். யோகநிலையில் உயிர் இவ்வாறே தன்னில் அடங்கி நிற்கும். அதுவே வீடுபேறு என்பது இவர்கள் கொள்கை. இக்கொள்கையும் பொருந்துவதன்று.ஏனெனில் சமாதி நிலையிலும் உயிரை விட்டு மலம் நீங்குவதில்லை. எனவே இதுவும் பசுஞானமேயாகும். முப்புரங்களை எரித்தவனாகிய சிவபெருமானுடைய திருவடியைப் பற்றி அறிவு கடந்து அவனை அறியும் போதே மலமாசு அகலும்.

சிவனை அவன் திருவடிஞா னத்தால் சேரச்
செய்புவது செயல் வாக்கு சிந்தை எல்லாம்
அவனை அணு காஎன்றும் ஆதலானும்
அவன்அடி அவ் ஒளிஞானம் ஆத லானும்
இவனும் யான் துவக்கு உதிரம் இறைச்சி மேதை
என்பு மச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ
அவம்அகல எனை அறியேன் எனும்ஐயம் அகல
அடி காட்டி ஆன்மாவைக் காட்டலானும். 295

மனம், வாக்கு, மெய் ஆகியவற்றால் உயிர் சிவபெருமானை ஒருபோதும் அணுக இயலாது ஆதலாலும், சிவபெருமானின் திருவடி ஒளிமயமான ஞானத்தைத் தரும் ஆதலாலும், ஆன்மாவாகிய இவனோ "நான் தோல் குருதி, தசை, நரம்பு, எலும்பு, எலும்பின் உள்ளே உள்ள செங்குருத்து, வெண்ணீர் இவற்றால் ஆகியவனோ? அல்லது ஐம்பொறிகளின் கூட்டத்தால் ஆகியவனோ? என்று தன்னை உள்ளபடி அறியாது உறுகின்ற ஐயத்தைத் திருவடி ஞானமே விலக்கும்

ஆதலாலும் சிவபெருமானை அவனுடைய திருவடி ஞானத்தின் துணை கொண்டே அறிதல் வேண்டும் என்று பெரியோர் கூறுவர்.

பதிஞானம் என்னும் திருவடி ஞானமே உயிருக்குத் தன்னையும் உணர்த்தித் தலைவனையும் உணர்த்தும் ஆதலால் இப்பாடலில் பதியை அறியும் முறையினைக் கூறினார்.

கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென்று இவைஇரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ

(திருவாசகம் - திருக்கோத்தும்பி - 9) என்பது காண்க.

கண்டிடும் கண் தனைக்காண கரணம் காணா
கரணங்கள் தமைக்காணா உயிரும் காணா
உண்டிஅமர் உயிர் தானும் தன்னைக் காணாது
உயிர்க்குயிராம் ஒருவனையும் காணா தாகும்
கண்டசிவன் தனைக்காட்டி உயிரும் காட்டி
கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன்
கொண்டு அரனை உளத்தில் கண்டு அடிகூடின் பாசம்
கூடாது கூடிடினும் குறித்து அடியின் நிறுத்தே; 296

புறப்பொருள்களை எல்லாம் காண்கின்ற கண்கள் தம்மைக் காண மாட்டா. தம்மைச் செலுத்துகின்ற உட்கரணங்களையும் அவை காண மாட்டா. அது போலவே மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய உட்கருவிகளும், வித்தியா தத்துவம் முதலிய உள் அந்தக்கரணங்களும் தம்மையும் காண மாட்டா; தம்மைச் செலுத்துகின்ற உயிரினையும் காணமாட்டா. அவற்றைப் போலவே வெளியுலகை அறிந்து வருகின்ற உயிரும் தன்னையும் காணாது; தனக்கு உயிர்க்கு உயிராய் விளங்கி உணர்த்தி வருகின்ற இறைவனையும் காணாது. இவை யாவற்றையும் அறிந்தாங்கு அறிந்து நிற்கின்ற இறைவன் தன்னியல்பையும் விளக்கி, உயிரின் இயல்பையும் விளக்கிக் காட்டுகின்ற ஞானமேயாக, கரணங்களால் அறியப்படாதவனாக நிற்பான். ஆதலால் அச் சிவஞானத்தையே துணையாகக் கொண்டு இறைவனைத் தன் அறிவின் உள்ளே கண்டு அவனது திருவடியைப் பற்றி நின்றால் பாசங்கள் அகலும். எப்போதேனும் பாசம் மீளவருமானாலும் சிவபாவனையை விடாது செய்து அவன் திருவடிக்கீழ் நிற்றல் வேண்டும்

'கண்ணாகி' என்ற சொல் உயிருக்கு அறிவினைக் காட்டுவதாகிய இறைத் தன்மையைக் குறித்தது. சிவஞான போதம் ஐந்தாம் நூற்பா இரண்டாம் அதிகரணத்தில் முதல் எடுத்துக்காட்டு வெண்பாவில் "சொன்ன சிவன் கண்ணா" என்று முதல் நூலாசிரியர் இச்சொல்லை இப் பொருளில் ஆண்டிருப்பதை ஒப்பு நோக்குக.

இரண்டாம் அதிகரணம்

குறித்து அடியில் நின்று, அட்ட குணம்எட்டுச் சித்தி,
கோகநதன் முதல்வாழ்வு குலவுபதம் எல்லாம்
வெறுத்து, நெறி அறுவகையாவும் மேலோடு கீழ் அடங்க
வெறும்பொய் என நினைந்து இருக்க; மேலோடு கீழ் இல்லான்
நிறுந்துவது ஓர்குணம் இல்லான், தன்னை ஒரு வர்க்கும்
நினைப்பரியான், ஒன்றும் இலான், நேர்படவந்து உள்ளே,
பொறுப்பு அரிய பேரன்பை அருளி அதன்வழியே
புகுந்திடுவன் எங்கும் இலாப் போகத்தைப் புரிந்தே. 297

இறைவன் திருவடியிலேஉறைப்போடு நின்றால் புறச்சமயத்தார் கூறும் எட்டுவகைக் குணம், அட்டமாசித்திகள், நான்முகன் முதலிய வானவர் பதங்கள் எல்லாம் ஒரு பொருட்டன்று என்ற வெறுப்புத் தோன்றும். எனவே அவற்றை எல்லாம் ஒதுக்கி சிவபெருமான் திருவடியில் பொருந்தி நிற்றல் வேண்டும். அடிமுடி என்னும் வரையறைக்கு உட்படாதவனாகவும், இத்தகையவன் என்று ஒருவராலும் நினைப்பதற்கு அரியவனாகவும், குலம் குறி ஏதும் இல்லாதவனாகவும், விளங்குகின்ற சிவபெருமான் அறிவுக்கு அறிவாய் நேர்பட வந்து பேரன்பினை அருளி அதன் வாயிலாக எங்கும் காணுதற்கு அரிய இன்பத்தினை வழங்கி ஆட்கொள்வான்.

கோகநதம் - தாமரை. கோகநதன் - தாமரையை இருப்பிடமாகக் கொண்ட அயன்.

மூன்றாம் அதிகரணம்

கண்டஇவை அல்லேன் நான் என்று, அகன்று, காணாக்
கழிபரமும் நான் அல்லேன் எனக்கருதி, கசிந்த
தொண்டினொடும் உளத்து அவன்தான் நின்றகலப் பாலே,
சோகமெனப் பாவிக்க, தோன்றுவன்வேறு இன்றி,
விண்டுஅகலும் மலங்கள் எல்லாம், கருடதியா னத்தால்
விடம்ஒழியு மதுபோல விமலதையும் அடையும்,
பண்டைமறை களும் அதுநான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவதுஇப் பாவகத்தைக் காணே. 298

சுட்டறிவுக்குப் புலப்படுகின்ற இவ்வுலகப் பொருள்கள் அனைத்தும் நான் அல்லேன் என்று அவற்றை விட்டு அகலுதல் வேண்டும். என் னறிவுக்கு எட்டாத பிரமப்பொருளும் நான் அல்லேன் என்பதைக் கருதி உணர்தல் வேண்டும். அவ்வாறு கருதி உணர்வதனால் உயிராகிய நான் பாசப்பொருளும் அல்லேன். பதிப்பொருளும் அல்லேன் என்று புலனாகும். அன்போடு உளம் கசிந்து தொண்டு செய்யும் அடியவர் உளத்தில் இறைவன் அத்துவிதக் கலப்போடு எழுந்தருளுவான். அந் நிலையில் 'அவன் நான்' என்று பாவிக்க இறைவன் வேறின்றித்

தோன்றுவன். அதனால் உயிரின் மலங்கள் எல்லாம் உயிரை விட்டு அகலும், உயிர் தூய நிலையையும் அடையும். கருட தியானத்தால் பாம்பின் விடம் நீங்குவது போல சிவோகம் பாவனையால் உயிரைப் பற்றி நின்ற மலங்கள் ஒழிந்து உயிர் தூய்மை நிலையைப் பெறும். பண்டை மறை நூல்களும் "அது நான் ஆனேன்" என்று பாவிக்குமாறு வலியுறுத்தின. அதுவே இப் பாவகமாகும்.

சோகம் - ச + அகம். அதுநான் என்று பொருள்படும். சிவ + அகம் = சிவோகம். சிவனே நான் என்று பொருள்படும். வேதாந்தம் பிரமப் பொருளை அது என்ற சொல்லால் குறிக்கும். எனவே சோகம் என்பது வேதாந்தக் கருத்தும், சிவோகம் என்பது சித்தாந்தக் கருத்துமாகும். விமலதை - மலத்தில் நின்றும் நீங்கிய தூயநிலை. பண்டை மறைகள் - தொன்மையான மறைமுடிவைக் கூறும் உபநிடதங்கள்.

அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரன் உருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்கசுர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தாளல் இதயத்து அர்ச்சித்து
அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை ஓம்பி
அணைவு அரிய கோதண்டம் அணைந்து அருளின் வழிநின்று
அஞ்செழுத்தை விதிப்படிஉச் சரிக்க,மதி அருக்கன்
அணைஅரவம் போல் தோன்றும், ஆன்மாவில் அரனே. 299

திருவைந்தெழுத்தின் துணை கொண்டு ஆன்மா சிவபெருமானுக்கு உடைமை என்பதையும் சிவபிரான் உடையானாக விளங்குபவன் என்பதை யும் அறிதல் வேண்டும். சிவபெருமானுடைய திருஉருவமும் திருவைந் தெழுத்தால் அமைந்தது என்பதனையும் அறிந்திடல் வேண்டும். திருவைந் தெழுத்தை ஓதி உறுப்புக்களைத் தொட்டும், கைகளைத் தொட்டும் தூய் மை செய்து கொள்ளுதல் வேண்டும். இதயத்தைப் பூசைக்கு உரிய இடமாக வும், உந்தியை ஓமத்திற்கு உரிய இடமாகவும் புருவநடுவை தியானத்திற்கு உரிய இடமாகவும் கற்பித்துக் கொண்டு இதயத்தில் சிவபரம் பொருளை எழுந்தருளுவித்து வழிபடுதல் வேண்டும். திருவைந்தெழுத்தால் உந்தியில் உள்ள அருட்சத்தியை எழுப்பி, சேர்வதற்கு அரிய புருவநடுவில் அதனைச் சேர்த்து, திருவருளின் வழி நின்று திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரித்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் வழிபாட்டால் கிரகண காலத்தில் ராகு, கேது ஆகிய இரண்டும் திங்களிடத்தும், கதிரவனிடத்தும் காணப்படுவதைப் போல ஆன்மாவினிடத்தில் சிவபெருமான் விளங்கித் தோன்றுவான்.

முந்திய பாடலில் பாவனையைக் கூறிய ஆசிரியர் இந்தப் பாடலில் வழிபாட்டுக்குரிய மந்திரமும் அதற்கு உரிய கிரியையும் கூறினார். திருவைந்தெழுத்தே சிவபெருமானுடைய திருமேனியாக அமையும் என்பது உண்மை விளக்கம் நூலில் விரித்து உரைக்கப்பட்டுள்ளது.

அங்கநியாசம், கரநியாசம் என்பன வழிபாட்டிற்கு முன் உறுப்புகளையும் கைகளையும் தொட்டு மந்திரங்களால் தூய்மை செய்து கொள்ளுவதை உணர்த்தின. இங்கே அதற்குரிய மந்திரமாகத் திருவைந் தெழுத்தைக் கூறினார்.

ஒன்பது கோள்களுள் மற்றைய ஏழும் போல இராகுவும் கேதுவும் கண்களுக்குப் புலனாகா. அவை கிரகண காலத்தில் மட்டும் திங்களிலும் கதிரவனிலும் காணப்படும். அது போலப் பாசப் பொருளும், பசுப் பொருளும் உயிர்களுக்கு எல்லாக் காலத்தும் புலப்படும். பதிப் பொருள் புலப்படாது. இங்குக் கூறப்பட்ட பாவனை, மந்திரம், கிரியை ஆகியன நிகழ்ந்த போதே பதிப்பொருள் ஆன்மாவின் அறிவில் விளங்கித் தோன்றும் என்றார்.

குண்டலி - அருட்சத்தி. கோதண்டம் - வில் போன்று விளங்கும் புருவநடு. அருக்கன் - ஞாயிறு. அரவம் - இராகு கேது.

நாட்டும்இத யந்தானும் – நாபியினில் அடியாய்
ஞாலம் முதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்
மூட்டுமோ கினிசுத்த வித்தைமலர் எட்டாய்
முழுஇதழ்எட்டு அக்கரங்கள் முறைமையினில் உடைத்தாய்; –
காட்டு கமலாசனமேல்; ஈசர், சதா சிவமும்
கலாமூர்த் தமாம்; இவற்றின் கண்ணாகும் சத்தி;
வீட்டை அருள் சிவன் மூர்த்தி மானாகி சத்தி
மேலாகி நிற்பன்; இந்த விளைவு அறிந்து போற்றே. 300

உந்தியில் நிலமாகிய தத்துவம் கிழங்காகவும் அதனை அடுத்து இருபத்து மூன்று தத்துவங்களும் எட்டுவிரல் அளவுள்ள நாளமாகவும் தூவா மாயையின் காரியமாகிய வித்தியா தத்துவங்கள் ஏழும் சுத்தவித்தை ஆகிய தத்துவத்துடன் கூடி எட்டு இதழ் வடிவமாகவும், அவ்விதழ்கள் எட்டும் பிரணவம் முதலிய எட்டு எழுத்துக்களை உடையதாகவும், ஈசுவரம், சதாசிவம் என்ற இரண்டுதத்துவங்களும் அறுபத்து நான்கு கேசர வடிவாகவும், சத்தி தத்துவம் அக்கேசரங்களுக்கு நடுவிலே உள்ள பொகுட்டு வடிவமாகவும், அதனில் காணப்படும் ஐம்பத்தொரு வித்து வடிவமாகவும் விளங்குகிற இதயகமலம் இறைவன் எழுந்தருளும் ஆசனமாகும். இவ்வாறு பாவித்து வீடுபேற்றை அருள வல்லவனாகிய சிவபெருமான் அச்சத்தியினும் மேலான மூர்த்திமானாக விளங்குவதாகக் கொண்டு உள்ளத்தின் உள்ளே கண்டு வழிபாடு செய்தல் வேண்டும்.

நாளம் - தண்டு. இதயத்தாமரை இங்கு உருவகிக்கப்பட்டது. இது அகவழிபாடு இயற்றுகின்ற முறைமையை உணர்த்திற்று. இதனை அந்தர் யாகபூசை என்பர். சிவஞான போதத்தில் ஒன்பதாம் நூற்பாவில் 'மண் முதல் நாளம்' என்று தொடங்குகின்ற எடுத்துக்காட்டு வெண்பாவை இங்கு நினைவு கூர்க.

அந்தரியா கம்தன்னை முத்திசா தனமாய்
அறைந்திடுவர் அதுதானும் ஆன்மசுத்தி ஆகும்
கந்த மலர் புகை ஒளி மஞ் சனம் அமுது முதலாக்
கண்டனஎ லாம்மனத்தால் கருதிக் கொண்டு
சிந்தைதனில் அர்ச்சிக்க சிவனைஞா னத்தால்
சிந்திக்கச் சிந்திக்க தர்ப்பணத்தை விளக்க
வந்திடும்அவ் ஒளிபோல மருவி அரன் உளத்தே
வரவரவந் திடுவன்;பின் மலமானது அறுமே. 301

அகப் பூசையாகிய அந்தர் யாகம் என்னும் இவ்வழிபாடு வீடு பேற்றுக்கு உரிய நெறி என்று மேலோர் கூறுவர். இவ்வழிபாடு உயிருக்குத் தூய்மையை விளைவிக்கும். நறுமணப் பொருள்கள் மலர் நறும்புகை திருவிளக்கு திருமஞ் சனம் திருவமுது முதலாக வழிபாட்டுக்கு உரிய எல்லாப் பொருள்களையும் மனத்தினால் கருதி அமைத்துக் கொண்டு சிவபெருமானைச் சிந்தனையில் எழுந்தருளுவித்து வழிபடுந்தோறும் கண்ணாடியைத் துடைத்தபோது மாசு அகன்று அது ஒளிவிடுவதைப் போல சிவபெருமான் உள்ளத்தே எழுந்தருளு வான். அதன்பின் உயிரின் மலமாசு நீங்கும்.

கந்தம் - நறுமணம், மஞ்சனம் - திருமுழுக்குக்கு வேண்டிய நீர் முதலியன. தர்ப்பணம் - முகம் பார்க்கும் கண்ணாடி.

புறம்பேயும் அரன்கழல்கள் பூசிக்க வேண்டில்
பூமரத்தின் கீழ்உதிர்ந்த போதுகளும் கொண்டு
சிறந்து ஆருஞ் சீர்ச்சிவனை ஞானத்தால் அங்குச்
சிந்திக்கும் படிஇங்குச் சிந்தித்து போற்றி
அறம்பாவங் கட்குநாம் என் கடவோம் என்றும்
ஆண்டவனைக் கண்டக்கால் அகம்புறம் என் னாதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை அன்றோ
சீர்அடியார் தம்முடைய செய்தி தானே? 302

அகத்தில் கண்டவாறே புறத்திலும் ஒரு குறியில் கண்டு சிவன் திரு வடியை வழிபடுதல் வேண்டும். அதற்குரிய துணைப் பொருட்கள் வேண்டு மாயின் அவற்றைப் பெறமுயன்று வருந்துதலும் பிறரை வருத்துதலும் ஆகாது எனக்கண்டு மரத்தின்கீழ் உதிர்ந்த பூக்களும் நீரும் பிறவும் கொண்டு அகத்தே வழிபட்ட தன்மையில் வழிபடுதல் வேண்டும். சிறந்து விளங்குகின்ற புகழினை உடைய சிவபெருமானை ஞானத்தால் அகத்தில் வழிபட்ட வண்ணமே சிந்தித்துப் புறத்திலும் போற்றி வழிபடுதல் வேண்டும். நம்மால் விளைகின்ற புண்ணிய பாவங்களுக்கு நாம் என் செய்வோம் என்று இரங்கி அகம், புறம் என்னும் வேறுபாடுகளைப் பாராட்டாமல் நெறி பிறழாமல் சிவப்பணி செய்து நிற்றலே சிறப்புடைய அடியாரின் செயலாகும் "இதனா னே புறப்பூசையும் ஆண்டைக்கு அங்கமாதல் கூறப்பட்டது" என்பது சிவஞான முனிவர் உரை.

இந்தனத்தின் எரி பாலின் நெய் பழத்தின் இரதம்
எள்ளின் கண் எண்ணெயும்போல் எங்கும்உளன் இறைவன்
வந்தனை செய்து எவ்விடத்தும் வழிபடவே அருளும்
மலம்அறுப்போர் ஆன்மாவில் மலர் அடிஞா னத்தால்
சிந்தனை செய்து அர்ச்சிக்க சிவன் உளத்தே தோன்றி
தீ இரும்பை செய்வதுபோல் சீவன் தன்னைப்
பந்தனையை அறுத்துத் தா னாக்கித்தன் உருவப்
பரப்பெல்லாம் கொடுபோந்து பதிப்பன் இவன் பாலே, 303

விறகில் தீயினைப் போலவும், பாலில் நெய் போலவும், பழத்தில் சுவை போலவும், எள்ளினுள் எண்ணெயைப் போலவும் இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். எனவே இறைவனை அகத்திலாயினும், புறத்திலாயினும் வணங்கி வழிபட்டால் அவர்களுக்கு அருள் பாலிப்பான். ஆயினும் தங்களைப் பற்றியுள்ள மலம் முற்றிலும் நீங்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் சிவபெருமானை அவனுடைய செந்தாமரை மலர்போலும் திருவடி ஞானத்தினால் தங்கள் உள்ளத்தின் உள்ளே எழுந்தருளுவித்து அகவழிபாடு இயற்றுவார்கள் அத்தகைய அடியார்கட்கு இறைவன் விளங்கித் தோன்றி அவர்களது மலப்பற்றினை அறவே துடைத்து அருளுவான். நெருப்பில் இட்ட இரும்பு நெருப்பின் தன்மையை எல்லாம் பெறுவது போல இறைவனும் உயிரைத் தன் வண்ணம் ஆக்குவான். தனது பேரானந்தப் பெருஞ் செல்வம் முழுவதையும் உயிருக்கு அருளுவான்.

இப்பாடலால் அகவழிபாட்டின் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டது. இறைவனுடைய எண்குணங்களும் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைய உயிருக்குரிய குணம் ஆகும்படி அத்துவித இயல்பால் உயிரினிடத்து விளங்கித் தோன்றுதல் இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது. "அதுவே சிவாநந்தம் மேலிடுதல்" என்று சிவஞான முனிவர் எடுத்துரைத்தார்.

பத்தாம் நூற்பா

இவன் உலகில் இதம் அகிதம் செய்த எல்லாம்
இதம் அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும் –
அவன் இவனாய் நின்றமுறை ஏகனாகி
அரன்பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்
சிவனும் இவன் செய்தி எல்லாம் என்செய்தி என்றும்
செய்ததுஎனக்கு இவனுக்குச் செய்தது என்றும்
பவம்அகல உடனாகி நின்று கொள்வன் பரிவால்
பாதகத்தைச் செய்திடினும் பணி ஆக்கி விடுமே. 304

சிவபெருமான் தன்னை வழிபடும் அடியார்களுடன் பிரிப்பின்றி உடன் நிற்பான் என்றது முந்திய பாடலில் கூறப்பட்டது. அத்தகைய

அடியார்கட்கு உலகில் நலம் தீங்குகள் செய்தவர்க்கே அச்செயல்களின் பயன் சென்று இசையும். அல்லாமல், அடியார்களுக்கு வினைப்பயன் எய்தாது. தன் முனைப்பற்றுத் திருவருளில் ஒடுங்கித் தலைவன் செயலே தம் செயலாக அரன் பணியில் நிற்கும் இவ்வடியார்களுக்கு உயிரின் குற்றமாகிய மலமும் நீங்கும். சிவபெருமானும் அடியார்களின் செயல்கள் எல்லாம் தன் செயலாகவும், அடியார்களுக்குச் செய்த எல்லாம் தனக்குச் செய்தன எனவும் உடனாக நின்று ஏற்றுக் கொள்வான். அவ்வாறு கொள்ளவே அடியார்களின் பிறப்பு அகலும். அத்தகைய அடியவர்கள் சிவபிரான் மீது கொண்ட அன்பின் மிகுதியால் எப்போதேனும் தீங்கு செய்திடினும் இறைவன் அதனையும் தனது பணியாக ஏற்று அருளுவான்.

இப்பாடலில் இவன் என்ற சொல் அடியார்களைக் குறித்தது. அவன் என்ற சொல் சிவபெருமானைக் குறித்தது.

முதல் அதிகரணம்

யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும்
இக்கோணை ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்து
தான்செவ்வே நின்றிட அத் தத்துவன் தான் நேர
தனை அளித்து முன்நிற்கும் வினை ஒளித்திட்டு ஓடும்.
நான் செய்தேன் எனும் அவர்க்குத் தான் அங்கு இன்றி
நண்ணுவிக்கும் போகத்தை பண்ணுவிக்கும் கன்மம்;
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பின் அல்லால்
ஒருவருக்கும் யான் எனது இங்கு ஒழியாது அன்றே. 305

நான் பிறர்க்கு இன்ன நன்மை, தீமை செய்தேன், பிறர் எனக்கு இன்ன நன்மை, தீமை செய்தார் என்று கருதுவது யான் எனது என்னும் செருக்கினால் விளையும் மனக்கோட்டம் ஆகும். இத்தகைய மனக்கோட்டத்தை ஞானம் என்னும் நெருப்பால் காய்ச்சி அதனை நிமிர்த்துதல் வேண்டும். அவ்வாறு நிமிர்த்தி இறைவனின் திருவருள் வழியிலே தன்முனைப்பு இன்றி நிற்கவே இறைவன் நேராக வெளிப்பட்டுத் தோன்றி அருள்பாலிப்பான். அவனுடைய முன்னிலையில் நில்லாது ஞானமுடையாரின் வினைகள் ஒளித்து ஓடும். இவ்வாறன்றி இதனை நான் செய்தேன் என்று தன் முனைப்போடு செயல்படுவோர்க்கு இறைவன் விளங்கித் தோன்றுதல் இலன். மேலும் அவர்கள் செய்யும் வினைக்கு ஏற்ற பயனையும் இறைவன் ஊட்டுவான். எனவே அவர்களுக்கு வேறு வினையும் தோன்றும். மாயையினால் ஆகிய கருவிகளைப் பொருந்தி அறியும் சிற்றறிவினின்றும் விடுபட்டு ஏகனாகி இறைபணி நிற்கும் ஞானம் உதித்தால் அன்றி, ஒருவருக்கும் யான் எனது என்னும் செருக்கு ஒழிவதில்லை.

கோண் - கோட்டம். இரும்புக் கம்பி முதலியன வளைந்து போகுமானால் அதனைத் தீயிலிட்டுக் காய்ச்சி அடித்து நிமிர்த்துவர். யான் எனது என்னும் செருக்கு மலத்தினால் விளைந்த கோட்டம். அதனை ஞானத் தீயிலிட்டுக் காய்ச்சி நிமிர்த்தினால் அன்றி நிமிராது என்று உருவகம் செய்தார்.

இரண்டாம் அதிகரணம்

இந்திரியம் எனைப்பற்றி நின்றே என்வசத்தின்
இசையாதே தன்வசத்தே எனைஈர்ப்பது இவற்றைத்
தந்தவன்றன் ஆணைவழி நின்றிடலால் என்றும்
தான் அறிந்திட்டு இவற்றினொடும் தனைஉடையான் தாள்கள்
வந்தனைசெய்து இவற்றின்வலி அருளினால் வாட்டி
வாட்டம் இன்றி இருந்திடவும் வரும்செயல்கள் உண்டேல்
முந்தனுடைச் செயல்என்று முடித்து ஒழுக வினைகள்
மூளா! அங்கு ஆளாகி மீளான் அன்றே. 306

"ஐம்பொறிகள் ஆன்மாவாகிய என்னிலிருந்து வேறுபட்டவை. வினையின் பயனாக அவை என்னைப் பற்றி நின்றன. அவை என் வயத்தில் நிற்க இசையாமல் என்னைத் தம் வயத்தே ஈர்த்தன. இவ்வாறு நிகழ்வதும் அவற்றை எனக்களித்த இறைவனின் ஆணை வழியே ஆகும்" என்று அறிந்து சிவஞானிகள் ஐம்பொறிகளுக்கும் தமக்கும் உடையானாக விளங்குகிற இறைவனுடைய திருவடிகளில் இடையறாது வழிபட்டு வருவர். ஐம்பொறிகளின் வலிமையைத் திருவருளின் வழிநின்று வாட்டுவர். தாம் வாட்டமின்றி இருப்பர். எப்போதேனும் நன்மை தீமைகள் வருமேனும் அதுவும் சிவன் செயலே என்று அவன் அருள் வழி நிற்பர். எனவே அவர்களுக்கு ஏறு வினைகள் மூளா. அவர்கள் சிவனடிக்கு ஆட்பட்டு நிற்பதனால் மீண்டும் ஐம்பொறிகளுக்குக் கட்டுப்படார்.

முந்தன் - இறைவன். இப்பாடலால் அரன் பணியில் நிற்றலும் இன்றியமையாதது என்றது ஆசிரியரால் உணர்த்தப்பட்டது. திருவாசகம் குழைத்த பத்தில் "வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால், வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில் அதுவும் உன் தன் விருப்பன்றே" (பாடல் 6) என்று மாணிக்க வாசகர் அருளிச் செய்தமை இங்கு நினைவு கூர்க.

சலமிலன் ஆய் ஞானத்தால் தனை அடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவன் அவர் தாம் செய்வினை தன்னால்
நலமுடனே பிறர்செய்வினை ஊட்டி ஒழிப்பானாய்
நணுகாமல் வினை அவரை நாடிக் காப்பன்
உலகினில் என் செயல் எல்லாம் உன்விதியே நீயே
உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்
நிலவுவதோர் செயல்எனக்கு இன்று உன்செயலே என்றும்
நினைவார்க்கு வினைகள் எல்லாம் நீங்கும் தானே. 307

"இறைவனாகிய நீயே எனக்குள் நின்று என்னைச் செயற்படுத்துகிறாய். ஆகையால் உலகில் எனக்கென்று ஒரு செயல் இல்லை. எல்லாம் உன் செயலே. எனக்கு வரும் நலம் தீங்குகளும் பிறரால் வருவன அல்ல. அவையும் உன் ஆணையின் வழியே நிகழ்வன" என்று நினைகிற சிவஞானி கட்கு வினைகள் எல்லாம் நீங்கும். மெய்ஞ்ஞானத்தால் சிவபெருமான் திருவருளைப் பற்றிநிற்பவர்களுக்கு வினைகள் வந்து பொருந்தாமல் இறைவனே காப்பான். தன்னை அடைக்கலமாக அடைந்தவரைத் தலைவ னாகிய சிவபெருமானே தன்னைப் போல் தூயராக்கி அருளுவான். மெய்ய டியார் அல்லாத பிறருக்கு அவர்கள் செய்த் வினையின் பயனை ஊட்டிக் கழிப்பான். ஆயினும் சிவ பெருமான் விருப்பு வெறுப்புகள் அற்றவனே.

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அல்லால், நலமிலன் நாள்தொறும் நல்குவான் நலன்" என்ற அப்பர் பெருமானின் நமசிவாயத் திருப்பதிகத்தின் திருப்பாட்டு இங்குக் கருத்தக்கது.

நாடுகளில் புக்குஉழன்றும் காடுகளில் சரித்தும்
நாகமுழை புக்கு இருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்;
ஏடுதரும் மலர்க்குழலார்முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கூடி
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர். 308

பல நாடுகளில் உள்ள புண்ணியப்பதிகளை வணங்கியும், புண்ணிய தீர்த்தங்களில் ஆடியும், காடுகளுக்குள்ளே அலைந்து திரிந்தும், குகைகளிலே புகுந்து யோக சாதனை புரிந்தும், பசி, நீர்வேட்கை போன்றவற்றைப் பல காலம் பொறுத்துக் கொண்டு தவம் இயற்றியும் இவ்வாறு செயற்கரிய செய்த தவத்தினரும் சிவஞானம் பெற்றிலரேல் மீண்டும் பிறப்புக்கு உட்படுவர். இறைஞானம் பெற்றவர்கள் வாசமிகுமலர் அணிந்த மங்கையரோடு கூடி வாழினும் பிறர் சென்று சேர்வதற்கரிய வீடு பேற்றினை அடைந்து சிவ பெருமானின் சிவந்த குஞ்சித தாள்களைக் கும்பிட்டே இருப்பர்.

நின்மல ஞானம் - மலமாசு அகன்ற சிவஞானம். இதனையே மீண்டும் இறைஞானம் என்றும் கூறினார்.

அங்கித்தம் பனைவல்லார்க்கு அனல்சுடா தாகும்;
ஔடதம்மந்திரம் உடையார்க்கு அருவிடங்கள் ஏறா;
எங்கித்தைக் கன்மமெலாம் செய்தாலும் ஞானிக்கு
இருவினைகள் சென்று அணையா முன்செய்வினை இங்குத்

தங்கிப்போம் பாத்திரமும் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமும் கந்தித்துச் சுழலு மாபோல்
மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும் எல்லா
மலங்களும்பின் காயமொடு மாயும் அன்றே. 309

அங்கித் தம்பனை என்ற வித்தை கைவரப் பெற்றவர்களை நெருப்புச் சுடாது. மருந்தாலும் மந்திரத்தாலும் தம் உடம்பைக் கட்டுப் பாட்டில் வைத்திருப்பவர்களுக்குக் கொடிய நஞ்சும் ஊறு செய்யாது. அவை போலவே சிவஞானியர்களுக்கும் அவர்கள் எச் செயலைச் செய்தாலும் இருவினைப் பயன்களும் வந்து பொருந்தா. அவர்களுடைய நுகர்வினையும் தனது வலிமை கெட்டு வாதனை அளவாய் நின்று அவர்களைச் சிறிதளவே பற்றும். இது எவ்வாறெனில் குயவன் கலங்கள் வனைதற்காகச் சுழற்றி விட்ட சக்கரம் வனைந்து முடிந்த பின்னரும் சிறிது நேரம் சுழன்று அதன் பின் நிற்பதைப் போலாகும். பெருங்காயம் வைத்திருந்த பாத்திரத்தில் அதனை அகற்றி விட்ட பிறகும் அதன் மணம் மட்டிலும் தங்கியிருத்தல் போலவுமாகும். சிவஞானியர்களின் வினைப் பயனும் அவர்கள் உடம்பு உள்ள அளவு அவர்களை மெலிதாகப் பற்றும் மலங்கள் யாவும் அவர்கள் உடல் விடும் காலத்து முற்றிலும் மாயும்.

அங்கித்தம்பனை என்பது நெருப்பின் சூட்டைக் கட்டுப்படுத்தும் ஓர் ஆற்றல். எங்கித்தை - எங்கு என்ற சொல் இவ்வாறு மருவிற்று. கந்தித்தல் - மணத்தல். இங்கு - பெருங்காயம், சுழற்றுவதை நிறுத்திய பின் சக்கரம் சிறிது நேரம் சுழன்றாலும் அந்தச் சுழற்சி வேறு ஓர்கலன் வனையப் பயன்படாது. பெருங்காயம் இருந்த பாத்திரத்தில் உள்ள மணம் கறிக்கு உதவாது. அவை போன்றே சிவஞானியரின் பிராரத்த வினையும் அவர்களைத் தாக்காது வாதனை அளவாய்க் கழியும் என்பதனை விளக்க இவ்உவமைகளை எடுத்துக் காட்டினார்.

பதினோராம் நூற்பா

காயம்ஒழிந் தால்சுத்த னாகிஆன்மா
காட்டக்கண்டிடுந்தன்மை உடைய கண்ணுக்கு
ஏயும் உயிர் காட்டிக்கண் டிடுமாபோல
ஈசன்உயிர்க் குக் காட்டிக் கண்டிடுவன்; இத்தை
ஆயும் அறிவு உடையனாய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையில் அடைந்தமுறை யாலே.
மாயம் எலாம் நீங்கி அரன் மலர் அடிக்கீழ் இருப்பன்,
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே. 310

காட்டக் காணும் தன்மை உடையது கண். அதாவது கண் தானாகக் காணும் இயல்புடையதன்று. உயிர் கண்ணுடன் பொருந்தி அதற்குப் பொருள்களைக் காட்டவும் காட்டும்; தான் காணவும் காணும்.

இது உயிர் கண்ணுக்குச் செய்யும் பேருதவியாகும். அவ்வாறே இறைவன் உயிரோடு உடன் நின்று உயிருக்கு அறிவித்தலோடு மட்டும் அல்லாமல் தானும் அறிந்து உதவுவான். இறைவன் இவ்வாறு உயிருக்குக் காணும் உபகாரமும் காட்டும் உபகாரமும் புரிந்து வருகிறான் என்பதை நன்கு ஆராய்ந்து இறைவனிடம் மாறாத அன்பு செய்கிற இயல்பினை உடையவர் சிவஞானிகள். உடல் நீங்கிய பின் எய்துவதற்குரிய மல நீக்கத்தினை உடலோடு கூடியிருக்கும் பொழுதே கைவரப் பெற்றமையால் சிவ ஞானியர் இம்மையிலேயே எல்லா மலங்களிலிருந்தும் விடுபட்டு ஒரு போதும் மாறாத சிவானந்தப் பெரும் பேற்றினைப் பெற்று சிவபெருமான் திருவடிமலரின் கீழ் இருப்பர்.

காயம் - உடம்பு. அந்நிலைமை - உடம்பு ஒழிந்தபின் மலநீக்கம் பெற்றுத் தூயனாய் விளங்கும் தன்மை. இந்நிலையில் - உடம்போடு கூடி வாழும் இம்மையில்.

"அத்துவித நிலை விளக்குவதாகிய காணும் உபகார மாத்திரையே ஈண்டுக் கூறப் புகுந்தார், இனிது விளங்குதற் பொருட்டு ஐந்தாம் சூத்திரத்துள் கூறிப் போந்த காட்டும் உபகாரத்தையும் அனுவதித்து உடன் கூறினார்" என்பது சிவஞான முனிவர் உரை.

பரஞானத் தால்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம்; அஞ்ஞான விகற்பம்;
வாச்சிய வா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போக ஞா திரு, ஞான, ஞேயம்
தங்கியஞா னம் சங்கற் பனை ஞான மாகும்
திருஞானம் இவைஎல்லாம் கடந்த சிவ ஞானம்;
ஆதலால் சீவன் முத்தர் சிவமேகண்டு இருப்பர். **311**

மேலாகிய உண்மை ஞானத்தால் சிவ பரம் பொருளைக் கண்டு அன்பு செய்பவர்கள் அப்பரம் பொருளையே உணர்ந்து கொண்டு நிற்பார்கள். உலகியற் பொருள்களைச் சற்றேனும் காணார். உலகத்துப் பொருள்களைக் காண்பதற்குரிய ஞானங்கள் என்பன பல வகைப்படும். அவை யாவும் சொல்லாலும் சொல்லால் உணரும் பொருளாலும் தோன்றுகின்ற ஞான மாகும். எனவே அவை ஐயத்தைத் தருகின்ற ஞானமேயாகும். அதுவுமன்றி அவை மாயையைப் பற்றிக் கொண்டு வருவனவாகும். எனவே கலக்கத் தைத் தருவதாகும். கலக்கம் நீங்கும் படி சிந்தித்துத் தெளிகின்ற போது எழுவதாகிய அறிபவன், அறிவு, அறியப்படு பொருள் என வேற்றுமைப் படுத்திக் காணும் ஞானமும் பாவனை ஞானமேயாகும். இவற்றை எல்லாம் கடந்த சிவஞானம் ஒன்றே சிறப்புடைய ஞானமாகும். ஆதலால் இந்த ஞானம் கைவரப் பெற்ற சீவன் முத்தர் சிவன் ஒன்றையே கண்டிருப்பர். உலகத்துப் பொருளை நோக்கிப் பிராரத்த வாதனையில் அகப்படுவாரல்லர்.

பதார்த்தம் - சொல்லால் அறியப்படும் பொருள். பார்க்க வரும் ஞானம்- கருவி கரணங்களால் பெறப்படும் ஞானம். இது காட்சி, அனுமானம், உரை என்ற பல வகைப்பட்ட அளவைகளால் அறிய வரும் ஞானம். எனவே பல ஞானம் என்றார். வாச்சியம் - பொருள் வாசகம் - சொல். இது நூல்களைக் கேட்டதனால் வரும் ஞானத்தைக் குறித்தது. வைந்தவம் - விந்துவிலிருந்து தோன்றியது. ஞாதிரு - அறிபவனாகிய உயிர். ஞானம் - அறிவு. ஞேயம் - அறியப்படு பொருளாகிய சிவம். சீவன்முத்தர் பிறிதொன்றினைப் பாரார் என்று கூறியதானால் பிராரத்தவினையின் வாதனையும் பற்றறக் கழியும் என்பது விளக்கப்பட்டது.

அநாதிஉடல்; ஒன்றினைவிட்டு ஒன்று பற்றிக் கன்மால்
ஆய்அழிந்து வருதலால் அந்தம் இல்லை;
பின்ஆதி அருள் பெற்றவர்கள் நித்த உரு வத்தைப்
பெற்றிருக்கை முத்திஎனில் பெறும்பதமே; இதுவும்
இனாதுநிலை இதுதானும் காயம் உண்டேல்
இருங்கன்மம் மாயைமலம் எல்லாம் உண்டாம்;
மனாதிதரும் உடல்ஆதி காரியத்தால் அநாதி
மலம் அறுக்கும் மருந்து அற்றால் உடன்மாயும் காணே. 312

உடம்பு என்பது அநாதி காலந்தொட்டே உயிருக்கு இடங் கொடுத்து வருவது. உயிர் பல்லூழிக் காலமாகத் தனது வினைக்கு ஏற்ப ஓர் உடம்பை விட்டும் மற்றோர் உடம்பைப் பற்றியும் தோன்றியும் அழிந்தும் வருவதனால் அதற்கு ஓர் முடிவில்லை, என்பர் சிலர். எனவே முத்திப் பேற்றை அடைந்தவர்கள் மற்றைய உடம்புகளைப் போல் அல்லாத நித்த உருவத்தைப் பெற்றிருப்பர் என்று இவர்கள் கூறுவார்கள். இத்தகைய உடம்பும் துன்பத்துக்கே கொள்கலமாகும். ஏனெனில் உடம்பு என்ற ஒன்று உள்ள வரை அதற்கு வினை உண்டு. மாயை உண்டு. ஆணவ மலமும் உண்டு. மேலும் அத்தகைய நிலை பதமுத்தி எனப்படுமே அல்லாமல் வீடு பேறு ஆகாது. மனம் முதலிய புரியட்டக உடம்பிலிருந்தும் தோன்றுகிற இவ்உடம்பு காரியப்பட்டு வருவதனால் தோற்றம் உடையது என்றே கொள்ள வேண்டும். தோற்றமில் காலந் தொட்டே உயிரைப் பற்றிய மலநோய் தீருவதற்கு இவ்உடம்பு மருந்தாகும். எனவே மலநோய் தீர்ந்தால் இவ் உடம்பு நீங்கும்.

இப்பாடலால் மாயையாகிய மலம் பற்றற நீங்குவது உணர்த்தப்பட்டது.

தெரிவுஅரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்த வாறே –
சிவம்பிரகா சிக்கும் இங்கே சீவன்முத்தன் ஆகும்;
உரியமலம் ஔடதத்தால் தடுப்புண்ட விடமும்
ஒள்எரியின் ஒளிமுன்னர் இருளும் தேற்றின்

வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போல் ஆகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து காயம்
திரியும்அள வும் உளதாய் பின்பு காயம் சேராத
வகைதானும் தேயும் அன்றே. 313

தெரிவதற்கு அரிய மெய்ஞ்ஞானம் பெற்றபோது உயிரினிடத்து சிவம் விளங்கித் தோன்றும். இந்நிலையில் உயிர் சீவன் முத்தனாகும் தன்மை பெறும். உடன் தோன்றியதாகிய ஆணவ மலம் தன் வலிமை குன்றி உடம்பு உள்ள அளவும் நின்று மற்றொரு பிறவிக்குக் காரணமாதல் இன்றி இவ்உடலோடுகூடத் தானும் அழியும். இது எவ்வாறு எனில் மருந்தால் தடுக்கப்பட்ட நஞ்சும், கொழுந்து விட்டு எரியும் ஒளிமுன்னர் இருளும், தோற்றாங் கொட்டை இடப்பெற்ற நீரின் கலங்கலும் போல ஆணவ மலத்தின் வலிமை குறைந்து இருக்கும் என்க.

சிவன் முத்தர்க்கு உடல் உள்ள அளவும் ஆணவ மலம் மெலிதாய் நிகழும் என்பதனை விளக்க ஆசிரியர் மூன்று உவமைகள் கூறினார். இந்த உவமைகளை எதிர்நிரல் நிறையாக வைத்துக் கண்டு கொள்க என்று அறிவுறுத்தினார் சிவஞானமுனிவர். தோற்றாங் கொட்டை இடப் பட்ட நீரின் கலங்கள் பரஞானம் பெற்றவர்களிடம் மாய்ந்து கிடக்கும் மல சத்தி ஏதேனும் ஒரு காரணத்தால் மேற்பட்டாலும்ஒட்டு இன்றி விலகுவதற்கு உவமையாயிற்று. ஒளியின் முன் இருள் இயைபு இன்றியும் தொலைவில் உள்ளது போலத் தோன்றுவதற்கு உவமையாயிற்று. மருந்தால் தடுக்கப்பட்ட நஞ்சு, ஆணவ மலம் சீவன் முத்தரிடத்து இயையாது எனினும் அந்நிலையில் மெலிவு பார்த்திருப்பதற்கு உவமையாயிற்று. இப்பாடலால் மெய்ஞ்ஞானியர்க்கு ஆணவமலம் பற்றற நீங்கும் முறைமை கூறப்பட்டது.

ஆணவந்தான் அனாதி அந்தம் அடையா தாகும்
அடையின் அந்த ஆன்மாவும் அழியும் எனில் செம்பில்
காணல்உறும் களிம்பு இரத குளிகைபரி சிக்கக்
கழியும் செம்பு உருநிற்கக் கண்டோம் அன்றே?
தாணுவின் தன் கழல் அணையத் தவிரும் மலம் தவிர்ந்தால்
தான் சுத்தனாய் இருக்கை முத்தி அரன் தாளைப்
பூண வேண்டுவது ஒன்றும் இல்லை எனில் அருக்கன்
புகுதஇருள் போம் அடியிற் பொருந்தமலம் போமே. 314

ஆணவமலம் என்பது தோற்றமில் காலந்தொட்டே உயிரைப் பற்றி நிற்பது. அதுவும் நித்தப் பொருள் என்றே கொள்ளப் பெறும். எனவே அது ஒரு போதும் அழிவதில்லை. ஆணவம் அழியும் என்று கூறினால் அதனோடு உயிரும் அழியும் என்று கொள்ளுதல் வேண்டும் என்று சிலர் கூறுவர். அவர்கள் கொள்கை பொருத்தமுடையது அன்று. செம்போடு கூடியிருக்கும் களிம்பு, செம்பைப் பொன்னாக்கும்

இரத குளிகையால் தொட்ட போது அழிந்து போவதைக் காண்கிறோம். அழிந்து போன களிம்போடு செம்பின் உருவமும் அழிவதில்லை. அதன் பின் செம்பு பொன்னாய்த் திகழுமேயன்றிச் செம்பு அழிவதில்லை. அது போலவே, "சிவபெருமானின் திருவடிஞானத்தை எய்திய உயிர்கள் ஆணவ மலத்தை விட்டு நீங்கித் தூய்மை பெறுமேயல்லாது அவை அழிவதில்லை. இவ்வாறு தூய்மை பெற்ற நிலையே வீடுபேறு எனப்படும். ஆதலால் சிவ பெருமான் திருவடியை உயிர் பொருந்துதல் வேண்டும் என்று கூறுவது மிகை" என்று வேறு சிலர் கூறுவர். இவர்கள் கொள்கையும் பொருந்தாக் கொள்கையே. குற்றமற்ற கண்ணாக இருந்தாலும் சூரிய ஒளி கண்ணொளியோடு கலந்தால் மட்டிலுமே இருள் நீங்கும். அது போலவே மெய்ஞ்ஞானம் பெற்ற போதும் உயிர் இறைவனது திருவடியைப் பொருந்தினாலே ஆணவ மலம் முற்றிலும்அகலும்.

ஆணவமலம் அழிகின்ற போதே உயிர் அழிந்து போகும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள் பாடாணவாத சைவர். ஆணவ மலம் நீங்கினாலே உயிர்முத்தி நிலை எய்தும், உயிர்சிவன் திருவடியைப் பொருந்த வேண்டுவது இல்லை என்ற கொள்கையுடையவர் பேதவாத சைவர். இவர்கள் இருவர் கொள்கையையும் மறுத்துச் சைவ சித்தாந்தக் கொள்கை யை ஆசிரியர் வலியுறுத்தினார்.

நெல்லினுக்குத் தவிடுஉமிகள் அநாதி யாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர் !
சொல்லியிடின் துகளற்ற அரிசியின்பால் இல்லை
தொக்கு இருந்து மற்று ஒரு நெல் தோன்றி டாவாம்
மெல்ல இவை விடும் அறவே இவைபோல அணுவை
மேவும் மலம் உடல் கன்மம் அநாதி விட்டே நீங்கும்
நல்ல சிவ முத்தியின்கண் பெத்தான் மாவை
நணுகிநிற்கும் ஆதலால் நாசமும் இன்றாமே. 315

நெல்லுக்கு முளையும், தவிடும், உமியும் தோன்றும் போதே உடன் உள்ளனவாம். ஆயினும் தவிடு உமி முதலியன நீக்கப் பெற்ற பின் அரிசி நிலைபெற்று இருக்கும். சொல்லப் போனால் முளை, தவிடு, உமி என்பன அரிசியினிடத்து இல்லாமல் அகன்றன. தவிடு உமிகளை நீங்கிய அரிசி மீண்டும் நெற்பயிரைத் தோற்றுவிப்பது இல்லை. இதிலிருந்து முளை, தவிடு, உமி ஆகியன அரிசியை விட்டு அறவே அகன்று போயின என்பதை அறியலாம். அவ்வாறே தோற்றமில் காலந்தொட்டே உயிரைப் பற்றியிருந்த மலம், மாயை, கன்மம் ஆகியவையும் உயிரினிடத்து மெய்ஞ்ஞானம் தோன்றி, அவை முத்தி நிலை பெற்ற போது முற்றிலும் நீங்கும் என்று கொள்க. அப்படியானால் மலங்கள் அழியும் என்று கொள்ளலாமா என்ற வினா எழும். மலங்கள் அழிவதில்லை. ஏனெனில்

மும்மலங்களும் முத்தியை அடைந்த உயிர்களை விட்டு நீங்கினாலும், கட்டு நிலையிலுள்ள உயிர்களிடத்து அவை காணப்படுவதால் அவற்றை நித்தப் பொருள் என்றே கொள்வதில் இழுக்கு இல்லை.

அணு - உயிர். பெத்தான்மா - கட்டு நிலையில் உள்ள ஆன்மா.

முதல் அதிகரணம்

எவ்விடத்தும் இறை அடியை இன்றி அமைந்து ஒன்றை
அறிந்து இயற்றி இடாஉயிர்கள்; ஈசன் தானும்
செவ்விதினில் உளம்புகுந்து செய்தியெலாம் உணர்ந்து
சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன்
இவ்வுயிர்கள் தோற்றும் போது அவனை இன்றித் தோற்றா
இவற்றினுக்கு அம் முதல் எழுத்துக்கு எல்லாமாய் நிற்கும்,
அவ்உயிர்போல் நின்றிடுவன் ஆதலால் நாம்
அரன் அடியை அகன்றுநிற்பது எங்கே யாமே ? 316

உயிரின் கட்டுநிலையிலாயினும் இறைவனுடைய பேரருளின் துணை இல்லாமல் எதனையும் அறிவதும் இல்லை; செய்வதும் இல்லை. இறைவனும் எழுத்துக்களுக்கெல்லாம் முதன்மையாய் நிற்கும் அகர உயிரைப் போல உயிர்களோடு கலந்தே நிற்பான். அவனுடைய கலப்பால் உயிர்கள் அறிவும் செயலும் உடையனவாகும். இறைவன் உயிர்களோடும், உலகோடும் பிரிப்பின்றி நின்று யாவற்றையும் செயல்படுத்துவான். உயிர்கள் உடம்போடு கூடிப்பிறக்கும் காலத்து இறைவனையின்றித் தோன்ற மாட்டா. எனவே நாம் அனைவரும் இறைவனை விட்டு அகன்று நிற்பது என்பது ஒரு போதும் இல்லை.

இரண்டாம் அதிகரணம்

எங்கும்தான் நிறைந்து சிவன் நின்றானாகில்
எல்லாரும் காணவே வேண்டுந்தான் என்னில்
இங்கும்தான் அந்தகருக்கு இரவி இருள் ஆகும்;
ஈசன் அருட் கண்ணில்லார்க்கு ஒளியாயே இருளாம்;
பங்கந்தான் எழும்பதுமம் பக்குவத்தை அடையப்
பரிதி அலர்த் திடுவதுபோல் பருவம்சேர் உயிர்க்குத்
துங்க அரன் ஞானக்கண் கொடுத்து அருளினாலே
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. 317

"சிவபெருமான் உயிர்களோடு கலந்து எங்கும் செறிந்து உயிர்களுக்கு உதவி வருவான் என்பது உண்மையானால் அவனை எல்லாரும் காணவேண்டும் அன்றோ?" என்று சிலர் வினவக் கூடும். இவ்வுலகத்தில் ஒளிப் பிழம்பாக விளங்கும் கதிரவன் விளங்கித் தோன்றும் போது கூட விழி இல்லாதவர்களுக்கு இருளாகவே தோன்றும். அது போல

இறைவனும் உயிருக்கு உதவி செய்யும் துணையாக எப்பொழுதும் உடன் நின்றாலும் அவனுடைய திருவருளாகிய அருட்கண் உடையோருக்கு அன்றி அவனை அறிதல் இயலாது. சேற்றில் தோன்றிய தாமரை மொட்டு பூக்கும் பருவம் எய்திய உடனே கதிரவனின் கதிர்கள் அதனை மலர்விக்கும். அது போலவே பக்குவம் உடைய உயிர்களுக்கு அல்லாமல் அருளாகிய கண்ணும் இறைவன் துணை இன்றிக் கிடைக்கப் பெறாது. உயிர்களின் பக்குவம் அறிந்து இறைவன் தன்னுடைய பெருங்கருணையால் அவற்றுக்கு அருட்கண்ணை வழங்குவான். அந்நிலையில் ஒளிக்கு ஒளியான ஈசன் உயிரின் அறிவுக்கு அறிவாய் நின்று உதவி வரும் அத்துவித நிலை இனிது விளங்கும்.

சென்று அணையும் நிழல்போலச் சிவன் நிற்பன் என்னில்
சென்று அனையும் அவன் முதலி சிவத்தை அணைந்து ஒன்றாய்
நின்றது உயிர் கெட்டு என்னில் கெட்டது அணைவு இன்றாம்
நின்றதேல் கேடு இல்லை அணைந்துகெட்டது என்னில்
பொன்றினதேல் முத்தியினைப் பெற்றவர் ஆர்? புகல் நீ
பொன்றுகையே முத்தியெனில் புருடன்நித்தன் அன்றாம்;
ஒன்றியிடும் நீரொடுநீர் சேர்ந்தாற்போல் என்னில்
ஒருபொருளாம் அதிபதியோடு உயிர் பொருளொன்று அன்றே. 318

"வெயிலால் வாடிய வழிப் போக்கர்கள் சென்று சேர்வதற்கு ஏற்ற நிழலைத் தந்து நிற்கின்ற மரத்தினைப் போல இறைவன் எவ்வித மாற்றமும் இன்றி நிற்பான். பக்குவம் பெற்ற உயிர் அந்த நிழலைச் சேர்ந்து முத்தி இன்பத்தைப் பெறும்" என்று ஈசுவர அவிகாரவாதிகள் கூறுவர். இவ்வாறு கூறினால் நிழலைச் சேர்ந்தவன் முதன்மை பெறுவான். இறைவனுக்கு முதன்மையும் தன்வயம் உடைமையும் இல்லை என்றாகி வழுவாய் முடியும்.

உயிர் கெட்டுத் தன்னை இழந்து சிவபெருமானை அடைந்து ஒன்றாகிப் போகும். அதுவே முத்திப்பேறு என்று பரிணாமவாதிகள் கூறுவர். அழிந்த பொருள் இன்னொரு பொருளோடு கூடும் என்று கொள்ளுவது பொருந்தாது. அவ்வாறு அன்று; உயிர் கெடாமலே கூடும் என்றால் கேடு இல்லாதவிடத்து இரண்டும் ஒன்றாகும் என்பதற்கு இயைபு இல்லை. உயிர் சிவத்தை அணைந்த பிறகே கெடும்என்றால் முத்தி பெறுபவர் யார் என்றகேள்வி எழும். பெறுவான் இன்மையினால் பேறும் இல்லையாகும். உயிர் தன்னை இழத்தலே முத்திப் பேறு எனின் உயிர் நித்தப் பொருள் அன்று என்று கொள்ள நேரிடும். எனவே அதுவும் வழுவாகும். ஐக்கிய வாதசைவர் நீரும் நீரும் கலந்தாற் போல உயிர் சிவனடியைச் சேர்ந்து ஒன்றாகும். அதுவே முத்திப்பேறு என்பர். உயிரும் இறைவனும் ஒத்த தன்மை பெறாமையால் இக்கருத்தும், இந்த உவமையும் பொருந்தா.

செம்பு இரத குளிகையினால் களிம்பு அற்றுப் பொன்னாய்ச்
செம்பொனுடன் சேரும் மலம் சிதைந்தால் சீவன்
நம்பனுடன் கூடும் எனில் பொன்போல் அல்லன்;
நற்குளிகை போல அரன் நணுகுமலம் போக்கி
அம்பொன் அடிக் கீழ்வைப்பன் அரும்களங்கம் அறுக்கும்
அக்குளிகை தானும்பொன் ஆகாது; ஆகும்
உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்;
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே. 319

இரத குளிகையினால் களிம்பு நீங்கிய செம்பு பொன்னாகிப் பொன்னுடனே கூடுவதைப் போல, மலத்தை விட்டு நீங்கிய உயிர் இறைவனுடன் கூடும் என்பர் பேதவாதிகள். இந்த உவமையில் செம்பு உயிருக்கும் இரத குளிகை இறைவனுக்கும் கூறப்பட்டன. குளிகையுடன் சேர்ந்த செம்பு பொன்னாகுமே ஒழியக் குறிகை பொன் ஆகாது. மல நீக்கம் பெற்ற உயிர் சிவத்துடன் சமமாகி ஐந்தொழிலையும் சிவன் போலவே நடத்தும் என்பர் சிவசமவாதிகள். அவர்கள் கொள்கையும் பொருந்தாது. ஐந்தொழிலையும் இயற்றும் வல்லமை விண்ணோர் பிரானாகிய சிவபெருமானுக்கே உரியது. வீட்டு நிலை எய்திய உயிரும் இறைவன் திருவடிக்கீழ் அவன் பேரருளால் வழங்குகிற சிவானுபவத்தை நுகர்வதற்கு மட்டுமே உரிமை உடையதாகும்.

பொன் குளிகை ஆகாது என்று உவமையை மறுத்து அது திட்டாந்த விரோதம் என்பார் நிரம்ப அழகிய தேசிகர்.

சிவன் சீவன் என்று இரண்டும் சித்து ஒன்றாம் என்னின்
சிவன் அருள்சித்து இவன் அருளைச் சேரும் சித்து அவன்தான்
பவம்கேடு புத்திமுத்தி பண்ணும்சித்து அவற்றில்
படியும் சித்து அறிவிக்கப்படும் சித்தும் இவன்தான்
அவன்தானே அறியும் சித்து ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகாது அநந்நியமாய் இருக்கும்
இவன்தானும் புத்தியும் சித்து இவன் ஆமோ புத்தி?
இது அசித்துஎன் றிடில் அவனுக்கு இவனும் அசித்தாமே. 320

"சிவனும் அறிவுடைப் பொருள். சீவன் எனப்படும் உயிரும் அறிவுடைப் பொருள். ஆகவே முத்தி நிலையில் இரண்டும் ஒன்றாகவே நிற்கும். அதை விடுத்து உயிர் சிவானுபவம் ஒன்றற்கே உரித்து என்று வேற்றுமைப்படுத்திக் கூறுதல் கொள்ளுதல் பொருந்தாதன்றோ?" என்று சிலர் வினவுவர். இரண்டும சித்துப் பொருளே ஆயினும் அவற்றிடையே வேற்றுமை பெரிது. சிவன் அருளே வடிவாய் அமைந்தவன். உயிரோ சிவனருளைச் சேரும் அறிவினை மட்டுமே உடையவன். சிவபெருமான் உயிர்களுக்குப் பிறப்பினை ஒழித்து, அறிவினை ஊட்டி, விடுபேற்றை அளிக்க வல்லவன். உயிர் பிறப்பு முதலிய யாவற்றிலும்

அழுந்துகிற இயல்புடையது. முற்றறிவுடையவன் ஆகையினால் இறைவன் தானே அறியும் இயல்புடையவன். உயிர் அறிவித்தால் மட்டுமே அறியும் இயல்பு உடையது. இக்காரணங்களினால் சிவத்தோடு கூடினாலும் உயிரும் சிவமும் ஒன்றாகா. தம்முள் வேற்றுமையின்றி நிற்கும். புத்திதத்துவம் அறிவு என்று சில நேரங்களில் கூறப்படும். ஆனால் உண்மையில் அறிவது உயிரே அன்றி புத்தி தத்துவமாகாது. உயிரோடு ஒப்பிடும் போது புத்திதத்துவம் அசித்தாவது போல. சிவனோடு ஒப்பிடும் போது உயிரும் அசித்தேயாகும்.

அநந்நியம் - வேற்றுமையின்றி நிற்றல்.

இரும்பைக்காந் தம்வலித்தாற்போல் இயைந்து அங்கு உயிரை
எரிஇரும்பைச் செய்வதுபோல் இவனைத்தான் ஆக்கி
அரும்பு இத்துஇந் தனத்தை அனல் அழிப்பது போல் மலத்தை
அறுத்து அமலன் அப்பு அணைந்த உப்பேபோல் அணைந்து
விரும்பிப் பொன் னினைக்குளிகை ஒளிப்பதுபோல் அடக்கி
மேளித்துத் தான் எல்லாம் வேதிப்பான் ஆகி
கரும்பைத் தேனை பாலை கனியமுதை கண்டை
கட்டியைஒத்து இருப்பன் அந்த முத்தியினில் கலந்தே. 321

காந்தம் தான் எந்த வேற்றுமையையும் அடையாமல் இரும்பைத் தன்னை நோக்கி ஈர்த்துக் கொள்ளுவதைப் போல இறைவன் தான் எந்த மாறுதலுக்கும் உட்படாமல் உயிரைத் தன் வழிப்படுத்துவான். நெருப்புத் தன்னோடு சேர்ந்த இரும்பைத் தன் வண்ணமாகவே ஆக்கி இரும்பிலிருந்து குறைபாடுகளை அகற்றுவதைப் போல இறைவனும் உயிரைத் தன் வண்ண மாக்கி அருளுவான். விறகினுள்ளே மறைந்திருந்த நெருப்பு வெளிப்பட்ட வுடனே விறகையே விழுங்கி நெருப்பாகவே விளங்குவது போல இறைவனும் உயிரை மறைத்திருந்த மலமாசுகளை முற்றிலும் அகற்றித் தானாக்கி வைப்பான். நீரோடு கலந்த உப்பு, நீருக்கு உவர்ப்புத் தன்மையைக் கொடுத்து வேறற நிற்பது போல இறைவனும் மலத்திலிருந்து விடுப்பட்ட உயிருக்குத் தனக்குரிய எண் குணங்களையும் உயிரினிடத்துப் பதித்து அருளு வான். இரத குளிகையானது செம்பிற்குப் பொன்னின் இயல்பினை அளிக்கு மேனும் தன்னிடத்துப் பொன்னின் இயல்பு தோன்றாத வண்ணம் விளங்குவது போல இறைவன் தான் மேலிட்டு நின்று ஐந்தொழில் நடத்துபவனாய் விளங்குவான். இத்தகைய முத்தி நிலையில் கரும்பு, தேன், பால், கனி, அமுது, கற்கண்டு, வெல்லக்கட்டி ஆகிய இவையெல்லாம் கலந்த கலவை போல உயிருக்குப் பேரின்பச் சுவையை இறைவன் வழங்குவான்.

இந்தனம் - விறகு. மேளித்து - கூட்டி, வேதித்தல்- இரச வாதம், செம்பு போன்றவற்றைப் பொன்னாக செய்தல்.

பன்னிரண்டாம் நூற்பா

செங்கமலத் தாள் இணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்கள் அறுத்து ஈசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்கு அவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரன் எனவே தொழுது இறைஞ்சி ஆடிப் பாடி
எங்கும்யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்று இறுமாப்பு எய்தி
திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் – சிவஞானச் செய்தி உடையோரே. 322

இறைவனுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை உயிர் சேர ஒட்டாது தடுத்து நின்ற மும்மலங்களையும் முற்றிலும் அறுத்து, சிவமெய்யன்பர்களோடு எப்பொழுதும் பயின்று, அடியார்களின் திரு வேடத்தையும் சிவன் திருக்கோயிலையும் சிவன் எனவே கண்டு வழிபட்டு மகிழ்ச்சியின் மேலீட்டால் ஆடிப்பாடி, சிவபெருமான் திருவடியை அவன் அருளால் பெற்றமையால் இறும்பூது எய்தி, திங்களை அணிந்த திருமுடியை உடைய சிவபிரானின் அடியார்க்கு அடியராய்ப் பெருமிதத்துடன் வாழ்கின்ற பெருமக்களே சிவஞானம் பெற்ற சீவன் முத்தர் ஆவர்.

இரண்டாம் அதிகரணம்

ஈசனுக்கு அன்புஇல்லார் அடியவர்க்கு அன்பு இல்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பு இல்லார்
பேசுவதுஎன்? அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடு நீ;
ஆசையொடும் அரன் அடியார் அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கரும மாகச் செய்து
கூசி மொழிந்து அருள்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே. 323

சிவனடியாரிடத்து அன்பு இல்லாதவர்கள் சிவபிரானிடத்தும் அன்பு இல்லாதவரே. அத்தகையவர்கள் பிற உயிர்களிடத்தும் அன்பு பாராட்டுதல் இலர். அவர்களுக்குத் தம் மீதும் அன்பு இல்லை. அத்தகையவர்கள் உயிரோடு இருந்தும் அறிவற்ற பிணத்தினை ஒத்தவர்கள். இதற்கு மேலும் அவர்களைப் பற்றிக் கூறுவதற்கு ஒன்றும் இல்லை. அவர்களோடு இணங்கி இருத்தல் மேலும் பிறப்பு இறப்புக்களில் நம்மை அமிழ்த்தும். ஆதலால் அவர்களை விட்டு நீங்கி இருத்தலே நலம் பயக்கும். சிவபிரானின் அடியார்க்கு அடியார்கள் கூட்டத்தில் அன்போடும் உன்னை இணைத்துக் கொண்டு அவர்களுடைய திருத்தொண்டையே உனது தொண்டாகக் கொண்டு அவர்களுடன் பணிவோடு பேசியும் அவர்கள் குறித்த நெறியில் நின்றும் அவரை வணங்கியும் மகிழ்ந்து கூத்தாடி வாழ்வாயாக.

"ஈசனுக்கு அன்புடைமை அவன் அடியவரைக் கண்டு நிகழும் அன்பின் அளவு பற்றியே தெளியப்படும் ஆகலான், அடியவர்க்கு அன்பு இல்வழி ஈசனுக்கு அன்புடையோர் போல் ஒழுகுதல் நாடக மாத்திரையே பிறிதில்லை என்பார், 'அடியவர்க்கு அன்பு இல்லார் ஈசனுக்கு அன்பில்லார்' என்றும், எவ்வுயிர்க் கண்ணும் உளனாகிய ஈசனிடத்து அன்புடையார்க்கே அத் தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கும் அன்புடையராதல் கூடும் என்பார், 'ஈசனுக்கு அன்பு இல்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்' என்றும், இவ்விடங்களில் அன்பில்லாதார் தம் உயிர்க்கு உறுதி செய்தி கொள்ளுவார் அல்லர் என்பார் 'தமக்கும் அன்பில்லார்' என்றும் கூறினார். 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் (குறள் அன்புடைமை, 2) என்புழித் *தம்மென்றது* உடம்பை நோக்கியாகலின் அஃது ஈண்டைக்கு முரணாமை அறிக" என்பது சிவஞான முனிவர் உரை.

மூன்றாம் அதிகரணம்

அறிவுஅரியான் தனை அறிய யாக்கை ஆக்கி
அங்குஅங்கே உயிர்க்குயிராய் அறிவுகொடுத்து அருளால்
செறிதலினால் திருவேடம் சிவன் உருவே ஆகும்
சிவோகம்பா விக்கும் அத்தால் சிவனும் ஆவர்
குறியதனால் இதயத்தே அரனைக் கூடும்
கொள்கையினால் அரன் ஆவர் குறியொடுதாம் அழியும்
நெறியதனால் சிவமேயாய் நின்றிடுவர் என்றால்
நேசத்தால் தொழுதிடு நீ பாசத்தார் விடவே. 324

அறிவுக்கு எட்டாதவனாகிய சிவபரம் பொருள், உலகத்தில் உள்ளவர் தன்னை அறியும் பொருட்டுத் திறுநீறு, அக்கமணி மாலை முதலியன அணிந்த திருவேடத்தைத் தன் மெய்யன்பர்களுக்குக் கொடுத்து எல்லா விடங்களிலும் உயிர்க்கு உயிராக அறிவினை விளக்கித் தனது திருவருளால் அவ்வன்பர்களோடு கலந்து நிற்பான். எனவே மெய்யடியார் திருவேடமும் சிவன் உருவேயாகும். அத்தகைய அடியார்கள் தாமே சிவம் என்னும் சிவோகம் பாவனையைக் கைக் கொண்டு ஒழுகுவதால் அவர்கள் சிவமே ஆவர். தமது இதயத்திலே சிவபெருமானை ஒரு குறியின் கண் நிறுத்தி வழிபடுவதனாலும் அவர்கள் சிவமாகவே விளங்குவர். இவ்வாறு குறியிலே நிறுத்தி வழிபடுகிறோம் என்ற நினைப்பும் முனைப்பும் அற்றுப் போகும் தன்மையால் உயிரறிவு என்ற ஒன்று இல்லாமல் சிவமேயாய் நிலை பெறுவர். ஆதலால் திருவேடம் தாங்கிய சிவனடியார்களைச் சிவன் எனவே கருதி அன்போடும் தொழுதிடுக. அவ்வாறு தொழுவதனால் பாசம் முற்றிலும் நீங்கும்.

திருக்கோயில் உள் இருக்கும் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே:
உருக்கோலி மந்திரத்தால் எனநினையும் அவர்க்கும்
உளன்எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும்

விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தில் வந்து உதித்து மிகும் சுரபிக்கு எங்கும்
உருக்காண ஒண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவதுபோல் வெளிப்பட்டு அருளுவன் அன்பர்க்கே. 325

திருக்கோவிலிலே எழுந்தருளி இருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சிவன் எனவே கண்டு வழிபடும் சரியை நெறி நிற்பவர்களுக்குச் சிவபிரான் வெளிப்படாது நின்று அருள் பாலிப்பான். அருவப் பொருளாகிய சிவபிரான் ஓதுதற்குரிய மந்திரங்களால் சிவலிங்கம் முதலிய திருஉருக்களை மேற்கொண்டனன் எனக் கருதி வழிபடும் கிரியை நெறியினருக்கும், உள்ளமே கோயிலாக எழுந்தருளிய சிவபிரான் திருமேனியிலும் வீற்றிருந்து வழிபாட்டை ஏற்று அருளுவான் என்று வழிபடும் யோகிகளுக்கும் விறகைக் கடைந்த போது தோன்றுகிற தீயைப் போலவும் கறந்த போது தோன்றுகின்ற பாலினைப் போலவும் அவரவர் விரும்பிய வண்ணம் தோன்றி அருள்புரிவான். இம்மூவகையினரும் இவ்வாறாக, மெய்யன்பர்களாகிய சிவஞானிகளுக்குப் பசுவின் உடல் முழுவதும் நிறைந்து இருந்தும் கண்ணால் காண முடியாத பால் அதன் மடியிலே விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டு அருளுவான்.

நால்வகை நெறியில் நின்றவர்களுக்கும் திருக்கோவில் வழிபாடு இன்றியமையாதது என்று இந்தப் பாடலால் விளக்கப்பட்டது. இப் பாடலில் அன்பர் என்ற சொல் சிவஞானிகளைக் குறித்தது.

ஞான யோகக் கிரியா சரியை நான்கும்
நாதன் தன் பணி ஞானி நாலினுக்கும் உரியன்
ஊனம்இலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி கிரி யாவான்தான் ஒண் கிரியை ஆதி
ஆன் இரண்டி னுக்குஉரியன் சரியையினில் நின்றோன்
அச்சரியைக் கேயுரியன் ஆகலினால் யார்க்கும்
ஈனம்இலா ஞானகுரு வேகுருவும் இவனே
ஈசன் இவன் தான் என்றும் இறைஞ்சி ஏத்தே. 326

ஞானம் யோகம் கிரியை சரியை என்ற நால்வகை நெறிகளுமே இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய நெறிகளாகும். இவர்களுள் ஞானநெறியில் ஒழுகுபவர்கள் நான்கு நெறிகளுக்கும் உரியவர்கள். யோக நெறியில் நிற்பவர்கள் சரியை கிரியை யோகம் என்ற மூன்றினுக்கும் உரியவர்கள். கிரியை நெறியில் நிற்பவர்கள் சரியை கிரியை என்ற இரண்டினுக்கும் உரியர். சரியை வழி ஒழுகுவோர்க்கு அது ஒன்றே உரியது. இந்நால்வகை நெறியிலும் நிற்பார்க்குக் குறைவற்ற ஞானாசிரியனது துணை இன்றியமையாது வேண்டப்படும். திருக் கோவில் உள்ளிருக்கும் திருமேனியும், மெய்யடியார் திருவேடமும்

ஞானாசிரியரின் வேறல்ல என்பதை உணர்ந்து வழிபடுதல் வேண்டும்.

இப்பாடலால் குருவழிபாட்டின் இன்றியமையாமை எடுத்துரைக்கப்பட்டது

மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்தயோ கத்தால்
மணிஇரத குளிகையினால் மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்ன முறை செய்ய வேத
சகலகலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தம்இலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும் ஆசான் அருளால் அடிசேர் ஞானம்
வந்திடும் மற்று ஒன்றாலும் வாரா தாகும்;
மற்றவையும் அவன் அருளால் மருவும் அன்றே. 327

மந்திரத்தாலும், மருந்தாலும், சிறந்த யோகத்தாலும், மணி எனப்படும் இரதகுளிகையினாலும் பல்வேறுபட்ட நூல்களிலே விதிக்கப்பட்ட ஒழுக லாறுகளாலும் ஒருவனக்கு வேதங்களும் எல்லா வகையான கலை ஞானங்களும் முக்காலத்தையும் அறியும் அறிவு அணிமா முதலிய எண் பெருஞ் சித்திகளும் கைவரப் பெறுதல் கூடும். ஆனால் இறைவனுடைய திருவடியைச் சேர்வதற்கு உரியதாகிய ஞானம் ஞான ஆசிரியரின் துணை இன்றி வராது. ஞானாசிரியன் துணை இருந்தால் முதலில் கூறப்பட்ட அறிவும் ஆற்றலும் எளிதில் கைவரும்.

பரம்பிரமம் இவன் என்றும் பரமசிவன்தான் என்றும்
பரஞானம் இவன் என்றும் பராபரன்தான் என்றும்
அரன்தரும்சீர் நிலை எல்லாம் இவனே என்றும்
அருட்குருவை வழிபடவே அவன் இவன்தான் ஆயே
இரங்கியவா ரணம் ஆமை மீன் அண்டம் சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்துஇவை தாம் ஆக்குமா போல் – சிவமே ஆக்கும்,
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் தானே. 328

யாவற்றையும் கடந்து நிற்கும் உயர்ந்த சொரூப சிவனும் குருவே என்றும், தடத்த சிவனும் குருவே என்றும், உயரிய ஞானமும் இவன் வடிவே என்றும், திருக்கோவிலின் உள்ளிருக்கும் திருமேனிகள் எல்லாம் குருவடிவே என்றும், அடியார்களுக்கு அருள் பாலிப்பதற்காக இறைவன் மேற்கொண்ட திருமேனிகள் எல்லாம் குருவின் வடிவங்களே என்றும் தேறி ஞானாசிரியரை வழிபடுதல் வேண்டும். அவ்வாறு வழிபட்டால் சிவபெருமான் குருவை ஆவேசித்து நின்று, கோழி தன் முட்டையைத் தொட்டும், ஆமை தன் முட்டையை நினைந்தும், மீன் தன் முட்டையைப் பார்த்தும் பரிவோடு தம் வடிவம் ஆக்குவது போல ஞானாசிரியனும் உயிரைத் தொட்டும், நினைந்தும் நோக்கியும் சிவமே ஆக்கி அருள் பாலிப்பான்.

சிவஞான சித்தியார் சுபக்கம் முற்றிற்று.

சிவஞான சித்தியார்
பாடல் முதற் குறிப்பு அகரராதி
சுபக்கம்

எமது வெளியீடுகள்

1	சிவஞான போதம்	65	00
2	சிவஞான சித்தியார் சுபக்கம்	40	00
3	வசனாலங்கார தீபம்	40	00
4	உண்மை விளக்கம்	35	00
5	சைவ சித்தாந்தத் தேனமுது	13	00
6	அற்புதத் தேவாரத் திருப்பதிகங்கள்	50	00

அருள்நந்திசிவம் அருட்பணி மன்றம்
78, செல்விநகர்,
சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627 001

ரெக்ஸி